# பகுதி III

# பகுதி III

# 2011 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், சுற்றிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் அறிவித்தல்கள்

### வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

*வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்*


| | | | |
|---|---|---|---|
| 1. | கம்பனி ஆளுகை மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் நியதிகளுக்கிணங்க மேற்கொள்ளப்படும் வெளிப்படுத்துகை | 02/17/550/002/002 | 1 |
| 2. | முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்கள் | 02/17/800/0014/01 | 1 |
| 3. | வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள், பணிக் கட்டணங்கள், கட்டணங்கள் மற்றும் தரகுகளை காட்சிப்படுத்தல் | 02/05/006/0100/002 | 3 |
| 4. | பிணைய பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் இடாப்பில் அசையும் சொத்துக்கள் பற்றிய பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட நலவுரித்துக்களைப் பதிவு செய்தல் | 02/17/600/0031/001 | 7 |
| 5. | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பனவற்றை மதிப்பிடுதல் | 02/17/600/0017/001 | 7 |
| 6. | உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பனவற்றை மதிப்பிடுதல் | 02/17/600/0017/001 | 12 |
| 7. | 2011ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகை | | 17 |
| 8. | 2011ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகை | | 19 |
| 9. | 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம் | | 21 |
| 10. | 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம் | | 22 |
| 11. | 2011ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை - உரிமம் பெற்ற வங்கிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு | | 22 |
| 12. | 2011ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை - உரிமம் பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் | | 51 |
| 13. | 2011ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்டம், 1ஆம் இலக்கக் கட்டளை - வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை | 02/17/600/0009/002 | 55 |
| 14. | முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்களுக்கான திருத்தங்கள் | 02/17/800/0014/02 | 56 |
| 15. | 2011ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை - மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 57 |
| 16. | 2011ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை - மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 58 |
| 17. | 2011ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்டம், 2ஆம் இலக்கக் கட்டளை - வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை | 02/17/600/0034/001 | 59 |
| 18. | 2011ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை - இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பங்குச் சந்தையின் வெளிப்படுத்துகைக்குள்ளாகும் தன்மை மீதான பணிப்புரைக்கான திருத்தம் | | 59 |

| | | |
|---|---|---|
| 19. 2011ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை - இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் பங்குச் சந்தையின் வெளிப்படுத்துகைக்குள்ளாகும் தன்மை மீதான பணிப்புரைக்கான திருத்தம் | | 60 |
| *அங்கத்துவ நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வைப்புக் காப்புறுதிப் பணிப்புரை* | | |
| 20. 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம் தொடர்பான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1690/11 | 60 |
| 21. இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் - தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 01/2011 | 61 |
| 22. 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம் தொடர்பான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1711/14 | 62 |
| **நாணயத் திணைக்களம்** | | |
| 23. இலங்கையில் போலி நாணயத் தாள்/ சந்தேகத்திற்குரிய நாணயத் தாள்களைக் கையாள்வதற்கான வழிகாட்டல்கள் | 01/2011 | 62 |
| 24. இலங்கையில் போலி நாணயத் தாள்/ சந்தேகத்திற்குரிய நாணயத் தாள்களைக் கையாள்வதற்கான வழிகாட்டல்கள் | 02/2011 | 63 |
| **உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்** | | |
| 25. லங்கா செட்டிலிலுள்ள பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கெதிராக ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 35/01/005/0006/29 | 65 |
| 26. ஒதுக்குத் தேவைப்பாடுகள் | 35/01/005/0007/05 | 65 |
| **செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்** | | |
| 27. பணிகளின் ஏற்றுமதியாளர்கள் உள்நாட்டு வங்கிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினைக் கடன்படுவதற்கு ஒப்புதலளித்தல் | 06/04/01/2011 | 65 |
| 28. வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் | 06/04/02/2011 | 67 |
| 29. மீள்காப்புறுதி தொடர்பான பணவனுப்பல்களுக்கு அதிகாரமளித்தல் | 06/04/03/2011 | 71 |
| 30. சீன றென்மின்பியினை குறித்துரைத்தல் | 06/04/04/2011 | 71 |
| 31. தடுத்து வைக்கப்பட்ட வதிவற்றோர் கணக்குகளைத் திறத்தல் | 06/04/05/2010 | 71 |
| 32. கல்விசார்ந்த நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள இலங்கைப் பிரசைகள் வெளிநாடுகளிலுள்ள வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்விசார் நிறுவனங்களிலிருந்து பெற்ற கடன்களை மீளச் செலுத்துதல் | 06/04/06/2011 | 72 |
| 33. வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | 06/04/07/2011 | 72 |
| 34. வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | 06/04/08/2011 | 73 |
| 35. பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகள் | 06/04/09/2011 | 73 |
| 36. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1686/50 | 73 |
| 37. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1686/52 | 75 |
| 38. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1686/53 | 76 |
| 39. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது | 1719/22 | 77 |
| 40. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1719/23 | 78 |
| 41. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1719/24 | 78 |
| 42. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1733/19 | 79 |
| 43. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1737/9 | 79 |

## நிதியியல் உளவறிதல் பிரிவு

| | | |
|---|---|---|
| 44. 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், இணங்கியொழுகும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வுத் தொழிற்பாடுகளை நிறுவுதல் பற்றிய கணக்காய்வாளரின் பிரகடனம் | 37/04/001/0004/011 | 80 |
| 45. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழான அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் | 37/05/005/0015/011 | 80 |
| 46. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1699/10 | 81 |

## கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

| | | |
|---|---|---|
| 47. 2011 சனவரி 14ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் | ஆர்ரிஜிஎஸ்/01/2011 | 91 |
| 48. பொதுப் பணிப்புரை 01/2011 - வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைக்கான பொதுப் பணிப்புரை | | 91 |

*வழிகாட்டல்கள்*

| | | |
|---|---|---|
| 49. வங்கி வழிநடத்தும் செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளுக்கான 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க செல்லிடக் கொடுப்பனவு வழிகாட்டல்கள் | | 97 |
| 50. கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளுக்கான 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க செல்லிடக் கொடுப்பனவு வழிகாட்டல்கள் | | 103 |
| 51. லங்கா செட்டில் முறைமை விதிகளுக்கான திருத்தங்கள் - லங்கா செட்டிலுள்ள முறைமை ஆர்ரிஜிஎஸ்/ எஸ்எஸ்எஸ்எஸ் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களின் திருத்தம் | ஆர்ரிஜிஎஸ்/ 02/2011 | 112 |
| 52. 2011 ஏப்பிறல் 15ஆம் திகதியை அரச மற்றும் சிறப்பு வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தல் | ஆர்ரிஜிஎஸ்/ 03/2011 | 112 |
| 53. 2011 மே 27ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் தொழிற்பாடுகள் | ஆர்ரிஜிஎஸ்/ 04/2011 | 113 |
| 54. வரையறுக்கப்பட்ட கொழும்பு யூனியன் வங்கியின் பெயர் மாற்றம் | ஆர்ரிஜிஎஸ்/ 05/2011 | 113 |
| 55. அமான வங்கி லிமிடெட்டினை லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராக நியமித்தல் | ஆர்ரிஜிஎஸ்/ 06/2011 | 113 |
| 56. வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட்டினை லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராக நியமித்தல் | ஆர்ரிஜிஎஸ்/ 07/2011 | 114 |
| 57. 2011 நவெம்பர் 7ஆம் திகதியை அரசாங்க, வங்கி விடுமுறை நாளாக பிரகடனம் செய்தல் | ஆர்ரிஜிஎஸ்/ 08/2011 | 114 |
| 58. 2011 திசெம்பர் 16ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் தொழிற்பாடுகள் | ஆர்ரிஜிஎஸ்/ 09/2011 | 115 |
| 59. அக்ஷிஷ் பாங்க் லிமிடெட்டினை லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராக நியமித்தல் | ஆர்ரிஜிஎஸ்/ 10/2011 | 115 |

## பொதுப்படுகடன் திணைக்களம்

| | | |
|---|---|---|
| 60. அமைப்பு அகவிதிகளுக்கான திருத்தங்கள் | 08/24/008/0018/001 | 116 |

## பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

| | | |
|---|---|---|
| 61. சுனாமிக்குப் பின்னைய கரையோரப் புனரமைப்பு மற்றும் மூலவள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் மீதான நிருவாக உடன்படிக்கைக்குரிய பின்னிணைப்பு | | 116 |
| 62. 01.04.2011ஆம் திகதியிடப்பட்ட சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் (திருத்தம்) இல. ஆர்டிடி/பிஆர்/2010/03 | | 117 |
| 63. 01.06.2011ஆம் திகதியிடப்பட்ட தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதியக் கொடுகடன் திட்டத்தின் கீழான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் (2011) இல. ஆர்டிடி/ரிடிபிஆர்எவ்/ 2006/2 | | 119 |
| 64. 2011 செத்தெம்பர் 23ஆம் திகதியிடப்பட்ட புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ 2011 | | 120 |
| 65. 05.12.2011ஆம் திகதியிடப்பட்ட தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதியக் கொடுகடன் திட்டத்தின் கீழான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் (2011) இல. ஆர்டிடி/ரிடிபிஆர்எவ்/ 2006/2 | | 139 |

## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

66. 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) பணிப்புரை 139

67. 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை 140

68. 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பீடு செய்யும்) பணிப்புரைகள் 143

69. 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரை 149

70. 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரைகள் 157

71. 2011ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை 157

72. முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்கள் 159

73. முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்களுக்கான தெளிவுபடுத்தல்கள் 161

74. முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்களுக்கான திருத்தங்கள் 161

**தொடர்பு எண்: 02/17/550/002/002**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2011 சனவரி 3

*வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா

**கம்பனி ஆளுகை மீதான வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் நியதிகளுக்கிணங்க மேற்கொள்ளப்படும் வெளிப்படுத்துகை**

கம்பனி ஆளுகை மீதான 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் 3(8) மற்றும் 3(9)ஆம் பணிப்புரைகள் தொடர்பாக பின்வருவனவற்றைப் பின்பற்றுமாறு வெளிநாட்டு வங்கிகளின் அனைத்துக் கிளைகளும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

(i) பணிப்புரை 3(8)ii - பணிப்புரை 3(8)ii (ஈ) தவிர்ந்த அனைத்து வெளிப்படுத்துகைகளும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்களுடன் சேர்த்து வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

(அ) பணிப்புரைகள் 3(8)ii(ஆ) மற்றும் (ஏ) - தேவைப்படுத்தப்பட்ட அறிக்கைகள் பணிப்பாளர் சபையினால் அல்லது இலங்கையினது தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்கின்ற தலைமை அலுவலகத்தினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பணிப்புரை 3(8)ii (எ) - வங்கியானது தலைமை வங்கியின் வருடாந்த கம்பனி ஆளுகை அறிக்கையின் சுருக்கமொன்றினை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) பணிப்புரை 3(9)iii - தலைமை வங்கியின் வருடாந்த கம்பனி ஆளுகை அறிக்கையொன்றின் சுருக்கத்தினை கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதியியல் கூற்றுக்களுடன் சேர்த்து சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில செய்தித் தாள்களில் வெளியிடுதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2010ஆம் ஆண்டு திசெம்பர் 29ஆம் நாள் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையினை இத்தால் புறக்கீடு செய்கின்றோம்.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/800/0014/01**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2011 ஏப்பிறல் 29

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா

**முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்கள்**

2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட முதலீட்டு நிதியக் கணக்கினை உருவாக்குதல் மற்றும் தொழிற்படுத்தல் என்பன மீதான வழிகாட்டல்களுக்கு இணங்கியொழுகுவதற்காக அவற்றை இத்துடன் இணைத்துள்ளோம்.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட முதலீட்டு நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மீதான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான வழிகாட்டல்கள்**

1. **முதலீட்டு நிதியக் கணக்கொன்றினை ஏற்படுத்துதல்**

2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு, வங்கித்தொழில் வியாபாரத்தில் அல்லது நிதியியல் பணிகளிலுள்ள ஒவ்வொரு ஆளும் அல்லது பங்குடமையாளரும் முதலீட்டு நிதியக் கணக்கொன்றினை ஏற்படுத்தி தொழிற்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2. **முதலீட்டு நிதியக் கணக்கிற்கான ஆரம்ப வரவுகள்**

2011 சனவரி 1ஆம் நாளுக்குப் பின்னர் வரிகள் எப்பொழுது செலுத்தப்படுகிறதோ அப்பொழுதிலிருந்து உரிமம் பெற்ற வங்கிகள் பின்வரும் நிதிகளை முதலீட்டு நிதியக் கணக்கிற்கு மாற்றல் செய்து வங்கியில் நிரந்தரமான நிதியமொன்றினைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

(i) பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவிற்கான பெறுமதிசேர் வரிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான திகதியில் நிதியியல் பணிகள் மீதான பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவிற்காக கணிக்கப்பட்ட இலாபத்தில் 8 சதவீதம்.

(ii) வரியின் சுய மதிப்பீட்டுக் கொடுப்பனவிற்கான உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 113 ஆவது பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான திகதியொன்றில் வருமான வரிக் கொடுப்பனவு நோக்கங்களுக்காக கணிக்கப்பட்ட வரிக்கு முன்னரான இலாபத்தில் 5 சதவீதம்.

**3. நிதியினைப் பயன்படுத்துதல்**

3.1 வங்கிகள், முதலீட்டு நிதியக் கணக்கிற்கு மாற்றல் செய்த திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முதலீட்டு நிதியக் கணக்கிலுள்ள நிதியினைப் பின்வரும் முறைகளில் பயன்படுத்திக் கொள்ள தொடங்குதல் வேண்டும்.

(i) ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத முதிர்ச்சிகளைக் கொண்ட நீண்டகால அரச பிணையங்களில் அத்துடன்/ அல்லது முறிகளில் முதலீடு செய்தல்.

(ii) 5 ஆண்டு திறைசேரி முறி வீதங்களுடன் 2 சதவீதத்தினைக் கூட்டிய வீதமொன்றினை விஞ்சாத வட்டி வீதத்தில் 5 ஆண்டுகளுக்குக் குறையாத முதிர்ச்சிகளின் மீது கடன் வழங்கல்.

(iii) பின்வரும் நோக்கங்களுக்காக மாத்திரம் கடன் வழங்குதல்:

(அ) பழவர்க்கங்கள், காய்கறிகள், கொக்கோ மற்றும் வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட பெருந்தோட்டப் பயிர்கள்/ வேளாண்மைப் பயிர்களின் பயிர்ச்செய்கை மற்றும் விலங்கு வளர்ப்பு, மீன்பிடி என்பனவற்றிற்கான நீண்டகாலக் கடன்கள்.

(ஆ) தொழிற்சாலை/ ஆலைகளின் நவீனமயப்படுத்தல்/ நிறுவுதல்/ விரிவாக்கம் செய்தல்

(இ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்

அ. ரூ.30 மில்லியன் வரையிலான கடன்கள் அல்லது

ஆ. ரூ.300 மில்லியனுக்குக் குறையாத ஆண்டு மொத்தப் புரள்வையும் 400 இற்குக் குறைவான ஊழியர்களையும் கொண்ட தொழில் முயற்சிகளுக்கு ரூ.10 மில்லியனுக்குக் கூடுதலான கடன்கள்

(ஈ) தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் வெளிமூலங்களிலிருந்தான வியாபாரச் செயன்முறைகள்

(உ) உட்கட்டமைப்பு அபிவிருத்தி

(ஊ) கல்வி - தொழிற் பயிற்சி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி

(எ) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களை மீளமைப்புச் செய்தல்

3.2 கடன் வழங்கல் இலங்கை ரூபாவில் இருக்கலாம் அத்துடன்/ அல்லது வெளிநாட்டு நாணயத்திலான கடன் வழங்கல் நாட்டிற்குள்ளேயே இடம்பெறுதல் வேண்டும்.

3.3 மேலேயுள்ள 3.1இல் குறிப்பிடப்பட்டவாறு நிதியத்தின் பயன்படுத்தல் தொடங்கும் வரை வங்கிகள் நிதியங்களை குறுங்கால அரச பிணையங்களில் முதலீடு செய்தல் வேண்டும்.

**4. நிபந்தனைகள்**

**4.1 ஏற்புடைத்தான முன்மதியுடைய தேவைப்பாடுகள்**

(i) கீழேயுள்ள (ii)ஆம் பந்திக்கு உட்பட்டு, முதலீட்டு நிதியக் கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்கள்; ஏற்புடைத்தானவாறு இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், தீர்மானங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் ஆகிய அனைத்திற்கும் உட்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

(ii) உரிமம் பெற்ற வங்கிகளைப் பொறுத்தவரை வேளாண்மைத் துறைக்கான கடன் வழங்கல், 2006ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் நிபந்தனைகளுக்கமைய வங்கிகளின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்தத் தொகையில் 10 சதவீதத்தினை வங்கிகள் வேளாண்மைக் கடனாக வழங்க வேண்டும் என்ற தேவைப்பாடுகளுக்கு மேலதிகமானதாக இருத்தல் வேண்டும்.

**4.2 கொடுக்கல்வாங்கல்களுக்கான கணக்கீடு**

(i) முதலீட்டு நிதியக் கணக்கிற்கான மாற்றல்கள் வரிக்குப், பின்னரான இலாபத்தின் ஒதுக்கீடாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ii) முதலீட்டு நிதியக் கணக்குகள் பொது மற்றும் ஏனைய ஒதுக்குகளின் கீழ் தனியான ஒரு விடயமாகப் பேணப்பட வேண்டியதுடன் பங்குடமையாளர் நிதியத்தின் ஒரு பகுதியாகவும் இருத்தல் வேண்டும்.

(iii) முதலீட்டு நிதியக் கணக்கின் தொழிற்பாட்டுச் செலவும் முதலீடுகள் மற்றும் கடன் வழங்கல்கள் தொழிற்பாடுகளிலிருந்தான வருமானமும் வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் கணக்கிடப்படல் வேண்டும்.

(iv) வங்கிகள் தனித்தனியான கணக்குகளை, முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் பற்றிய அவசியமான விபரங்களுடன் பேணுதல் வேண்டும்.

(v) இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதல் இல்லாமல் முதலீட்டு நிதியக் கணக்குகள் பழுதுபடுத்தப்படவோ குறைக்கப்படவோ கூடாது.

**4.3 மத்திய வங்கிக்கான வெளிப்படுத்துகைகளும் அறிக்கையளித்தலும்**

(i) பின்வரும் வெளிப்படுத்துகைகள் "நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்" என்பதில் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(அ) பந்தி 3.1 (iii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நோக்கத்திற்குமாக வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை வெளிநிற்கின்ற மொத்தக் கடன்கள், வட்டி வீதங்கள் மற்றும் கடன்களின் காலம்.

(ஆ) அரச பிணையங்களில் செய்யப்பட்ட மொத்த முதலீடுகள், வட்டி வீதங்கள் மற்றும் முதிர்ச்சி

(ii) இலங்கை மத்திய வங்கியினாலும் நிதி அமைச்சினாலும் கேட்கப்படும் பொழுது முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான தகவல்களை கிடைக்கச் செய்தல் வேண்டும்.

4.4 வரி விதிப்பு முறை

முதலீட்டு நிதியக் கணக்குத் தொழிற்பாடுகள் தொடர்பான வரிப் பொறுப்பு ஏற்புடைத்தான வரிச் சட்டத்திற்கு இணங்க கணிக்கப்படுதல் வேண்டும். எனினும், பின்வருவனவற்றைக் கவனித்தல் வேண்டும்.

(i) பந்தி 3.1 (i) மற்றும் 3.3 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட முதலீடுகள் மீதான வட்டி வருமானங்கள் வருமான வரி செலுத்தும் பொறுப்புடையனவாகும்.

(ii) முதலீட்டு நிதியக் கணக்குகளைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

(iii) கடன் இழப்புக்கள் மீதான குறித்த ஏற்பாடுகள், அறவிட முடியாக் கடன்பாடுகளுக்கு பிரயோகிக்கத்தக்க வழமையான சீராக்கங்களுக்கு உட்பட்டனவாகும்.

(iv) ஏதேனும் அளவிற்கு மீறிய நிதியிடல் அல்லது குறை நிதியிடல் தொடர்பான வரிச் சட்டங்கள்/ ஒழுங்குவிதிகள்/ வழிகாட்டல்களுக்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

**2011 ஏப்பிறல் 29**

**தொடர்பு எண்: 02/05/006/0100/002**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2011 யூன் 17

*அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள், பணிக் கட்டணங்கள், கட்டணங்கள் மற்றும் தரகுகளை காட்சிப்படுத்தல்**

வட்டி வீதங்களையும் செலாவணி வீதங்களையும் காட்சிப்படுத்தல் தொடர்பாக 2003ஆம் ஆண்டு ஒத்தோபர் 28ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் 02/05/006/0100/001 தொடர்பானது.

வங்கிகளுக்கிடையே ஆரோக்கியமான போட்டித்தன்மையினை ஊக்குவிப்பதன் மூலம் சந்தை வினைத்திறனை மேலும் மேம்படுத்தும் விதத்தில் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் 2011 ஓகத்து 1ஆம் நாளிலிருந்து வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல் சாதனங்களின் வட்டி வீதங்கள் செலாவணி வீதங்கள் என்பனவற்றின் வெளிப்படுத்துகைகளை விரிவாக்குமாறும் கட்டணங்கள், தரகுகள் மற்றும் ஏனைய பணிக் கட்டணங்கள் தொடர்பான விபரங்களை அனைத்துக் கிளைகளிலும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்களிலும் காட்சிப்படுத்துமாறும் வங்கியின் வெப்தளத்தில் அவற்றை பிரசுரிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

மேற்குறிப்பிட்ட தகவல்களை காட்சிப்படுத்துவதற்கான படிவங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. வங்கிகள் தரப்பட்ட படிவங்களை ஒவ்வொரு வங்கியினதும் சாதனங்களுக்கும் பணிகளுக்கும் பொருத்தமான விதத்தில் மேலும் விரிவுபடுத்திக் கொள்ளலாம்.

இணைப்பு I - வட்டி வீதங்களை காட்சிப்படுத்துவதற்கான படிவம்

இணைப்பு II - வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள் காட்சிப்படுத்துவதற்கான படிவம்

இணைப்பு III - பணி கட்டணங்கள், கட்டணங்கள் மற்றும் தரகுகளை காட்சிப்படுத்துவதற்கான படிவம்

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

இணைப்பு I

**வட்டி வீதங்களை பார்வைக்கு வைப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள படிவம்**

| | விபரணம் | ..... அன்று உள்ளவாறு ஆகக் குறைந்தபட்ச வீதம் | ..... அன்று உள்ளவாறு உயர்ந்தபட்ச வீதம் |
|---|---|---|---|
| | | | |
| **வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள்** | | | |
| | சேமிப்பு வைப்புக்கள் | | |
| | பராயமடையாதோர் சேமிப்பு வைப்புக்கள் | | |
| | அழைப்பு வைப்புக்கள் | | |
| | தவணை வைப்புக்கள் - 1 ஆண்டு | | |
| | * மாதாந்தம் வட்டி செலுத்தப்படுபவை | | |
| | * முதிர்ச்சியில் வட்டி செலுத்தப்படுபவை | | |
| | வதிவற்றோர் வெளிநாட்டு சேமிப்பு வைப்புக்கள் | | |
| | * ஐ.அ. டொலர் | | |
| | * ஸ்டேர்லிங் பவுண் | | |
| | * யூரோ | | |
| | * வேறு ஏதேனும் நாணயங்கள் | | |
| | வதிவற்றோர் வெளிநாட்டு நிலையான வைப்புக்கள் - 1 ஆண்டு | | |
| | * ஐ.அ. டொலர் | | |
| | * ஸ்டேர்லிங் பவுண் | | |
| | * யூரோ | | |
| | * வேறு ஏதேனும் நாணயங்கள் | | |
| | | | |
| **முற்பணங்கள் மீதான வட்டி வீதங்கள்** | | | |
| | ஏற்றுமதி உண்டியல் நிதி - ரூபா வசதிகள் | | |
| | இறக்குமதி உண்டியல் நிதி - ரூபா வசதிகள் | | |
| | குத்தகை நிதி | | |
| | சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்களுக்கான கடன் வழங்கல் | | |
| | வதிவதற்கான வீடமைப்பு | | |
| | அடகுபிடித்தல் | | |
| | ஏற்றுமதியாளர்களுக்கான ஐ.அ.டொலர் கடன்கள் | | |
| | மேலதிகப் பற்றுக்கள் | | |
| | * நிரந்தரம் | | |
| | * தற்காலிகம் | | |
| | தனிப்பட்ட கடன்கள் | | |
| | ஊர்திக் கடன்கள் | | |
| | கொடுகடன் அட்டைகள் | | |
| | வேளாண்மைக்கான கடன் வழங்கல் | | |
| | **மீள் நிதியிடல் திட்டங்கள்** | | |
| | **i. வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு** | | |
| | * தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் (சுழலும் நிதி) | | |
| | * வேளாண் - விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி செயற்றிட்டம் | | |
| | * வேறு ஏதேனும் | | |
| | **ii. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்** | | |
| | * சுசான கடன் திட்டம் | | |
| | * சுயதொழில் முயற்சியாண்மைக் கடன் திட்டம் | | |
| | * வேறு ஏதேனும் | | |
| | **iii. நுண்பாக நிதித்துறை** | | |
| | * வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் (சுழலும் நிதி) வ.ஒ.நு.செ. திட்டம் | | |
| | * சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் சுழலும் நிதி | | |
| | * வேறு ஏதேனும் | | |

இணைப்பு II

## வெளிநாட்டுச் செலாவணி வீதங்களை பார்வைக்கு வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள படிவம்

| செலாவணி வீதங்கள் | வீதம்: ...... அன்று உள்ளவாறு வெளிநாட்டு நாணய அலகொன்றிற்கு ரூபாய்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | நாணயம் | | பயணிகள் காசோலை | | தந்தி மாற்றல்கள் | | இறக்குமதி உண்டியல் வீதங்கள் |
| | வாங்கும் வீதம் | விற்கும் வீதம் | வாங்கும் வீதம் | விற்கும் வீதம் | வாங்கும் வீதம் | விற்கும் வீதம் | |
| அவுத்திரேலியா டொலர் | | | | | | | |
| கனடியன் டொலர் | | | | | | | |
| டென் மார்க் குறோணர் | | | | | | | |
| யூரோ | | | | | | | |
| கொங்கொங் டொலர் | | | | | | | |
| யப்பானிய யென் | | | | | | | |
| நியூசிலாந்து டொலர் | | | | | | | |
| நோர்வே குறோணர் | | | | | | | |
| ஸ்டேர்லிங் பவுண் | | | | | | | |
| சிங்கப்பூர் டொலர் | | | | | | | |
| சுவீடன் குறோணர் | | | | | | | |
| சுவிஸ் பிராங் | | | | | | | |
| ஐ.அ.டொலர் | | | | | | | |

இணைப்பு III

## பணிக் கட்டணங்கள், கட்டணங்கள் மற்றும் தரகுகளை பார்வைக்கு வைப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள படிவம்

| | விபரணம் | ..... அன்று உள்ளவாறு ரூ. |
|---|---|---|
| | பணிக் கட்டணங்கள் | |
| சேமிப்புக் கணக்குகள் | | |
| | குறிப்பிட்ட குறைந்தபட்ச மீதி போன்றவற்றை கணக்கில் பேணாதமைக்கான விதிப்புக்கள் | |
| | | |
| நடைமுறைக் கணக்கு | | |
| | நடைமுறைக் கணக்கு மாதாந்த பணிக் கட்டணங்கள் | |
| | கணக்குக் கூற்றுக்களுக்கான கட்டணங்கள் | |
| | காசோலை வழங்கல் செலவு | |
| | கொடுப்பனவினை நிறுத்தும் கட்டளை | |
| | நிதி போதாமை போன்ற காரணங்களினால் திரும்பிய காசோலைகள் | |
| | | |
| பணவனுப்பல்கள் | | |
| | இலங்கை ரூபாக் கணக்கிற்கான உள்முக வரவுகள் | |
| | வெளிநாட்டு நாணய கணக்கிற்கான உள்முக பணவனுப்பல்கள் | |
| | வெளிநாட்டு நாணய வரைவுகள், கொடுப்பனவுக் கட்டளைகள் போன்றவற்றை வழங்கல் | |
| | | |
| பயணிகள் காசோலைகள் | | |
| | பயணிகள் காசோலைகளை மாற்றுதல் | |
| | பயணிகள் காசோலை போன்றவற்றை விற்பனை செய்தல் | |
| | | |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் | | |
| | வழங்கல் கட்டணம் | |
| | த.கூ. பொறி காசு மீளப் பெறுகை - சொந்தக் கணக்கு | |
| | த.கூ. பொறி காசு மீளப் பெறுகை - ஏனைய வங்கிகள் போன்றன | |
| | | |
| கொடுகடன் அட்டைகள் - பிரதான அட்டை உடமையாளர் | | |
| | ஆண்டுக் கட்டணம் | |
| | பிந்திய கொடுப்பனவிற்கான கட்டணங்கள் | |
| | வட்டி கட்டணங்கள் போன்றன | |
| | | |
| | கட்டணங்களும் தரகுகளும் | |
| | சிலிப்ஸ் கொடுப்பனவு கட்டணங்கள் | |
| | அ.நே.மொ.தீ. கொடுப்பனவு கட்டணங்கள் | |
| | வசதி ஒழுங்குசெய்தல் கட்டணம் - மேலதிகப் பற்றுக்கள் | |
| | * பாதுகப்பு உத்தரவாதம் | |
| | * சுத்திகரிப்பு அடிப்படை | |
| | நேரகாலத்துடனான தீர்ப்பனவுக் கட்டணம் | |
| | * வதிவிட வீடமைப்பு | |
| | * ஊர்திக் கடன்கள் | |
| | காசோலைக் கொள்வனவுத் தரகுகள் | |
| | நாணயக் கடிதத் தரகுகள் | |
| | * நாணயக் கடித திறத்தல் கட்டணம் மற்றும் தரகு | |
| | * நாணய கடித பேரம் விதிப்பு போன்றன ...... | |
| | கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள் | |
| | வங்கி உத்தரவாதங்கள் | |
| | ஏற்றுக்கொள்ளல்கள் | |

**தொடர்பு எண்: 02/17/600/0031/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2011 யூலை 28

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா

**பிணைய பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் இடாப்பில் அசையும் சொத்துக்கள் பற்றிய பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட நலவுரித்துக்களைப் பதிவு செய்தல்**

2009ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 23ஆம் பிரிவின் கீழ் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தினால் பேணப்படும் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் இடாப்பு, கடன்கள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் வசதிகளுக்காக பிணைப் பொறுப்புக்களாக எடுத்துக் கொள்ளப்பட்ட அசையும் சொத்துக்களின் கிடைப்பனவினையும் தரத்தினையும் மதிப்பீடு செய்வதற்கான பெறுமதிமிக்க தகவல்களைத் தருவதன் காரணமாக இது வங்கிகளின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு பயன்மிக்கதாக இருக்கும்.

ஆகவே பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 2ஆம் மற்றும் 3ஆம் பிரிவுகளின்படி கடன்கள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் வசதிகளின் பொருட்டு பிணைகளாக வழங்கப்பட்ட அசையும் சொத்துக்கள் மீதான ஏதேனும் பிணைகள், ஈடுகள் அல்லது கடப்பாடுகளை கொடுகடன் தகவல் பணியகத்திலுள்ள பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் இடாப்பில் பதிவு செய்து கொள்ளுமாறும் கொடுகடன் தகவல் பணியகத்திலிருந்து பெறத்தக்கதாகவுள்ள அத்தகைய தகவல்களை கொடுகடன் இடர்நேர்வு முறைமைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பயன்படுத்திக் கொள்ளுமாறும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/600/0017/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2011 ஓகத்து 8

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பனவற்றை மதிப்பிடுதல்**

வங்கித்தொழில் சட்டத்தின் 44(அ) பிரிவின் நியதிகளுக்கிணங்க, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு பொருத்தமும் தகுதியுமுடைய ஆட்களாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் இருக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதன்படி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக் கடதாசி மற்றும் பிரகடனங்களுக்கான படிவத்தையும் அத்தகைய சத்தியக் கடதாசி மற்றும் பிரகடனங்களை சரியாக பூரணப்படுத்துவதற்கான வழிகாட்டல் குறிப்பினையும் இத்துடன் இணைத்துள்ளோம்.

இணைப்பு I - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக் கடதாசி

இணைப்பு II - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்

இணைப்பு III - வழிகாட்டல் குறிப்பு

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**இணைப்பு I**

வங்கியின் பெயர்

## வங்கித்தொழில் சட்டம் 44(அ) இன் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியப் பிரமாணம்

......................................... எனும் முகவரியில் வசிப்பவரும் ................................ என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு என்பவற்றைக் கொண்டவரும் ..................................................................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு (பௌத்த/ இந்து சமயத்தவர் என்ற வகையில் உண்மையாகவும் பயபக்தியுடனும் விசுவாசமாகவும் பிரகடனம் செய்கிறேன்/ உறுதிப்படுத்துகிறேன்/ கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லிம் என்ற வகையில் சத்தியம் செய்து) பின்வருவனவற்றை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ. மேற்கூறப்பட்ட (உறுதிப்படுத்துபவர்/ வாக்குமூலம்) அளிப்பவரும் நான்தான் என்பதுடன் 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் மூலம் ஆக்கப்பட்ட வர்த்தக வங்கியாகிய .................................. இல் (வங்கியின் பெயர்) ........................ ........................................... ... பதவியினை வகிப்பவருமாவேன்.

ஆ. நான் பின்வரும் கல்விசார் தகைமையையும்/ தகைமைகளையும் தொழில்சார் நிபுணத்துவ தகைமையையும்/ தகைமைகளையும் கொண்டுள்ளேன் என்பதனை (உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

இ. வங்கி, நிதி, வர்த்தகம், நிர்வாகம் அல்லது இவை தொடர்பான துறைகளில் நான் காத்திரமான தகைமைகளை கொண்டிருக்கிறேன் என்பதனையும் பயன்படுத்தக்கூடிய அனுபவங்கள் பின்வருமாறு இருக்கும் எனவும் நான் (உறுதிப்படுத்துகிறேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

ஈ. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதாவது முறையற்ற நடத்தைகள் தொடர்பான விடயங்களை நான் செய்துள்ளேன் என்றோ அல்லது அத்தகைய செயலுடன் தொடர்புபட்டுள்ளேன் என்றோ இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தால் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழு அல்லது நியாய சபையினால் அல்லது வேறு ஏதும் அமைப்பினால் எந்தவொரு தீர்ப்புக்கும் உள்ளாகவில்லை.

உ. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதாவது அதேவகையான தவறான நடவடிக்கைகளைச் செய்தேன் என அறிவிக்கப்பட்டு குற்றச்சாட்டுப்பத்திரிகை வழங்கப்பட்டு இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தால் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழுவினால் அல்லது நியாய சபையினால் அல்லது வேறு ஏதும் அமைப்பினால் நான் விசாரணைக்கோ அல்லது ஆராய்வுக்கோ உட்பட்டிருக்கவில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

ஊ. நிதி முகாமைத்துவம் அல்லது வேறு விதமான ஒழுங்குமுறைகள் தொடர்பாக இழைக்கப்பட்ட குற்றத்திற்காக இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினாலோ தண்டிக்கப்படவில்லை என்பதனை நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

எ. நான் ஒரு கடன் தீராற்றலற்றவர் என்றோ அல்லது வங்குரோத்துக்காரர் என்றோ இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பிரகடனப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

ஏ. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளையினை நிறைவேற்றுவதற்கோ அல்லது கடனைத் திருப்பிக் கட்டுவதற்கோ தவறவில்லை என நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

ஐ. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் நான் ஒரு சித்த சுவாதீனமற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்படுத்தப்படவில்லை என்பதனை நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

ஒ. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ ஒழுங்குபடுத்தும் அல்லது கண்காணிக்கும் அதிகாரசபையின் கட்டளை ஒன்றின் மூலம் உரிமம் அளிக்கப்பட்டுள்ள வங்கி ஒன்றின் அல்லது நிதி நிறுவனத்தின் அல்லது கம்பனிச் சபையின் பணிப்பாளர், முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது வேறு ஏதேனும் அலுவலராக பணியாற்றும் சேவையிலிருந்து நீக்கப்படவுமில்லை தடுக்கப்படவுமில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

ஓ. (i) உரிமம் இடைநிறுத்தப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட; அல்லது

(ii) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ மூடப்பட அல்லது மூடப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது கட்டாயமாக ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற

எந்தவொரு வங்கியிலும் அல்லது நிதி நிறுவனத்திலும் பணிப்பாளராகவோ அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ அல்லது அதிகாரம் மிக்க ஏதேனும் பணிகளையோ வகிக்கவில்லை என்பதனை (உறுதி/ தெரிவித்து) கொள்கிறேன்.

ஔ அறிவுக்கு எட்டியவரை வங்கித்தொழில் சட்டம் பிரிவு 44(ஏ) இன் கீழ் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் ................. ஆகப் [பதவி வகிப்பதற்கு/ முதன்மை நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்படுவதற்கு] நான் தகுதியானவரும் பொருத்தமானவருமாவேன் என (உறுதிப்படுத்தி/ தெரிவித்து) கொள்கிறேன்.

இதில் அடக்கப்பட்ட பிரதிக்ஞைகளை இப் பிரதிக்ஞை செய்பவருக்கு (உறுதிப்படுத்துபவர்/ தெரிவிப்பவர்) வாசித்து விளங்கப்படுத்திய பிற்பாடு அதனை விளங்கிக் கொண்டு அதனை உண்மை எனவும் ஏற்றுக் கொண்டும் உறுதிப்படுத்துகின்றார் சத்தியம் செய்து தனது கையொப்பத்தினை ............. இல் ..........ஆம் திகதி ........... மாதத்தில் வைக்கின்றார்.

ஏற்புடைத்தான முத்திரையை ஒட்டவும்

என் முன்னிலையில்

சமாதான நீதிவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்

**இணைப்பு II**

வங்கியின் பெயர்:

## வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்

(..................... இற்குப் பொருத்தமான இணைப்புக்களுடன்)

1. **தனிப்பட்ட விபரங்கள்**

1.1 முழுப் பெயர்:

1.2 அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம்:

1.3 பிறந்த திகதி:

1.4 நிரந்தர முகவரி:

1.5 தற்போதைய முகவரி:

2. **வங்கியில் நியமனம்:**

2.1 தற்போதைய பதவியை ஏற்றுக்கொண்ட திகதி: (தயவுசெய்து நியமனக் கடிதமொன்றின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதப் பிரதியொன்றை இணைக்கவும்)

2.2 பதவி:

2.3 உள்நாடு அல்லது வெளிநாடு

3. **பின்னணியும் அனுபவமும்**

உரிமம் பெற்ற வங்கி/கள், வங்கித்தொழில் சட்டத்திற்கிணங்க, அதனுடைய துணை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றில் அவன்/ அவள் முதன்மை நிறைவேற்று அலுவலராக, பணிப்பாளராக அல்லது ஒரு அலுவலராக நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்றவிடத்து அவை பற்றிய விபரம்

| நிறுவனத்தின் பெயர் | பதவியிலிருந்த காலம் | பதவி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

4. **வங்கிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட கம்பனிகளிலுள்ள பங்குடமை**

உரிமம் பெற்ற வங்கிகள், அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் தற்போது அவற்றில் வைத்திருக்கும் பங்கு உரிமையாண்மை:

| நிறுவனத்தின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | பங்குடமை சதவீதம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

5. **வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்**[1]

வங்கியுடன் அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின், அவற்றுடன் நிறைவேற்றுப் பணிகள் ஆற்றும்/ நிறைவேற்றுப் பணியினை ஆற்ற முன்மொழியப்பட்டிருக்கும் அலுவலர் வைத்திருக்கும் ஏதாவது வியாபாரக் கொடுக்கல்வாங்கல்

| நிறுவனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் திகதி | ................இல் தொகை (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படும்/ செயற்படாத) | பிணையின் வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | நிலுவை | | | |
| கடன் வசதிகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| முதலீடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| வைப்புக்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**6. வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவிற்கிணங்க நெருங்கிய உறவினர்களின்[1] தனிப்பட்ட தகவல்கள்**

6.1 வாழ்க்கைத் துணைவரின் முழுப் பெயர்:

6.2 அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம்:

6.3 தங்கி வாழும் பிள்ளைகளின் பெயர்கள்:

| | முழுப் பெயர் | அடையாள அட்டை/ கடவுச்சீட்டு இல. |
|---|---|---|
| 6.3.1 | | |
| 6.3.2 | | |
| 6.3.3 | | |
| 6.3.4 | | |

**7. நெருங்கிய உறவினர்களின் நியமனம், பங்குடமை மற்றும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்**

7.1 நிறைவேற்றுப் பணிகள் ஆற்றும் அலுவலராக, பணிப்பாளராக, அலுவலராகவுள்ளவரின் நெருங்கிய உறவினர்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் அவற்றின் துணை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்களில் எவராவது இருப்பின்,

| வங்கியின் பெயர் | நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

7.2 ஏதாவதொரு நெருங்கிய உறவினர் நேரடியாக/ மறைமுகமாக வங்கியில்/ அதன் துணை நிறுவனங்களில் அல்லது இணை நிறுவனங்களில் பங்குடமைகள் ஏதும் வைத்திருப்பின்,

| நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | | வைத்திருக்கும் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | நேரடியாக | மறைமுகமாக | நேரடியாக | மறைமுகமாக |
| | | | | |
| | | | | |
| | | | | |

1 - "வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது ஏதாவது கடன் வசதிகள், முதலீடுகள் மற்றும் வைப்புக்களைக் குறிக்கும் என்பதுடன் வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில் இலங்கையர்களின் தொழிற்பாடுகளுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களை மட்டும் குறிக்கும்.

7.3 நெருங்கிய உறவினர் வங்கியுடன் அதன் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றுடன் வைத்துள்ள ஏதாவதொரு வியாபாரக் கொடுக்கல்வாங்கல்

| நிறுவனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் திகதி | ................இல் தொகை (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படும்/ செயற்படாத) | பிணையின் வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | நிலுவை | | | |
| கடன் வசதிகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| முதலீடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| வைப்புக்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

8. மேற்கூறப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய ஏதாவது விபரிப்பு/ தகவல்கள் மற்றும் வங்கியின் முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளர்/ நிறைவேற்றுப் பணிப்பாளராக முன்மொழியப்பட்டவர் ஆற்றும் அலுவலர்களின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்வதற்கு தொடர்புடையது எனக் கருதப்படும் ஏனைய தகவல்கள்.

**பிரகடனம்**

எனது அறிவுக்கு எட்டிய வரையில் மேலேயுள்ள தகவல்கள் சரியானவையும் பூரணமானவையுமென நம்புகிறேன். மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பாக இனிமேல் இடம்பெறக்கூடிய அனைத்து நிகழ்வுகளையும் சாத்தியமானளவிற்கு விரைவாக வங்கிக்கு அறியத் தருவேன் என்பதற்கும் உடன்படுகின்றேன்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு நான் நியமிக்கப்படுவதனை எந்தவொரு சட்டமும் தடை செய்யவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திகதி :**

**முதன்மை நிறைவேற்று அலுவலர்/ நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலரின் கையொப்பம்**

**தலைவரினால்/ பிராந்திய தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது (வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரை)**

1. மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பான வேறு ஏதேனும் விளக்கங்கள்/ தகவல்களும் வங்கியில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஆளின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கு தொடர்பானது எனக் கருதப்படுகின்ற வேறு தகவல்களும்

2. வங்கித்தொழில் சட்டத்தின் 44ஏ இன் நியதிகளில் மேற்கூறப்பட்ட அலுவலர், நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுவதற்கு பொருத்தம் மற்றும் தகுதி உள்ளவர் என நான் உறுதியளிக்கிறேன்.

திகதி: தலைவர்/ பிராந்திய தலைவரின் கையொப்பமும்
அலுவலக முத்திரையும்

**இணைப்பு III**

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக் கடதாசி மற்றும் பிரகடனங்களை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டல்கள்

**அ. சத்தியக் கடதாசிகளையும் பிரகடனங்களையும் பெற்றுக் கொள்வதன் நோக்கம்**

- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் சத்தியக் கடதாசிகளையும் பிரகடனங்களையும் பெற்றுக் கொள்வதன் நோக்கம் யாதெனில், வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க அத்தகைய அலுவலர்களின் பொருத்தத்தினையும் தகுதியினையும் மதிப்பிடுவதற்கு வங்கித்தொழில் மேற்பார்வைத் திணைக்களத்தினை இயலச் செய்வதேயாகும். இதன்படி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தம் பற்றி மதிப்பிடுவதற்கேற்ற விதத்தில் அனுபவம், தகைமைகள், ஒருங்கிணைந்த தன்மை மற்றும் வங்கித்தொழில் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் தன்மை என்பனவற்றை மதிப்பீடு செய்வதற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அனைத்தையுமுள்ளடக்கிய தகவல்கள் தேவைப்படுகின்றன.
- மேலும் இவை ஏதேனும் பிணக்கு ஏற்படும் சந்தர்ப்பத்தில் சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்துகின்ற ஆவணமாக இருத்தல் வேண்டும்.
- முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி பற்றி மதிப்பிடுவதற்குப் போதுமான தகவல்கள் வங்கிகளினால் வழங்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துவதற்காக இவ்வழிகாட்டல் விடுக்கப்படுகிறது.

**ஆ. சத்தியக் கடதாசி**

1. தேவையற்ற சொற்கள் உள்ளடக்கப்படுவதனைத் தவிர்க்கும் பொருட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு புதிய ஆவணமொன்றாக சத்தியக் கடதாசியினை தயாரிப்பது விரும்பத்தக்கதாகும். எனினும், தரப்பட்ட படிவம் பூரணப்படுத்தப்பட்டிருக்குமிடத்து, அனைத்து மாற்றங்கள் அழிப்புக்கள் மற்றும் இடைச் செருகல்கள் என்பனவற்றின் மீது சத்தியப் பிரமாண ஆணையாளரின் முதலெழுத்துக்கள் இடப்படல் வேண்டும்.

2. கல்விசார்/ தொழில்சார் தகைமைகள்
   - தொடர்பான தகைமைகள் பின்வருவனவற்றுடன் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
     - பெற்றுள்ள தகைமைகள்
     - நிறுவனத்தின்/ பல்கலைக்கழகத்தின் பெயர்
     - தகைமை பெறப்பட்ட ஆண்டு
     - அவன்/ அவள் உறுப்பினராகவுள்ள தொழில்சார் நிறுவனத்தின் பெயர்

3. காத்திரமான அனுபவம் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.
   - நிறுவனம்
   - பதவி
   - காலம்

4. அனைத்து இடைவெளிகளையும் கிளைவாசகங்களையும் சரியான முறையில் நிரப்பவும் (உ-ம்: முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம், முகவரி, முதன்மை நிறைவேற்று அலுவலர்/ முன்மொழியப்பட்டுள்ள முதன்மை நிறைவேற்று அலுவலர், வங்கியின் பெயர் போன்றன)

5. உரிய ஆளின் சமயத்தின் அடிப்படையில் பொருத்தமான சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

5.1 பொருத்தமற்ற சொற்களை வெட்டி/ நீக்கி விடவும்.

உ-ம்:

- பௌத்தர்/ இந்து: உறுதிப்படுத்துதல்/ உறுதியளித்தல்/ மனப்பூர்வமாக, உண்மையாக மற்றும் விசுவாசமாக பிரகடனம் செய்கிறேன் மற்றும் உறுதிப்படுத்துகிறேன்.
- கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லீம்: வாக்குமூலமளித்தல்/ தெரிவித்தல்/ சத்தியப் பிரமாணம் செய்தல்/ மற்றும் தெரிவித்தல்/ சத்தியம் செய்தல்
- ஆளொருவர் அவரின்/ அவளின் சமயத்தினை: உறுதிப்படுத்தல்/ உறுதியளித்தல்/ மனப்பூர்வமாக, உண்மையுள்ள அத்துடன் விசுவாசமாக வெளிப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல் என்பனவற்றை வெளிப்படுத்துவதனை தவிர்த்துக் கொள்ள/ ஆட்சேபத்தினை தெரிவிப்பாராயின் அத்தகைய சந்தர்ப்பத்தில் அலுவலர் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.
  - அவர்/ அவள் ஒரு நாஸ்திகர் அல்லது சார்ந்துள்ள சமயம் பற்றி அவரின் சத்தியக் கடதாசியில் தெரிவிக்கப்படவில்லை என்பது பற்றி; அல்லது
  - அவர்/ அவள், அவரின்/ அவளின் சமயத்தை வெளிப்படுத்துவதில் ஆட்சேபனை தெரிவித்தமை பற்றி

5.2 பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடுமிடத்து, சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவான் அத்தகைய அனைத்துத் திருத்தங்களின் மீதும் அவரது முதலெழுத்துக்களை உடனடியாக இடுதல் வேண்டும்.

6. ஆளொருவர் வெளிநாட்டவராக இருந்து சத்தியக் கடதாசி வெளிநாட்டில் கையொப்பமிடப்பட்டிருப்பின்:
   - கையொப்பமானது நாட்டிலுள்ள சத்தியப் பிரமாண ஆணையாளரினால் அல்லது அவருக்குச் சமமான ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அவரது கையொப்பமும் இடப்படல் வேண்டும்.
   - உறுதிப்படுத்தல் தொடர்பான நாட்டிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகரின் முன்னிலையில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
7. ரூ.25 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு அவ்வாள் கையொப்பமிடல் வேண்டும். எதிர்காலத்தில் செய்யப்படும் சத்தியக் கடதாசிகளைப் பொறுத்தவரையில், சத்தியக் கடதாசி கையொப்பமிடப்படும் திகதிக்கு ஏற்புடைத்தான பெறுமதிக்கேற்றவாறு முத்திரையின் பெறுமதியின் இனம் மாற்றப்படுதல் வேண்டும்.
8. ஆளொருவர் ‘எனக்கு முன்னால்’ கையொப்பமிட்டதனை உடனடுத்து சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவான் உடனடியாக அதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**இ. பிரகடனங்கள்**

1. பிரகடனங்கள்
   - முழுமையாக நிரப்பப்படுதல் வேண்டும்; அனைத்துப் பிரிவுகளும் (1-8) பூரணப்படுத்தப்படல் வேண்டும் (முழுப் பெயர், திகதி போன்றன) அத்துடன் தொடர்பற்ற பிரிவுகள் ஏற்புடைத்தானவையல்ல/ இல்லை/ ஒன்றுமேயில்லை அல்லது இரத்துச் செய்யப்பட்டது என குறிப்பிடப்படல் வேண்டும்.
   - கையொப்பமிட்டு திகதி பொறிக்கப்படல் வேண்டும்.
2. இறுதிப் பிரிவு பூரணப்படுத்தப்பட்டு தலைவர்/ பிராந்திய தலைவரினால் அலுவலக முத்திரை/ சீல் பொறிக்கப்பட்டு திகதியும் முத்திரையும் இடப்படல் வேண்டும் (வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரை) குறிப்பிடுவதற்கேதும் இல்லையெனில் ஏற்புடைத்தானவையல்ல/ இல்லை/ ஒன்றுமேயில்லை என தெரிவிக்கப்படல் வேண்டும்.
3. நியமனம் தொடர்பான நியதிகள் (பதவி, நியமனத் திகதி, கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் ஊதியங்கள் போன்ற பொதிகள் உட்பட) இணைக்கப்படுதல் வேண்டும்.

**ஈ. விளக்கம்**

1. “நெருங்கிய உறவினர்” என்பதன் கருத்து வாழ்க்கைத் துணைவர்/ தங்கியிருக்கும் பிள்ளை எனப் பொருள்படும்.
2. “வியாபாரக் கொடுக்கல்வாங்கல்” என்பது கடன் வழங்கல், முதலீடு செய்தல் மற்றும் வைப்புக்கள் எனப் பொருள்படும் என்பதுடன் வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில் இலங்கையர்களுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களை மட்டும் குறிக்கும்.
3. “கடன் வசதி” என்பது ஏதேனும் கடன், மேலதிகப் பற்று அல்லது முற்பணம் அல்லது நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு கடன் வசதி அல்லது எதிர்பாராத பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கான பொறுப்பு உட்பட, நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஏதேனும் கடனை, மேலதிகப் பற்றை அல்லது முற்பணத்தை அல்லது அத்தகைய வேறு பண வதியை வழங்குவதற்கான ஏதேனும் பொறுப்பு என்று பொருளாகும்.

**தொடர்பு எண்: 02/17/600/0017/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2011 ஓகத்து 8

*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பனவற்றை மதிப்பிடுதல்**

வங்கித்தொழில் சட்டத்தின் 44(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 76(ஏ) பிரிவின் நியதிகளுக்கிணங்க, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு அவர்கள் பொருத்தமும் தகுதியுமுடைய ஆட்களாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் இருக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதன்படி, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக் கடதாசி மற்றும் பிரகடனங்களுக்கான படிவத்தையும் அத்தகைய சத்தியக் கடதாசி மற்றும் பிரகடனங்களை சரியாக பூரணப்படுத்துவதற்கான வழிகாட்டல் குறிப்பினையும் இத்துடன் இணைத்துள்ளோம்.

இணைப்பு I - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக் கடதாசி

இணைப்பு II - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்

இணைப்பு III - வழிகாட்டல் குறிப்பு

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**இணைப்பு I**

வங்கியின் பெயர்

**வங்கித்தொழில் சட்டத்தின் 44(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 76(ஏ) பிரிவின் நியதிகளுக்கிணங்க உரிமம் பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியப் பிரமாணம்**

......................................... எனும் முகவரியில் வசிப்பவரும் ................................ என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு என்பவற்றைக் கொண்டவரும் ..................................................................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு (பௌத்த/ இந்து சமயத்தவர் என்ற வகையில் உண்மையாகவும் பயபக்தியுடனும் விசுவாசமாகவும் பிரகடனம் செய்கிறேன்/ உறுதிப்படுத்துகிறேன்/ கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லிம் என்ற வகையில் சத்தியம் செய்து) பின்வருவனவற்றை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ. மேற்கூறப்பட்ட (உறுதிப்படுத்துபவர்/ வாக்குமூலம்) அளிப்பவரும் நான்தான் என்பதுடன் 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் மூலம் ஆக்கப்பட்ட வர்த்தக வங்கியாகிய .................................. இல் (வங்கியின் பெயர்) ........................ ........................................... ... பதவியினை வகிப்பவருமாவேன்.

ஆ. நான் பின்வரும் கல்விசார் தகைமையையும்/ தகைமைகளையும் தொழில்சார் நிபுணத்துவ தகைமையையும்/ தகைமைகளையும் கொண்டுள்ளேன் என்பதனை (உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

இ. வங்கி, நிதி, வர்த்தகம், நிர்வாகம் அல்லது இவை தொடர்பான துறைகளில் நான் காத்திரமான தகைமைகளை கொண்டிருக்கிறேன் என்பதனையும் பயன்படுத்தக்கூடிய அனுபவங்கள் பின்வருமாறு இருக்கும் எனவும் நான் (உறுதிப்படுத்துகிறேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

ஈ. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதாவது முறையற்ற நடத்தைகள் தொடர்பான விடயங்களை நான் செய்துள்ளேன் என்றோ அல்லது அத்தகைய செயலுடன் தொடர்புபட்டுள்ளேன் என்றோ இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தால் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழு அல்லது நியாய சபையினால் அல்லது வேறு ஏதும் அமைப்பினால் எந்தவொரு தீர்ப்புக்கும் உள்ளாகவில்லை.

உ. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதாவது அதேவகையான தவறான நடவடிக்கைகளைச் செய்தேன் என அறிவிக்கப்பட்டு குற்றச்சாட்டுப்பத்திரிகை வழங்கப்பட்டு இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தால் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழுவினால் அல்லது நியாய சபையினால் அல்லது வேறு ஏதும் அமைப்பினால் நான் விசாரணைக்கோ அல்லது ஆராய்வுக்கோ உட்பட்டிருக்கவில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

ஊ. நிதி முகாமைத்துவம் அல்லது வேறு விதமான ஒழுங்குமுறைகள் தொடர்பாக இழைக்கப்பட்ட குற்றத்திற்காக இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினாலோ தண்டிக்கப்படவில்லை என்பதனை நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

எ. நான் ஒரு கடன் தீராற்றலற்றவர் என்றோ அல்லது வங்குரோத்துக்காரர் என்றோ இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பிரகடனப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

ஏ. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளையினை நிறைவேற்றுவதற்கோ அல்லது கடனைத் திருப்பிக் கட்டுவதற்கோ தவறவில்லை என நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

ஐ. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் நான் ஒரு சித்த சுவாதீனமற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்படுத்தப்படவில்லை என்பதனை நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

ஒ. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ ஒழுங்குபடுத்தும் அல்லது கண்காணிக்கும் அதிகாரசபையின் கட்டளை ஒன்றின் மூலம் உரிமம் அளிக்கப்பட்டுள்ள வங்கி ஒன்றின் அல்லது நிதி நிறுவனத்தின் அல்லது கம்பனிச் சபையின் பணிப்பாளர், முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது வேறு ஏதேனும் அலுவலராக பணியாற்றும் சேவையிலிருந்து நீக்கப்படவுமில்லை தடுக்கப்படவுமில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

ஓ. (i) உரிமம் இடைநிறுத்தப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட; அல்லது

(ii) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ மூடப்பட்ட அல்லது மூடப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது கட்டாயமாக ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற

எந்தவொரு வங்கியிலும் அல்லது நிதி நிறுவனத்திலும் பணிப்பாளராகவோ அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ அல்லது அதிகாரம் மிக்க ஏதேனும் பணிகளையோ வகிக்கவில்லை என்பதனை (உறுதி/ தெரிவித்து) கொள்கிறேன்.

ஔ அறிவுக்கு எட்டியவரை வங்கித்தொழில் சட்டத்தின் 44(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 76(ஏ) பிரிவின் நியதிகளின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் ................. ஆகப் [பதவி வகிப்பதற்கு/ முதன்மை நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்படுவதற்கு] நான் தகுதியானவரும் பொருத்தமானவருமாவேன் என (உறுதிப்படுத்தி/ தெரிவித்து) கொள்கிறேன்.

இதில் அடக்கப்பட்ட பிரதிக்ஞைகளை இப் பிரதிக்ஞை செய்பவருக்கு (உறுதிப்படுத்துபவர் / தெரிவிப்பவர்) வாசித்து விளங்கப்படுத்திய பிற்பாடு அதனை விளங்கிக் கொண்டு அதனை உண்மை எனவும் ஏற்றுக் கொண்டும் உறுதிப்படுத்துகின்றார் சத்தியம் செய்து தனது கையொப்பத்தினை ............ இல் .......... ஆம் திகதி ........... மாதத்தில் வைக்கின்றார்.

ஏற்புடைத்தான முத்திரையை ஒட்டவும்

என் முன்னிலையில்

சமாதான நீதிவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்

**இணைப்பு II**

வங்கியின் பெயர்:

**வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளின் கீழ் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்**

**(..................... இற்குப் பொருத்தமான இணைப்புக்களுடன்)**

**1. தனிப்பட்ட விபரங்கள்**

1.1 முழுப் பெயர்:

1.2 அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம்:

1.3 பிறந்த திகதி:

1.4 நிரந்தர முகவரி:

1.5 தற்போதைய முகவரி:

**2. வங்கியில் நியமனம்:**

2.1 தற்போதைய பதவியை ஏற்றுக்கொண்ட திகதி: (தயவுசெய்து நியமனக் கடிதமொன்றின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதப் பிரதியொன்றை இணைக்கவும்)

2.2 பதவி:

2.3 உள்நாடு அல்லது வெளிநாடு

**3. பின்னணியும் அனுபவமும்**

உரிமம் பெற்ற வங்கி/கள், வங்கித்தொழில் சட்டத்திற்கிணங்க, அதனுடைய துணை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றில் அவன்/ அவள் முதன்மை நிறைவேற்று அலுவலராக, பணிப்பாளராக அல்லது ஒரு அலுவலராக நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்றவிடத்து அவை பற்றிய விபரம்

**4. வங்கிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட கம்பனிகளிலுள்ள பங்குடமை**

ஏதேனும் உரிமம் பெற்ற வங்கிகள், அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் தற்போது அவற்றில் வைத்திருக்கும் பங்கு உரிமையாண்மை:

| நிறுவனத்தின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | பங்குடமை சதவீதம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

**5. வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்**[1]

வங்கியுடன் அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின், அவற்றுடன் நிறைவேற்றுப் பணிகள் ஆற்றும்/ நிறைவேற்றுப் பணியினை ஆற்ற முன்மொழியப்பட்டிருக்கும் அலுவலர் வைத்திருக்கும் ஏதாவது வியாபாரக் கொடுக்கல்வாங்கல்

| நிறுவனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் திகதி | ................இல் தொகை (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படும்/ செயற்படாத) | பிணையின் வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | நிலுவை | | | |
| கடன் வசதிகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| முதலீடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| வைப்புக்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**6. வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவிற்கிணங்க நெருங்கிய உறவினர்களின்[1] தனிப்பட்ட தகவல்கள்**

6.1 வாழ்க்கைத் துணைவரின் முழுப் பெயர்:

6.2 அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம்:

1 - "வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது ஏதாவது கடன் வசதிகள், முதலீடுகள் மற்றும் வைப்புக்களைக் குறிக்கும் என்பதுடன் வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில் இலங்கையர்களின் தொழிற்பாடுகளுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களை மட்டும் குறிக்கும்.

6.3 தங்கி வாழும் பிள்ளைகளின் பெயர்கள்:

| | முழுப் பெயர் | அடையாள அட்டை/ கடவுச்சீட்டு இல. |
|---|---|---|
| 6.3.1 | | |
| 6.3.2 | | |
| 6.3.3 | | |
| 6.3.4 | | |

**7. நெருங்கிய உறவினர்களின் நியமனம், பங்குடமை மற்றும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்**

7.1 நிறைவேற்றுப் பணிகள் ஆற்றும் அலுவலராக, பணிப்பாளராக, அலுவலராகவுள்ளவரின் நெருங்கிய உறவினர்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் அவற்றின் துணை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்களில் எவராவது இருப்பின்,

| வங்கியின் பெயர் | நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

7.2 ஏதாவதொரு நெருங்கிய உறவினர் நேரடியாக/ மறைமுகமாக வங்கியில்/ அதன் துணை நிறுவனங்களில் அல்லது இணை நிறுவனங்களில் பங்குடமைகள் ஏதும் வைத்திருப்பின்,

| நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | | வைத்திருக்கும் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | நேரடியாக | மறைமுகமாக | நேரடியாக | மறைமுகமாக |
| | | | | |
| | | | | |
| | | | | |

7.3 நெருங்கிய உறவினர் வங்கியுடன் அதன் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றுடன் வைத்துள்ள ஏதாவதொரு வியாபாரக் கொடுக்கல்வாங்கல்

| நிறுவனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் திகதி | ................இல் தொகை (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படும்/ செயற்படாத) | பிணை வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | நிலுவை | | | |
| கடன் வசதிகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| முதலீடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| வைப்புக்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

8. மேற்கூறப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய ஏதாவது விபரிப்பு/ தகவல்கள் மற்றும் வங்கியின் முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளர்/ நிறைவேற்றுப் பணிப்பாளராக முன்மொழியப்பட்டவர் ஆற்றும் அலுவலர்களின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்வதற்கு தொடர்புடையது எனக் கருதப்படும் ஏனைய தகவல்கள்.

பிரகடனம்

எனது அறிவுக்கு எட்டிய வரையில் மேலேயுள்ள தகவல்கள் சரியானவையும் பூரணமானவையுமென நம்புகிறேன். மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பாக இனிமேல் இடம்பெறக்கூடிய அனைத்து நிகழ்வுகளையும் சாத்தியமானளவிற்கு விரைவாக வங்கிக்கு அறியத் தருவேன் என்பதற்கும் உடன்படுகின்றேன்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு நான் நியமிக்கப்படுவதனை எந்தவொரு சட்டமும் தடை செய்யவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி :

**முதன்மை நிறைவேற்று/ அலுவலர் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலரின் கையொப்பம்**

**தலைவரினால்/ பிராந்திய தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது (வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரை)**

1. மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பான வேறு ஏதேனும் விளக்கங்கள்/ தகவல்களும் வங்கியில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஆளின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கு தொடர்பானது எனக் கருதப்படுகின்ற வேறு தகவல்களும்

2. 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 44ஏ உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 76(ஏ) பிரிவின் நியதிகளில் மேற்கூறப்பட்ட அலுவலர், ................... இன் நிறைவேற்றுப் பணிப்பாளரின் பணிகளை ஆற்றுவதற்கு பொருத்தம் மற்றும் தகுதி உள்ளவர் என நான் உறுதியளிக்கிறேன்.

திகதி: தலைவர்/ பிராந்திய தலைவரின் கையொப்பமும்
அலுவலக முத்திரையும்

**இணைப்பு III**

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக் கடதாசி மற்றும் பிரகடனங்களை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டல்கள்

**அ. சத்தியக் கடதாசிகளையும் பிரகடனங்களையும் பெற்றுக் கொள்வதன் நோக்கம்**

- உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் சத்தியக் கடதாசிகளையும் பிரகடனங்களையும் பெற்றுக் கொள்வதன் நோக்கம் யாதெனில், வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க அத்தகைய அலுவலர்களின் பொருத்தத்தினையும் தகுதியினையும் மதிப்பிடுவதற்கு வங்கித்தொழில் மேற்பார்வைத் திணைக்களத்தினை இயலச் செய்வதேயாகும். இதன்படி, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி பற்றி மதிப்பிடுவதற்கேற்ற விதத்தில் அனுபவம், தகைமைகள், ஒருங்கிணைந்த தன்மை மற்றும் வங்கித்தொழில் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் தன்மை என்பனவற்றை மதிப்பீடு செய்வதற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அனைத்தையுமுள்ளடக்கிய தகவல்கள் தேவைப்படுகின்றன.
- மேலும் இவை ஏதேனும் பிணக்கு ஏற்படும் சந்தர்ப்பத்தில் சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்துகின்ற ஆவணமாக இருத்தல் வேண்டும்.
- முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி பற்றி மதிப்பிடுவதற்குப் போதுமான தகவல்கள் வங்கிகளினால் வழங்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துவதற்காக இவ்வழிகாட்டல் விடுக்கப்படுகிறது.

**ஆ. சத்தியக் கடதாசி**

1. தேவையற்ற சொற்கள் உள்ளடக்கப்படுவதனைத் தவிர்க்கும் பொருட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு புதிய ஆவணமொன்றாக சத்தியக் கடதாசியினை தயாரிப்பது விரும்பத்தக்கதாகும். எனினும், தரப்பட்ட படிவம் பூரணப்படுத்தப்பட்டிருக்குமிடத்து, அனைத்து மாற்றங்கள் அழிப்புக்கள் மற்றும் இடைச் செருகல்கள் என்பனவற்றின் மீது சத்தியப் பிரமாண ஆணையாளரின் முதலெழுத்துக்கள் இடப்படல் வேண்டும்.

2. கல்விசார்/ தொழில்சார் தகைமைகள்
   - தொடர்பான தகைமைகள் பின்வருவனவற்றுடன் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
     - பெற்றுள்ள தகைமைகள்
     - நிறுவனத்தின்/ பல்கலைக்கழகத்தின் பெயர்
     - தகைமை பெறப்பட்ட ஆண்டு
     - அவன்/ அவள் உறுப்பினராகவுள்ள தொழில்சார் நிறுவனத்தின் பெயர்

3. காத்திரமான அனுபவம் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.
   - நிறுவனம்
   - பதவி
   - காலம்

4. அனைத்து இடைவெளிகளையும் கிளைவாசகங்களையும் சரியான முறையில் நிரப்பவும் (உ-ம்: முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம், முகவரி, முதன்மை நிறைவேற்று அலுவலர்/ முன்மொழியப்பட்டுள்ள முதன்மை நிறைவேற்று அலுவலர், வங்கியின் பெயர் போன்றன)

5. உரிய ஆளின் சமயத்தின் அடிப்படையில் பொருத்தமான சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

5.1 பொருத்தமற்ற சொற்களை வெட்டி/ நீக்கி விடவும்.
உ-ம்:
   - பௌத்தர்/ இந்து: உறுதிப்படுத்துதல்/ உறுதியளித்தல்/ மனப்பூர்வமாக, உண்மையாக மற்றும் விசுவாசமாக பிரகடனம் செய்கிறேன் மற்றும் உறுதிப்படுத்துகிறேன்.
   - கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லீம்: வாக்குமூலமளித்தல்/ தெரிவித்தல்/ சத்தியப் பிரமாணம் செய்தல்/ மற்றும் தெரிவித்தல்/ சத்தியம் செய்தல்
   - ஆளொருவர் அவரின்/ அவளின் சமயத்தினை: உறுதிப்படுத்தல்/ உறுதியளித்தல்/ மனப்பூர்வமாக, உண்மையுள்ள அத்துடன் விசுவாசமாக வெளிப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல் என்பனவற்றை வெளிப்படுத்துவதனை தவிர்த்துக் கொள்ள/ ஆட்சேபத்தினை தெரிவிப்பாராயின் அத்தகைய சந்தர்ப்பத்தில் அலுவலர் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.
     - அவர்/ அவள் ஒரு நாஸ்திகர் அல்லது சார்ந்துள்ள சமயம் பற்றி அவரின் சத்தியக் கடதாசியில் தெரிவிக்கப்படவில்லை என்பது பற்றி;

       அல்லது
     - அவர்/ அவள், அவரின்/ அவளின் சமயத்தை வெளிப்படுத்துவதில் ஆட்சேபனை தெரிவித்தமை பற்றி

5.2 பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடுமிடத்து, சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவான் அத்தகைய அனைத்துத் திருத்தங்களின் மீதும் அவரது முதலெழுத்துக்களை உடனடியாக இடுதல் வேண்டும்.

6. ஆளொருவர் வெளிநாட்டவராக இருந்து சத்தியக் கடதாசி வெளிநாட்டில் கையொப்பமிடப்பட்டிருப்பின்:

- கையொப்பமானது நாட்டிலுள்ள சத்தியப் பிரமாண ஆணையாளரினால் அல்லது அவருக்குச் சமமான ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அவரது கையொப்பமும் இடப்படல் வேண்டும்.
- உறுதிப்படுத்தல் தொடர்பான நாட்டிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகரின் முன்னிலையில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7. ரூ.25 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு அவ்வாள் கையொப்பமிடப்படல் வேண்டும். எதிர்காலத்தில் செய்யப்படும் சத்தியக் கடதாசிகளைப் பொறுத்தவரையில், சத்தியக் கடதாசி கையொப்பமிடப்படும் திகதிக்கு ஏற்புடைத்தான பெறுமதிக்கேற்றவாறு முத்திரையின் பெறுமதியின் இனம் மாற்றப்படுதல் வேண்டும்.

8. ஆளொருவர் 'எனக்கு முன்னால்' கையொப்பமிட்டதனை உடனடுத்து சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவான் உடனடியாக அதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**இ. பிரகடனங்கள்**

1. பிரகடனங்கள்
   - முழுமையாக நிரப்பப்படுதல் வேண்டும்; அனைத்துப் பிரிவுகளும் (1-8) பூரணப்படுத்தப்படல் வேண்டும் (முழுப் பெயர், திகதி போன்றன) அத்துடன் தொடர்பற்ற பிரிவுகள் ஏற்புடைத்தானவையல்ல/ இல்லை/ ஒன்றுமேயில்லை அல்லது இரத்துச் செய்யப்பட்டது என குறிப்பிடப்படல் வேண்டும்.
   - கையொப்பமிட்டு திகதி பொறிக்கப்படல் வேண்டும்.

2. இறுதிப் பிரிவு பூரணப்படுத்தப்பட்டு தலைவர்/ பிராந்திய தலைவரினால் அலுவலக முத்திரை/ சீல் பொறிக்கப்பட்டு திகதியும் முத்திரையும் இடப்படல் வேண்டும் (வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரை) குறிப்பிடுவதற்கேதும் இல்லையெனில் ஏற்புடைத்தானவையல்ல/ இல்லை/ ஒன்றுமேயில்லை என தெரிவிக்கப்படல் வேண்டும்.

3. நியமனம் தொடர்பான நியதிகள் (பதவி, நியமனத் திகதி, கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் ஊதியங்கள் போன்ற பொதிகள் உட்பட) இணைக்கப்படுதல் வேண்டும்.

**ஈ. விளக்கம்**

1. "நெருங்கிய உறவினர்" என்பதன் கருத்து வாழ்க்கைத் துணைவர்/ தங்கியிருக்கும் பிள்ளை எனப் பொருள்படும்.

2. "வியாபாரக் கொடுக்கல்வாங்கல்" என்பது கடன் வழங்கல், முதலீடு செய்தல் மற்றும் வைப்புக்கள் எனப் பொருள்படும் என்பதுடன் வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில் இலங்கையர்களுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களை மட்டும் குறிக்கும்.

3. "கடன் வசதி" என்பது ஏதேனும் கடன், மேலதிகப் பற்று அல்லது முற்பணம் அல்லது நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு கடன் வசதி அல்லது எதிர்பாராத பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கான பொறுப்பு உட்பட, நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஏதேனும் கடனை, மேலதிகப் பற்றை அல்லது முற்பணத்தை அல்லது அத்தகைய வேறு பண வதியை வழங்குவதற்கான ஏதேனும் பொறுப்பு என்று பொருளாகும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) பிரிவின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2011 ஓகத்து 26

## 2011ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்

## இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகை

வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) அத்தகைய வங்கிகளின் வியாபாரங்களினது ஏதேனும் அம்சங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்ற முறை பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு பணிப்புரை வழங்குகின்ற அதிகாரத்தினை நாணயச் சபைக்கு வழங்கியிருக்கிறது. அத்தகைய பின்னணியில், பங்குச் சந்தைக்கான வர்த்தக வங்கிகளின் மிகையான வெளிப்படுத்துகைகள் சாத்தியமான தளம்பல்கள் மற்றும் சொத்துக்களின் திடீர் விலை அதிகரிப்பு குமிழிகள் என்பனவற்றிலிருந்து தோன்றுகின்ற முறையியல் சந்தை இடர்நேர்வுகளுக்கு காரணமாகி விடும் என்ற கருத்தினை நாணயச் சபை கொண்டிருக்கிறது. சொத்துச் சந்தைகளின் பங்கேற்பாளர்களது ஊக நடத்தையின் காரணமாகத் தோன்றக்கூடிய அத்தகைய இடர்நேர்வுகள் வங்கிகளின் சொத்துக்களின் தரம், திரவத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் மூலதனம் என்பனவற்றை மோசமாகப் பாதிக்கக்கூடும். ஆகவே, அத்தகைய இடர்நேர்வுகளை முன்மதியுடைய மட்டங்களுக்கு குறைப்பதற்கும் வங்கித்தொழில் முறைமையின் பாதுகாப்பினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் மேம்படுத்துவதற்கும் பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களைப் பின்பற்றுவது அவசியமானதாகும்.

இதற்கமைய, 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவினால் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் விதத்தில் நாணயச் சபை, வர்த்தக வங்கிகளுக்கான பங்குச் சந்தை வெளிப்படுத்துகையின் மீது 2011ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரையினை இத்தால் விடுக்கிறது.

**பங்குகள் மீதான கடன் வசதி வழங்கும் வர்த்தகத்தின் மீதான வரையறை**

1. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, வாடிக்கையாளர்/ முதலீட்டாளர்களுக்கு பங்குகளின் மீது கடன் வசதிகளை வழங்கலாம்.

   (i) எந்தவொரு வாடிக்கையாளருக்கும் வழங்கப்பட்ட கடன் வசதி வர்த்தகப்படுத்தல் வசதி ஒவ்வொரு வர்த்தக நாளும் முடிவடைகையிலுள்ள வாடிக்கையாளரின் பங்குச் சொத்துப்பட்டியலின் பெறுமதியில் ஐம்பது சதவிதத்தினை விஞ்சக்கூடாது.

   (ii) கடன் வசதி வர்த்தகப்படுத்தல் வசதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துப் பங்குகளும் கடன் வசதி வர்த்தகப்படுத்தலை வழங்குகின்ற வங்கியின் பிணையின் கீழ் இருத்தல் வேண்டும்; அத்துடன்

   (iii) அனைத்து வாடிக்கையாளர்/ முதலீட்டாளர்களுக்கும் வழங்கப்பட்ட மொத்தக் கடன் வசதி வர்த்தகமும் கடன் வசதி வர்த்தகத்திற்காக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்போந்த காலாண்டில் இருந்தவாறான வங்கியின் வெளிநின்ற மொத்தக் கடன்களில் ஐந்து சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

**பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான உத்தரவாதங்களை வழங்குவதன் மீதான வரையறைகள்**

2. ஆரம்ப பங்கு வழங்கல்களிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்படுகின்ற உத்தரவாதங்கள் அத்தகைய ஆரம்ப பொதுமக்கள் பங்கு வழங்கல்களின் பெறுமதியில் ஐந்து சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

3. காசு வைப்புக்களுக்கெதிராக வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்குறிப்பிட்ட வரையறைகளிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

   (i) உத்தரவாதத்தின் பெறுமதியிலும் பார்க்க காசு வைப்புக்கள் குறைவானதாக இல்லாதவிடத்து

   (ii) காசு வைப்புக்கள் வங்கியிலிருந்தான ஏதேனும் கடன்களிலிருந்து நிதியிடப்படாதிருக்குமிடத்து; அத்துடன்

   (iii) வாடிக்கையாளர்கள் தமது கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுமிடத்து அத்தகைய காசு வைப்புக்களை வங்கிகள் தமது உடமையில் வைத்திருப்பதற்கான உரிமையினைக் கொண்டிருக்குமிடத்து.

**பணிப்பாளர் சபையின் வகிபாகம்**

4. ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினதும் பணிப்பாளர் சபையும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கை, வழிகாட்டல்கள் மற்றும் வங்கியின் அடுக்கு 1 மூலதனம் தொடர்பான மொத்த வெளிப்படுத்துகைக்கான முன்மதியுடைய வரையறை மற்றும் இடர்நேர்வு வெளிப்படுத்துகை தொடர்பான மதிப்பீடு என்பன உள்ளிட்ட பங்குச் சந்தை நடவடிக்கைகளுக்கான அவர்களின் வெளிப்படுத்துகை மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**திரட்சிகள் மீதான கட்டுப்பாடு**

5. ஒன்று திரண்ட இடர்நேர்வுகளைத் தணிக்கும் விதத்தில் ஒவ்வொரு வங்கியும் நியாயமான எண்ணிக்கை கொண்ட வாடிக்கையாளர்களிடையே பங்குகளின் சொத்துப்பட்டியலைப் பன்முகப்படுத்திக் கொள்வதன் மூலம் கடன் வசதியளித்தல் வர்த்தக வசதிகளை பரப்பியமைத்தல் வேண்டும்.

**அறிக்கையிடல்**

6. இணைப்பு ‘அ’ இல் உள்ள அறிக்கையிடும் படிவத்திற்கு இணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகைகளின் விபரங்களைப் பேண வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு காலாண்டினையும் அடுத்து வரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரிடம் அறிக்கையளிக்கப்படல் வேண்டும்.

**இடைக்காலத்திற்கான ஏற்பாடு**

7. இப்பணிப்புரைகள் விடுக்கப்படும் திகதியன்று உயர்ந்தபட்ச வரையறைகளுக்கு மேலாக கடன் வசதி வர்த்தகப்படுத்தல் வசதிகளை வழங்கியுள்ள வங்கியொன்று அத்தகைய வசதிகளை 2012 மாச்சு 31ஆம் திகதியளவில் வரையறைக்கு உள்ளாகக் குறைத்தல் வேண்டும்.

**பணிப்புரைகளை நீக்குதல்**

8. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான பங்குச் சந்தை வெளிப்படுத்துகை மீதான 2011 ஏப்பிறல் 28ஆம் நாளிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் நீக்கப்படுகின்றன.

இணைப்பு அ

சேரல் : வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்
இலங்கை மத்திய வங்கி

வங்கியின் பெயர் :

முடிவடைந்த காலாண்டு :

**பங்குச் சந்தை வெளிப்படுத்துகையின் காலாண்டுக் கூற்று**

| விடயம் | | | | வெளிநின்ற தொகை (ரூ. மில்.) |
|---|---|---|---|---|
| **1. ஐந்தொகை மீதான வெளிப்படுத்துகை** | | | | |
| (i) கடன் வசதிகள் வர்த்தகம் | | | | |
| (ii) பட்டியலிடப்பட்ட பங்குகளைக் கொள்வனவு செய்தவற்கு வழங்கப்பட்ட ஏனைய கடன்கள் | | | | |
| **துணை மொத்தம்** | | | | |
| **2. ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகை** | | | | |
| (i) ஆரம்பப் பங்கு வழங்கலில் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் | | | | |
| ஆரம்பப் பங்கு வழங்கலின் பெயர் | ஆரம்பப் பங்கு வழங்கலின் அளவு | முழுமையாக காசினை அடிப்படையாகக் கொண்ட உத்தரவாதங்கள் (ரூ.மில்.) | காசு வைப்பு இல்லாமல் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் (ரூ.மில்.) | |
| | | | | |
| | | | | |
| வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் மொத்தப் பெறுமதி | | | | |
| (ii) ஒப்புறுதி மற்றும் ஏனைய கடப்பாடுகள், கொடுகடன் தொடர் போன்றன | | | | |
| **துணை மொத்தம்** | | | | |
| **மொத்த வெளிப்படுத்துகை (1 + 2)** | | | | |
| **3. முன்மதியுடைய விகிதம்** | | | | |
| (i) வெளிநின்ற மொத்தக் கடனின் % மாக கடன் வசதியளித்தல் வசதிகள் | | | | |
| (ii) வெளிநின்ற மொத்தக் கடனின் % மாக மொத்த ஐந்தொகை வெளிப்படுத்துகை | | | | |
| (iii) அடுக்கு 1 மூலதனத்தின் % மாக மொத்த வெளிப்படுத்துகை | | | | |

குறிப்புக்கள்

(அ) ஏதும் இருப்பின் தயவுசெய்து குறிப்பிடவும்

(ஆ) முற்போந்த காலாண்டு இறுதியில் உள்ளவாறு

ஒவ்வொரு காலாண்டினையும் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இக்கூற்றினை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தயவுசெய்து banksup@cbsl.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அல்லது தொலைநகல் 2477711 இல் தொடர்பு கொள்ளவும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1) பிரிவின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2011 ஓகத்து 26

## 2011ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்

### இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகை

வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) அத்தகைய வங்கிகளின் வியாபாரங்களினது ஏதேனும் அம்சங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்ற முறை பற்றி உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு பணிப்புரை வழங்குகின்ற அதிகாரத்தினை நாணயச் சபைக்கு வழங்கியிருக்கிறது. அத்தகைய பின்னணியில், பங்குச் சந்தைக்கான சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மிகையான வெளிப்படுத்துகைகள் சாத்தியமான தளம்பல்கள் மற்றும் சொத்துக்களின் திடீர் விலை

அதிகரிப்பு குமிழிகள் என்பனவற்றிலிருந்து தோன்றுகின்ற முறையியல் சந்தை இடர்நேர்வுகளுக்கு காரணமாகி விடும் என்ற கருத்தினை நாணயச் சபை கொண்டிருக்கிறது. சொத்துச் சந்தைகளின் பங்கேற்பாளர்களது ஊக நடத்தையின் காரணமாகத் தோன்றக்கூடிய அத்தகைய இடர்நேர்வுகள் வங்கிகளின் சொத்துக்களின் தரம், திரவத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் மூலதனம் என்பனவற்றை மோசமாகப் பாதிக்கக்கூடும். ஆகவே, அத்தகைய இடர்நேர்வுகளை முன்மதியுடைய மட்டங்களுக்கு குறைப்பதற்கும் வங்கித்தொழில் முறைமையின் பாதுகாப்பினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் மேம்படுத்துவதற்கும் பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களைப் பின்பற்றுவது அவசியமானதாகும்.

இதற்கமைய, 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1)ஆம் பிரிவினால் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் விதத்தில் நாணயச் சபை, வர்த்தக வங்கிகளுக்கான பங்குச் சந்தை வெளிப்படுத்துகையின் மீது 2011ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரையினை இத்தால் விடுக்கிறது.

**பங்குகள் மீதான கடன் வசதி வழங்கும் வர்த்தகத்தின் மீதான வரையறை**

1. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, வாடிக்கையாளர்/ முதலீட்டாளர்களுக்கு பங்குகளின் மீது கடன் வசதிகளை வழங்கலாம்.

   (i) எந்தவொரு வாடிக்கையாளருக்கும் வழங்கப்பட்ட கடன் வசதி வர்த்தகப்படுத்தல் வசதி ஒவ்வொரு வர்த்தக நாளும் முடிவடைகையிலுள்ள வாடிக்கையாளரின் பங்குச் சொத்துப்பட்டியலின் பெறுமதியில் ஐம்பது சதவிதத்தினை விஞ்சக்கூடாது.

   (ii) கடன் வசதி வர்த்தகப்படுத்தல் வசதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துப் பங்குகளும் கடன் வசதி வர்த்தகப்படுத்தலை வழங்குகின்ற வங்கியின் பிணையின் கீழ் இருத்தல் வேண்டும்; அத்துடன்

   (iii) அனைத்து வாடிக்கையாளர்/ முதலீட்டாளர்களுக்கும் வழங்கப்பட்ட மொத்தக் கடன் வசதி வர்த்தகமும் கடன் வசதி வர்த்தகத்திற்காக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்போந்த காலாண்டில் இருந்தவாறான வங்கியின் வெளிநின்ற மொத்தக் கடன்களில் ஐந்து சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

**பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான உத்தரவாதங்களை வழங்குவதன் மீதான வரையறைகள்**

2. ஆரம்ப பங்கு வழங்கல்களிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்படுகின்ற உத்தரவாதங்கள் அத்தகைய ஆரம்ப பொதுமக்கள் பங்கு வழங்கல்களின் பெறுமதியில் ஐந்து சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

3. காசு வைப்புக்களுக்கெதிராக வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்குறிப்பிட்ட வரையறைகளிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

   (i) உத்தரவாதத்தின் பெறுமதியிலும் பார்க்க காசு வைப்புக்கள் குறைவானதாக இல்லாதவிடத்து

   (ii) காசு வைப்புக்கள் வங்கியிலிருந்தான ஏதேனும் கடன்களிலிருந்து நிதியிடப்படாதிருக்குமிடத்து; அத்துடன்

   (iii) வாடிக்கையாளர்கள் தமது கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுமிடத்து அத்தகைய காசு வைப்புக்களை வங்கிகள் தமது உடமையில் வைத்திருப்பதற்கான உரிமையினைக் கொண்டிருக்குமிடத்து.

**பணிப்பாளர் சபையின் வதிபாகம்**

4. ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியினதும் பணிப்பாளர் சபையும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கை, வழிகாட்டல்கள் மற்றும் வங்கியின் அடுக்கு 1 மூலதனம் தொடர்பான மொத்த வெளிப்படுத்துகைக்கான முன்மதியுடைய வரையறை மற்றும் இடர்நேர்வு வெளிப்படுத்துகை தொடர்பான மதிப்பீடு என்பன உள்ளிட்ட பங்குச் சந்தை நடவடிக்கைகளுக்கான அவர்களின் வெளிப்படுத்துகை மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**திரட்சிகள் மீதான கட்டுப்பாடு**

5. ஒன்று திரண்ட இடர்நேர்வுகளைத் தணிக்கும் விதத்தில் ஒவ்வொரு வங்கியும் நியாயமான எண்ணிக்கை கொண்ட வாடிக்கையாளர்களிடையே பங்குகளின் சொத்துப்பட்டியலைப் பன்முகப்படுத்திக் கொள்வதன் மூலம் கடன் வசதியளித்தல் வர்த்தக வசதிகளை பரப்பியமைத்தல் வேண்டும்.

**அறிக்கையிடல்**

6. இணைப்பு ‘அ’ இல் உள்ள அறிக்கையிடும் படிவத்திற்கு இணங்க உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகைகளின் விபரங்களைப் பேண வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு காலாண்டினையும் அடுத்து வரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரிடம் அறிக்கையளிக்கப்படல் வேண்டும்.

**இடைக்காலத்திற்கான ஏற்பாடு**

7. இப்பணிப்புரைகள் விடுக்கப்படும் திகதியன்று உயர்ந்தபட்ச வரையறைகளுக்கு மேலாக கடன் வசதி வர்த்தகப்படுத்தல் வசதிகளை வழங்கியுள்ள வங்கியொன்று அத்தகைய வசதிகளை 2012 மாச்சு 31ஆம் திகதியளவில் வரையறைக்கு உள்ளாகக் குறைத்தல் வேண்டும்.

**பணிப்புரைகளை நீக்குதல்**

8. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பங்குச் சந்தை வெளிப்படுத்துகை மீதான 2011 ஏப்பிறல் 28ஆம் நாளிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் நீக்கப்படுகின்றன.

இணைப்பு அ

சேரல் : வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்
இலங்கை மத்திய வங்கி

வங்கியின் பெயர் :

முடிவடைந்த காலாண்டு :

**பங்குச் சந்தை வெளிப்படுத்துகையின் காலாண்டுக் கூற்று**

| விடயம் | | | | வெளிநின்ற தொகை (ரூ. மில்.) |
|---|---|---|---|---|
| **1. ஐந்தொகை மீதான வெளிப்படுத்துகை** | | | | |
| (i) கடன் வசதிகள் வர்த்தகம் | | | | |
| (ii) பட்டியலிடப்பட்ட பங்குகளைக் கொள்வனவு செய்தவற்கு வழங்கப்பட்ட ஏனைய கடன்கள் | | | | |
| **துணை மொத்தம்** | | | | |
| **2. ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகை** | | | | |
| (i) ஆரம்பப் பங்கு வழங்கலில் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் | | | | |
| ஆரம்பப் பங்கு வழங்கலின் பெயர் | ஆரம்பப் பங்கு வழங்கலின் அளவு | முழுமையாக காசினை அடிப்படையாகக் கொண்ட உத்தரவாதங்கள் (ரூ.மில்.) | காசு வைப்பு இல்லாமல் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் (ரூ.மில்.) | |
| | | | | |
| | | | | |
| வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் மொத்தப் பெறுமதி | | | | |
| (ii) ஒப்புறுதி மற்றும் ஏனைய கடப்பாடுகள், கொடுகடன் தொடர் போன்றன | | | | |
| **துணை மொத்தம்** | | | | |
| **மொத்த வெளிப்படுத்துகை (1 + 2)** | | | | |
| **3. முன்மதியுடைய விகிதம்** | | | | |
| (i) வெளிநின்ற மொத்தக் கடனின் % ஆக கடன் வசதியளித்தல் வசதிகள் | | | | |
| (ii) வெளிநின்ற மொத்தக் கடனின் % ஆக மொத்த ஐந்தொகை வெளிப்படுத்துகை | | | | |
| (iii) அடுக்கு 1 மூலதனத்தின் % ஆக மொத்த வெளிப்படுத்துகை | | | | |

குறிப்புக்கள்

(அ) ஏதும் இருப்பின் தயவுசெய்து குறிப்பிடவும்

(ஆ) முற்போந்த காலாண்டு இறுதியில் உள்ளவாறு

ஒவ்வொரு காலாண்டினையும் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இக்கூற்றினை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தயவுசெய்து banksup@cbsl.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் முகவரியில் அல்லது தொலைநகல் 2477711 இல் தொடர்பு கொள்ளவும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2011 செத்தெம்பர் 29

## 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம்

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம்

2012 - 2014 ஆண்டு காலப்பகுதிக்கான ஆண்டு உரிமக் கட்டணம்

1. வங்கித்தொழில் சட்டத்தின் 8(1)ஆம் பிரிவின் நியதிக்களுக்கிணங்க, நாணயச் சபை 2012 - 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் சொத்துக்களின் அடிப்படையில் பின்வருமாறு இருத்தல் வேண்டுமெனத் தீர்மானித்தது.

| முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்கள் | உரிமக் கட்டணம் |
|---|---|
| ரூ.200 பில்லியனுக்கு மேல் | ரூ. 20 மில். |
| ரூ.125 பில்லியனிலிருந்து ரூ.200 பில். வரை | ரூ. 15 மில். |
| ரூ.75 பில்லியனிலிருந்து ரூ.125 பில். வரை | ரூ. 10 மில். |
| ரூ.25 பில்லியனிலிருந்து ரூ.75 பில். வரை | ரூ. 5 மில். |
| ரூ.25 பில்லியனுக்குக் குறைவானவை | ரூ. 2 மில். |

உரிமக் கட்டண கொடுப்பனவு

2. ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமக் கட்டணத்தினை தொடர்பான ஆண்டின் சனவரி 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கியிடம் செலுத்துதல் வேண்டும்.

3. உரிமக் கட்டணம் கலண்டர் ஆண்டு அடிப்படையில் செலுத்தப்படல் வேண்டும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஈ(6)ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2011 செத்தெம்பர் 29

## 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம்

2012 - 2014 ஆண்டு காலப்பகுதிக்கான ஆண்டு உரிமக் கட்டணம்

1. வங்கித்தொழில் சட்டத்தின் 76ஈ(6)ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க, நாணயச் சபை 2012 - 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் சொத்துக்களின் அடிப்படையில் பின்வருமாறு இருத்தல் வேண்டுமெனத் தீர்மானித்தது.

| முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்கள் | உரிமக் கட்டணம் |
|---|---|
| ரூ.200 பில்லியனுக்கு மேல் | ரூ. 20 மில். |
| ரூ.125 பில்லியனிலிருந்து ரூ.200 பில். வரை | ரூ. 15 மில். |
| ரூ.75 பில்லியனிலிருந்து ரூ.125 பில். வரை | ரூ. 10 மில். |
| ரூ.25 பில்லியனிலிருந்து ரூ.75 பில். வரை | ரூ. 5 மில். |
| ரூ.25 பில்லியனுக்குக் குறைவானவை | ரூ. 2 மில். |

உரிமக் கட்டண கொடுப்பனவு

2. ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் உரிமக் கட்டணத்தினை தொடர்பான ஆண்டின் சனவரி 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கியிடம் செலுத்துதல் வேண்டும்.

3. உரிமக் கட்டணம் கலண்டர் ஆண்டு அடிப்படையில் செலுத்தப்படல் வேண்டும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) இன் நியதிகளுக்கிணங்க நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2011 ஒத்தோபர் 05

## 2011ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரை

## உரிமம் பெற்ற வங்கிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு

வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1) ஆம்

பணிப்புரைகளை விடுப்பதற்கான அதிகாரங்களை நாணயச் சபைக்கு வழங்குகின்றது. இதற்கமைய, வங்கித்தொழில் வியாபாரத் தொழிற்பாடுகள் மீதான முகாமைத்துவ இடர்நேர்வுகளாக ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட இப்பணிப்புரையானது வங்கிகளினதும் வங்கித்தொழில் முறைமைகளினதும் ஆற்றலை மேம்படுத்தும்.

| | | |
|---|---|---|
| கட்டமைப்பினைத் தேவைப்படுத்தல் | 1. | ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடைமுறைகளுக்காக தேவைப்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கோட்டுபாடுகள் மற்றும் விதிகள் மற்றும் வங்கி இடர்நேர்வு முகாமைத்துவத்தின் சிறந்த சந்தை நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, இப்பணிப்புரையுடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு இணங்குவதில் அனைத்து வங்கிகளும் குறித்துரைக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பொன்றினைப் பின்பற்றுதல் வேண்டும். |
| கட்டமைப்பின் தன்மை | 2. | ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டியதுடன், அது பல்வேறுபட்ட உள்ளார்ந்த இடர்நேர்வுகள், அத்தகைய இடர்நேர்வுகளுக்கான சாத்தியமான மூலங்கள், முகாமைத்துவ தகவல்களின் பொறிமுறை மற்றும் அத்தகைய இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு கண்காணிப்பதற்கு அறிக்கையளித்தல், முன்மதியுடைய மட்டங்களில் இடர்நேர்வுகளை கட்டுப்படுத்தி தணிப்பதற்கான காத்திரமான வழிமுறைகள் மற்றும் அத்தகைய கட்டுப்பாடு மற்றும் தணித்தலுக்குப் பொறுப்பான தொடர்பான அலுவலர்கள் மற்றும் குழுக்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருத்தலும் வேண்டும். |
| சபையின் மேற்பார்வை | 3. | ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட வேண்டியதுடன் குறைந்தபட்சம் வருடத்திற்கொரு முறையாவது மீளாய்வு செய்யப்பட்டு பூரணப்படுத்தப்படல் வேண்டும். |
| | 4. | பணிப்பாளர் சபையானது, ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினூடாக, குறைந்தபட்சம் காலாண்டிற்கொரு முறையாவது வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு தோற்றப்பாட்டினையும் அதன் முகாமைத்துவத்தினையும் மதிப்பீடு செய்ய வேண்டியதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு ஒழுங்கான விதத்தில் நடைமுறைப்படுத்துவதனை ஒட்டுமொத்தமாக மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாகவுள்ளது. |
| இணங்குவிப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் | 5. | இப்பணிப்புரையின் திகதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்குள் அனைத்து வங்கிகளும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைக்கிடல் வேண்டும். |
| | 6. | வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் கருத்துப்படி ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பில் கணிசமானளவு பிறழ்வுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய பிறழ்வுகளுக்கு யார் பொறுப்பாக இருந்தார்களோ அவர்களது பொருத்தமும் தகுதியும் வங்கித்தொழில் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் கீழ் மீள மதிப்பீடு செய்யப்படும். |

இணைப்பு

## வங்கிகளில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள்

### அ. ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம்

### 1. அறிமுகம்

1.1 வங்கிகள் அவற்றின் வியாபாரத் தொழிற்பாடுகளின் போது பல்வேறுபட்ட இடர்நேர்வுகளுக்கு உட்படுகின்றன. பாசல் II கட்டமைப்பின் கீழ் இடர்நேர்வுகளின் முக்கிய வகைகளாக கொடுகடன், சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. எனினும், வங்கிகள் திரவத்தன்மை, வட்டி வீதம் வெளிநாட்டுச் செலாவணி வீதம், சட்டம், ஒழுங்குமுறைப்படுத்தல், கீர்த்தி வாய்ந்த தன்மை போன்ற ஏனைய இடர்நேர்வுகளையும் எதிர்நோக்குகின்றன. இவ்வனைத்து இடர்நேர்வுகளும் பெருமளவிற்கு ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன.

1.2 இடர்நேர்வு முகாமைத்துவம் சிக்கலானதொரு தொழிற்பாடாகும். இதற்கு சிறப்பியல்பு வாய்ந்த தேர்ச்சியும் நிபுணத்துவமும் தேவைப்படுகின்றது. பன்னாட்டு ரீதியில், வங்கிகள் பாசல் II கட்டமைப்பின் தூண் II இன் கீழ் அனைத்தையுமுள்ளடக்கிய பன்னாட்டு மூலதனப் போதுமை மதிப்பீட்டு செய்முறையினை உறுதிப்படுத்தும் நோக்குடன், ஒருங்கிணைக்கப்பட்ட முறையொன்றில் இடர்நேர்வுகளை அளவிட்டு முகாமைப்படுத்துவதற்காக மிக நுணுக்கம் வாய்ந்த மாதிரிகளை பயன்படுத்தத் தொடங்கின.

1.3 பாசல் II கட்டமைப்பின் தூண் I இன் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் விபரிக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் குறைந்தமட்ட ஒழுங்குமுறைப்படுத்தலாகும். இது கொடுகடன், சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை சாதாரண அடிப்படையிலேயே கட்டுப்படுத்துகின்றது. எனவே, பல்வேறுபட்ட ஒருங்கணைக்கப்பட்ட இடர்நேர்வுகளுக்கு உள்ளாகும் தன்மைகளை வங்கிகள் தாமாகவே மதிப்பீடு செய்வதற்கான தேவையும் அத்தகைய இடர்நேர்வுகளின் பாதிப்புக்களைக் குறைப்பதற்காக போதுமான மூலதனத்தினைப் பேண வேண்டியமையும் அவசர தேவைகளாக மாறின.

1.4 இவ்வழிகாட்டல்களின் குறிகோள் யாதெனில் வங்கிகள் அவற்றின் இடர்நேர்வுகளைக் கண்காணித்து முகாமைப்படுத்துவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ நுணுக்கங்களை அபிவிருத்தி செய்ய வங்கிகளை ஊக்குவிப்பதும் அவைகள் உட்படக்கூடிய பல்வேறு இடர்நேர்வுகளையும் ஈடுசெய்யக்கூடிய விதத்தில் போதுமான மூலதனத்தினை வைத்திருப்பதற்கு மத்திய வங்கிக்கு உறுதியளிப்பதுமேயாகும்.

### 2. ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ மேற்பார்வை

2.1 **சபை மற்றும் மூத்த முகாமைத்துவம்** - வங்கியினால் அநுமானிக்கப்படுகின்ற இடர்நேர்வுகளை விளங்கிக் கொள்வதற்கான பொறுப்பும் இடர்நேர்வுகள் பொருத்தமான முறையில் முகாமைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதும் பணிப்பாளர் சபையிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். சபையானது பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அ. பணிப்பாளர் சபையின் மேற்பார்வைக்குட்பட்டு வங்கியானது பலமானதும் ஊடுருவிப் பரவக் கூடியதுமான இடர்நேர்வுக் கலாச்சாரமொன்றினை உருவாக்கியுள்ளது என்பதனையும் ஒவ்வொரு வங்கியினதும் மூத்த முகாமைத்துவத்தின் பொறுப்பாக இடர்நேர்வு முகாமைத்துவத்தினை வரைவிலக்கணப்படுத்தும் தெளிவான கொள்கைகளையும் உறுதிப்படுத்துதல்.

ஆ. வங்கியின் இடர்நேர்வு ஆர்வத்தின் அடிப்படையில் இடர்நேர்வு எல்லைகளை நிறுவுதல்.

இ. வங்கியின் மூத்த முகாமைத்துவம் பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்:

(i) வங்கிகள் உள்ளாகும் பல்வேறுபட்ட இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கும் பொருத்தமான முறையில் முகாமைப்படுத்துவதற்கும் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பொன்றினை நிறுவுதல்;

(ii) வங்கியின் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளையும் வங்கியின் மூலதனத்திற்கான அவற்றின் தொடர்புகளையும் கண்காணிக்கும் விதத்தில் முறைமைகளை விருத்தி செய்தல்;

(iii) உள்ளகக் கொள்கைகளுடன், குறிப்பாக, இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான வங்கியின் இணங்குவிப்புக்களைக் கண்காணிப்பதற்கான முறையினை நிறுவுதல்; அத்துடன்

(iv) தொடர்பான கொள்கைகளையும் நடைமுறைகளையும் வங்கி முழுவதிலும் காத்திரமான முறையில் தொடர்பூட்டுதல்.

ஈ. வலுவான உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றுதல் மற்றும் ஆதரவளித்தல்

2.2 **ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு -** இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பாக 2007ஆம் ஆண்டின் 11 மற்றும் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 3(6) (v) விதிகளுக்கிணங்க நிறுவப்பட்ட பணிப்பாளர் சபையின் சுதந்திரமான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ குழுவொன்றிடம் அதில் கூறப்பட்டுள்ள பொறுப்புக்களுடன் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவமும் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

2.3 **உள்ளகக் கணக்காய்வு -** ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளும் நடைமுறைகளும் அதேபோன்று இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாடுகளின் பல்வேறு மட்டங்களிலுள்ள தொழிற்பாட்டுத் தன்மைகளும் நடத்தைகளின் அடிப்படையில் வங்கியின் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளின் மூலம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய வேளையில் வெளிவாரி கணக்காய்வு குறைந்தபட்சம் ஆண்டிற்கொரு தடவையாவது சுதந்திரமான மீளாய்வொன்றினைச் செய்தல் வேண்டும்.

2.4 **தொழிற்பாட்டு ரீதியான மட்டம் -** தொழிற்பாடு சார்ந்த அதாவது முன்னரங்க அலுவலகம், கடனை ஆரம்பிக்கின்ற தொழிற்பாடு போன்று துறைகளிலுள்ள இடர்நேர்வு முகாமைத்துவம், பணிப்பாளர் சபையினாலும் மூத்த முகாமைத்துவத்தினாலும் முன்னமே ஏற்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

## 3. ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு முன்னுரிமைகளும் செயன்முறைகளும்

3.1 இலங்கையிலுள்ள வங்கிகளின் ஐந்தொகை தோற்றப்பாட்டின் பன்முகத்தன்மையினைக் கவனிக்கையில், இது இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட கட்டமைப்பொன்றினைப் பின்பற்றுவதற்கான முன்மதியுடைய தன்மையினையோ அல்லது விருப்பத்தக்க தன்மையினையோ கொண்டிருக்கவில்லை. ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாடொன்றின் வடிவமைப்பானது வங்கிக்கே குறித்துரைக்கப்பட்ட முறையில், அளவு தொழிற்பாடுகளின் சிக்கல் வாய்ந்த தன்மை, தொழிற்படுகின்ற சூழல் மற்றும் அலுவலர்களின் தொழில்நுட்ப நிபுணத்துவம் என்பனவற்றின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும்.

3.2 இடர்நேர்வின் பருப்பொருள் மூலங்களைக் காட்டுகின்ற அனைத்துத் தொடர்பான காரணிகளும் நன்கு விருத்தி செய்யப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையொன்றிற்குள் ஒருங்கிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3.3 இடர்நேர்வின் அனைத்து வழிமுறைகளும் அளவுகள் மற்றும் தகைமைகள் ஆகிய மூலங்கள் இரண்டினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டுமெனினும், சாத்தியமானளவிற்கு அளவுசார் அணுகுமுறை வங்கியின் வழிமுறைக் கட்டமைப்பொன்றிற்கான அடித்தளமொன்றினை உருவாக்குதல் வேண்டும்.

3.4 அளவுசார் கருவிகள் பாரிய வரலாற்று ரீதியான தரவுத் தளங்களை உள்ளடக்கியிருக்க முடியும். தரவுகள் குறைவாக இருக்கும் பொழுது வங்கியொன்று அழுத்தப் பரீட்சிப்புக்களின் பயன்பாட்டின் மீதும் சூழ்நிலைப் பகுப்பாய்வுகளின் மீதும் பெருமளவிற்கு தங்கியிருக்கும் நிலையொன்றினை தெரிவு செய்யக்கூடும்.

3.5 இடர்நேர்வுகளை அளவிடுகின்ற போது அளவீட்டு வழுக்கள் எப்பொழுதும் காணப்படும் என்பதனையும் பெரும்பாலான விடயங்களில் இத்தவறுகள் அளவுகளை மேற்கொள்கையில் இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதனையம் வங்கிகள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். பொதுவாக, மாதிரிப்படுத்தல் மற்றும் வியாபாரச் சிக்கல்தன்மை என்பனவற்றுடன் தொடர்பான நிச்சயமற்றதன்மையில் காணப்படும் அதிகரிப்பு பாரிய மூலதன பாதுகாப்பினை ஏற்படுத்தல் வேண்டும்.

3.6 வரவு செலவுத்திட்டம், எதிர்வுகூறுதல் அல்லது செயலாற்ற வழிமுறைகளின் நோக்கங்களின் பெறுபேறுகளில் பெருமளவிற்கு கவனம் செலுத்தும் அளவுசார் அணுகுமுறைகள் மூலதனப்போதுமை விடயத்தில் முழுமையாக ஏற்புடைத்தானவையாக இருக்கக்கூடாது. ஏனெனில் பாசல் II கட்டமைப்பின் தூண் 2 இன் கீழான உள்ளக மூலதனப்போதுமை மதிப்பீட்டு செயன்முறை குறைந்தளவு சந்தர்ப்பங்களிலேயே கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும்.

3.7 அழுத்தப் பரீட்சிப்புச் சூழ்நிலைப் பகுப்பாய்வும் குறைந்தளவு நிகழ் தரவுகளைக் கொண்டுள்ள பெறுபேறுகளின் விளைவுகளை அளப்பதில் காத்திரமான தன்மையினைக் கொண்டிருக்க முடியுமெனினும் வங்கிகளின் பாதுகாப்பிலும் ஆற்றல் வாய்ந்த தன்மையிலும் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.

3.8 உதாரணமாக, இடர்நேர்வுகளின் அளவினை கணியம்சார் கருவிகளின் மூலம் நம்பகமாக அளவிடமுடியாதவிடத்து இடர்நேர்வுகளின் அளவீடுகள் அருந்தலான தரவுகள் அல்லது நிரூபிக்கப்படாத கணியம்சார் முறைகள், நிபுணத்துவம் மற்றும் பகுத்துணர்வு உள்ளிட்ட தகைமைசார் கருவிகளை பெருமளவிற்குப் பயன்படுத்த முடியும்.

3.9 கணியம்சார் அணுகுமுறைகள் இயல்பாகவே பக்கசார்பான தன்மைகளைக் கொண்டிருப்பதனையும் இடர்நேர்வு மதிப்பீடுகளைப் பாதிக்கும் என்ற ஊகங்களையும் வங்கிகள் அறிந்திருத்தல் வேண்டும். இதற்கமைய இதில் இணைந்துள்ள பக்கசார்பான தன்மையினையும் ஊகங்களையும் பயன்படுத்தப்படும் தரம்சார் அணுகுமுறைகளின் வரையறைகளையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**4. இடர்நேர்வுகள் ஒன்று சேர்தலும் பன்முகப்படுத்தப்பட்ட தாக்கங்களும்**

4.1 காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையொன்று வங்கி முழுவதிலுமுள்ள இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்தல் வேண்டும். பல்வேறுபட்ட இடர்நேர்வு வகைகளிடையே அல்லது தொடர்பான வியாபாரங்களிடையே ஒன்று சேர்ந்த இடர்நேர்வுகளை நடத்துவதற்கு தெரிவு செய்யும் வங்கியொன்று அத்தகைய ஒன்று சேர்ந்த இடர்நேர்வுகளிலுள்ள சவால்களை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

4.2 மேலும், இடர்நேர்வுகள் ஒன்று சேர்க்கப்படும் பொழுது, இழப்புக்கள் ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது பல்வேறு காரணிகளைக் கொண்ட பொதுவான அம்சமொன்றிலிருந்து தோன்றுகின்ற பல்வேறுபட்ட இடர்நேர்வுப் பரிமாணங்களிலிருந்தும் எழக்கூடும் என்பதனை ஏற்றுக்கொள்கின்ற விதத்தில் வங்கிகள் ஒன்றிற்கும் மேற்பட்ட பரிமாணங்களிலிருந்தான விடயங்களின் மீது குவிந்த கவனத்தினைச் செலுத்த வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

4.3 பன்முகப்படுத்தலின் சாத்தியமான தாக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு, முகாமைத்துவம் தீர்மானங்களை ஆவணப்படுத்துவதில் முறையியல் சார்ந்ததாகவும் வீரியமுள்ளதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் இடர்நேர்வு ஒன்று சேர்க்கப்படும் ஒவ்வொரு மட்டத்திலும் பயன்படுத்தப்படும் எடுகோள்களை அடையாளம் காணுதலும் வேண்டும்.

4.4 பன்முகப்படுத்தல் பற்றிய அநுமானங்கள் பகுப்பாய்வு மற்றும் சான்றுகளின் மூலம் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும். வங்கியின் தெரிந்தெடுக்கப்பட்ட கட்டமைப்பின் அடிப்படையில் இடர்நேர்வுகளை ஒன்று சேர்க்கின்ற முறைமை இயலாற்றலை வங்கி கொண்டிருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, இடர்நேர்வு வகைளுக்குள்ளே அல்லது அவற்றிற்கிடையே தொடர்புகளை வங்கியொன்று கணிக்கையில் தரவின் தரத்தையும் ஒத்த தன்மையினையும் அழுத்த சந்தை நிலமைகளின் கீழ் இக்காலப்பகுதியில் தொடர்புகளின் தளம்பல்களையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

**5. வெளிப்படுத்துகை**

5.1 நிதியியல் சந்தை உறுதிப்பாட்டினைப் பேணுவதில் சந்தை ஒழுங்குமுறைகள் முக்கியமானதொரு பங்கினை வகிக்க முடியுமென இலங்கை மத்திய கருதுகின்றது. எனினும், சந்தை ஒழுங்குமுறைறைகளை உரிமம் பெற்ற வங்கிகளின் அர்த்தமுள்ள வெளிப்படுத்துகைகளின் மூலமே அடைந்து கொள்ள முடியும். இவை வங்கிகள் உட்படுகின்ற பல்வேறுபட்ட இடர்நேர்வுகளின் அளவு மற்றும் தன்மை என்பன பற்றிய மிக அர்த்தமுள்ள தோற்றத்தினையும் வங்கிகளின் வினைத்திறன்மிக்க இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் வழங்கமுடியும்.

**ஆ. கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம்**

**1. முகாமைத்துவ மேற்பார்வை**

பணிப்பாளர் சபை கொடுகடன் இடர்நேர்வு உபாயங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதுடன் அவற்றினையும் வங்கியின் முக்கியமான கொடுகடன் இடர்நேர்வுக் கொள்கைகளையும் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தலும் வேண்டும்.

1.1 உபாயங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

அ. வகைகளின் அடிப்படையில் வங்கிகள் விரும்பும் கடன்வழங்கல் பற்றிய கூற்று

ஆ. இலக்காகக் கொள்ளப்படும் சந்தைகள் மற்றும் வியாபாரத் துறைகளை அடையாளம் காணுதல்

இ. பன்முகப்படுத்தல் மற்றும் செறிவுபடுத்தல்கள் தொடர்பாக விரும்பத்தக்க மட்டம்

ஈ. கொடுகடன் வழங்கல் மற்றும் அறவிடமுடியாக் கடன்களிலுள்ள மூலதனத்தின் செலவு அத்துடன்

உ. சுழற்சிப்படுத்தக்கூடிய அம்சங்கள் மற்றும் கடன் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு மற்றும் தரங்களில் ஏற்படுகின்ற நகர்வுகள் இந்த உபாயமானது நீண்ட காலம் நிலைக்கக் கூடியதாகவும் வியாபாரச் சுழற்சி முழுவதிலும் காணப்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.

1.2 கொடுகடன் இடர்நேர்வுக் கொள்கைகளும் நடைமுறைகளும் குறைந்தபட்சம் பின்வரும் மூலங்களுடன் ஒத்துச் செல்பவைகளாக இருத்தல் வேண்டும்.

அ. சந்தை இலக்குகளை வரைவிலக்கணம் செய்யும் எழுதப்பட்ட கொள்கைகள், இடர்நேர்வுகளின் ஏற்றுக்கொள்ளல் பிரமாணங்கள் கொடுகடன் ஒப்புதல் அதிகாரம், கொடுகடனை உருவாக்கிப் பேணும் நடைமுறைகள் மற்றும் சொத்துப்பட்டியல் முகாமைத்துவம் மற்றும் மீட்பு முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல்கள்.

ஆ. வருடாந்த அரையாண்டு தொழில்துறை ஆய்வுகள் மற்றும் தனியொரு கடன்பாட்டாளர் பற்றிய மீளாய்வுகள், ஆவணப்படுத்தப்பட்டுள்ள காலாந்தர கொடுகடன் அழைப்புக்கள் மற்றும் வாடிக்கையாளர் விஜயம் மற்றும் பிரச்சனைக்குரிய வெளிப்படுத்துகைகள்/பலயீனமான கொடுகடன்கள் தொடர்பாக குறைந்தபட்சம் காலாண்டிற்கொரு தடவையாவது மீளாய்வுகளை மேற்கொள்ளுதல்.

இ. இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துதல், கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புக்களை இணைத்தல், பொருத்தமான இடர்நேர்வு வரையறைகளையும் இடர்நேர்வு ஒழுங்குமுறைப்படுத்தல் நடைமுறைகளையும் நிறுவி அவற்றைப் பேணுதல் என்பனவற்றில் வியாபார முகாமையாளர்களிடம் பொறுப்புக்கூறும் தன்மையினை ஒப்படைத்தல்.

ஈ. அனுபவங்களின் தரம், நியாயபூர்வ தன்மை, இயலாற்றல் என்பனவற்றடன் ஒத்துச் செல்லும் அடிப்படையில் தனிப்பட்ட கொடுகடன் அலுவலர்களிடம் கடன் வழங்கல் அதிகாரங்களைக் கையளித்தல்.

உ. இடர்நேர்வு தரமிடல்கள் மோசமடைந்து வருவதனால் கொடுகடன் வரையறைகளுக்கு ஒப்புதலளிப்பதற்கு உயர்மட்ட அதிகாரிகளை தேவைப்படுத்தல்.

ஊ. சிறிய பெறுமதி கொண்ட வாடிக்கையாளர்/சில்லறைக் கடன்கள் நீங்கலாக மற்றைய ஒவ்வொரு கடன் வழங்கலும் குறைந்தபட்சம் இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட கொடுகடன் அலுவலர்களினால் ஒப்புதலளிக்கப்பட வேண்டும் என்ற தேவைப்பாடு. இவர்களில் ஒருவர் வியாபாரத் துறையிலிருந்தான அலுவலராகவும் மற்றையவர், சுதந்திரமான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களத்தினைச் சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

எ. ஒவ்வொரு பிணையாளருக்குமான தேவைப்பாடுகளும் ஒப்படைக்கப்பட்ட இடர்நேர்வு தரமிடலுக்கான வசதியும்.

ஏ. கொடுகடனை வழங்குவதற்கான ஆவணங்களை உருவாக்குதல் ஆவணப்படுத்தல் மற்றும் பேணல் என்பனவற்றிற்கு முரண்படாத நியமங்கள்.

ஐ. ஆரம்பத்திலேயே பிரச்சனைகளை அடையாளம் காணுதல், பிரச்சனைகளுக்கு உட்படும் தன்மைகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்பான முரண்படாத அணுகுமுறைகள்.

ஒ. அத்தகைய சொத்துப்பட்டியலுக்கு உதவியளிப்பதற்கு விரும்பத்தக்க மூலதனத்திற்கு இணையாக இடர்நேர்வுச் சொத்துக்களின் பன்முகப்படுத்தப்பட்ட சொத்துப்பட்டியலைப் பேணுவதன் மீதான வலியுறுத்தல்.

ஓ. பிணையாளர், ஒருங்கிணைந்த கவனம், தொழில்துறை, புவியியல் தன்மை என்பனவற்றின் அடிப்படையில் கொடுகடன் இடர்நேர்வு வரையறைகள்

ஔ. சுதந்திரமான இடர்நேர்வு முறைமைகளுக்குள் அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் இடர்நேர்வுத் தரவுகளை அறிக்கையிடுவதற்கான கொடுகடன் தொழிற்பாடுகளின் பொறுப்பு

1.3 கொடுகடன் இடர்நேர்வு உபாயம் மற்றும் கொள்கைகள் என்பன பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். இந்த ஆவணங்கள் வங்கித்தொழில் அமைப்புக்களினூடாக காத்திரமான முறையில் பரப்பப்படுதல் வேண்டும். தொடர்பான அனைத்து ஆளணியினரும் கொடுகடன் வழங்குவதில் வங்கியின் அணுகு முறைகளை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதுடன் தாபிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் இணங்கிச் செல்வதற்கான பொறுப்புக்கூறும் தன்மையினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

## 2. இடர்நேர்வு முகாமைத்துவம்

2.1 **அமைப்பு** - மிகச் சிறந்த முறையில் தொழிற்படுகின்ற ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றில் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் சுதந்திரமான பிரிவொன்றிடம் கையளிக்கப்பட்டிருக்கும் என்பதுடன், ஒவ்வொரு வங்கியும் நிறுவனத்தின் அல்லது கடன் ஏட்டின் அளவினைப் பொறுத்து பின்வரும் பொறுப்புக்களுடன் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் குழு அல்லது கொடுகடன் கட்டுப்பாட்டுக் குழு என அழைக்கப்படும் உயர்மட்ட கொடுகடன் கொள்கைக் குழுவொன்றினை உருவாக்குதல் வேண்டும்:

அ. குழுவானது முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளரை தலைவராகக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் நுகர்வோர் வங்கித்தொழில், திறைசேரி மற்றும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் என்பன உள்ளிட்ட கொடுகடன் திணைக்களங்களின் தலைவர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ஆ. குழுவானது மற்றைய விடயங்களுடன் கொடுகடன் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பது மீதான நியமங்கள் உட்பட தெளிவான கொடுகடன் கொள்கைகளை பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்காக நிதியியல் உடன்படிக்கைகள், தரமிடல் நியமங்கள் மற்றும் அடிப்படை அளவுக் குறியீடுகள், கொடுகடனுக்கு ஒப்புதலளிக்கும் அதிகாரங்களை வழங்குதல், பாரிய கொடுகடன் வெளிப்படுத்துகைகளின் மீதான முன்மதியுடைய வரையறைகள், சொத்துக்களின் திரட்சி மற்றும் தொடர்பான தரப்பினருக்கான கடன் வழங்கல், கடன் பிணையங்களுக்கான நியமங்கள், சொத்துப்பட்டியல் முகாமைத்துவம், கடன் மீளாய்வுப் பொறிமுறை, இடர்நேர்வுத் திரட்சிகள், இடர்நேர்வுக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, கடன்களின் விலையிடல், ஏற்பாடுகள், ஒழுங்குமுறைப்படுத்தல்/ சட்ட இணங்குவிப்புக்கள் போன்றவற்றை வடிவமைத்தல்.

இ. குழுவானது கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமொன்றினை ஏற்படுத்துவதற்குப் பொறுப்பாக இருக்கும். இது இடர்நேர்வு மதிப்பீட்டு முறைமைகளை உருவாக்கவும் சொத்துப்பட்டியல் கடன்களினது தரத்தினையும் கொடுகடன் கொள்கைக் குழுவினால் ஏற்படுத்தப்பட்ட முன்மதியுடைய வரையறைகளையும் கண்காணிக்கவும் பிரச்சனைகளை அடையாளம் கண்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் முகாமைத்துவ தகவல் முறைமையினை அபிவிருத்தி செய்வதுடன் கடன் மீளாய்வு/ கணக்காய்வு போன்றவற்றை மேற்கொள்ளுதலும் வேண்டும்.

2.2 **முன்மதியுடைய வரையறைகள்** - பல்வேறுபட்ட இடர்நேர்வு அளவுகளின் மீது முன்மதியுடைய இடர்நேர்வு வரையறைகளை குறித்துரைப்பதன் மூலம் கொடுகடன் இடர்நேர்வினை பெருமளவிற்கு தணிக்க முடியும். வங்கிகள் பின்வரும் விடயங்களைக் குறித்துரைப்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அ. தகுதியான விடயங்களில் காணப்படும் பிறழ்வுகளுக்கான நெகிழ்ச்சித்தன்மையுடன் அடிப்படை அளவுக் குறியீட்டு நிதியியல் விகிதங்கள். நிபந்தனைகள் அனுமதிக்கப்பட்ட பிறழ்வுகளுக்கு உட்பட்டனவாக இருப்பதுடன் அத்தகைய பிறழ்வுகளை அனுமதிக்கின்ற அதிகாரம் பற்றி கொடுகடன் கொள்கையில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

ஆ. தனியொரு/ தொடர்பான தரப்பினரின் கடன்பாட்டாளர் வரையறையானது தக்கவர்களை தெரிவு செய்யும் பொறிமுறையொன்றினை வழங்குவதற்காக மத்திய வங்கியினால் விபரிக்கப்பட்டதிலும் பார்க்க மிகக் கடுமையானதாகவும் கூட இருக்கமுடியும்.

இ. கணிசமான வெளிப்படுத்துகை வரையறை, அதாவது, பாரிய வெளிப்படுத்துகைகளின் ஒன்று சேர்ந்த தொகையானது வங்கி வெளிப்படுத்துவதற்கிருக்கும் ஒன்று திரண்ட இடர்நேர்வின் அளவினைப் பொறுத்து வங்கிகளின் அடுக்கு II மூலதனத்தின் சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

ஈ. கைத்தொழில், பிரதேசங்கள், நாடு போன்றவற்றிற்கான உயர்ந்தபட்ச வெளிப்படுத்துகை வரையறைகள். நியாயமான கால இடைவெளியில் வெளிப்படுத்துகைகளை மதிப்பிடுவதற்கான முறைமையொன்று கட்டாயம் செயற்பாட்டில் இருக்கவேண்டியதுடன் குறிப்பிட்ட துறை அல்லது தொழில்துறை மெதுவான போக்கினை அல்லது வேறு ஏதேனும் பிரச்சனைகளை எதிர்நோக்கும் பொழுது குறிப்பாக வரையறைகள் சீராக்கப்படுதலும் வேண்டும்.

உ. கடன் ஏடுகளின் முதிர்ச்சி மற்றும் நாணய தோற்றப்பாடுகள் ஐந்தொகையில் இயல்பாகவே காணப்படும் சந்தை இடர்நேர்வுகள், இடர்நேர்வு முகாமைத்துவ இயலாற்றல், திரவத்தன்மை போன்றவற்றை மனதில் கொள்ள வேண்டும்.

2.3 **இடர்நேர்வுத் தரமிடல்** - இணைத்தரப்பினரின் பன்முகக் காரணிகளின் தனியொரு அளவு குறிகாட்டியாகச் செயற்படும் வீரியம்மிக்க உள்நாட்டு கொடுகடன் இடர்நேர்வுத் தரமிடல் முறைமையொன்றினையும் நிலையான முறையில் கொடுகடன் தீர்மானங்களை மேற்கொள்ளும் தன்மையினையும் வங்கிகள் அபிவிருத்தி செய்ய வேண்டிய அதேவேளையில் வெளிப்படுத்துகையொன்றுடன் இணைந்து காணப்படும் செலுத்தத் தவறும் இடர்நேர்வுகளையும் தொடர்பூட்டுதல் வேண்டும். இடர்நேர்வுத் தரமிடல், சுருக்கமான முறையில் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. கடன் ஏட்டின் அடிப்படையான கொடுகடன் இடர்நேர்வுகளைப் பிரதிபலித்தல்;

ஆ. வலுவான அமைப்பியல் முறையில் வரையப்படுதல் வேண்டும். கணியம்சார் (நிதியியல் விகிதங்கள்) மற்றும் தரம்சார் நியமங்கள் (கைத்தொழில், கொடுப்பனவு வரலாறு, கொடுகடன் அட்டைகள், முகாமைத்துவம், கடனின் நோக்கம், நிதியியல் தகவல்களின் தரம், வசதிகளின் பண்புத் தன்மைகள் போன்றன) ஆகியவற்றை கூட்டிணைத்தல்.

2.4 **இடர்நேர்வு விலையிடல்** - இடர்நேர்வு விலையிடல் என்பது கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். எனவே வங்கிகள்:

அ. எதிர்பார்க்கப்படும் செலுத்தத் தவறும் நிகழ்தகவுகளைத் தாங்கிக் கொள்ளக்கூடிய விதத்தில் கொடுகடன் இடர்நேர்வுகளை விலையிடுவதற்கு விஞ்ஞான முறைமைகளை வளர்த்துக் கொள்ளுதலும்;

ஆ. ஒவ்வொரு சாதனத் தொடர்களிலும் எதிர்பார்க்கப்படும் உயர்ந்தபட்ச இழப்புக்களை கணக்கிட வேண்டியதுடன் மூலதனத்தினை இவ்விழப்புக்களுடன் இணைத்தலும்; இதன் மூலம் வெவ்வேறுபட்ட இடர்நேர்வு மட்டங்களைக் கொண்ட சாதனங்களை ஒப்பிடுவது சாத்தியமாக்குதலும்;

வேண்டும்.

2.5 **சொத்துப்பட்டியல் முகாமைத்துவம்** - வெளிப்படுத்துகைகள் ஒன்று திரள்வதனால் ஏற்படும் உள்ளார்ந்த மோசமான தாக்கம் மற்றும் பன்முகப்படுத்தலுடன் இணைந்து காணப்படும் நன்மைகளை உச்சப்படுத்துவதற்கான அத்தியாவசியத் தன்மை என்பனவற்றிலிருந்தே கொடுகடன் சொத்துப்பட்டியல் முகாமைத்துவத்திற்கான தேவை தோன்றுகிறது. இவற்றைப் பொறுத்தவரையில், சொத்துப்பட்டியலின் தரத்தினைப் பேணுவதற்கு பின்வரும் வழிமுறைகளைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

அ. குறித்துரைக்கப்பட்ட தரமிடல் வகைகளில் ஒன்று சேரும் வெளிப்படுத்துகைகளின் மீது கணியம்சார் உச்ச அளவுகளை விதித்தல் அதாவது 1 இலிருந்து 4 அல்லது 6 வரையிலான தரமிடல் வகையிலுள்ள மொத்த முற்பணங்களில் குறிப்பிட்டதொரு சதவீதம் போன்றவை.

ஆ. பல்வேறுபட்ட கைத்தொழில்கள், வியாபாரங்கள், தனிப்பட்ட பிரிவுகள் போன்றவற்றிலுள்ள கடன்பாட்டாளர்களின் தரமிடல் ரீதியிலான பகிர்ந்தளிப்பக்களை மதிப்பிடல்.

இ. துறை/ குழுமமொன்றிற்குள் உள்ள கடன்பாட்டாளர்களில் பொதுவான தரமிடல் பகிர்ந்தளிப்புக்களின் அடிப்படையில் கைத்தொழில்/ துறையொன்றிற்கான வெளிப்படுத்துகை மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். தனியொரு கைத்தொழில்/ பிரிவிற்கான சொத்துப்பட்டியல் வெளிப்படுத்துகைக்கான இழப்புக்களை ஏற்படுத்தும் விதத்தில் செயல்படுமிடத்து அல்லது கடன்பாட்டாளர்களின் ஒன்றிணைந்த கவனம் குறையாத இடர்ப்பாடுகளைக் கொண்ட தரமிடல் காணப்படுமிடத்து வங்கியானது குறிப்பிட்ட கைத்தொழில் அல்லது குழுமத்திற்காக தரமான நியமங்களை அதிகரிக்க முடியும்.

ஈ. இலக்கிடல் தரமிடல் ரீதியான கடன்களின் அளவு, நிகழக்கூடிய செலுத்தத் தவறும் தன்மை மற்றும் ஒதுக்கங்களை மேற்கொள்ளும் தேவைப்பாடுகள் என்பன முன்மதியுடைய திட்டமிடல் நடவடிக்கைகளாகும். எதிர்பார்க்கப்பட்ட விதிகளிலிருந்து ஏற்படக்கூடிய ஏதேனும் பிறழ்வு/ பிறழ்வுகளுக்காக சொத்துப்பட்டியல்களை மீளமைப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவசியமானவிடத்து சொத்துப்பட்டியலை மேலும் மோசமடைவதிலிருந்தும் பாதுகாப்பதற்காக ஆரம்பமட்ட பிரமாணங்கள் மட்டத்தினை முன்மதியுடைய முறையில் அதிகரித்துக் கொள்ளலாம்.

உ. வெளிநாட்டுச் சூழ்நிலை விரைவான மாற்றங்களுக்கு உட்படும் வேளைகளில் (எண்ணெய் விலைகளில் உயர்வு, உலகளாவிய/ நாடுகளின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க சரிவுகள், பன்னாட்டு/ சந்தை இடர்நேர்வு நிகழ்வுகள், தீவிரமான திரவத்தன்மை நிலமைகள், போர்ச்சூழல் போன்றவை) சொத்துப்பட்டியல் மீளாய்வுகள், அழுத்தப் பரீட்சிப்புக்கள் மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வுகள் என்பனவற்றை விரைவாக மேற்கொள்ளுதல்.

ஊ. கடன்பாட்டாளர்களின் வெளிப்படுத்துகைகளின் மீளாய்வு/ புதுப்பித்தல் என்பனவற்றிற்கான வேறுபட்ட நேர அட்டவணைகளை அறிமுகப்படுத்தல். குறைந்த தரமிடப்பட்ட கடன்பாட்டாளர்களில் எவருடைய நிதியியல் தன்மைகள் பலயீனத்திற்குரிய அறிகுறிகளைக் காட்டுகின்றனவோ அவை ஆண்டொன்றிற்கு இரண்டு/ மூன்று தடவை புதுப்பித்தல் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

2.6 **இடர்நேர்வு மாதிரிகள்** - கொடுகடன் இடர்நேர்வு மாதிரிகள், புவியியல் சார்ந்ததும் உற்பத்தி வகைகள் தொடர்பானதுமான விதத்தில் தர ரீதியானதும் ஒன்று சேர்தல் முறையிலும் இடர்நேர்வுகளை சரியான நேரத்தில் கட்டுப்படுத்துவதற்கான கட்டமைப்பொன்றினை வங்கிகளுக்கு வழங்குகின்றது. ஆகவே வங்கிகள் இலங்கையின் சூழ்நிலைகளுக்குப் பொருந்தத்தக்க மாதிரிகளில் பல்வேறுபட்ட மாதிரிகளின் பயன்பாட்டினை மதிப்பீடு செய்து கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் மாதிரிகளின் பயன்பாட்டிற்கு வசதியளிக்கும் விதத்தில் போதுமான உள்ளக நிபுணத்துவத்தையும் தரவுத் தளங்களையும் கட்டியெழுப்புதலும் வேண்டும்.

2.7 **கடன் மீளாய்வுப் பொறிமுறை** - கடன் மீளாய்வுப் பொறிமுறையானது கடன் ஏட்டின் தரத்தினைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கும் கொடுகடன் நிர்வாகத்தில் தரமான முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கும் காத்திரமானதொரு கருவியாக விளங்குகிறது. இது தொடர்பாக, வங்கிகள் ஆண்டு தோறும் பணிப்பாளர் சபையின் மீளாய்வின் கீழ் கடன் மீளாய்வுக் கொள்கையொன்றினை வடிவமைத்தல் வேண்டும். இக்கொள்கை மற்றைய விடயங்களுடன் பின்வருவனவற்றையும் வலியுறுத்தல் வேண்டும்.

அ. **தகைமை மற்றும் சுதந்திரத்தன்மை** - கடன் மீளாய்வு அலுவலர்கள் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை அளிப்பதில் சுதந்திரமானவர்களாகவும் கொடுகடன் தரமிடல் கடன் வழங்கல் நடைமுறைகள் மற்றும் வங்கியின் கடன் கொள்கை என்பன தொடர்பாக மிகுந்த அறிவாற்றல் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

ஆ. **மீளாய்வின் கால இடைவெளியும் செயற்பரப்பும் -** உயர் பெறுமதி கொண்ட கடன்கள் அனுமதியளிக்கப்பட்ட/ புதுப்பிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்கிடையில் வழமையாகவும் அல்லது கொடுகடனின் தரம் மோசமடைவதற்கான சாத்தியத்தினை காரணிகள் எடுத்துக்காட்டும் பொழுது அடிக்கடியும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். மீளாய்வு செயற்பரப்பு வெட்டு வரையறைக்கு மேலேயுள்ள செயற்பாட்டுக் கடன்கள் அனைத்தையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். ஐந்தொகையில் பொதிந்துள்ள அனைத்து முக்கிய கொடுகடன் இடர்நேர்வுகளும் அவதானிக்கப்பட்டிருக்கின்றன என்ற நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதற்காக கடன் சொத்துப்பட்டியலில் குறைந்தபட்சம் 30 - 40 சதவீதம் கடன் மீளளிப்புப் பொறிமுறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

இ. **மீளாய்வின் ஆழம் -** சொத்துப்பட்டியலின் தரத்தினை மேம்படுத்துவதற்கு கடன் மீளாய்வுகள் கடன் அலுவலர்களினால் வழங்கப்பட்ட கொடுகடன் தரமிடலின் ஒப்புதல் செயன்முறைகள், துல்லியமான தன்மை, சரியான நேரம், உள்ளகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றமை, பிரயோகிக்கப்படத்தக்க சட்டங்கள்/ ஒழுங்குவிதிகள், கடன் திரட்டுவதனுடனான இணங்குவிப்புக்கள் கடன் ஒப்புதலளிக்கப்பட்ட பின்னரான பின்தொடர் நடவடிக்கைகள், போதுமான ஆவணப்படுத்தல், சொத்துப்பட்டியலின் தரம் மற்றும் விதந்துரைப்புக்கள் என்பனவற்றின் கவனம் செலுத்துதல் வேண்டும்.

2.8 **முதலீட்டு வங்கித்தொழிலில் காணப்படும் இடர்நேர்வு** - சந்தை இடர்நேர்வுகளுக்கு மேலதிகமாக, குறிப்பிடத்தக்களவு கொடுகடன் இடர்நேர்வு முதலீட்டு வங்கித்தொழிலில் இயல்பாகவே பிணைந்து காணப்படுகின்றது. ஆகவே, வங்கிகள் ஒன்று திரண்ட மற்றும் திரவத்தன்மையில்லாமல் போகும் இடர்நேர்வு என்பனவற்றின் மோசமான தாக்கங்களைத் தணிப்பதற்காக கைத்தொழில், முதிர்ச்சி காலம், வழங்குநர் விவேகம் என்பனவற்றில் ஆரம்ப நிலையில் குறைந்தபட்ச தரமிடல்/தர நியமங்களையும் அதேபோன்று முதலீட்டு முன்மொழிவுகளின் மீது வரையறைகளையும் குறித்துரைத்தல் வேண்டும்.

2.9 **வங்கிகளுக்கான வெளிப்படுத்தல்கள் -** மற்றைய வங்கிகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மீது மையப்படுத்தப்பட்ட மேற்பார்வையொன்றினை வழங்குவதற்காக பொருத்தமான கட்டமைப்பொன்று உருவாக்கப்படுதல் வேண்டும். வங்கிகளின் அடிப்படையான வெளிப்படுத்துகை வரையறைகள் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு தரமிடலின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

2.10 **ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகையில் காணப்படும் இடர்நேர்வு** - நிதியிடப்படாத விடயங்களை மதிப்பிடுவதுடன் தொடர்பான பொறிமுறை நிதியுடன் தொடர்பான விடயங்களை மதிப்பிடுவதனை ஒத்ததாக இருத்தல் வேண்டும். இவ்வசதிகளை வழங்கும் பொழுது மிகுந்த கவனம் எடுக்கப்படுதல் வேண்டும். ஆகவே, வங்கிகள் கொடுகடன் மதிப்பிடல், வரையறைகள் மற்றும் கண்காணிப்பு நடைமுறைகளின் ஒரு பகுதியாக, வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தங்கள், முன்னோக்கிய வட்டி வீத உடன்படிக்கைகள், பரஸ்பர பரிமாற்றல்கள், விருப்பத்தேர்வுகள், எதிர்காலச் சாதனங்கள் போன்ற ஐந்தொகைக்கு வெளியேயான சாதனங்களில் அவற்றின் வெளிப்படுத்துகைகளை முகாமைப்படுத்துவதற்காக போதுமான கட்டமைப்பினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**இ. சந்தை இடர்நேர்வு முகாமைத்துவம்**

**1. முகாமைத்துவ மேற்பார்வை**

பணிப்பாளர் சபையானது சந்தை இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் நடைமுறைகள், முன்மதியுடைய இடர்நேர்வு வரையறைகள், மீளாய்வுப் பொறிமுறை, அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வு முறைமைகள் தெளிவாக இணைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

1.1 கொள்கைகள் பின்வருவனவற்றை வலியுறுத்தல் வேண்டும்:

அ. ஒன்றுதிரட்டிய அடிப்படையில் வங்கியின் வெளிப்படுத்துகைகளை மதிப்பிடல், வட்டி வீதம், நாணயம், பங்கு விலைகள் மற்றும் திரவ இடர்நேர்வுகள் என்பனவற்றுடன் தொடர்பான பிரச்சனைகளை பரிசீலித்தல்; அத்துடன்

ஆ. சந்தை இடர்நேர்வின் அனைத்து விடயங்களினதும் மூலங்களையும் உள்ளடக்கும் இடர்நேர்வு அளவீடுகள் மற்றும் வங்கி மூலதனத்தின் மீதான தாக்கங்களின் மதிப்பீடு.

1.2 வங்கியின் ஒட்டுமொத்த சந்தை இடர்நேர்வு வெளிப்படுத்துகை முன்மதியுடைய மட்டங்களில் பேணப்படுவதனையும் கிடைக்கத்தக்க மூலதனங்களுடன் ஒத்துச் செல்வதனையும் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். தொழிற்படுகின்ற முன்மதியுடைய வரையறைகளும் தொடர்பான முகாமைத்துவத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய தன்மையினையும் தெளிவாக வரைவிலக்கணம் செய்தல் வேண்டும்.

**2. இடர்நேர்வு முகாமைத்துவம்**

2.1 **அமைப்பு** - ஒவ்வொரு வங்கியும் பின்வருவன உட்பட, சந்தை இடர்நேர்வு முகாமைத்துவத்திற்காக நிறுவன அமைப்பியல் முறையொன்றினை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

அ. **சொத்து - பொறுப்பு முகாமைத்துவக் குழு** - வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர் உட்பட மூத்த முகாமைத்துவக் குழுவினை உள்ளடக்கியிருக்கும் சொத்து - பொறுப்பு முகாமைத்துவக் குழுவானது பணிப்பாளர் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட செயலாற்ற/ இடர்நேர்வு வரையறைகளுக்குள் நின்று ஐந்தொகையினை முகாமைப்படுத்துவதற்கான உச்ச தொழிற்பாட்டு அலகாக இயங்குதல் வேண்டும். சொத்து - பொறுப்பு முகாமைத்துவக் குழுவானது பல்வேறுபட்ட சந்தை மாறிகள் மீதான வங்கியின் கருத்தினை தெளிவுபடுத்த வேண்டியதுடன் இதன் தீர்மானங்கள் எதிர்கால வியாபார உபாயங்களுக்கு அடிப்படையாகவும் இருத்தல் வேண்டும்.

ஆ. **நடு அலுவலகம்** - வங்கிகள், அதேநேர அடிப்படையில் சந்தை இடர்நேர்வின் அளவினைக் கண்டறிவதற்காக சுதந்திரமான நடு அலுவலகமொன்றினை ஏற்படுத்துதல் வேண்டும். நடு அலுவலகம்:

(i) சந்தை இடர்நேர்வு முகாமைத்துவ நிபுணர்கள், பொருளியலாளர்கள், புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் பொது வங்கியாளர்களை உள்ளடக்கியிருக்க வேண்டியதுடன் சொத்து பொறுப்பு முகாமைத்துவக் குழுவின் கீழ் நேரடியாக தொழிற்படுதலும் வேண்டும்.

(ii) திறைசேரித் திணைக்களத்திலிருந்து வேறாக இருக்க வேண்டியதுடன் திறைசேரியின் நாளாந்த முகாமைத்துவத்திலும் தலையிடுதல் கூடாது.

(iii) முன்மதியுடைய/ இடர்நேர்வு விதிகள் பின்பற்றப்படுவது பற்றியும் எந்தவொரு நேரத்திலும் வங்கியினால் அநுமானிக்கப்படும் மொத்தச் சந்தை இடர்நேர்வுகள் ஒன்று சேர்வது பற்றியும் உச்ச முகாமைத்துவம்/ சொத்து - பொறுப்பு முகாமைத்துவக் குழு/ திறைசேரிக்கு அறிவித்தல் வேண்டும்.

2.2 **வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு** - வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வினை திறந்த நிலைமைகள், உச்ச அளவு என்பனவற்றின் மீது பொருத்தமான வரையறைகளை விதிப்பதனூடாகவும் இடர்நேர்வு வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலமும் வெளிப்படுத்துகைகளை கண்காணிப்பதன் மூலமும் தணிக்கமுடியும். இது தொடர்பாக வங்கிகள் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன.

அ. மூலதன நிலமை, பொதுவான இடர்நேர்வு தோற்றப்பாடு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ இயலாற்றல்கள் என்பனவற்றைப் பொறுத்து பொருத்தமான வரையறைகளை (இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளிலும் பார்க்க குறைவாகக் கூட) நிர்ணயித்தல்.

ஆ. தனிப்பட்டவர்கள் மற்றும் மூலதனத்துடன் இணைக்கப்பட்ட முக்கிய நாணயங்களின் மீதான ஒன்று சேர்ந்த உச்சங்களின் மீது பொருத்தமான வரையறைகளை விதத்தில்.

இ. வெளிப்படுத்துகைகளுடன் இணைந்த இடர்நேர்வுகளை அளவிடுவதற்கு இடர்நேர்வில் பெறுமதி நுணுக்கத்தினைப் பின்பற்றுதல்.

ஈ. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சி பற்றிய கூற்று (இணைப்பு 1) சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கூருணர்திறன் கூற்று (இணைப்பு 2) மற்றும் வெளிநாட்டுச் செலாவணி நிலமைக் கூற்று (இணைப்பு 3) என்பனவற்றைத் தயாரிப்பதுடன் சேர்ந்த வெளிநாட்டு இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளைக் கண்காணித்தல்.

உ. முன்னரங்க, நடு மற்றும் பின்னரங்க அலுவலர்களுக்கிடையிலான பொறுப்புக்கள் மிகத் தெளிவாக நன்முறையில் வரைவிலக்கணம் செய்யப்படுவதனை உறுதிப்படுத்தல்.

2.3 **வெளிநாட்டு நாணய திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம் -** பல்நாணய ஐந்தொகையினை பேணுவதில், குறிப்பாக, உள்நாட்டு நாணயச் சொத்துக்கள் வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களின் மூலம் நிதியிடப்படும் பொழுது வங்கிகள் திரவத்தன்மை முகாமைத்துவத்திற்கான இன்னொரு சிக்கலான தன்மைக்கு உட்படுகின்றன. ஆகவே, வங்கிகள் திரவத்தன்மை நெருக்கடியினைத் தவிர்ப்பதற்கு விளங்கிக் கொள்ளக்கூடிய நாணய பொருத்தப்பாடின்மையினை உருவாக்குவதில் விழிப்பாக இருத்தல் வேண்டும்.

**ஈ. தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம்**

**1. முகாமைத்துவ மேற்பார்வை**

காத்திரமான தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ உபாயமொன்று பணிப்பாளர் சபையானது தொழிற்பாட்டு இடர்நேர்வு தனித்துவமானது என்பதனையும் கட்டுப்படுத்தக்கூடியது என்பதனையும் அங்கீகரிக்க வேண்டுமென்பதனை தேவைப்படுத்துவதுடன் பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள், நடைமுறைகள், நடவடிக்கைகள் என்பனவற்றையும் சுதந்திரமானதொரு கணக்காய்வு மற்றும் மீளாய்வுப் பொறிமுறையினையும் நடைமுறைக்கிடுதல் வேண்டும்.

1.1 பணிப்பாளர் சபையானது தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் மீது நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். இக்கொள்கைகளும் நடைமுறைகளும் வியாபாரத்துறைகள் அல்லது இடர்நேர்வுகள் முழுவதிலுமுள்ள பொதுவான கூறுகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். கொள்கையானது பின்வருவனவற்றை வலியுறுத்துவதாக இருத்தல் வேண்டும்.

அ. உற்பத்தி மீளாய்வுச் செயன்முறைகள்

ஆ. தொடர்புபட்டுள்ள வியாபாரம்

இ. இடர்நேர்வு முகாமைத்துவம்

ஈ. உள்ளகக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடுகள்

**2. இடர்நேர்வு முகாமைத்துவம்**

2.1 **அமைப்பு** - நிறுவனத்திற்கே உரித்தான காரணிகளைக் கணக்கில் எடுக்குகையில் வங்கிகள் பின்வரும் சுதந்திரமான வங்கி அடிப்படையிலான இடர்நேர்வுக் குழுவொன்றினை அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் கீழ் அலகொன்றினை நிறுவுதல் வேண்டும் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலரை நியமிக்க வேண்டும்.

அ. முழு வியாபாரப் பிரிவுகளுக்குமான தொழிற்பாட்டு இடர்நேர்விற்காக நிலையான வரைவிலக்கணங்களை உருவாக்குதல்.

ஆ. கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் நடவடிக்கைகளை விருத்தி செய்தல்.

இ. இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை அறிக்கையிடல் மற்றும் மீளாய்வு செய்தல்.

ஈ. ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை மேற்பார்வை செய்து உறுதிப்படுத்தல்.

உ. பொருளாதார மூலதனத்தினை ஒதுக்குதலும் பேணுதலும்.

ஊ. இடர்நேர்வு தணித்தல் நுணுக்கங்களுக்கான உபாயங்களை விருத்தி செய்தல்.

2.2 **இடர்நேர்வினை அளவிடுதல்** - வங்கித்தொழில் முறையிலுள்ள தொழிற்பாட்டு இடர்நேர்வினை அளவிடுவதற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட அணுகுமுறையொன்று இல்லாமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளிலும் கம்பனி ஆளுகைகளிலும் காணப்படும் அநேக சீரற்ற தன்மைகள் என்பனவற்றின் காரணமாக இது தொடர்பான மூலதன ஒதுக்கங்களுக்காக மிகவும் முன்னேற்றங்கண்ட நுணுக்கமொன்றிற்கான தேவை முக்கியமானதொரு பிரச்சனையாக உருவெடுத்திருக்கின்றது. ஆகவே, தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை அளவிடும் பொழுது வங்கிகள் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அ. வங்கிகளின் நிலையான குறிக்கோள்களை மோசமாகப் பாதிக்கக்கூடிய உள்ளகக் காரணிகளையும் (அமைப்பியல் சிக்கல்கள், நடவடிக்கைகளின் தன்மை, ஆளணியினரின் தரம், அமைப்பியல் ரீதியான மாற்றங்கள் மற்றும் ஊழியர் புரள்வு) வெளிக்காரணிகளையும் (தளம்பலுறும் பொருளாதார நிலைமைகள் தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களில் ஏற்படும் மாற்றங்கள்) பரிசீலனையில் கொள்ளுதல்.

ஆ. கட்டுப்படுத்தத்தக்க, கட்டுப்படுத்த முடியாத தொழிற்பாட்டு இழப்பு நிகழ்வுகளை மிகத் தெளிவாக பிரித்தறிதல்.

இ. தொழிற்பாட்டு இடர்நேர்வு நிகழ்வுகளின் பட்டியல்களுக்கெதிராக அவற்றின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மதிப்பிடுதல் (அதாவது உள்ளக மற்றும் வெளிவாரி மோசடிகள், தொழில்நிலை நடைமுறைகள் மற்றும் தொழில் தலப் பாதுகாப்பு, வாடிக்கையாளர், சாதனங்கள் மற்றும் வியாபார நடைமுறைகள், பௌதீக சொத்துக்களுக்கான சேதம், வியாபாரப் பரம்பல் மற்றும் முறைமைகள் பழுதடைதல் நிறைவேற்றல், வழங்கல் மற்றும் செயன்முறை முகாமைத்துவம் போன்றன).

ஈ. முறிவடைந்த வர்த்தகங்கள், அலுவலர் மொத்த புரள்வு வீதங்கள் இடர்நேர்வு கரிசனைகளின் அளவினைக் கண்டறிவதில் ஏற்படும் தவறுகள் மற்றும் வழுக்களின் கால இடைவெளி அத்துடன்/ அல்லது கடுமையான தன்மை போன்ற முக்கிய இடர்நேர்வுக் குறிகாட்டிகளை முக்கியமான இடர்நேர்வுக் குறிகாட்டிகளின் மீது நிர்ணயிக்கப்பட்ட ஆரம்ப அல்லது உச்ச அளவுடன் மீளாய்வு செய்தல்.

உ. இடர்நேர்வினைக் கணிப்பதற்கு ஏதேனும் விஞ்ஞான ரீதியான முறைகளை வங்கி உருவாக்கியிருக்காத சந்தர்ப்பத்தில் மொத்த வருமானம், கட்டண வருமானம், தொழிற்பாட்டுச் செலவுகள், ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் அல்லது இம்மாறிகளின் இணைந்த தன்மை என்பனவற்றிற்காக சீராக்கம் செய்யப்பட்ட மொத்தச் சொத்துக்கள் போன்ற வியாபார நடவடிக்கையின் கூட்டு அளவிடல் ஒன்றின் அடிப்படையில் இலகுவான அடிப்படை அளவீட்டு குறியீட்டினை உருவாக்குதல்.

ஊ. உத்தேச தொடர்ச்சியான வியாபாரம் மற்றும் அனர்த்த மீட்புத் திட்டத்தின் கீழ் மீட்பிற்கான நேரக் குறிக்கோள்களுடன் வியாபாரத் தாக்கப் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல்.

2.3 **இடர்நேர்வுகளைக் கண்காணித்தல்** - தொழிற்பாட்டு இடர்நேர்வு கண்காணிப்பு முறைமை பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. அளவு, மொத்தப் புரள்வு, தீர்ப்பனவுக் காரணிகள், தாமதங்கள் மற்றும் தவறுகள் போன்ற தொழிற்பாட்டு செயலாற்ற அளவீடுகளின் மீது கவனம் செலுத்துதல்.

ஆ. ஒவ்வொரு நிகழ்வுகளின் பகுப்பாய்வுகளுடனும் கூடிய தொழிற்பாட்டு இழப்புக்களை நேரடியாகக் கண்காணித்தல் மற்றும் இழப்புக்களின் தன்மையினையும் காரணங்களையும் விபரித்தல்.

இ. உள்ளகக் கட்டுப்பாடுகளை வங்கியின் தொழிற்பாடுகளுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் மூத்த முகாமைத்துவத்திற்காக கிரமமான அறிக்கைகளைத் தயாரித்தல்.

ஈ. உள்ளகக் கணக்காய்வு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களங்களை தனித்தனியாக இணங்கிச் செல்லும் தன்மையினை மீளாய்வு செய்தல்.

2.4 **உள்ளகக் கட்டுப்பாடு** - தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு கடமைகளை வெவ்வேறாக்குதல், தெளிவான முகாமைத்துவ அறிக்கையிடல் வழிமுறைகள் மற்றும் போதுமான தொழிற்பாட்டு நடைமுறைகள் போன்றவற்றை உள்ளடக்கும் நன்கு நிறுவப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வங்கிகள் பின்பற்றுதல் வேண்டும். உரிமம் பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2007ஆம் ஆண்டின் 11 மற்றும் 12ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரைகளின் இலக்கம் 3(8)(ii) (ஆ) மற்றும் (இ) ஆகிய பணிப்பரைகளுக்கிணங்க வங்கிகள்.

அ. நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உத்தரவாதத்தினை வழங்கும் விதத்தில் நிதியியல் அறிக்கையிடல் முறைமை வடிவமைக்கப்பட்டிருப்பதனையும் வெளிவாரி நோக்கங்களுக்கான நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்புத் தொடர்பான கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்துகின்ற வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறை பற்றிய ஆண்டறிக்கையில் சபையின் அறிக்கை உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

ஆ. தயாரிக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஏதேனும் கூற்றுக்கள் தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் காத்திரமான தன்மை பற்றிய வெளிவாரிக் கணக்காய்வாளரின் உறுதிப்படுத்தல்.

என்பனவற்றை பின்பற்றுதல் வேண்டும்.

பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ. காத்திரமானதும் வினைத்திறன் மிக்கதுமான தொழிற்பாட்டினை ஊக்குவித்தல்.

ஆ. நம்பகமான நிதியியல் தகவல்களை வழங்குதல்.

இ. சொத்துக்களைப் பாதுகாத்தல்.

ஈ. ஒழுங்கீனங்கள், மோசடிகள் மற்றும் தவறுகளிலிருந்து தோன்றும் இழப்புக்களின் தொழிற்பாட்டு இழப்புக்களைக் குறைத்தல்.

உ. காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை உறுதிப்படுத்தல்; அத்துடன்

ஊ. தொடர்பான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் உள்ளகக் கொள்கைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல்.

2.5 **இடர்நேர்வினைத் தணிப்பதற்கான நுணுக்கங்கள்** - தொழிற்பாட்டு இடர்நேர்வுச் சம்பவங்களின் கடுமையினைக் கட்டுப்படுத்துவதற்கு இடர்நேர்வுத் தயாரிப்பு நுணுக்கங்கள் அல்லது கருவிகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். தடங்கலற்ற வியாபாரம் மற்றும் அனர்த்த மீட்புத் திட்டத்தின் கீழ் பொருத்தமான தகவல் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்யப்படுவதும் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு முக்கியமானதாகும்.

2.6 **காப்புறுதிக் கொள்கைகள்** - தவறுகள் மற்றும் வழங்கல்கள், பிணையங்களின் பௌதீக இழப்புக்கள், மோசடிகள் மற்றும் இயற்கை அழிவுகள் போன்ற சம்பவங்களின் விளைவாக நேரிடக்கூடிய "தாழ்ந்த இடைவெளியைக் கொண்டதும் உயர்ந்த தீவிரமானதுமான இழப்புக்களின்" இடர்நேர்வினை வெளிப்படுத்துவதற்கு புத்தம் புதிய காப்புறுதிக் கொள்கைகளை பயன்படுத்த முடியும்.

2.7 **வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல்** - வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக் கொள்வது தொடர்பான 2010ஆம் ஆண்டின் 7 மற்றும் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கு அமைவாக வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்வதுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு வங்கிகள் ஆற்றல்மிக்க கொள்கைகளை உருவாக்குதல் வேண்டும்.

2.8 **தடங்கலற்ற நடவடிக்கைகளுக்கான திட்டமிடல்** - முறிவடைதல்களைக் கையாளவும் குறுகிய கால அறிவித்தலில் மாற்றுப் பணி வழங்குவோருக்கு மாறவும் தொழில் முயற்சி அடிப்படையில் தடங்கலற்ற திட்டமொன்றினை நடைமுறைக்கிடல் வேண்டும்.

**உ. திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம்**

**1. முகாமைத்துவ மேற்பார்வை**

அ. முகாமைத்துவ திரவத்தன்மை திறைசேரித் தொழிற்பாட்டின் பொறுப்பாக மாத்திரம் இருக்காது. பணிப்பாளர் சபையினதும் மூத்த முகாமைத்துவத்தினதும் காத்திரமான மேற்பார்வையானது திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறையின் முக்கியமானதொரு மூலமாக விளங்குகின்றது.

ஆ. பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட திரவ முகாமைத்துவ கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் நடவடிக்கைகளை காத்திரமான முறையில் நிறைவேற்றுவதற்கு சொத்துப் பொறுப்பு முகாமைத்துவக் குழு கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

இ. எனினும், பணிப்பாளர் சபையானது, குறிப்பிடத்தக்களவு நிதியிடல் குவிந்து காணப்படுவதனை அவதானிக்குமிடத்து திரவத்தன்மை இடர்நேர்வினை மதிப்பிடுவதற்காக திரவத்தன்மை தோற்றப்பாட்டினை காலத்திற்குக் காலம் கண்காணித்தல் வேண்டும்.

**2. இடர்நேர்வு முகாமைத்துவம்**

2.1 **அமைப்பு** - திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவமானது ஒன்றில் மையப்படுத்தப்பட்டதாக அல்லது பரவலாக்கப்பட்டதாக அல்லது இரண்டினையும் சேர்த்ததாக இருக்கக்கூடும். அமைப்பானது வங்கியினது தொழிற்பாடுகளின் அளவு சிக்கலான தன்மை என்பனவற்றுடன் ஒத்ததாக இருத்தல் வேண்டும். இது நெகிழ்ச்சித்தன்மை கொண்டதாக இருக்க வேண்டிய அதேவேளையில் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட திரவ உபாயத்தினை காத்திரமான முறையில் நடைமுறைக்கிடுவதனை உறுதிப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

2.2 **திரவத்தன்மையினை அளவிடல்** - திரவத்தன்மையினை அளவிடுவது இடர்ப்பாடானதொரு பணியாக இருப்பதுடன் இதனை இருப்பு அல்லது பாய்ச்சல் அணுகுமுறைகளினூடாக அளவிடமுடியும்.

அ. **இருப்பு அணுகுமுறை** - இருப்பு அணுகுமுறையின் கீழ், திரவத்தன்மையானது ஐந்தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ள திரவத்தன்மையினை விளக்குகின்ற முக்கியமான விகிதங்களின் நியதிகளில் அளவிடப்படுகிறது. வங்கிகள் அவற்றின் இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறையின் போது பின்வரும் விகிதங்களைக் கணித்து ஆய்வு செய்தல் வேண்டும்.

(i) மொத்தச் சொத்துக்களுக்கான தேறிய கடன்களின் விகிதம்

(ii) வாடிக்கையாளர் வைப்புக்களுக்கான கடன்கள்

(iii) குறுங்கால பொறுப்புக்களுக்கான திரவச் சொத்துக்கள்

(iv) வருவாய் சொத்துக்கள் (கழிக்குக) தற்காலிக முதலீடுகளுக்கான பாரிய பொறுப்புக்கள் (கழிக்குக) தற்காலிக முதலீடுகள், இங்கு பாரிய பொறுப்புக்கள் மொத்த விற்பனை வைப்புக்களைப் பிரதிபலிக்கின்றன. இவை சந்தை உணர்திறனும் தற்காலிக முதலீடுகளாகவுமிருக்கின்றன. இவை ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்றனவாகவும் வர்த்தப்படுத்தல் ஏட்டில் வைத்திருக்கப்படும் இம்முதலீடுகள் சந்தையில் உடனடியாக விற்கப்பட்டனவாகவும் இருக்கின்றன.

(v) மொத்தச் சொத்துக்களுக்கான கொள்வனவு செய்யப்பட்ட நிதியம். இங்கு கொள்வனவு செய்யப்பட்ட நிதியமானது வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் நிறுவன ரீதியான வைப்புக்கள் உட்பட முழு உள்ளக வங்கி மற்றும் ஏனைய பணச் சந்தைக் கடன்பாடுகளை உள்ளடக்குகிறது.

(vi) மொத்தக் கடன்களுக்கான கடப்பாடுகள். இங்கு கடப்பாடு என்பது நாணயக் கடிதம், உத்தரவாதங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளல்கள் ஆகிய இயல்புகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

ஆ. **பாய்ச்சல் அணுகுமுறை** - வங்கிகள், முதிர்ச்சிக்கு இன்னமுமுள்ள எஞ்சிய காலத்திற்கிணங்க காலப்பிரிவொன்றில் இடம்பெறுகின்ற அனைத்துக் காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்களைக் காட்டும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சியைக் காட்டும் கூற்று ஒன்றினை தயாரித்தல் வேண்டும். சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிக்கான வடிவமைப்புப் படிவம் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு 1). காலப்பிரிவுகள் கீழே காட்டப்பட்டவாறு பகிர்ந்து காணப்படலாம்.

i. ஒரு மாதம் வரையில்

ii. ஒரு மாதத்திற்கு கூடுதலாகவும் 3 மாதம் வரையிலும்

iii. 3 மாதத்திற்குக் கூடுதலாகவும் 6 மாதம் வரையிலும்

iv. 6 மாதத்திற்குக் கூடுதலாகவும் 9 மாதம் வரையிலும்

v. 9 மாதத்திற்குக் கூடுதலாகவும் 1 வருடம் வரையிலும்

vi. 1 வருடத்திற்குக் கூடுதலாகவும் 3 ஆண்டுகள் வரையிலும்

vii. 3 ஆண்டுகளுக்குக் கூடுதலாகவும் 5 ஆண்டுகள் வரையிலும்

viii. 5 ஆண்டுகளுக்குக் கூடுதலாக

(**செய்யப்படவுள்ள அனுமானங்கள்** - ஏதேனும் நிச்சயமான ஒப்பந்த ரீதியான முதிர்ச்சி இல்லாமல் மேலதிகப் பற்றுக்கள், சேமிப்புக்கள் மற்றும் நடைமுறை வைப்புக்கள் போன்ற சில சொத்து மற்றும் பொறுப்பு விடயங்கள் அதேபோன்று, தவணை வைப்புக்களின் ஒரு பகுதியும் முதிர்ச்சியின் மீது மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகின்ற வேளையில் வாடிக்கையாளர் கடன்கள் ஒழுங்கான கால இடைவெளியில் மீண்டும் வழங்கப்படுகின்றன. எனவே, சாத்தியமான காசு உட்பாய்ச்சல்/ வெளிப்பாய்ச்சல்களை தீர்மானிக்கின்ற வேளையில் வங்கிகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நடத்தைக்கிணங்க அநேக அநுமானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். குறைந்தபட்சம் ஆண்டிற்கு இரு முறை செல்லுபடியாக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அநுமானங்கள் ஐந்தொகையின் உள்ளே/ வெளியேயான நிலமைகளின் எதிர்கால நடத்தை தொடர்பான ஏறத்தாழ நம்பகமான ஊகங்களுக்கு வசதியளிப்பதற்காக, காலப்பகுதியொன்றினுள், மெருகூட்டப்படுதல்வேண்டும்).

இ. **தேறிய நிதியிடல் தேவைப்பாடுகள்**

i. ஒவ்வொரு காலப்பிரிவிலும் காசு உட்பாய்ச்சலுக்கும் வெளிப்பாய்ச்சலுக்குமிடையிலான வேறுபாடு, குறிப்பிட்ட நேரத்தில் புள்ளிகளின் தொடர்கள் நிதியங்களின் மிகை அல்லது பற்றாக்குறை, வங்கியின் எதிர்கால திரவத்தன்மையின் அளவிற்கான தொடக்கப் புள்ளி மிகை அல்லது பற்றாக்குறைக்கு மாறுகின்றமை.

ii. வரப் போகின்ற திரவத்தன்மைப் பிரச்சனைகள் பற்றி பொருத்தப்பாடின்மைகள் நேரகாலத்துடன் எச்சரிக்கைக்கான சமிக்ஞைகளை வழங்குவதனால் ஓராண்டு காலத்திற்கு இவை பொருத்தமானவையாக இருக்கக்கூடிய வேளையில் முக்கியமான கவனம் பொருத்தப்பாடின்மைகள் மீது மூன்று மாதங்கள் வரையில் இருத்தல் வேண்டும்.

iii. எனினும், வங்கிகள், அளவு, சிக்கலானதன்மை மற்றும் அனைத்துக் காலபிரிவுகளுக்குமான நிதியியல் நிலமைகள் என்பனவற்றிற்குப் பொருத்தமான விதத்தில் முன்மதியுடைய பொருத்தப்பாடின்மை வரையறையினை நிர்ணயிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

iv. திரவத்தன்மை நிலமையானது, தனிப்பட்ட மற்றும் ஒன்று சேர்ந்த மட்டங்கள் இரண்டிலும் வங்கிகள் கையாளும் அனைத்து முக்கிய நாணயங்களிலும் அளவிடப்படல் வேண்டும். எனினும், குறுங்கால நிதியிடலில் தங்கியிருக்கும் வங்கிகள் மிகக் குறுகிய காலத்தில் பெரும்பாலும் நாளாந்த அடிப்படையில் அவர்களது திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதில் முக்கியமான குவிந்த கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

ஈ. **மாற்று ஏற்பாட்டு சூழ்நிலை**

i. வங்கிகள் திரவத்தன்மைத் தோற்றப்பாடுகளை வேறுபட்ட அழுத்த சூழ்நிலைகளில் அதாவது வழமையான நிலமைகளிலும் வங்கியின் குறித்துரைக்கப்பட்ட நெருக்கடி மற்றும் சந்தை நெருக்கடி சூழ்நிலைகளின் கீழும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

ii. ஒவ்வொரு சூழ்நிலைகளின் கீழும் உள்ளக (வங்கி தொடர்பாக) மற்றும் வெளி (சந்தை தொடர்பானது) ஆகிய இரண்டு காரணிகளினதும் காரணமாக ஏற்படக்கூடிய ஏதேனும் குறிப்பிடத்தக்க சாதகமான அல்லது பாதகமான திரவத்தன்மையின் தளம்பல்களுக்கு வங்கிகள் பொறுப்புக்கூறுதல் வேண்டும்.

iii. இது தொடர்பாக, மாற்று ஏற்பாட்டு சூழ்நிலைகளின் கீழ், காசுப்பாய்ச்சல்களினது நடத்தை நிகழ்தகவுகளை மதிப்பிடுவதன் மூலம் சொத்து மற்றும் பொறுப்புக்களின் ஒவ்வொரு வகைக்குமான காசுப்பாய்ச்சலின் கால நிர்ணயத்தை வங்கிகள் ஒதுக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

iv. ஒவ்வொரு நிதியிடல் மூலத்திற்குமாக, வங்கிகள் பொறுப்புக்கள் (அ) முதிர்ச்சியில் முழுமையாக மீளச் செலுத்தப்பட வேண்டுமா (ஆ) அடுத்த சில வாரங்களில் படிப்படியாக இல்லாதொழித்தல் பற்றி அல்லது (இ) இறுதியில் பயன்படுத்தப்பட்டிருக்குமிடத்து மீண்டும் மீண்டும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டமை பற்றி அல்லது கிடைக்கத்தக்கதாகவுள்ளமை பற்றி உண்மையாக உறுதிப்படுத்திக் கொள்ளல் பற்றி தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

உ. **எதிர்பாராத நிகழ்வுகளுக்கான திட்டம்**

i. வங்கிகள், வங்கி தொடர்பான அல்லது சந்தை நெருக்கடி தொடர்பான சூழ்நிலைகளை எதிர்த்து நிற்பதற்கான அவற்றின் இயலாற்றலை அளவிடுவதற்கு எதிர்பாராத திரவத்தன்மை நிகழ்வுகளுக்கான திட்டத்தினை தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ii. சொத்துக்களின் விற்பனை, சந்தையினை அடையும் வழிவகை, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சி மற்றும் உள்ளமைப்பினை மீளவமைத்தல் என்பன தொடர்பான பூர்வாங்க அறிக்கையினை மிகத் தெளிவாக ஆவணப்படுத்த வேண்டியதுடன் வங்கிகள் முறிவடைந்து போகும் சந்தர்ப்பத்தில் ஏற்கனவேயுள்ள மூலங்களிலிருந்து நிதிகளைத் திரட்டுவதற்கான மாற்று ஏற்பாட்டுத் தேர்வுகள் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

iii. எதிர்பாராத நிகழ்வுகளின் திட்டத்திற்கு இறுதிக் கடன் ஈவோன் என்ற முறையில் இலங்கை மத்திய வங்கியிலிருந்து திரவத்தன்மையினை எதிர்பார்க்கக்கூடாது.

iv. கொடுகடன்களின் கடப்பாட்டுத் தொடர்களின் வடிவில் வேறிடங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள திரவத்தன்மை உதவி, பரஸ்பர ஒழுங்குகள், ஏனைய வெளிமூலங்களிலிருந்தான திரவத்தன்மை உதவி, சொத்துக்களின் திரவத்தன்மை போன்றன தெளிவாக நிறுவப்படல் வேண்டும்.

**ஊ. வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவம்**

**1. முகாமைத்துவ மேற்பார்வை**

வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவமானது வங்கிகளின் சந்தை இடர்நேர்வு முகாமைத்துவத்தின் இன்றியமையாத கூறாக இருத்தல் வேண்டும். பணிப்பாளர் சபையானது வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள், நடைமுறைகள், மீளாய்வுப் பொறிமுறை மற்றும் அறிக்கையிடல் முறைமைகள் பற்றி தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

கொள்கைகளும் முன்மதியுடைய வரையறைகளும் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ. வர்த்தக ஏட்டிலுள்ள பிணையங்களின் வகைப்படுத்தலுக்காக அளவு, உயர்ந்தபட்ச முதிர்ச்சி, வைத்திருக்கப்படும் காலம், காலப்பகுதி நிலைமை வரையறை, இழப்புக்கள் நிறுத்தப்படல், தரமிடல் நியமங்கள் போன்றன தொடர்பாக தெளிவான கொள்கைகள்.

ஆ. வங்கியின் அடிப்படையில் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலுக்கான இடர்நேர்வில் பெறுமதிக்கான வெளிப்படுத்துகை வரையறைகள் (வெளிநாட்டுச் செலாவணி பெறுதிகள் மற்றும் பண்டங்கள் ஏதும் இருப்பின் அவை உட்பட)

இ. வர்த்தகப்படுத்தல் ஏடுகளுக்கு இழப்புக்களை ஏற்படுத்துகின்ற தாங்குதல் வரையறைகள்.

**2. இடர்நேர்வு முகாமைத்துவம்**

2.1 **இடர்நேர்வின் வடிவங்கள்** - வங்கிகளின் தேறிய வட்டி வருமானம் அல்லது தேறிய வட்டி இலாபம் வட்டி வீதங்களின் அசைவுளிலேயே தங்கியிருக்கிறது. காசுப்பாய்ச்சல்களில் (நிலையான வீதச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள்) அல்லது மீள் விலையிடல் திகதிகளில் (மிதக்கும் வீதச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள்) காணப்படும் ஏதேனும் பொருத்தப்பாடின்மைகள் வங்கியின் தேறிய வட்டி வீதத்தில் அல்லது தேறிய வட்டி இலாபத்தில் வெளிப்படுத்தப்படும். நிதியியல் இடையீட்டாளர்கள் என்ற வகையில் வங்கிகள் பல்வேறு வடிவங்களில் வட்டி வீத இடர்நேர்வுகளை எதிர்நோக்குகின்றன.

அ. இடைவெளி அல்லது பொருத்தப்பாடின்மை இடர்நேர்வு

ஆ. அடிப்படை இடர்நேர்வு

இ. பொதிந்துள்ள தேர்வு இடர்நேர்வு

ஈ. விளைவு வளையி இடர்நேர்வு

உ. விலை இடர்நேர்வு

ஊ. மீள் முதலீட்டு இடர்நேர்வு

எ. தேறிய வட்டி நிலை இடர்நேர்வு

2.2 **இடர்நேர்வினை அளவிடல்** - வட்டி வீத இடர்நேர்வினை கட்டுப்படுத்துவதற்கு முன்னதாக அதனை அடையாளம் செய்து அதன் அளவு பற்றி நிர்ணயித்தல் வேண்டும். இது தொடர்பாக வங்கிகள் வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுகின்ற முறைமையொன்றினை பின்பற்றுதல் வேண்டும். அது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ. இடைவெளி அல்லது பொருத்தப்பாடின்மை, அடிப்படை, பொதிந்துள்ள தேர்வுகள், விளைவு வளையி, விலைகள், மீள் முதலீடு மற்றும் வட்டி நிலைமை இடர்நேர்வு என்பனவற்றை உள்ளடக்கிய வட்டி வீத இடர்நேர்வுகளின் அனைத்து பருப்பொருள் மூலங்களையும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் சேர்ந்த வெளிப்படுத்துகைகள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான நிலைமைகள் என்பனவற்றை வலியுறுத்தல்.

ஆ. ஒவ்வொரு தனிப்பட்ட வட்டி வீத உணர்திறன் நிலைமைகளின் குறிப்பிட்ட பண்புகளைக் கவனத்தில் எடுத்தல்.

இ. வட்டி வீதங்களிலுள்ள உள்ளார்ந்த அசைவுகளின் முழு அளவினையும் விபரமாக உள்ளடக்குதல்.

ஈ. மரபு முறையிலான முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்விலிருந்தான (வருவாய்களின் வட்டி வீத உணர்திறனை அளவிடுவதற்கு) வீச்சு, காலப்பகுதி (மூலதனத்தின் வட்டி வீத உணர்திறனை மதிப்பிடுவதற்கு) தூண்டல் மற்றும் வீதத்தில் பெறுமதி வரையிலான வேறுபட்ட நுணுக்கங்களைப் பயன்படுத்துதல்.

உ. நாளாந்த அடிப்படையில் தற்போதைய பெறுமதி அடிப்படைப் புள்ளியிலும் மறுதலையாக வர்த்தகப்படுத்தல் ஏட்டிற்கான முன்மதியுடைய வரையறைகளிலும் பொருத்தம் செய்தல்.

ஊ. எஞ்சிய சொத்துப்பட்டியல் அசைவின் தாக்கத்தினை தீர்மானிப்பதற்காக இணைக்கின்ற அநுமானங்கள், தூண்டல் என்பனவற்றின் மூலமும் வர்த்தகப்படுத்துகின்ற சொத்துப்பட்டியலில் காணப்படும் பல இடர்நேர்வுக் காரணிகளில் ஏற்படும் தொடர்பான மாற்றங்கள் மூலமும் குறிப்பிட்ட அழுத்த சூழ்நிலைகள் பற்றிய சூழல் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல்.

எ. வங்கித்தொழில் ஏட்டிலுள்ள நாணய இடர்நேர்வுகளை அளவிடுவதற்கும் அதனை முகாமைப்படுத்துவதற்குமான பகுப்பாய்வுக் கருவியாக வீதத்தில் பெறுமதியினைக் கையாளுதல்.

2.3 **அளவிடுகின்ற நுணுக்கங்கள்**

அ. **முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வு** - வட்டி வீத இடர்நேர்வு வெளிப்படுத்துகையினைக் கணிப்பதற்கான இலகுவான பகுப்பாய்வு நுணுக்கமானது முதிர்ச்சி இடைவெளி பகுப்பாய்வுடன் ஆரம்பமாகின்றது. இது வட்டி வீத உணர்திற ன் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ஐந்தொகைக்கு வெளியேயான நிலைகளையும் அநேக முன் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட காலப்பிரிவிற்குள் அவற்றின் முதிர்ச்சிக்கு எஞ்சியிருக்கும் காலம் (நிலையான வீதம்) அல்லது அவற்றின் அடுத்த மீள் விலையிடலுக்கான எஞ்சிய காலம் என்பனவற்றிற்கிணங்க பிரிக்கிறது. இடைவெளிகளை பின்வரும் காலப்பிரிவுகளில் அடையாளம் காணமுடியும்.

i. ஒரு மாதம் வரை
ii. ஒரு மாதத்திற்கு மேல் 3 மாதங்கள் வரையில்
iii. 3 மாதங்களுக்கு மேல் 6 மாதங்கள் வரையில்
iv. 6 மாதங்களுக்கு மேல் 1 ஆண்டு வரையில்
v. 1 ஆண்டிற்கு மேல் 2 ஆண்டுகள் வரையில்
vi. 2 ஆண்டுகளுக்கு மேல் 3 ஆண்டுகள் வரையில்
vii. 3 ஆண்டுகளுக்கு மேல் 4 ஆண்டுகள் வரையில்
viii. 4 ஆண்டுகளுக்கு மேல் 5 ஆண்டுகள் வரையில்
ix. 5 ஆண்டுகளுக்கு மேல் 7 ஆண்டுகள் வரையில்
x. 7 ஆண்டுகளுக்கு மேல் 10 ஆண்டுகள் வரையில்
xi. 10 ஆண்டுகளுக்கு மேல் 15 ஆண்டுகள் வரையில்
xii. 15 ஆண்டுகளுக்கு மேல் 20 ஆண்டுகள் வரையில்
xiii. 20 ஆண்டுகளுக்கு மேல்
xiv. உணர்திறன் இல்லாதது

உணர்திறன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான நிலைகளின் வீதங்களினது பல்வேறுபட்ட விடயங்களை வட்டி வீதங்களுக்கான அவற்றின் உணர்திறனுக்கிணங்க வகைப்படுத்த முடியும். வட்டி வீத உணர்திறன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உணர்திறனுக்கான அறிக்கையிடும் படிவமொன்று இணைக்கப்பட்டிருக்கிறது (இணைப்பு 2).

ஆ. **கால இடைவெளிப் பகுப்பாய்வு** - முதிர்ச்சியை அல்லது மீள்விலையிடல் திகதிகளை பொருத்தம் செய்வதற்குப் பதிலாக சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் காலத்தினை பொருத்தம் செய்வது, வட்டி வீத இடர்நேர்வுகளுக்கு வெளிப்படுத்தப்படுவதிலிருந்து வங்கிகளின் பொருளாதாரப் பெறுமானங்களைப் பாதுகாப்பதற்கு தனியான இடைவெளி மாதிரியினை விட மிகப் பயனுறுதிமிக்கதாக விளங்கும்.

இ. **தூண்டல்** - வேறுபட்ட கால வலையமொன்றிற்குள் அறிவிக்கப்பட்ட வருவாய்கள்/ பொருளாதார பெறுமானங்கள் மீதான சந்தை வட்டி வீத மாறிகளின் தாக்கத்தினை அளவிடுவதற்கு தூண்டல் வங்கிகளுக்கிடையே மிகப் பிரபல்யமானதொரு கருவியாக விளங்குகின்றது. தூண்டல் நுணுக்கம் இடைவெளிப் பகுப்பாய்வினதும் வங்கியின் வட்டி வீத உணர்திறன் கணனி மாதிரிப்படுத்தல் மூலமான கால அணுகுமுறைகளினதும் மட்டுப்படுத்தப்பட்ட தன்மைகளை வெற்றி கொள்ள முயற்சிக்கின்றது.

எ. **அழுத்தப் பரீட்சிப்பு**

1. **முகாமைத்துவ மேற்பார்வை**

அ. பணிப்பாளர் சபை அல்லது சபையின் கீழ் அதிகாரங்களுடன் உருவாக்கப்பட்ட குழுவொன்று ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையின் ஒரு பகுதியாக ஒப்புதலளிக்கப்பட்ட “அழுத்தப் பரீட்சிப்புக் கொள்கை” உடனும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முறையியல்களுடனும் “அழுத்தப் பரீட்சிப்பு கட்டமைப்பு” ஒன்றினை நடைமுறைக்கிடல் வேண்டும்.

ஆ. பணிப்பாளர் சபை மற்றும் மூத்த முகாமைத்துவம் அழுத்தப் பரீட்சிப்பின் பெறுபேறுகளையும் அவற்றிற்குப் பக்கபலமாகவுள்ள முக்கியமான அநுமானங்களையும் கிரமமாக மீளாய்வு செய்தல் வேண்டும்.

இ. தீவிரமான முறையியல் சார்ந்த இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நன்கு நிறுவப்பட்ட அணுகுமுறையொன்றினைக் கருத்திற் கொண்டு, இறுதியில் காணப்படக் கூடிய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு பொருத்தமானதொரு கடந்த கால விடயங்களை திரும்பிப் பார்க்கும் பொருத்தமான பொறிமுறையொன்றினை பணிப்பாளர் சபை அல்லது மூத்த முகாமைத்துவம் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

1.1 அழுத்தப் பரீட்சிப்புக் கொள்கை பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ. கால இடைவெளியும் வங்கியின் சொத்துப்பட்டியலில் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கியமான இடர்நேர்வுக் காரணிகளை அடையாளப்படுத்துவதற்கான நடைமுறைகளும் வலியுறுத்தப்படுவதற்கான தேவை.

ஆ. அழுத்தப் பரீட்சிப்புக்களை நிருமாணிப்பதற்கான முறையியல்

இ. அழுத்தத்தினை தாங்குவதற்கான வரையறையை ஏற்படுத்துவதற்கான நடைமுறைகள்

ஈ. அழுத்த இழப்பு வரையறைகளை கண்காணிக்கின்ற செயன்முறைகள்

உ. அழுத்தப் பரீட்சிப்பினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு பல்வேறுபட்ட இடர்நேர்வு மட்டங்களில் எடுக்கப்பட வேண்டிய அவசியமான மீட்பு/ விரைந்த நடவடிக்கைகள்

ஊ. மீட்பு/விரைவு நடவடிக்கைகள் உரிய நேரத்தில் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரத்தினை வழங்குதல்.

1.2 இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆட்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள் நன்கு உருவாக்கப்பட்ட நிறுவன ரீதியான அமைப்பினால் வரைவிலக்கணப்படுத்தப்பட வேண்டியதுடன் சுதந்திரமானதாகவும் இருத்தல் வேண்டும்.

1.3 மூத்த முகாமைத்துவத்தினால் எடுக்கப்படும் குறிப்பிட்ட கடினமான நிலைமைகளைத் தவிர்ப்பதற்குத் தேவையான வழிமுறைகளை எடுப்பதற்கான தகவல்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு காத்திரமானதொரு முகாமைத்துவ தகவல் முறைமையொன்று அவசியமாகும்.

**2. அழுத்தப் பரீட்சிப்பிற்கான கால இடைவெளி**

வங்கிகள் அழுத்தப் பரீட்சிப்புக்களை அவற்றின் வியாபாரத் தேவைப்பாடுகள், தொடர்பான தன்மைகள் மற்றும் செலவு என்பனவற்றின் உத்தரவிற்கமைய வேறுபட்ட கால இடைவெளியில் மேற்கொள்ள முடியும். பொதுவாக, சந்தை உணர்திறன் சொத்துப்பட்டியல் மீதான அழுத்தப் பரீட்சிப்புக்கள் குறுகிய கால இடைவெளிகளில் மேற்கொள்ளப்படல் வேண்டும் (உ-ம்: நாளாந்தம், வாராந்தம்). இவை சந்தைப்படுத்தத்தக்க பிணையங்களிலுள்ள வர்த்தகப்படுத்தப்படுகின்ற சொத்துப்பட்டியல், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் வட்டி வீத வெளிப்படுத்துகைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். குறைந்த தளம்பல் தன்மைகளைக் கொண்ட மற்றைய சொத்துப்பட்டியல்களின் அழுத்தப் பரீட்சிப்புக்களை நீண்ட இடைவெளிகளில் மேற்கொள்ள முடியும் (உ-ம்: மாதாந்தம், காலாண்டு). மேலும், ஏதேனும் விசேட சூழ்நிலைகள் காணப்படும் வேளையில் அவ்வப்போதைய அழுத்தப் பரீட்சிப்புக்கள் தேவைப்படுகின்றன.

**3. அழுத்தப் பரீட்சிப்புக்களின் செயற்பரப்பு**

அழுத்தப் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படக் கூடியதாகவும் வியாபார பிரிவு மட்டத்திலும் மற்றும் ஒன்று சேர்க்கப்பட்ட குழும அடிப்படையிலும் வங்கி மேற்கொள்ளும் பருப்பொருள் இடர்நேர்வுகளின் முழு வீச்சிற்கும் மேற்கொள்ளப்படக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அழுத்தப் பரீட்சிப்புக்களை வட்டி வீதங்கள், பங்கு மூலதனம், திரவத்தன்மை, வெளிநாட்டுச் செலாவணி, கொடுகடன் மற்றும் சந்தைச் சாதனங்கள் என்பனவற்றிற்காகவும் பொதுவாக மேற்கொள்ள முடியும். மேலும், தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கும் அழுத்தப் பரீட்சிப்புக்களை அறிமுகப்படுத்துவது முக்கியமானதாகக் காணப்படுகின்றது. அழுத்தப் பரீட்சிப்பிற்கு பயன்படுத்தக் கூடிய மூன்று வேறுபட்ட அநுமானிக்கத்தக்க சூழ்நிலை காணப்படுகின்றது:

அ. முக்கிய மட்டத்திலான அதிர்வு: இது அனைத்து இடர்நேர்வுக் காரணிகளுடனான பாரிய அதிர்வுகளுடன் தொடர்புபட்டிருப்பதுடன் ஒவ்வொரு இடர்நேர்வுக் காரணிக்கும் தனித்தனியாக விரைவிலக்கணம் செய்யப்படுகின்றது.

ஆ. மிதமான மட்டத்திலான அதிர்வுகள்: இது நடுத்தர மட்ட அதிர்வுகளுடன் தொடர்புபட்டிருப்பதுடன் ஒவ்வொரு இடர்நேர்வுக் காரணிக்கும் தனித் தனியாக வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது.

இ. சிறிய மட்டத்திலான அதிர்வுகள்: இது இடர்நேர்வுக் காரணிகளுடனான சிறிய அதிர்வுகளுடன் தொடர்புபட்டிருக்கிறது.

**4. முறையியலும் அதிர்வுகளின் அளவும்**

**4.1 கொடுகடன் இடர்நேர்வு**

கொடுகடன் இடர்நேர்விற்கான அழுத்தப் பரீட்சிப்பு மூலதனப் போதுமை விகிதத்தின் மீதான வங்கியின் செயற்படாக் கடன்களின் மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் தாக்கத்தினை மதிப்பிடுகிறது. இது மூன்று வகையான அதிர்வுகளுடன் தொடர்புபடுகிறது.

அ. முதல் வகை செயற்படாக் கடன்களிலும் தொடர்பான ஒதுக்கங்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புடன் தொடர்பானது.

ஆ. வகை இரண்டு செயற்படாக் கடன் வகைகளில் ஏற்பட்ட எதிர்க்கணிய பெயர்ச்சியும் அதன் மூலம் தொடர்பான ஒதுக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்ததாகும்.

இ. வகை மூன்று ஈடு வைக்கப்பட்ட பிணையங்களின் நிர்ப்பந்திக்கப்பட்ட விற்பனைப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் சேர்ந்ததாகும்.

**4.2 திரவத்தன்மை இடர்நேர்வு**

திரவத்தன்மை இடர்நேர்விற்கான அழுத்தப் பரீட்சிப்பு, திரவப் பொறுப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியை நோக்கிய வங்கிகளின் மீளெழுச்சியை மதிப்பிடுகிறது. “திரவப் பொறுப்புக்களுக்கான திரவச் சொத்துக்கள்” விகிதம் திரவச் சொத்துக்களை திரவப் பொறுப்புக்களினால் வகுப்பதன் மூலம் பெறப்படுகின்ற அதிர்வுகளுக்கு முன்னும் பின்னும் கணிக்கப்படுதல் வேண்டும். அவை வங்கியுடனான காசு மற்றும் நிலுவைகள், அழைப்புப் பண கடன் வழங்கல், மீள்கொள்வனவின் கீழான கடன் வழங்கல் மற்றும் அரச பிணையங்களிலான முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. திரவச் சொத்துக்கள் வைப்புக்களையும் கடன்பாடுகளையும் உள்ளடக்குகின்றன.

**4.3 பங்கு மூலதன விலை அதிர்வுகள்**

பங்கு மூலதன விலை இடர்நேர்விற்கான அழுத்தப் பரீட்சிப்பு பங்குச் சந்தைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட வீழ்ச்சியின் தாக்கத்தினை மதிப்பிடுகின்றது. விளைவிக்கப்பட்ட இழப்பின் தாக்கம், பங்குகள், சமவாய நிதிகள் போன்றன உட்பட பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட ஐந்தொகையிலுள்ள மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான பிணையங்கள் அனைத்தினதும் தற்போதைய சந்தைப் பெறுமதியின் மீதான அதிர்வுகளின் பின்னர் மதிப்பிட வேண்டியதுடன் இது மூலதனப் போதுமை விகிதத்தின் நியதிகளில் கணிக்கப்படுதலும் வேண்டும்.

**4.4 செலாவணி வீத இடர்நேர்வு**

செலாவணி வீதத்திற்கான அழுத்தப் பரீட்சிப்பு பங்கு மூலதனப் பெறுமதி தொடர்பாக செலாவணி வீதத்தில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கத்தினை மதிப்பிடுகின்றது. நேரடி வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வினை மாதிரிப்படுத்துவதற்கு ஐந்தொகையிலுள்ளதும் ஐந்தொகைக்கு வெளியேயுள்ளதுமான வெளிப்படுத்துகைகள் உட்பட வங்கியின் பொதுவான தேறிய திறந்த நிலைக்கு மாத்திரம் மோசமான அதிர்வு கொடுக்கப்பட வேண்டும். பொதுவான தேறிய திறந்த நிலைமையானது, தேறிய குறுங்கால நிலைகளின் தொகை அல்லது நீண்டகால நிலைகளின் தொகையினது கூட்டுத்தொகையில் இதில் அவற்றின் அடையாளத்தினை கருத்திற் கொள்ளாது எது பெரியதோ அதன் மூலம் அளவிடப்படுகிறது. தொடர்பான அதிர்வுகளின் தாக்கம் மூலதனப் போதுமை விகிதத்தின் நியதிகளில் அளவிடப்படுதல் வேண்டும். திருத்தியமைக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதமானது வங்கியின் இடர்நிறையேற்றப்பட்ட சொத்துக்களிலிருந்து ஏற்படும் மொத்த இழப்பிற்கு சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் கணிக்கப்படுதல் வேண்டும்.

**4.5 வட்டி வீத இடர்நேர்வு**

ஐந்தொகை மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயுள்ள நிலைகளின் பெறுமதி வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக எதிர்மறையாக பாதிக்கப்படக்கூடுமாகையால் வட்டி வீத இடர்நேர்வு முக்கியமானதாகவுள்ளது. வட்டி வீதத்தின் மோசமான அசைவுகளின் காரணமாக நிறுவனமொன்று பாதிக்கப்படுகின்ற தன்மையினை கால இடைவெளி பகுப்பாய்வினைப் பயன்படுத்திக் கணிக்க முடியும். வட்டி வீத அழுத்தப் பரீட்சிப்புக்களை மேற்கொள்கையில் வங்கிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

அ. பங்கு மூலதனத்தின் சந்தைப் பெறுமதியினைக் காண்பதற்கு வங்கியின் ஐந்தொகையிலுள்ள அனைத்து வட்டி உணர்திறன் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் சந்தைப் பெறுமதியினை மதிப்பிடுதல்.

ஆ. ஐந்தொகைச் சொத்துப்பட்டியலிலுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒவ்வொரு வகை வகுப்பினதும் காலப்பகுதியினை கணித்தல்.

இ. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிறையேற்றப்பட்ட சராசரிக் காலப்பகுதியின் கூட்டுத்தொகையினைக் காணுதல்.

ஈ. பொறுப்புக்களின் காலப்பகுதியினது கூட்டுத் தொகையினைச் சொத்துக்களின் அதே கூட்டுத்தொகையிலிருந்து கழிப்பதன் மூலம் கால இடைவெளியினைக் கணித்தல்.

உ. ஐந்தொகை நிலையின் மீது வட்டி வீத மாற்றங்களின் காரணமாக பங்கு மூலதனத்தின் மீது ஏற்படுகின்ற பொருளாதார பெறுமதிகளின் மாற்றங்களை மூன்று வட்டி வீத மாற்றங்களுடன் சேர்த்து மதிப்பிடல்.

ஊ. மூன்று வேறுபட்ட வட்டி வீத மாற்றங்கள் அதாவது 1 சதவீதம், 2 சதவீதம் மற்றும் 5 சதவீதத்தில் ஏற்படுகின்றன என்ற எடுகோளின் கீழ் ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்களின் மீது ஏற்படுகின்ற மிகை/(குறையினை) கணித்தல்.

எ. மூலதனப் போதுமை விகிதத்தின் மீதான பங்கு மூலதனத்தின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் தேறிய மாற்றத்தின் (ஐந்தொகையிலும் ஐந்தொகைக்கு வெளியேயுள்ளதுமான இரண்டு விடயங்களும்) தாக்கத்தினை மதிப்பிடல்.

ஏ. சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதி, நிலவுகின்ற வட்டி வீதங்களில் அதன் தற்போதைய பெறுமதியினை கழிவிடுவதன் மூலம் மதிப்பிடப்படல் வேண்டும். சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிநின்ற நிலுவைகள் அவற்றின் தொடர்பான முதிர்ச்சி அல்லது மீள்விலையிடல் காலம், இதில் எது முதலாவதோ அதனுடன் சேர்த்து கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**4.6 அழுத்தப் பரீட்சிப்பு பெறுபேறுகளின் விளக்கம்**

அ. அழுத்தப் பரீட்சிப்பு பெறுபேறுகளின் விளக்கத்திற்கு முன்னர், அழுத்தப் பரீட்சிப்புக்களை வடிவமைக்கின்ற இடர்நேர்வு முகாமையாளர்களின் தீர்ப்புக்கள் மற்றும் அனுபவங்களின் செல்வாக்கிற்கு அழுத்தப் பரீட்சிப்புக்கள் உட்படுவதனால் அதன் வரையறைகள் பற்றி வங்கிகள் அறிந்திருப்பது முக்கியமானதாகும். ஆகவே, அழுத்தப் பரீட்சிப்பின் காத்திரமான தன்மை, வங்கிகள் அவற்றின் முக்கிய இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு கொள்வதிலும் அவர்கள் சரியான அழுத்தப் பரீட்சிப்பு/ அழுத்த சூழல்களை தெரிவு செய்வதிலுமே தங்கியிருக்கும்.

ஆ. மூத்த முகாமைத்துவம் பல்வேறுபட்ட அழுத்தப் பரீட்சிப்புக்களின் பெறுபேறுகளை மீளாய்வு செய்து பணிப்பாளர் சபைக்கு அறிக்கையளித்தல் வேண்டும். மேற்கொள்ளப்பட்ட உணர்திறன் பரீட்சிப்புக்கள் மற்றும் சூழல் பகுப்பாய்வு என்பன ஒவ்வொன்றினதும் பெறுபேறுகளை ஆவணப்படுத்துவதும் அப்பரீட்சிப்புக்கள் மற்றும் பகுப்பாய்வுகளின் ஒரு பகுதியாக பெறுபேறுகளின் ஒன்று சேர்ந்த விடயங்கள் உட்பட முக்கியமான அநுமானங்களை ஆவணப்படுத்துவதும் முக்கியமானதாகும். இவற்றை, கொள்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு குறிப்பிடத்தக்க காலப்பகுதிக்கு பாதுகாத்து வைத்திருத்தல் வேண்டும்.

**4.7 மீளாய்வும் நாளது வரை பூரணப்படுத்தலும்**

அ. வங்கியின் அழுத்தப் பரீட்சிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பயனுறு தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு கிரமமான மீளாய்வும் நாளது வரையான பூரணப்படுத்தலும் முக்கியமானவையாகும்.

ஆ. அத்தகைய மீளாய்வுகளை குறைந்தபட்சம் ஆண்டிற்கொரு முறையேனும் அல்லது சொத்துப்பட்டியல் சூழ்நிலை மாற்றங்கள் குறிப்பிடத்தக்களவில் இருக்கின்றவிடத்து அடிக்கடியும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மீளாய்வு செயன்முறையில் பின்வருவன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

i. ஒருங்கிணைந்த முகாமைத்துவத் தகவல் முறைமை

ii. பயன்படுத்தப்பட்ட தரவின் பூரண தன்மை மற்றும் துல்லியம்

iii. தரவு மூலங்களின் நிலையான தன்மை, நேரத்திற்கு கிடைக்கும் தன்மை, நம்பகத் தன்மை

iv. அழுத்தப் பரீட்சிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒப்புதல் செயன்முறை

v. இடர்நேர்வு முகாமைத்துவத்திற்குள்ளான ஒருங்கிணைக்கப்பட்ட அழுத்தப் பரீட்சிப்பு

vi. அழுத்தப் பரீட்சிப்பு பெறுபேறுகளின் தெளிவுபடுத்தல்

**ஏ. வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள்**

**1. கோட்பாடுகள்**

1.1 வெளிப்படுத்துகை செயன்முறைகள் தொடர்பாக எத்தகைய வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றியும் உள்ளகக் கட்டுப்பாடுகள் பற்றியும் வங்கியின் அணுகுமுறையினை வலியுறுத்துகின்ற பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முறைசார்ந்த வெளிப்படுத்துகைக் கொள்கையொன்றினை வங்கிகள் பின்பற்றுதல் வேண்டும்.

1.2 செல்லுபடியாகும் தன்மை மற்றும் அவற்றின் கால இடைவெளி என்பன உட்பட வங்கிகள் அவற்றின் வெளிப்படுத்துகைகளின் பொருத்தமான தன்மை பற்றி மதிப்பிடுவதற்கான செயன்முறைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

1.3 சந்தை ஒழுங்குகளின் வகிபாகத்தினை உயர்த்தும் பொருட்டு வங்கிகள் அவற்றின் வெளிப்படுத்துகை நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக பின்வரும் விதிகளைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

அ. கணியம்சார் மற்றும் தரம்சார் வெளிப்படுத்துகைகளிடையே சமநிலையொன்றினை ஏற்படுத்துதல் - வெளிப்படுத்துகைகள் வங்கியின் சொந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளுடன் இணங்கிச் செல்வதாக இருத்தல் வேண்டும்.

ஆ. வங்கிகள் உள்ளக கால வெளிப்படுத்துகைகள் பற்றிய தகவல்களை குறிப்பாக உயர், மத்திய மற்றும் தாழ்ந்த படிவங்களில் வெளிப்படுத்துவதற்கு முயற்சித்தல் வேண்டும். இது உரிமம் பெற்ற வங்கிகளின் இடர்நேர்வு தோற்றங்களுக்கு தரவுகளுடன் மாத்திரம் முடிவடைகின்ற காலப்பகுதியிலும் பார்க்க மிக அர்த்தமுள்ள தோற்றமொன்றினை வழங்கும்.

1.4 பருப்பொருள் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட தொடர்பான வெளிப்படுத்துகைகளை தீர்மானித்தல் வேண்டும்.

1.5 வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள் இங்கே காட்டப்பட்டிருக்கும் அறிக்கையிடல் முறைமைகள் மற்றும் வரைவிலக்கணங்கள் போன்ற தரம்சார் வெளிப்படுத்தல்களை குறைந்தபட்சம் ஆண்டிற்கு இரு தடவையாவது மேற்கொள்ளல் வேண்டும்.

**2. வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள்**

**2.1 இடர்நேர்வு வெளிப்படுத்துகை மற்றும் மதிப்பீடு**

**அ. பொதுத் தரம்சார் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடு**

தனித்தனியான இடர்நேர்வு துறைகளுக்காக அதாவது கொடுகடன் சந்தை, தொழிற்பாடு, திரவத்தன்மை என்பனவற்றிற்காக உரிமம் பெற்ற வங்கிகள் பின்வருவன உட்பட அவற்றின் இடர்நேர்வு முகாமைத்துவ குறிக்கோள்களையும் விபரித்தல் வேண்டும்.

- உபாயங்கள் மற்றும் கொள்கைகள்
- தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாட்டின் அமைப்பு மற்றும் தன்மை
- இடர்நேர்வு அறிக்கையிடல் அத்துடன்/ அல்லது முகாமைத்துவ முறைமையின் செயற்பரப்பும் தன்மையும்
- பாதுகாப்பிடல்/ தணித்தலின் தொடர்ச்சியான பயனுறு தன்மையினைக் கண்காணிப்பதற்காக பாதுகாப்பிடல் அத்துடன்/ அல்லது தணித்தல் இடர்நேர்வு உபாயங்கள் மற்றும் செயன்முறைகளுக்கான கொள்கைகள்

## அட்டவணை 1

## கொடுகடன் இடர்நேர்வு - பொதுவான வெளிப்படுத்துகைகள்

| | | |
|---|---|---|
| தரம்சார் வெளிப்படுத்துகைகள் | (அ) | நாள் கடந்தவற்றிற்கான வரைவிலக்கணமும் மற்றும் பாதிக்கப்பட்டமையும் (எல்கேஏஎஸ் 32 மற்றும் 39 நோக்கங்களுக்காக). |
| | (ஆ) | குறித்துரைக்கப்பட்ட மற்றும் பொதுவான கடன் இழப்பிற்கான ஒதுக்கங்கள் மற்றும் புள்ளிவிபர முறைகளுக்காக பின்பற்றப்பட்ட அணுகுமுறைகளின் விபரணம். |
| | (இ) | வங்கியின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைப்படுத்துவக் கொள்கை பற்றிய கலந்துரையாடல். |
| | (ஈ) | கொள்கைகள் மற்றும் செயன்முறைகளுக்கானவையாக இருப்பதுடன் ஐந்தொகையிலுள்ள மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயுள்ளவற்றின் தேறிய தன்மையினை வங்கி பயன்படுத்தும் அளவினை எடுத்துக்காட்டுவதுமாகும். |
| | (உ) | பிணையங்களின் மதிப்பிடல் மற்றும் முகாமைத்துவத்திற்கான கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் |
| | (ஊ) | வங்கியினால் எடுக்கப்பட்ட பிணையங்களின் முக்கிய வகைகளினது விபரணங்கள். |
| | (எ) | உத்தரவாதி/ கொடுகடன் பெறுதி இணைத்தரப்பினரின் முக்கிய வகைகளும் அவர்களின் நம்பகத் தன்மைகளும். |
| | (ஏ) | மேற்கொள்ளப்பட்ட தணித்தல்களுக்குள் இடர்நேர்வு திரள்வது பற்றிய (சந்தை அல்லது கொடுகடன்) தகவல்கள். |
| கணியம்சார் வெளிப்படுத்துகைகள் | (அ) | குறிப்பிட்ட காலப்பகுதியில் மொத்த கொடுகடன் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளினதும் சராசரி மொத்த வெளிப்படுத்துகைகளினதும் கூட்டுத்தொகையினை கொடுகடன் வெளிப்படுத்துகையின் முக்கிய வகைகளின்படி பிரித்தல். |
| | (ஆ) | வெளிப்படுத்துகைகளின் புவியியல் ரீதியான பரம்பல், கொடுகடன் வெளிப்படுத்துகை வகைகளின்படி குறிப்பிடத்தக்க பிரதேசங்களினை வகுத்தல். |
| | (இ) | கைத்தொழில் அல்லது இணைக்கிணைத் தரப்பு வகையினர் பங்கீடு, கொடுகடன் வெளிப்படுத்துகையின் முக்கிய வகையின்படி வகைப்படுத்தல். |
| | (ஈ) | கொடுகடன் வெளிப்படுத்துகையின் முக்கிய வகைகளின்படி மொத்த கொடுகடன் சொத்துப்பட்டியலின் எஞ்சிய ஒப்பந்த ரீதியான முதிர்ச்சியை வகைப்படுத்தல். |
| | (உ) | முக்கிய தொழில் துறையின்படி அல்லது இணைக்கிணை நிதிய வகையின்படி:<br>- காலங் கடந்த கடன்களின் தொகையும் கிடைக்கத்தக்கதாக இருப்பின் நலிவடைந்த கடன்களும் தனித்தனியாக தரப்பட்டிருக்கின்றன,<br>- குறித்துரைக்கப்பட்ட மற்றும் பொதுவான கடன் இழப்பு ஒதுக்கங்கள், மற்றும்<br>- அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் இழப்பு ஒதுக்கங்கள் மற்றும் இல்லாமல் செய்யப்பட்ட கட்டணங்களும். |
| | (ஊ) | ஒவ்வொரு புவியியல் பிரதேசங்கள் தொடர்பாகவும் குறித்துரைக்கப்பட்ட மற்றும் பொதுவான கடன் இழப்பு ஒதுக்கங்களின் தொகை உள்ளிட்ட குறிப்பிட்ட புவியியல் பிரதேசங்களினால் வகைப்படுத்தப்பட்டவாறு நலிவடைந்த கடன்களை தனித்தனியாக தருதல். |
| | (எ) | கடன் இழப்புக்கள்/ பழுதுறலுக்காக ஒதுக்கங்களில் செய்யப்பட்ட மாற்றங்களின் மீள் இணக்கம். |

## அட்டவணை 2

## சந்தை இடர்நேர்வு - பொதுவான வெளிப்படுத்துகைகள்

| | | |
|---|---|---|
| தரம்சார் வெளிப்படுத்துகைகள் | (அ) | மேலே பந்தி 2.1இன் (அ)இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு பொதுவான தரம்சார் வெளிப்படுத்துகை தேவைப்பாடு |
| | (ஆ) | மூலதன இலாபங்கள் எதிர்பார்க்கப்படுகின்ற உடமைகளுக்கும் உணவு முறை மற்றும் உபாயக் காரணங்களுக்கானவை உட்பட ஏனைய குறிக்கோள்களின் கீழ் எடுக்கப்பட்ட உடமைகளுக்கிடையிலான வேறுபாடுகள். |
| | (இ) | வங்கித்தொழில் ஏட்டில் வைக்கப்பட்டுள்ள பங்குடமைகளின் பெறுமதி மற்றும் கணக்கிடல் என்பனவற்றை உள்ளடக்கிய முக்கிய கொள்கைகள் பற்றி கலந்துரையாடல்.<br>இது இந்நடைமுறைகளிலுள்ள பெறுமதியிடலையும் அதேபோன்று குறிப்பிடத்தக்க மாற்றங்களையும் பாதிக்கின்ற முக்கிய அநுமானங்கள் மற்றும் நடைமுறைகள் உட்பட பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நுணுக்கங்கள் மற்றும் மதிப்பீட்டு முறையியல் என்பனவற்றை உள்ளடக்குகிறது. |
| கணியம்சார் வெளிப்படுத்துகைகள் | (அ) | வட்டி வீத உணர்திறன் இடைவெளி உட்பட வட்டி வீத இடர்நேர்வு. இணைப்பு 1 மற்றும் 2இல் தரப்பட்டுள்ள படிவத்திலுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வு. |
| | (ஆ) | பங்கு மூலதன நிலை பற்றிய பகுப்பாய்வு -<br>• முதலீடுகளின் ஐந்தொகையில் வெளிப்படுத்தப்பட்ட பெறுமதி அதேபோன்று அம்முதலீடுகளின் சந்தைப் பெறுமதி; விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பிணையங்களை பங்கு விலைகள், சந்தை விலைகளிலிருந்து நியாயமானளவிற்கு வேறுபடுமிடத்து பகிரங்கமாக விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பங்குப் பெறுமதியுடன் ஒப்பிடுதல்.<br>• பின்வருமாறு வகைப்படுத்தக்கூடிய தொகை உட்பட முதலீடுகளின் வகையும் தன்மையும்:<br>- பகிரங்கமாக விற்கப்பட்டது; அத்துடன்<br>- தனிப்பட்ட முறையில் வைத்திருக்கப்பட்டவை<br>• அறிக்கையிடும் காலப்பகுதியில் விற்பனை மற்றும் ஒடுக்குதல் என்பனவற்றிலிருந்து தோன்றிய ஒன்று சேர்ந்த இலாபம்/ (நட்டம்).<br>• தேறல் செய்யப்படாத மொத்த இலாபம்/ (நட்டம்).<br>• மொத்தத்திறன் மீள்மதிப்பீட்டு இலாபம்/ (நட்டம்).<br>• அடுக்கு 1 அத்துடன்/ அல்லது அடுக்கு 2 மூலதனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மேலேயுள்ள ஏதேனும் தொகை. |
| | (இ) | வெளிநாட்டுச் செலாவணி நிலையின் கூறுக்கள் (இணைப்பு 3) வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வு என்பனவற்றை உள்ளடக்கிய வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு. |
| | (ஈ) | பண்ட இடர்நேர்வு. |

## அட்டவணை 3

## தொழிற்பாட்டு ரீதியான இடர்நேர்வு - பொதுவான வெளிப்படுத்துகைகள்

| | | |
|---|---|---|
| தரம்சார் வெளிப்படுத்துகைகள் | (அ) | பொதுவான தரம்சார் வெளிப்படுத்துகை தேவைப்பாடு மேலே பந்தி 2.1(அ)இல் விபரிக்கப்பட்டுள்ளது. |
| | (ஆ) | தொழிற்பாட்டு இடர்நேர்வினைத் தணிக்கும் நோக்கத்திற்காக காப்புறுதியைப் பயன்படுத்துவது பற்றிய விபரங்கள். |
| | (இ) | தரப்பினருடன் சேர்ந்து வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணிகளின் நடவடிக்கைகள் மற்றும் அத்தகைய பணிகளுக்கான கொடுப்பனவுகளுக்கான அடிப்படை என்பனவற்றின் விபரங்கள். |
| | (ஈ) | ஏதாவது அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் பொருத்தமான தகவல் தொழில்நுட்ப முதலீட்டுத் தகவல்கள் மற்றும் ஏனைய இடர்நேர்வினை குறிக்கும் நுட்பங்கள். |
| | (உ) | மூன்றாந்தரப்பு பணி வழங்குவோரை நெருக்கமாக கண்காணிக்கும் பரீட்சிப்புடன் தொடர்பான விபரங்கள். |
| | (ஊ) | பழுதடையும் சூழ்நிலைகளைக் கையாள்வதற்காக நடைமுறைக்கிடப்பட்டுள்ள எதிர்பாராத நிகழ்வுத் திட்டத்தினது விபரங்கள். |
| கணியம்சார் வெளிப்படுத்துகைகள் | (அ) | முக்கிய தொழிற்பாடுகள்: அறிக்கையிடும் காலப்பகுதியில் அல்லது பழுதுபடல் நடவடிக்கைகளின் காரணமாக வங்கிக்கு ஏற்பட்ட முறைமைகள் அல்லது மனித, பழுதடைதல் மற்றும் நிதியியல் இழப்புக்கள் போன்றன. |

## அட்டவணை 4

## திரவத்தன்மை இடர்நேர்வு - பொதுவான வெளிப்படுத்துகைகள்

| | |
|---|---|
| தரம்சார் வெளிப்படுத்துகைகள் | (அ) பொதுவான தரம்சார் வெளிப்படுத்துகை தேவைப்பாடு மேலே பந்தி 2.1(அ)இல் விபரிக்கப்பட்டுள்ளது.<br><br>(ஆ) எதிர்பாராத திரவத்தன்மை இடர்ப்பாடுகளை தீர்ப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட எதிர்பாராத திரவத்தன்மை திட்டத்தின் விபரங்கள். |
| கணியம்சார் வெளிப்படுத்துகைகள் | (அ) பின்வரும் குறிகாட்டிகளில் காணப்படும் போக்குகள்:<br><br>- மொத்தச் சொத்துக்களுக்கான தேறிய கடன்கள்.<br>- வாடிக்கையாளர் வைப்புக்களுக்கான கடன்கள்.<br>- குறுங்கால வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்கள்.<br>- உழைக்கும் சொத்துக்கள் (கழிக்குக) தற்காலிக முதலீடுகளுக்கான பாரிய பொறுப்புக்கள் (கழிக்குக) தற்காலிக முதலீடுகள்.<br>- மொத்தச் சொத்துக்களுக்கான கொள்வனவு செய்யப்பட்ட நிதியம்.<br>- மொத்த கடன்களுக்கான கடப்பாடுகள் (வரைவிலக்கணங்களுக்கு பின்னிணைப்பின் பிரிவு 1.4 இனை தயவுசெய்து பார்க்கவும்).<br><br>(ஆ) இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள படிவத்திலுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிகள். |

**இணைப்பு 1**

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சி
(நாணயம் ......)*

(....... மில்லியன்)

| கணக்குகளின் தலைப்பு | | 1 மாதம் | 1 - 3 | 3 - 6 | 6 - 9 | 9 - 12 | 1 - 3 | 3 - 5 | 5 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொடர் | விடயம் | வரை | மாதங்கள் | மாதங்கள் | மாதங்கள் | மாதங்கள் | மாதங்கள் | மாதங்கள் | மாதங்களுக்கு மேல் |
| அ. | உட்பாய்ச்சல் | | | | | | | | |
| 1. | கையிலுள்ள பணம் | | | | | | | | |
| 2. | இலங்கை மத்திய வங்கியுடனான வைப்புக்கள் | | | | | | | | |
| 3. | தலைமை அலுவலகம், இணைந்த மற்றும் சொந்த கிளைகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | | | | | | | | |
| 4. | ஏனைய வங்கிகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | | | | | | | | |
| 5. | முதலீடுகள் (ஒதுக்கங்கள் நீங்கலாக) | | | | | | | | |
| 6. | செலாவணி உண்டியல் | | | | | | | | |
| 7. | மேலதிகப் பற்றுக்கள் | | | | | | | | |
| 8. | கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | | | | | | | |
| 9. | செயற்படாக் கடன்கள் | | | | | | | | |
| 10. | கிளைகளுக்கிடையிலான தேறிய கொடுக்கல்வாங்கல்கள் | | | | | | | | |
| 11. | ஏனைய சொத்துக்கள் | | | | | | | | |
| 12. | நிறுவனங்களிலிருந்தான கடப்பாடு தெரிவிக்கப்பட்ட தொடர் கொடுகடன்கள் | | | | | | | | |
| 13. | ஏனையவை - தயவுசெய்து குறிப்பிடவும் | | | | | | | | |
| | **மொத்தம் (அ)** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** |
| ஆ. | வெளிப்பாய்ச்சல்கள் | | | | | | | | |
| 1. | கேள்வி வைப்புக்கள் | | | | | | | | |
| 2. | சேமிப்பு வைப்புக்கள் | | | | | | | | |
| 3. | தலைமை அலுவலகம், இணைந்த சொந்தக் கிளைகளுக்கு வரவேண்டிய நிலுவைகள் | | | | | | | | |
| 4. | மற்றைய கிளைகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | | | | | | | | |
| 5. | தவணை வைப்புக்கள் | | | | | | | | |
| 6. | வைப்பு, கடன்பாட்டு மற்றும் முறிச் சான்றிதழ்கள் | | | | | | | | |
| 7. | கிளைகளுக்கிடையிலான தேறிய கொடுக்கல்வாங்கல்கள் | | | | | | | | |
| 8. | கொடுபடத்தக்க பட்டியல்கள் | | | | | | | | |
| 9. | கொடுகடத்தக்க வட்டி | | | | | | | | |
| 10. | முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பெறுமதியில் கடன் இழப்புக்கள் மற்றும் தேய்மானங்களுக்கானவை தவிர்ந்த ஒதுக்கங்கள் | | | | | | | | |
| 11. | ஏனைய பொறுப்புக்கள் | | | | | | | | |
| 12. | நிறுவனங்களுக்கு கடப்பாடு தெரிவிக்கப்பட்ட கொடுகடன் தொடர்கள் | | | | | | | | |
| 13. | மேலதிகப் பற்றுக்கள், கடன்கள் மற்றும் முற்பணங்களின் பயன்படுத்தப்படாத பங்கு | | | | | | | | |
| 14. | நாணயக் கடிதம்/ உத்தரவாதங்கள்/ ஏற்றுக்கொள்ளல்கள் | | | | | | | | |
| 15. | மீள்கொள்வனவு/ மீள்கழிவு செய்யப்பட்ட உண்டியல்/ பரஸ்பர மாற்றங்கள்/ முன்னோக்கிய ஒப்பந்தங்கள் | | | | | | | | |
| 16. | ஏனையவை - தயவுசெய்து குறிப்பிடவும் | | | | | | | | |
| | **மொத்தம் (ஆ)** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** |
| | **இடைவெளி = (அ) - (ஆ)** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** |
| | **ஒன்றுசேர்ந்த இடைவெளி** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** | **xx** |
| | **ஒன்றுசேர்ந்த பொறுப்புக்கள்** | xx | xx | xx | xx | xx | xx | xx | xx |
| | **ஒன்றுசேர்ந்த பொறுப்புக்களின் %மாக ஒன்றுசேர்ந்த இடைவெளி** | x% | x% | x% | x% | x% | x% | x% | x% |

* இலங்கை ரூபா, ஐ.அ.டொலர் மற்றும் மற்றைய அனைத்து முக்கிய நாணயங்களுக்குமாக தனித்தனியான கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

**இணைப்பு 1(அ)**

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிகள்

## தவணைப் பிரிவுகளுக்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மீதான வழிகாட்டல்கள்

| தொடர் | கணக்குகளின் தலைப்பு | எதிர்பார்க்கப்படும் விபரங்கள் |
|---|---|---|
| அ. | உட்பாய்ச்சல்கள் | |
| 1. | கையிலுள்ள பணம் | ஒரு மாதம் வரையிலான தவணைப் பிரிவு |
| 2. | இலங்கை மத்திய வங்கியுடனான வைப்புக்கள் | தேவைப்படுத்தப்பட்ட நியதி ஒதுக்குகள் தொடர்பான தீர்ப்பனவுக் கணக்கில் காணப்படும் வேளையில் 'ஒரு மாதம் வரையிலான' தவணைப் பிரிவில் வைக்கப்பட முடியும், வைப்புக்களுக்கெதிரான நியதி ஒதுக்கு வைப்புக்களின் முதிர்ச்சி தோற்றப்பாட்டினைப் பொறுத்து பல்வேறு தவணைப் பிரிவுகளுக்கிடையே பகிரப்பட வேண்டும். |
| 3. | தலைமை அலுவலகம், இணைந்த மற்றும் சொந்தக் கிளைகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | கேள்வி நிலுவைகள் 'ஒரு மாதம் வரையிலான' தவணைப் பிரிவின் கீழ் வைக்கப்படலாம், மற்றைய அனைத்து நிலுவைகளும் தொடர்பான முதிர்ச்சிக்கான எஞ்சிய காலப்பகுதியின்படி முழுத் தவணைப் பிரிவுகளிடையேயும் பகிரப்பட வேண்டும். |
| 4. | ஏனைய வங்கியிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | தொடர்பான முதிர்ச்சித் தவணைப் பிரிவு |
| 5. | முதலீடுகள் | தொடர்பான எஞ்சிய முதிர்ச்சிகள், "வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுபவை" அவற்றின் முதிர்ச்சிக்கான எஞ்சிய காலப்பகுதியைக் கருத்திற் கொள்ளாது சாதனங்களின் திரவத்தன்மை தோற்றப்பாடுகளின் அடிப்படையில் முதல் மூன்று தவணைப் பிரிவுகளிலும் வைக்கப்படல் வேண்டும். |
| | முற்பணங்கள் (செயற்படுபவை) | |
| 6. | (அ) செலாவணி உண்டியல் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்கள் | (அ) முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதி தொடர்பான பிரிவுகள் |
| 7. | (ஆ) மேலதிகப் பற்றுக்கள் | (ஆ) வெளிநின்ற ஒவ்வொன்றினதும் 7.5 சதவீதம் முறையே ஒரு மாதம், 1 - 3 மாதங்கள், 3 - 6 மாதங்கள், 6 - 9 மாதங்கள் மற்றும் 9 - 12 மாத கால இடைவெளிகளின் கீழ் பகிரப்பட வேண்டும் என்பதுடன் மையக்கூறாக இருக்கும் மீதி 62.5 சதவீதம் முறையே 1 - 3 ஆண்டுகள், 3 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தவணைப் பிரிவுகளின் கீழ் சமமாகக் காட்டப்படல் வேண்டும். |
| 8. | (இ) கடன்களும் முற்பணங்களும் | (இ) எஞ்சியுள்ள முதிர்ச்சி தொடர்பானது. எனினும், கொடுகடன் அட்டைகள் உள்ளிட்ட நுகர்வோர் கடன்களில் 50 சதவீதம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தவணைப் பிரிவின் கீழ் காட்டப்படல் வேண்டும். மீதித் தொகையான 50 சதவீதம் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதியின் அடிப்படையில் தொடர்பான தவணைப் பிரிவுகளின் கீழ் காட்டப்படல் வேண்டும். |
| 9. | செயற்படாக் கடன்கள் | ஒதுக்கு வட்டி வீதம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட கடன் இழப்பு ஏற்பாடுகள் நீங்கலாக 25 சதவீதம் மற்றும் 75 சதவீதம் முறையே 9 - 12 மாதங்கள் மற்றும் ஐந்தாண்டு தவணைப் பிரிவுகளிலும் காட்டப்படல் வேண்டும். |
| 10. | கிளைகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் | ஒரு மாதம் வரையான தவணைப் பிரிவு |
| 11. | ஏனைய சொத்துக்கள் | காசுப்பாய்ச்சல்களின் மாதிரிப்படி. எனினும், அருவச் சொத்துக்களும் பெறத்தக்க காசினைப் பிரதிபலிக்காத சொத்துக்களும் ஐந்தாண்டிற்கு மேற்பட்ட தவணைப் பிரிவில் காட்டப்பட வேண்டும். |

**இணைப்பு 1(அ)**

| தொடர் | கணக்குகளின் தலைப்பு | எதிர்பார்க்கப்படும் விபரங்கள் |
|---|---|---|
| **ஆ.** | **வெளிப்பாய்ச்சல்கள்** | |
| 1. | **கேள்வி வைப்புக்கள்** | கேள்வி வைப்புக்களிலுள்ள நிலுவைகளில் 75 சதவீதம் முதல் ஐந்து தவணைப் பிரிவுகளின் கீழ் முறையே 20 சதவீதம், 20 சதவீதம், 15 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 10 சதவீதம் என்ற வீதங்களிலும் மீதி 25 சதவீதம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தவணைப் பிரிவிற்குள்ளும் பகிரப்பட வேண்டும். |
| 2. | **சேமிப்பு வைப்புக்கள்** | சேமிப்பு வைப்புக்களில் 25 சதவீதம் முறையே ஒரு மாதம், 1 - 3 மாதங்கள், 6 - 9 மாதங்கள் மற்றும் 9 - 12 மாதங்களின் கீழ் சமமான முறையில் பகிரப்பட வேண்டியதுடன் மீதி 75 சதவீதமான மூலக்கூறும் முறையே 1 - 3 ஆண்டுகள், 3 - 5 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேலான தவணைப் பிரிவுகளின் கீழ் சமமாகப் பகிரப்பட வேண்டும். |
| 3. | **தலைமை அலுவலகம்/ இணைந்தவை/ சொந்தக் கிளைகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள்** | முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதி தொடர்பான பிரிவுகள். |
| 4. | **ஏனைய வங்கியிலிருந்து வரவேண்டிய நிலுவைகள்** | முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதி தொடர்பான பிரிவுகள். |
| 5. | **தவணை வைப்புக்கள்** | தனிப்பட்ட வைப்பாளர்கள் மற்றும் ஓய்வூதிய நிதியம் என்பனவற்றிலிருந்தான தவணை வைப்புக்களில் 30 சதவீதம் அவற்றின் முதிர்ச்சிக்கான எஞ்சிய தவணைப் பகுதியினை கருத்திற் கொள்ளாது 5 ஆண்டுகளுக்கு மேலான தவணைப் பிரிவின் கீழ் காட்டப்பட வேண்டும். மீதி 75 சதவீதமான தொகை முதிர்ச்சிக்கான எஞ்சிய காலப்பகுதியின் அடிப்படையில் தொடர்பான காலப்பிரிவின் கீழ் காட்டப்படல் வேண்டும். |
| 6. | **வைப்புச் சான்றிதழ்கள், கடன்பாடுகள் மற்றும் முறிகள் (கீழ் நிலைப்படுத்தப்பட்ட கடன்கள் உட்பட)** | தொடர்பான எஞ்சிய தவணைப் பிரிவுகள் வாங்கும்/ விற்கும் விருப்பத்தேர்வுகள் எந்தவொரு கருவியினதும்/ கருவிகளினதும் வழங்கல் அமைப்பில் தெரிவிக்கப்படுவதுடன் வாங்கும்/ விற்கும் திகதி/ திகதிகளும் முதிர்ச்சிக்கு எஞ்சிய திகதி/ திகதிகளாக கணக்கிடப்படுவதுடன் மீதி தொடர்பான முதிர்ச்சிக்கு எஞ்சிய காலப்பிரிவில் காட்டப்படல் வேண்டும். |
| 7. | **கிளைகளுக்கிடையிலான தேறிய கொடுக்கல்வாங்கல்கள்** | ஒரு மாதம் வரையிலான தவணைப் பிரிவு. |
| 8. | **செலுத்தப்படத்தக்க பட்டியல்கள்** | ஒரு மாதம் வரையிலான தவணைப் பிரிவு. |
| 9. | **செலுத்தப்படத்தக்க வட்டி** | தொடர்பான முதிர்ச்சிக்கு எஞ்சிய தவணைப் பிரிவுகள் |
| 10. | **கடன் இழப்புக்கள் மற்றும் முதலீட்டு சொத்துப்பட்டியலின் பெறுமதியில் ஏற்பட்ட தேய்மானம் என்பன நீங்கலான ஒதுக்கங்கள்** | நோக்கங்களைப் பொறுத்து தொடர்பான முதிர்ச்சிக்கு எஞ்சிய தவணை வைப்புக்கள். |
| 11. | **ஏனைய பொறுப்புக்கள்** | தொடர்பான முதிர்ச்சித் தவணைப் பிரிவு, கொடுபடத்தக்க காசினைப் பிரதிபலிக்காத விடயங்கள் (அதாவது முன்கூட்டியே பெறப்படுகின்ற வருமானம் போன்றன) 5 ஆண்டு தவணைப் பிரிவில் வைக்கப்படல் வேண்டும். |

**இணைப்பு 1(அ)**

| தொடர் | கணக்குகளின் தலைப்பு | எதிர்பார்க்கப்படும் விபரங்கள் |
|---|---|---|
| **இ.** | **எதிர்பாராத பொறுப்புக்கள்/ வழங்கப்பட்ட/ கிடைக்கத்தக்க கொடுகடன் தொடர்கள் மற்றும் ஏனைய உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள்** | |
| 12. | நிறுவனங்களுக்கும் ஏனைய கடன்பாட்டாளர்களுக்கும் வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்கள் | ஒரு மாதம் வரையிலான தவணைப் பிரிவு |
| 13. | மேலதிகப் பற்றுக்கள், கடன்கள் மற்றும் முற்பணங்களின் பயன்படுத்தப்படாத விகிதம் | வரலாற்று ரீதியான தரவுத் தளங்களின் அடிப்படையில் நிகழத்தக்க பகிர்வுகள் தொடர்பான தவணைப் பிரிவுகளில் காட்டப்படல் வேண்டும். |
| 14. | நாணயக் கடிதம்/ உத்தரவாதம்/ ஏற்றுக்கொள்ளல்கள் | கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் நிகழத்தக்க நிதியிடல் கடப்பாடுகள் தொடர்பான தவணைப் பிரிவில் காட்டப்படல் வேண்டும். |
| 15. | மீள்கொள்வனவு/ மீள்கழிவிடப்பட்ட உண்டியலின்/ பரிமாற்றல்கள்/ முன்னோக்கிய உடன்படிக்கைகள் (ஏனைய நாணயங்களுக்கெதிரான இலங்கை ரூபா) | தொடர்பான முதிர்ச்சிப் பிரிவுகள் |

இணைப்பு 2

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உணர்திறன்
(நாணயம் ......)*

வங்கியின் பெயர் :
முடிவடைந்த காலம் :

(....... மில்லியன்)

| இல. | சொத்துக்கள் மற்றும் பிணையிடப்பட்ட முறிக் கடப்பாடுகள் | 1 மாதம் வரை | 1 - 3 மாதங் கள் | 3 - 6 மாதங் கள் | 6 - 12 மாதங் கள் | 1 - 2 ஆண்டு கள் | 2 - 3 ஆண்டு கள் | 3 - 4 ஆண்டு கள் | 4 - 6 ஆண்டு கள் | 5 - 7 ஆண்டு கள் | 7 - 10 ஆண்டு கள் | 10 - 15 ஆண்டு கள் | 15 - 20 ஆண்டு கள் | 20 ஆண்டு களுக்கு மேல் | உணர் திறன் இல்லாதது | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கையிலுள்ள பணம் | | | | | | | | | | | | | | | |
| 2. | பிணையிடப்பட்ட முறிக் கடப்பாடுகளுடனான வைப்புக்கள் | | | | | | | | | | | | | | | |
| 3. | தலைமை அலுவலகம்/ இணைந்தவை/ கிளைகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | | | | | | | | | | | | | | | |
| 4. | ஏனைய வங்கிகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | | | | | | | | | | | | | | | |
| 5. | முதலீடுகள் | | | | | | | | | | | | | | | |
| 6. | செலாவணி உண்டியல் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ் | | | | | | | | | | | | | | | |
| 7. | மேலதிகப் பற்றுக்கள் | | | | | | | | | | | | | | | |
| 8. | கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | | | | | | | | | | | | | | |
| 9. | செயற்படாக் கடன்கள் | | | | | | | | | | | | | | | |
| 10. | நிலையான சொத்துக்கள் | | | | | | | | | | | | | | | |
| 11. | கிளைகளுக்கிடையிலான தேறிய கொடுக்கல்வாங்கல்கள் | | | | | | | | | | | | | | | |
| 12. | ஒன்றுசேர்ந்த வட்டி | | | | | | | | | | | | | | | |
| 13. | ஏனைய சொத்துக்கள் | | | | | | | | | | | | | | | |
| 14. | நேர்மாற்று மீள்கொள்வனவு | | | | | | | | | | | | | | | |
| 15. | மிதக்கும் வீதச் சொத்துக்கள் | | | | | | | | | | | | | | | |
| 16. | பரிமாற்றல்கள் | | | | | | | | | | | | | | | |
| 17. | முன்பேரங்கள் | | | | | | | | | | | | | | | |
| 18. | விருப்பத்தேர்வுகள் | | | | | | | | | | | | | | | |
| 19. | ஏனையவை (குறிப்பிடவும்) | | | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | | | |
| | பொறுப்புக்கள் மற்றும் பிணையிடப்பட்ட முறிக் கடப்பாடுகள் | | | | | | | | | | | | | | | |

தொடர்ச்சி

| இல. | சொத்துக்கள் மற்றும் பிணையிடப்பட்ட முறிக் கடப்பாடுகள் | 1 மாதம் வரை | 1 - 3 மாதங்கள் | 3 - 6 மாதங்கள் | 6 - 12 மாதங்கள் | 1 - 2 ஆண்டுகள் | 2 - 3 ஆண்டுகள் | 3 - 4 ஆண்டுகள் | 4 - 6 ஆண்டுகள் | 5 - 7 ஆண்டுகள் | 7 - 10 ஆண்டுகள் | 10 - 15 ஆண்டுகள் | 15 - 20 ஆண்டுகள் | 20 ஆண்டுகளுக்கு மேல் | உணர் திறன் இல்லாதது | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கேள்வி வைப்புக்கள் | | | | | | | | | | | | | | | |
| 2. | சேமிப்பு வைப்புக்கள் | | | | | | | | | | | | | | | |
| 3. | தவணை வைப்புக்கள் | | | | | | | | | | | | | | | |
| 4. | ஏனைய வைப்புக்கள் | | | | | | | | | | | | | | | |
| 5. | தலைமை அலுவலகம்/ இணைந்தவை/ கிளைகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | | | | | | | | | | | | | | | |
| 6. | ஏனைய வங்கிகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | | | | | | | | | | | | | | | |
| 7. | வைப்புச் சான்றிதழ்கள் | | | | | | | | | | | | | | | |
| 8. | ஏனைய கடன்பாடுகள் | | | | | | | | | | | | | | | |
| 9. | தேறிய கிளைகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் | | | | | | | | | | | | | | | |
| 10. | கொடுபடத்தக்க பட்டியல்கள் | | | | | | | | | | | | | | | |
| 11. | கொடுகடத்தக்க வட்டி | | | | | | | | | | | | | | | |
| 12. | ஏற்பாடுகள் (ஏனையவை) | | | | | | | | | | | | | | | |
| 13. | மூலதனம் | | | | | | | | | | | | | | | |
| 14. | ஒதுக்கங்கள் | | | | | | | | | | | | | | | |
| 15. | பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | | | | | | | | | | | | | | | |
| 16. | கீழ் நிலைப்படுத்தப்பட்ட படுகடன்கள் | | | | | | | | | | | | | | | |
| 17. | ஏனையவை (குறித்துரைக்கப்பட்டவை) | | | | | | | | | | | | | | | |
| 18. | மீள்கொள்வனவு | | | | | | | | | | | | | | | |
| 19. | நிலையான வீதச் சொத்துக்கள் | | | | | | | | | | | | | | | |
| 20. | எதிர்காலப் பேரங்கள் | | | | | | | | | | | | | | | |
| 21. | பரஸ்பர பரிமாற்றல்கள் | | | | | | | | | | | | | | | |
| 22. | விருப்பத்தேர்வுகள் | | | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | | | |
| | இடைவெளி | | | | | | | | | | | | | | | |

* இலங்கை ரூபா, ஐ.அ.டொலர் மற்றும் மற்றைய அனைத்து முக்கிய நாணயங்களுக்குமாக தனித்தனியாக கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

**இணைப்பு 2(அ)**

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உணர்திறன்

## தவணைப் பிரிவுகளுக்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மீதான வழிகாட்டல்கள்

| தொடர் | கணக்குகளின் தலைப்பு | வட்டி வீத உணர்திறனும் காலப்பிரிவும் |
|---|---|---|
| அ. | உட்பாய்ச்சல்கள் | |
| 1. | கையிலுள்ள பணம் | உணர்திறன் அற்றது |
| 2. | இலங்கை மத்திய வங்கியுடனான வைப்புக்கள் | உணர்திறன் அற்றது |
| 3. | தலைமை அலுவலகம், இணைந்த மற்றும் சொந்தக் கிளைகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | வட்டி கொடுபடத்தக்க பங்கு உணர்திறன் கொண்டதாக இருந்ததுடன் முதிர்ச்சிக்கு அல்லது மீள்விலையிடலுக்கு எஞ்சியுள்ள காலப்பகுதியுடன் தொடர்பான தவணைப் பிரிவின் கீழ் காட்டப்படவும் வேண்டும். வட்டி கொடுபடாத பங்கு உணர்திறன் அற்றதாகும். |
| 4. | ஏனைய வங்கியிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | வட்டி கொடுபடத்தக்க பங்கு உணர்திறன் கொண்டதாக இருந்ததுடன் முதிர்ச்சிக்கு அல்லது மீள்விலையிடலுக்கு எஞ்சியுள்ள காலப்பகுதியுடன் தொடர்பான தவணைப் பிரிவின் கீழ் காட்டப்படவும் வேண்டும். வட்டி கொடுபடாத பங்கு உணர்திறன் அற்றதாகும். |
| 5. | முற்பணங்கள் (ஏற்பாடுகள் நீங்கலாக) | |
| | (அ) நிலையான வீதம்/ பூஜ்ய நறுக்குகள் | (அ) உணர்திறனுடையவை முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலம் தொடர்பான தவணைப் பிரிவின் கீழ் காட்டப்படல் வேண்டும். |
| | (ஆ) மிதக்கும் வீதம் | (ஆ) உணர்திறனுடையவை முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலம் தொடர்பான தவணைப் பிரிவின் கீழ் காட்டப்படல் வேண்டும். |
| | (இ) அலகுகளிலுள்ள பங்குகள் மற்றும் முதலீடுகள் | (இ) உணர்திறன் இல்லாதது. |
| | முற்பணங்கள் (செயற்படுகின்றவை) | |
| 6. | (அ) செலாவணி உண்டியல் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்கள் | (அ) முதிர்ச்சியின் மீதான உணர்திறன் |
| 7. | (ஆ) மேலதிகப் பற்றுக்கள்/ கடன்கள் (நிலையான வீதம்) | (ஆ) உணர்திறன் கொண்டதுடன் இடைக்கால மற்றும் இறுதி காசுப்பாய்ச்சல் தொடர்பான தவணைப் பிரிவின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். |
| 8. | (இ) மேலதிகப் பற்றுக்கள்/ கடன்கள் மற்றும் முற்பணங்கள் (மிதக்கும் வீதங்கள்) | (இ) உணர்திறன் கொண்டதுடன் இடைக்கால மற்றும் இறுதி காசுப்பாய்ச்சல் தொடர்பான தவணைப் பிரிவின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். |
| 9. | செயற்படாக் கடன்கள் | |
| | (அ) சிறப்பாகக் குறிப்பிடப்பட்டது | (அ) 1 - 2 ஆண்டிற்கு மேலான தவணைப் பிரிவு |
| | (ஆ) கீழ்நிலை | (ஆ) 3 -5 ஆண்டிற்கு மேலான தவணைப் பிரிவு |
| | (இ) ஐயம் | (இ) 5 ஆண்டிற்கு மேலானது |
| | (ஈ) இழப்பு | (ஈ) உணர்திறன் அற்றது |
| 10. | நிலையான சொத்துக்கள் | உணர்திறன் அற்றது |
| 11. | கிளைகளுக்கிடையிலான தேறிய கொடுக்கல்வாங்கல்கள் | உணர்திறன் அற்றது |

**இணைப்பு 2(அ)**

| தொடர் | கணக்குகளின் தலைப்பு | வட்டி வீத உணர்திறனும் காலப்பிரிவும் |
|---|---|---|
| 12. | **ஒன்றுசேர்ந்த வட்டி** | உணர்திறன் அற்றது |
| 13. | **ஏனைய சொத்துக்கள்**<br>**(அ) குத்தகைக்குவிடப்பட்ட சொத்துக்கள்**<br>**(ஆ) ஏனையவை** | (அ) இடைக்கால மற்றும் இறுதிக் காசுப்பாய்ச்சல் மீது உணர்திறன் கொண்டது. தொகையானது காசுப்பாய்ச்சலுடன் தொடர்பான முதிர்ச்சிப் பிரிவுகளுக்குள் பகிரப்பட வேண்டும்.<br>(ஆ) உணர்திறன் அற்றது. |
| 14.<br>16. | **நேர்மாற்று மீள்கொள்வனவு, பரஸ்பர பரிமாற்றல்கள் (வாங்கல்/ விற்றல்) மற்றும் கழிவிடப்பட்ட உண்டியல்** | முதிர்ச்சி மீதான உணர்திறன் |
| 15. | **நிலையான வீதச் சொத்துக்கள்** | இச்சாதனங்கள் கடன்கள் (சொத்துக்கள்) மற்றும் குறுங்கால நிலமைகள் (பொறுப்புக்கள்) ஆகியவற்றின் இணைந்த விடயங்கள் எனக் கருதப்படல் வேண்டும். எதிர்காலப் பேரங்களின் முதிர்ச்சி அல்லது நிலையான வீத சொத்துக்களின் முதிர்ச்சியானது வழங்கல் அல்லது ஒப்பந்தங்கள் நடைமுறையிலிருக்கும் வரையான காலமாக இருக்கும். தொடர்பான நிலைகள் தவணைப் பிரிவினுள் மாற்றங்களுக்கு உட்பட வேண்டும். |
| 17. | **எதிர்காலப் பேரங்கள்** | பரஸ்பர பரிமாற்றல்கள் தொடர்பான முதிர்ச்சிகளுடன் கூடிய இரு கோட்பாட்டு நிலைகளாக கருதப்படுதல் வேண்டும். உதாரணமாக, வட்டி வீத பரிமாற்றல்களின் கீழ் வங்கியொன்று பெறுகின்ற மிதக்கும் வட்டி வீதங்களும் கொடுக்கின்ற நிலையான வீதங்களும் அடுத்த வட்டி வீதம் நிர்ணயிக்கப்படும் காலம் வரையான முதிர்ச்சிக்குச் சமமான நீண்டகால மிதக்கின்ற வீதங்களுக்கும் பரிமாற்றல் ஆயுள் காலத்தின் எஞ்சிய காலப்பகுதிக்கான குறுகிய நிலைக்கும் சமமானதாகக் கருதப்பட வேண்டும். |
| 18. | **விருப்பத்தேர்வுகள்** | வழங்கப்பட்ட விருப்பத்தேர்வுகளைக் குறிப்பிடுகின்ற கோட்பாடு தொடர்பான தவணைப் பிரிவின் கீழ் குறிப்பிடப்படல் வேண்டும். |

**இணைப்பு 2(அ)**

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உணர்திறன்

## தவணைப் பிரிவுகளுக்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மீதான வழிகாட்டல்கள்

| தொடர் | கணக்குகளின் தலைப்பு | உணர்திறன் வீதம் மற்றும் தவணைப் பிரிவு |
|---|---|---|
| 1. | கேள்வி வைப்புக்கள் | உணர்திறன் அற்றது |
| 2. | சேமிப்பு வைப்புக்கள் | வட்டி வீதங்கள் மீள நிர்ணயிக்கப்படும் போது உணர்திறன் மற்றும் மீள்விலைகள். |
| 3.<br>4.<br>7. | தவணை வைப்புக்கள்<br>வைப்புச் சான்றதழ்கள் மற்றும்<br>ஏனைய வைப்புக்கள் | முதிர்ச்சியின் மீதான உணர்திறன் மற்றும் மீள்விலைகள். தொகைகள் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலத்தின் அடிப்படையில் வேறுபட்ட தவணைப் பிரிவுகளுக்கிடையே பகிரப்பட வேண்டும். எனினும், மிதக்கும் வீத தவணை வைப்புக்களைப் பொறுத்தவரை, தொகைகள் வைப்புக்கள் ஒப்பந்த ரீதியாக விலையிடல் காலத்தினை அடையும் பொழுது தவணைப் பிரிவின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். |
| 5. | தலைமை அலுவலகம்/ இணைந்தவைகள்/ சொந்தக் கிளைகளிலிருந்து வரவேண்டிய மீதிகள் | வட்டி கொடுபடத்தக்க பங்கு உணர்திறன் கொண்டதாக இருந்ததுடன் முதிர்ச்சிக்கு அல்லது மீள்விலையிடலுக்கு எஞ்சியுள்ள காலப்பகுதியுடன் தொடர்பான தவணைப் பிரிவின் கீழ் காட்டப்படவும் வேண்டும். வட்டி கொடுபடாத பங்கு உணர்திறன் அற்றதாகும். |
| 6. | ஏனைய வங்கியிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் | வட்டி கொடுபடத்தக்க பங்கு உணர்திறன் கொண்டதாக இருந்ததுடன் முதிர்ச்சிக்கு அல்லது மீள்விலையிடலுக்கு எஞ்சியுள்ள காலப்பகுதியுடன் தொடர்பான தவணைப் பிரிவின் கீழ் காட்டப்படவும் வேண்டும். வட்டி கொடுபடாத பங்கு உணர்திறன் அற்றதாகும். |
| 8. | கடன்பாடுகள் | |
| | (அ) நிலையான வீத கடன்பாடுகள் | (அ) உணர்திறன் மற்றும் முதிர்ச்சியின் மீதான மீள்விலையிடல். முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள வேறுபட்ட காலப்பகுதிகளின் அடிப்படையில் தொகைகள் பகிரப்படல் வேண்டும். |
| | (ஆ) மிதக்கவிடும் வீதக் கடன்பாடுகள் | (ஆ) வட்டி வீதம் மீள நிர்ணயிக்கப்படும் பொழுது உணர்திறன் மற்றும் மீள்விலையிடல் தொகையானது, ஒப்பந்தம் செய்யப்பட்ட மீள்விலையுடன் பொருந்தி வரும் விதத்தில் பொருத்தமான தவணைப் பிரிவுகளுக்கு மீளப் பகிரப்படல் வேண்டும். |
| | (இ) பூஜ்ய நறுக்கு வீதக் கடன்பாடுகள் | (இ) முதிர்ச்சியின் மீதான உணர்திறன் மற்றும் விலையிடல். தொகையானது தொடர்பான முதிர்ச்சிப் பிரிவுகளுக்கு பகிரப்படல் வேண்டும். |
| | (ஈ) இலங்கை மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகள் | (ஈ) ஒரு மாத காலம் வரையான பிரிவு |
| 9. | வங்கிகளுக்கிடையிலான தேறிய கொடுக்கல்வாங்கல்கள் | உணர்திறனற்றது. |
| 10. | கொடுபடத்தக்க உண்டியல் | உணர்திறனற்றது. |
| 11. | கொடுபடத்தக்க வட்டி | உணர்திறனற்றது. |
| 12. | ஒதுக்கங்கள் | உணர்திறனற்றது. |
| 13. | மூலதனம் | உணர்திறனற்றது. |
| 14. | ஒதுக்கங்கள் | உணர்திறனற்றது. |
| 15. | பிடித்துவைக்கப்பட்ட இலாபங்கள் | உணர்திறனற்றது. |
| 16. | கீழ் நிலைப்படுத்தப்பட்ட படுகடன்கள் | தயவுசெய்து மேலேயுள்ள விடயம் (8) இனைப் பார்க்கவும். |
| 17. | நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் ஏனைய பெறுதிச் சாதனங்கள் | மீள்விலையிடல் முதிர்ச்சிகளின் மீது மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தொடர்பான முதிர்ச்சிப் பிரிவுகளிடையே பகிரப்படவும் வேண்டும். |

**இணைப்பு 2(அ)**

| தொடர் | கணக்குகளின் தலைப்பு | எதிர்பார்க்கப்படும் விபரங்கள் |
|---|---|---|
| இ. | கடப்பாடுடைய/ கிடைக்கத்தக்க எதிர்பாராத பொறுப்புக்கள்/ கொடுகடன் தொடர்கள் ஏனைய உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் | |
| 3. | நிறுவனங்கள் மற்றும் ஏனைய கடன்பாட்டாளர்களுக்கான கடப்பாடுடைய கொடுகடன் தொடர்கள் | ஒரு மாதம் வரையிலான காலப்பிரிவு |
| 4. | மேலதிகப் பற்றுக்கள், கடன்கள் மற்றும் முற்பணங்கள் | நிகழக்கூடிய பகிர்ந்தளிப்புக்கள் வரலாற்று ரீதியான தரவுத்தளங்களின் அடிப்படையில் தொடர்பான தவணைப் பிரிவில் காட்டப்படல் வேண்டும். |
| 5. | நாணயக்கடிதம்/ உத்தரவாதங்கள்/ ஏற்றுக்கொள்ளல்கள் | நிகழக்கூடிய நிதியிடல் கடப்பாடுகள் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் தொடர்பான காலப்பிரிவில் காட்டப்படுதல் வேண்டும். |
| 6. | மீள்கொள்வனவுகள்/ மீள்கழிவிடப்பட்ட உண்டியல்கள்/ பரிமாற்றல்கள்/ முன்னோக்கிய ஒப்பந்தங்கள் (ஏனைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா) | தொடர்பான முதிர்ச்சிப் பிரிவுகள் |

**இணைப்பு 3**

## வெளிநாட்டுச் செலாவணி நிலை

**வங்கி :**

**முடிவில் உள்ளவாறு :**

(ரூ. மில்லியன்)

| | உடன் | | | முன்னோக்கிய (அ) | | | தேறிய திறந்த நிலை | ஏனைய செலாவணி ஒப்பந்தங்களிலுள்ள தேறிய நிலை (ஆ) | வெளிநாட்டு நாணயங்கள் தொடர்பான ஒட்டுமொத்த வெளிப்படுத்துகை | இலங்கை ரூபாவில் ஒட்டுமொத்த வெளிப்படுத்துகை (ஈ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாணயம் | சொத்து | பொறுப்புக்கள் | தேறிய | சொத்து | பொறுப்புக்கள் | தேறிய | | | | |
| (1) | (2) | (3) | (4)=(2)-(3) | (5) | (6) | (7)=(5)-(6) | (8) | (9) | (10) | (11) |
| ஐ.அ.டொலர்கள் | | | | | | | | | | |
| ஸ்டேர்லிங் பவுண் | | | | | | | | | | |
| யூரோ | | | | | | | | | | |
| யப்பானிய யென் | | | | | | | | | | |
| இந்திய ரூபாய் | | | | | | | | | | |
| அவுத்திரேலியன் டொலர் | | | | | | | | | | |
| கனேடியன் டொலர் | | | | | | | | | | |
| ஏனைய நாணயங்கள் (இ) | | | | | | | | | | |
| **மொத்த வெளிப்படுத்துகை (உ)** | | | | | | | | | | |
| **இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின்படி மொத்த மூலதன நிதியம் (ஊ)** | | | | | | | | | | |
| **இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றக்களின்படி மொத்த மூலதன நிதியங்களின் சதவீதமாக மொத்த வெளிப்படுத்துகை (30 சதவீதத்தினை விஞ்சக்கூடாது)** | | | | | | | | | | **X%** |

(அ) தீர்ப்பனவு செய்யப்படாத நாளைக்குரிய மற்றும் உடன் கொடுக்கல்வாங்கல்களும் முன்னோக்கிய தொழிற்பாடுகளின் கீழ் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நாணய விருப்பத்தேர்வுகள், எதிர்காலப் பேரங்கள் போன்ற ஏனைய வெளிநாட்டுச் செலாவணி உடன்படிக்கைகளிலுள்ள தேறிய வெளிநாட்டுச் செலாவணி நிலையை அறிக்கையிடல்.

(இ) மற்றைய நாணயங்களுக்குச் சமமான இலங்கை ரூபா நிரல் 11 இன் கீழ் காட்டப்படுதல் வேண்டும்.

(ஈ) நிரல் 11, நிரல் 10 இல் உள்ளவற்றினது இலங்கை ரூபாவிற்குச் சமமான தொகையினைக் காட்டுதல் வேண்டும்.

(உ) நிரல் 11 இல் உள்ள ஒவ்வொரு நாணயங்களுக்கும் எதிராகக் காட்டப்பட்டிருக்கும் வெளிப்படுத்துகை (ஈ) இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள தொகையினைப் பெறும் விதத்தில் அடையாளங்களைக் கவனத்தில் கொள்ளாது கூட்டப்படுதல் வேண்டும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1)இன் நியதிகளுக்கிணங்க நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2011 ஒத்தோபர் 5

## 2011ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரை

## உரிமம் பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம்

வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1) ஆகிய பிரிவுகள் அத்தகைய வங்கிகளின் வியாபார விடயங்கள் எவ்வாறான விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாக உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரங்களை வழங்குகின்றது. வாடிக்கையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதும் வாடிக்கையாளர்களுக்கும் வங்கிகளுக்குமிடையிலான ஆரோக்கியமான உறவு முறைகளைக் கட்டியெழுப்புவதும் வங்கித்தொழில் துறையில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினை மேம்படுத்துவதும் வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்தி உறுதிப்படுத்தும். மேற்குறிப்பிட்டவற்றைக் கருத்திற் கொண்டு, நாணயச் சபை, இப்பணிப்புரையுடன் இணைக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர் சாசனத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் "ஒழுக்கக் கோவை" ஒன்றினைப் பின்பற்றும் விதத்தில் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்கும் இப்பணிப்புரையினை விடுக்கின்றது.

1. அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் இப்பணிப்புரையுடன் இணைக்கப்பட்டுள்ள "வாடிக்கையாளர் சாசனத்துடன் இணங்கிச் செல்லும் விதத்தில் வாடிக்கையாளர் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளமை பற்றியும் சாசனத்தினை அடிப்படையாகக் கொண்ட "ஒழுக்கக் கோவை" பின்பற்றப்படுகின்றமை பற்றியும் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் "ஒழுக்கக் கோவை" இனைப் பின்பற்றுவது தொடர்பாக தற்போதுள்ள ஊழியர்களிடமிருந்தும் அனைத்துப் புதிய ஊழியர்களிடமிருந்தும் (வங்கியில் அவர்களது வேலையினைப் பொறுப்பேற்பதற்கு முன்னதாக) எழுத்து மூலமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
3. அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் "வாடிக்கையாளர்" சாசனத்தினை அவர்களது வெப்தளத்தில் வெளியிட வேண்டியதுடன் வாடிக்கையாளர் கேட்டுக் கொள்ளுமிடத்து அவர்கள் விரும்பிய மொழியில் பிரதிகளைக் கிடைக்கச் செய்ய வேண்டும். அத்துடன் அவசியமானவிடத்து அவர்களுக்கு அறிவினை ஊட்டுதலும் வேண்டும்.
4. அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் இப்பணிப்புரை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**இணைப்பு**

## உரிமம் பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம்

1. அறிமுகம்

இச்சாசனமானது வாடிக்கையாளர்கள் உரிமம் பெற்ற வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அவர்களால் எதிர்நோக்கப்படும் நியாயமான வங்கி நடைமுறைகளின் முக்கிய நியமங்களை உருவாக்குவதுடன் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வாடிக்கையாளர் பாதுகாப்புத் தொடர்பாக ஒரு "நடத்தைக் கோட்பாட்டினை" பின்பற்றுவதற்கான வழிகாட்டுதலையும் வழங்குகின்றது. இச்சாசனம் மேலும் உரிமம் பெற்ற வங்கிகளுடன் வாடிக்கையாளர்கள் திடமான உறவினைப் பேணும் வகையில் அவர்களது கடப்பாடுகளின் ஒரு தொகுப்பையும் உள்ளடக்குகின்றது.

2. வங்கித் தொழில் சாதனங்கள்/ சேவைகளைப் புரிந்து கொள்ளுதலும் தகவல்களைப் பெறுதலும்

வாடிக்கையாளர் வங்கிகளினால் வழங்கப்படுகின்ற நிதிசார் சாதனங்கள்/சேவைகளைப் புரிந்து கொள்வதற்கும் உண்மையான தகவல்களைப் பெறுவதற்குமான உரிமையினைக் கொண்டிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக வங்கிகளின் சில நல்ல நடைமுறைகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அ) உரிமம் பெற்ற வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு நிதிசார் சாதனங்கள்/ சேவைகள் தொடர்பான போதியளவு தகவல்களை வழங்குதல், அவற்றின் நிதிசார் விளைவுகளை விபரித்தல் ஆகியன மூலம் வாடிக்கையாளர்கள் அச் சாதனங்கள்/ சேவைகள் பற்றி புரிந்து கொள்ள உதவுவதுடன் வாடிக்கையாளர்கள் தங்களுக்குப் பொருத்தமான வங்கித் தொழில் சாதனங்கள்/ சேவைகளைத் தெரிவு செய்ய உதவி செய்ய வேண்டும்.

ஆ) ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கியும் அதனுடைய சாதனங்கள் /சேவைகளுக்கு தனித்தனியான அல்லது ஒருங்கிணைந்த முக்கியமான உண்மைத் தகவல்களைக் கொண்ட எளிய மொழிநடையில் அமைந்த சிறு புத்தகம்/துண்டுப் பிரசுர வடிவத்திலான ஆவணத்தை வைத்திருக்க வேண்டும். அத்தோடு, சாதனங்கள்/சேவைகளை நாடிச் செல்லுகின்ற வாடிக்கையாளர்களுக்கு அவை விநியோகிக்கப்பட வேண்டும். இத்தகைய சிறிய புத்தகம்/ துண்டுப் பிரசுரமானது ஆகக் குறைந்தது பின்வரும் அடிப்படைத் தகவல்களைக் கொண்டிருப்பதுடன் வாடிக்கையாளர்களினால் விரும்பப்படும் மொழியிலும் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும் (அதாவது சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்).

(i) சாதனங்கள் /சேவைகள் பற்றிய விளக்கம்.

(ii) வாடிக்கையாளர்களுக்கான ஏதாவது சலுகைகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் உள்ளடங்கலான நிதி மற்றும் ஏனைய நன்மைகள்.

(iii) வாடிக்கையாளர்களிடம் இருந்து அறவிடப்படும் கட்டணங்கள்/அறவீடுகள்/தரகுகள் மற்றும் வட்டி என்பன.

(iv) சாதனங்கள்/சேவைகளினைப் பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்.

(v) பிரதான நியதிகளும் நிபந்தனைகளும்.

(vi) வாடிக்கையாளர்களுக்கான ஒரு பொதுவான முறைப்பாடு செய்யும் வழிமுறைகள்

இ) ஏதாவது ஊடகம் மற்றும் விளம்பரச் சாதனங்களில் வங்கிகளால் வழங்கப்படும் சாதனங்கள் /சேவைகள் பற்றி அவர்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து விளம்பரங்களும் உண்மையான தகவல்களைக் கொண்டிருப்பதுடன் இவ் விளம்பரங்கள் பொது மக்களை தவறாக வழி நடத்தக்கூடிய தகவல்களைக் கொண்டிருக்காமல் உரிய வாடிக்கையாளர்களால் புரிந்து கொள்ளக் கூடியனவாக இருக்க வேண்டும். மேலும், அனைத்து விளம்பரங்களும் தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்களை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வங்கி என்பதனையும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

ஈ) வங்கியின் சாதனங்கள்/சேவைகள் என்பனவற்றின் விளம்பரங்கள் தொடர்பான கட்டணங்கள், அறவீடுகள் மற்றும் வட்டி வீதங்கள் போன்ற மேலதிக தகவல்கள் அல்லது விளக்கங்கள் கேட்டுக் கொள்ளப்படுமிடத்து வங்கியினால் வழங்கப்பட வேண்டும்.

உ) பின்வரும் தகவல்கள் உரிமம்பெற்ற வங்கிகளின் தலைமைக் காரியாலயங்கள், அனைத்துக் கிளைகள், மற்றும் ஏனைய வங்கித் தொழில் அலுவலகங்கள் ஆகியவற்றில் தெளிவாக காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்.

(i) அனைத்து வைப்புக்கள் மற்றும் கடன் சாதனங்கள் மீதான நடைமுறை வட்டி வீதங்கள்.

(ii) வெளிநாட்டு நாணயங்களின் கொள்வனவு மற்றும் விற்பனை வீதங்கள்.

(iii) முக்கியமான குறிப்புக்களுடன் வங்கியின் கொடுகடன் தரமிடல்.

(iv) நிதிசார் குறைகேள் அதிகாரியினுடையதும், கடன் ஆலோசனை நிலையத்தினதும் தொடர்பு கொள்ளும் விபரங்கள்.

(v) வங்கித் தொழில் நேரங்களும் விடுமுறை பற்றிய அறிவித்தல்களும்.

(vi) மற்றைய ஏதேனும் தொடர்புபட்ட தகவல்கள்.

ஊ) செயற்படும் வகையிலுள்ள சேமிப்புக் கணக்கு புத்தகம் தவிர்ந்த ஏனைய சேவைகள் அல்லது வாடிக்கையாளர்களின் வைப்பு அல்லது கடன் கணக்குகளிலுள்ள மீதிகளும் அவை தொடர்பான கொடுக்கல் வாங்கல்களும் தொடர்பான ஒரு தவணைக் கூற்று வாடிக்கையாளர்களுக்கு அவர்களால் தெரிவு செய்ததற்கு ஏற்ப அச்சிடப்பட்ட வடிவிலோ அல்லது இலத்திரனியல் வடிவிலோ அனுப்பப்பட வேண்டும்.

கடன் அட்டைக் கூற்றுக்களானது செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த கட்டணத் தொகையையும் ஆகக் குறைந்த தொகை மட்டும் செலுத்தப்பட்டால் அறவிடப்படும் மொத்த வட்டித் தொகையையும் ஆகக் குறைந்த கட்டணம் செலுத்தப்படாவிட்டால் அறவிடப்படும் தாமதக் கொடுப்பனவுக் கட்டணத்தையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

எ) உரிமம் பெற்ற வங்கிகள் விசேடமான நிதிசார் அறிவூட்டும் நிகழ்ச்சிகள் மூலமாக நிதிசார் சாதனங்கள்/சேவைகள் பற்றியும் அவற்றின் இடர்நேர்வுகள் பற்றியும் வாடிக்கையாளர் கொண்டிருக்கும் விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டும்.

ஏ) உரிமம் பெற்ற வங்கிகளானது, "நடத்தைக் கோட்பாட்டில்" சொல்லப்பட்டுள்ள நடைமுறைகளையும் செயல் முறைகளையும் வங்கியின் அலுவலர்கள் பின்பற்றுகின்றார்களா என்பதனையும், தம்மால் வழங்கப்படும் சாதனங்கள்/சேவைகள் என்பன தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் கோட்பாடுகளுடன் ஒத்துப்போகின்றனவா என்பதனையும், வெளிப்படைத் தன்மை மற்றும் உண்மைத் தன்மைக் கோட்பாடுகள் பேணப்படுகின்றனவா என்பதனையும் உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்கள் நியாயமாகவும் நம்பகத் தன்மையுடனும் செயற்பட வேண்டும்.

3. சாதனங்கள்/ சேவைகள் மீதான *நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்* விழிப்புணர்வும் புரிந்து கொள்ளுதலும்

3.1 வாடிக்கையாளர்கள் அவர்கள் வங்கிகளிடமிருந்து பெறுகின்ற ஒவ்வொரு சாதனங்கள் அல்லது சேவைகளுக்கும் தொடர்புடைய நியதிகளை மற்றும் நிபந்தனைகளை அணுகுவதற்கும் அவற்றை பூரணமாக புரிந்து கொள்வதற்கும் உரிமை கொண்டிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக, உரிமம் பெற்ற வங்கிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்:

அ) ஒவ்வொரு சாதனங்கள் அல்லது சேவைகளுடன் தொடர்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாடிக்கையாளர்களுக்கு அவர்களால் விரும்பப்படும் மொழிகளில் கிடைக்கச் செய்தல்;

ஆ) இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஒரு பிரதியானது எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு ஒரு சாதனம் அல்லது சேவையை வழங்குவதற்கு அல்லது பரிந்துரைக்கப்படுவதற்கு முன்னர் முன்கூட்டியே கொடுக்கப்படுவதுடன் வாடிக்கையாளர்களால் கேட்கப்படும் ஏதாவது விளக்கங்களை தெளிவாக விளங்கப்படுத்தப்படுத்தல்;

இ) ஒரு தொடர்பு அலுவலரின் கடமைகளைக் கொண்டிருக்கும் ஒரு அலுவலர் சாதனங்கள்/சேவைகளின் அம்சங்களையும், நியதிகள் மற்றும் நிபந்தனைகளையும் வாடிக்கையாளர்களுக்கு தெளிவாக விபரித்து, கிடைக்கக் கூடியதாகவுள்ள மாற்று சாதனங்கள் சேவைகள் பற்றிய ஒரு ஒப்பீட்டினையும் வழங்குவதுடன் வாடிக்கையாளர்களுக்கு ஒரு தீர்மானத்தினை மேற்கொள்வதற்கான நியாயமான நேரத்தினையும் வழங்குதல்;

ஈ) சாதனங்கள் அல்லது சேவைகளினுடைய விபரங்களும், அவற்றினுடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பெறப்பட்டது எனவும் அவை விபரிக்கப்பட்டன எனவும், புரிந்து கொள்ளப்பட்டன எனவும் வாடிக்கையாளர்களிலிருந்தான ஒரு உறுதிப்பாட்டை எழுத்து மூலமாகப் பெறுதல்;

உ) சாதனங்கள் அல்லது சேவைகள் தொடர்பான அனைத்து ஆவணங்களும் வாடிக்கையாளரால் பூரணப்படுத்தப்பட்டு கையொப்பமிடப்பட வேண்டும். (பூரணப்படுத்தப்படாத ஆவணங்கள், மற்றும் வெற்றுத்தாள்களில்/ஆவணங்களில் கையொப்பங்கள் பெறப்படுதல் என்பன தவிர்க்கப்படுதல் வேண்டும்);

ஊ) சாதனங்கள் அல்லது சேவைகள் மீதான ஒப்புக் கொள்ளப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உரிமம் பெற்ற வங்கிகளால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு மாற்றங்களும் எழுத்து மூலமாகவோ அல்லது பத்திரிகை அறிவுறுத்தல் ஊடாகவோ அல்லது வேறு ஏதாவது பொருத்தமான வழியில் அம்மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

3.2 வாடிக்கையாளர்கள் கீழே குறிப்பிடப்பட்ட "நியதிகள் மற்றும் நிபந்தனைகளை" விசேடமாக அறிந்து கொள்வதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றார்கள்.

அ) வட்டிக் கொடுப்பனவுகளைக் கணிக்கும் முறைமை உள்ளடங்கலாக வாடிக்கையாளரால் செலுத்தப்படுவதற்கு வேண்டப்படுகின்ற ஏதாவது வட்டி வீதங்கள்/ கட்டணங்கள் மற்றும் தரகுகள் போன்ற வங்கியினுடைய பொது அறவீடுகள் பற்றிய விபரங்கள்.

ஆ) முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தீர்வு காணும் முறைமைக்கான வங்கியினுடைய செயல்முறை.

இ) வாடிக்கையாளரால் அவர்களின் கடப்பாடுகள் மீது ஏதாவது தவறு இழைக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு வங்கி பின்பற்றக் கூடிய மீட்பு நடவடிக்கைகளின் முறைமையும் அவை சம்பந்தமான வங்கியின் செலவை வாடிக்கையாளரிடமிருந்து திரும்பப் பெறுதலும்.

ஈ) வாடிக்கையாளர்களால் சாதனம்/சேவை முதிர்ச்சியடையுமுன் பெறப்படும்போது அல்லது இரத்துச் செய்யப்படும்போதான தொடர்புபட்ட வாடிக்கையாளர்களினால் செலுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்ட ஏதாவது நட்டஈடு.

உ) கணக்குகளினை ஆரம்பித்தல், கணக்குகளினை மூடுதல், கணக்குகளினைப் பராமரித்தல் (உ+ம் ஆகக் குறைந்த இருப்பு), வாடிக்கையாளர்களின் நிதிப் பரிமாற்றம் தொடர்பான ஏதாவது கட்டுப்பாடுகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் செயற்படாத கணக்குகள் மீதான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

ஊ) வாடிக்கையாளர்களின் தகவலினை சட்ட பூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு வெளிப்படுத்தல்.

எ) (i) சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் குறிக்கப்பட்ட வரையறைக்கு மேலான கொடுக்கல் வாங்கல்களை நிதிசார் புலனாய்வு பிரிவிற்கு அறிக்கையிடல்

(ii) கடன் அட்டைகள்/நிதிசார் கருவிகள் களவு போகின்ற சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர் பின்பற்ற வேண்டிய அறிக்கையிடும் செயல்முறைகள்

(iii) வங்கி மற்றும் வாடிக்கையாளரினுடைய பொறுப்புகள் தொடர்பான விதிகள்.

ஏ) ஒரு கடனுக்காக பிணையாக வைத்திருக்கப்படும் சொத்துக்களை மீட்பதைத் தடை செய்யும்போது வங்கியினால் பின்பற்றப்படும் செயல்முறைகளும் அவற்றின் மீதான பின் விளைவுகளும், வாடிக்கையாளருக்குக் கிடைக்கக் கூடியதான தேர்வுகளும்.

4. வங்கிகளால் சாதனங்கள்/ சேவைகளை இரத்துச் செய்தல் மீளப் பெறுதல் என்ப வற்றிலிருந்தான நட்டஈடு

விசேடமாக வைப்புச் சாதனங்களான ஏற்கனவே ஒப்பந்தத்திலிருக்கும் சாதனம்/அல்லது சேவையை மீளப் பெறுவதற்கு/இரத்துச் செய்வதற்கு ஒரு வங்கி எதிர்பார்க்கின்ற சந்தர்ப்பத்தில் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்ட வெளியேறும் நட்டஈட்டு திட்டத்துடன் போதுமானளவு காலத்தினையும் பெறுவதற்கு வாடிக்கையாளர்கள் உரிமை கொண்டிருக்கிறார்கள்.

5\. வங்கிகளின் முகவர்களிட மிருந்து பாதுகாத்தல்

உரிமம் பெற்ற வங்கிகளினால் வாடிக்கையாளர் சேவைகளுக்காக நியமிக்கப்பட்ட முகவர்களினுடைய விபரங்களை அறிவதற்கும், பின்வரும் ஏதாவது ஒரு நடவடிக்கையை தவிர்ப்பதற்கும் வங்கிகளால் அவர்களுக்கு வழங்கப்பட்ட நடத்தை கோட்பாடு பற்றி அறிந்து கொள்வதற்கும் வாடிக்கையாளர்கள் உரிமை கொண்டிருக்கின்றார்கள்.

அ) வாடிக்கையாளர்களை துன்புறுத்தல் செய்தல்.

ஆ) அவமரியாதையான கடன் சேகரிப்பு நடைமுறைகள்.

இ) வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்களை ஏனையோருக்கு வெளிப்படுத்தல்.

ஈ) சாதனம்/சேவைகள் பற்றி பிழையான அல்லது தவறுதலான தகவல்களை வழங்குதல்.

உ) வங்கியினுடைய சாதனங்கள்/சேவைகளை பொது மக்கள் அல்லது வாடிக்கையாளர்கள் வாங்குவதற்கு முறையற்ற விதத்தில் தூண்டுதல்.

ஊ) வங்கிக்கு வெளியே ஏதாவது ஒரு பாதுகாப்பு ஆவணத்தில் கையொப்பத்தை பெறுவதில் ஈடுபடுதல்.

6\. முறையீட்டு நடவடிக்கைகள் மற்றும் நிவாரணம்

வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளை வெளிப்படையாகவும் வினைத்திறனுடனும் தீர்த்து வைப்பதற்கு உரிமை கொண்டுள்ளார்கள். இதன் பிரகாரம் உரிமம் பெற்ற வங்கிகள்

அ) வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையிலிருக்கும் முரண்பாட்டினை விரைவில் நிவர்த்தி செய்வதற்கும், குறுங்காலத்திற்குள் முறைப்பாடுகளை கையாளுவதற்கும், வாடிக்கையாளர்கள் திருப்தியாகாதவிடத்தில் முறைப்பாடுகளை முன்னெடுத்து வழிநடத்துவதற்கும் மற்றும் தவறாக ஏதாவது கட்டணம் அறவிடப்பட்டிருப்பின் மீளச் செலுத்தவும் விரைவானதும், வினைத்திறனுமான தீர்வினை அமுல்படுத்தல் வேண்டும்;

ஆ) முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக எழுத்துமூலமான முறைமையை வைத்திருப்பதுடன் அம் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்;

இ) நியாயமான குறுகிய காலத்திற்குள் முறையீடு பெற்றுக் கொண்டதை எழுத்து மூலமாக தெரியப்படுத்துவதுடன், முறையீடு தொடர்பாக கையாளப்படும் தீர்வு முறை மற்றும் முறையீட்டை கையாளும் அலுவலர்/அலுவலர்களின் தொடர்பு விபரங்களையும் முறையீட்டாளர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்;

ஈ) வாய்மூலம் அல்லது எழுத்துமூலம் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுப்பதுடன் கட்டாயமாக எழுத்துமூலம் மட்டும்தான் முறைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்தலாகாது;

உ) செயற்பாட்டு ஈடர்நேர்வுகளுடன் தொடர்புபட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் கடமையின் ஒரு பகுதியாக முறைப்பாடுகள் மற்றும் தீர்வுச் செயற்பாடுகள் தொடர்பாக முகாமைத்துவ தகவல் முறைமையை நிறுவுதல் வேண்டும்;

ஊ) ஒவ்வொரு கிளையிலும் அல்லது அலுவலகத்திலும் முறைப்பாடுகளை கையாளுவதற்கு மற்றும் தகவல்களை முகாமைசெய்வதற்கு ஒரு அலுவலரை ஒதுக்க வேண்டும்;

எ) முறைப்பாடானது திருப்தியாக தீர்வு காணப்படாதவிடத்தில் “நிதிசார் குறைகேள் அதிகாரி” அல்லது நீதிமன்றங்கள் ஊடான கட்டுப்படியான மற்றும் தகுதியான போக்கிடத்தை நாடுவதற்கு வாடிக்கையாளருக்கு ஆலோசனை கூறுதல் வேண்டும்.

7\. விசேட கவனிப்பும் அக்கறையும்

வாடிக்கையாளர்களில் அதாவது வயோதிபர், வலது குறைந்தோர் அல்லது குறைந்த நிதிசார் கல்வியறிவுடைய வாடிக்கையாளர் நியாயமான வங்கிச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக விசேட கவனத்தை பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் உரித்துடையவர்களாவர்.

8\. வங்கி சார்ந்த வாடிக்கை யாளரின் கடப்பாடுகள்

வாடிக்கையாளர்கள் தமது கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் வங்கிகளுடன் நல்லுறவை பேண வேண்டும். இது தொடர்பாக

அ) வாடிக்கையாளர்கள் தமது மீளச் செலுத்தும் இயலுமை வரையறைக்கு மேல் கடன் பெறலாகாது

ஆ) வாடிக்கையாளர்கள் மீள் கொடுப்பனவுகள் அல்லது தவணைக் கட்டணங்கள் பாக்கி நிலுவைகளுக்கு செல்வதற்கு இடமளிக்காமல் இருப்பதுடன் காலம் தவறாத மீள் கொடுப்பனவுகள் வங்கிகளுடன் சுமுகமான உறவுகளை உருவாக்கும் என்பதனை அறிந்திருக்க வேண்டும்.

இ) வாடிக்கையாளர் குறிப்பிட்ட கடன் முடிவு திகதிக்கு முன்னர் அவருடைய கடனைத் திருப்பிச் செலுத்த விரும்பினால், கடனை பெற்றுக் கொள்ளும்போது ஒப்புக்கொண்டபடி கடன் தொகையினைவிட மேலதிக ஒரு பணத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.

ஈ) வாடிக்கையாளர் தான் ஏற்றுக் கொண்டபடி கடன் தொகையினை செலுத்த முடியாமல் போனால் “நியதிகள் மற்றும் நிபந்தனைகளில்” குறிப்பிடப்பட்டதைப்போன்று வங்கியினுடைய செலவுகள் உள்ளடங்கலாக வங்கிக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையினை மீட்டெடுப்பதற்கான உரித்தை வங்கி கொண்டிருக்கும்.

உ) வாடிக்கையாளர் நிதியியல் இடர்பாடுகளை சந்தித்தால், அவர்கள் வங்கிக்கு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அது பற்றி தெரிவித்தல் வேண்டும். எவ்வளவு விரைவில் வங்கியொன்று வாடிக்கையாளரின் பிரச்சனைகளை கலந்தாலோசிக்குமோ அந்தளவிற்கு இலகுவாக அது வாடிக்கையாளருக்கும் வங்கிக்குமிடையில் ஒரு தீர்வினை அடைவதற்கு உதவியாக இருக்கும்.

ஊ) வாடிக்கையாளர் கடன் பணம் செலுத்தத் தவறும் போது, முதலாவது நடவடிக்கையாக வங்கி வாடிக்கையாளரை தொடர்பு கொள்ளல் வேண்டும். எனவே எல்லா சந்தர்ப்பங்களிலும் வாடிக்கையாளர்கள் அவர்களின் முகவரி மற்றும் தொடர்பு விபரங்களில் தென்படும் மாற்றங்களை வங்கிக்குக் கட்டாயமாக அறிவித்தல் வேண்டும்.

எ) வாடிக்கையாளர்கள் ஒப்பந்தத்தினை மேற்கொள்ள முன்னர் வங்கிகளினால் வழங்கப்படும் சாதனங்கள்/சேவைகள் பற்றிய முழு அறிவு மற்றும் புரிந்துணர்வினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஏ) வாடிக்கையாளர்கள் தேவைப்படுத்தப்பட்ட முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களையும் மற்றும் துணை ஆவணங்களையும் உரிய நேரத்தில் வங்கிகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ஐ) வாடிக்கையாளர்கள் வங்கியுடன் செய்யும் சகல கொடுக்கல் வாங்கல்களிலும் உரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஒ) வாடிக்கையாளர்கள் வங்கியினுடனான அவர்களினுடைய கணக்குகளில் ஏதாவது மோசடி நிகழ்ந்தால் அல்லது அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அத்தகைய சம்பவங்களை அவர்கள் அறிய நேரிடும் போது உரிய முறையில் வங்கிக்கு தெரிவிக்க வேண்டும்.

ஓ) வாடிக்கையாளர்கள் வங்கிகளால் வழங்கப்பட்ட ஏனைய இலத்திரனியல் அட்டைகளினுடைய பாதுகாப்பு அளவீடுகள், இரகசியக் குறியீட்டு இலக்கங்களைக் கையாளுதல், பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துதல் போன்றவற்றில் மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஔ) வாடிக்கையாளர் நீதிமன்ற சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டாலொழிய, வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையின் மீதானதொரு தகராறு நீங்கலான மேற்கூறப்பட்ட வாசகங்கள் 2 தொடக்கம் 7 வரையிலான வங்கிகளின் கடப்பாடுகளில் ஏதாவதொரு செயற்பாட்டுக் குறைவை அவர்களின் கடன் செலுத்தாமைக்கு அல்லது தாமதமாக செலுத்தலுக்கு ஒரு காரணமாகக் கொள்ளக் கூடாது. அத்தகைய எல்லாச் சம்பவங்களும் தனித்தனியாக அல்லது வெவ்வேறாக தீர்க்கப்பட வேண்டும்.

**தொடர்பு எண்: 02/17/600/0009/002**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2011 ஒத்தோபர் 27

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினது முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

## குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

அமைச்சரின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் இரண்டினதும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான குறித்துரைக்கப்பட்டதொரு நாணயமாக சீனாவின் றென்மின்பி குறித்துரைத்திருக்கின்றது என்பது பற்றி தங்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது.

இதற்கமைய, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23, 25 மற்றும் 26ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட 2008 செத்தெம்பர் 12ஆம் நாளிடப்பட்ட 2008ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்திட்டம்) கட்டளை குறித்துரைக்கப்பட்ட நாணயமாக சீன றென்மின்பி இனை உள்ளடக்கும் விதத்தில் இத்தால் திருத்தப்பட்டிருக்கிறது.

குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் திருத்தப்பட்ட அட்டவணையினை உள்ளடக்கியுள்ள 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் கட்டளை இணைக்கப்பட்டுள்ளது.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23ஆம், 25ஆம் மற்றும் 26ஆம் பிரிவுகளின் கீழ் அமைச்சரின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை

கே ஜீ டி டி தீரசிங்க
**மூத்த துணை ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2011 ஒத்தோபர் 27

### 2011ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்டம், 1ஆம் இலக்கக் கட்டளை

### வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை

எடுத்துக்காட்டல்

இக்கட்டளையானது, 2011ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்டம் 01ஆம் இலக்கக் கட்டளை என எடுத்துக்காட்டப்படலாம். இக்கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க சட்டத்தினுடையவைகளாக இருக்கும்.

குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

இக்கட்டளையின் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்கள் வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்திட்டம்) கட்டளையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இக்கட்டளையிலுள்ள அட்டவணை 2008ஆம் ஆண்டின் 12ஆம் நாளிடப்பட்ட 2008ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளையிலுள்ள அட்டவணைக்குப் பதிலானதாகும்.

அட்டவணை

**குறித்துரைக்கப்பட்டட வெளிநாட்டு நாணயங்கள்**

1. அவுத்திரேலியா டொலர்
2. கனடா டொலர்
3. சீன றென்மின்பி
4. டென்மார்க் குறோணர்
5. யூரோ
6. கொங்கொங் டொலர்
7. யப்பானிய யென்
8. நியூசிலாந்து டொலர்
9. நோர்வே குறோணர்
10. ஸ்டேர்லிங் பவுண்
11. சிங்கப்பூர் டொலர்
12. சுவீடிஸ் குறோணர்
13. சுவிஸ்பிராங்
14. ஐக்கிய அமெரிக்க டொலர்

**தொடர்பு எண்: 02/17/800/0014/02**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2011 ஒத்தோபர் 31

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்களுக்கான திருத்தங்கள்**

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்களின் 3.1(iii) ஆம் பந்திக்கான திருத்தமொன்றும் மாதாந்த அடிப்படையில் முதலீட்டுக் கணக்கின் பயன்பாடு தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்கும் திருத்தப்பட்ட படிவமும் இணங்கியொழுவதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

இணைப்பு I

**2011 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் தொடர்பாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான வழிகாட்டல்களுக்கான திருத்தம்**

மேலேயுள்ளவற்றின் 3.1(iii) இற்குப் பதிலாக பின்வரும் வழிகாட்டல்கள் புகுத்தப்படுகின்றன.

3.1(iii) 2011 நவெம்பர் 1ஆம் நாள் தொடக்கம் பின்வரும் நோக்கங்களுக்கு மட்டுமே கடன் வழங்கப்படல் வேண்டும்.

(அ) பெருந்தோட்டப் பயிர்களின் பயிர்ச் செய்கை/ பழவர்க்கங்கள், காய்கறிகள், கொக்கோ, வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட வேளாண்மைப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி என்பனவற்றிற்கான நீண்ட காலக் கடன்கள்

(ஆ) தொழிற்சாலைகள்/ ஆலைகளை நவீனமயப்படுத்தல்/ நிறுவுதல்/ விரிவாக்கம் செய்தல்

(இ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்: ரூ.600 மில்லியனுக்கும் குறைவான ஆண்டு மொத்த புரள்வினைக் கொண்ட தொழில் முயற்சிகளுக்கு ரூ.200 மில்லியன் வரையிலான கடன்கள்

(ஈ) தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் வெளிமூலங்களிலிருந்து வியாபாரச் செயற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல்

(உ) உட்கட்டமைப்பு அபிவிருத்தி

(ஊ) கல்வி: தொழிற் பயிற்சி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி

(எ) வீடமைப்பு: வதிவிட நோக்கங்களுக்கான வீட்டு நிருமாணத்திற்காக வாடிக்கையாளரொருவருக்கு ரூ.2 மில்லியன் வரை

(ஏ) சுற்றுலா விடுதிகளின் நிருமாணம் மற்றும் அதனுடன் தொடர்பான நோக்கங்களுக்கு

(ஐ) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களை மீளமைப்புச் செய்தல்

**முதலீட்டு நிதியக் கணக்கின் பயன்பாடு**

வங்கியின் பெயர் :

முடிவடைந்த மாதம் :

(ரூ.000')

| விடயம் | | | தொகை |
|---|---|---|---|
| **அ. முதலீட்டு நிதியக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட மொத்தம்** | | | XXXX |
| **ஆ. வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள்** | | | |
| | | | |
| **துறை** | **விபரணம்** | **தொகை** | |
| (அ) வேளாண்மை | | XX | |
| (ஆ) தொழிற்சாலை/ ஆலை நவீனமயப்படுத்தல் | | XX | |
| (இ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் | | XX | |
| (ஈ) தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளிமூலங்களிலிருந்து வியாபாரப் பணிகளை பெற்றுக் கொள்ளல் | | XX | |
| (உ) உட்கட்டமைப்பு அபிவிருத்தி | | XX | |
| (ஊ) கல்வி | | XX | |
| (எ) வீடமைப்பு | | XX | |
| (ஏ) சுற்றுலா விடுதிகளின் கட்டுமானம் மற்றும் அதனுடன் தொடர்பான நோக்கங்களுக்கானவை | | XX | |
| (ஐ) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களின் மீளமைப்பு | | XX | XXXX |
| **இ. அரச பிணையங்களிலான மொத்த முதலீடு - நீண்ட காலம்** | | XX | XXXX |
| **- குறுங்காலம்** | | | XXXX |
| **ஈ. பயன்படுத்துவதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மீதி** | | | XXXX |

குறிப்பு: அறிக்கையிடும் மாதத்திற்கு அடுத்து வரும் ஒவ்வொரு மாதத்தின் 10ஆம் திகதியளவில் மேற்குறிப்பிட்ட விபரங்களை mayadunne@cbsl.lk மற்றும் jayaminiw@fpd.treasury.gov.lk என்ற முகவரிகளுக்கான பிரதிகளுடன் dbsd@cbsl.lk இற்கு மின்னஞ்சல் செய்தல் வேண்டும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

பீ டி டபிள்யு ஏ சில்வா
**மூத்த துணை ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2011 ஒத்தோபர் 31

**2011ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை**

**மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தம்**

2007ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரைகளின் பணிப்புரை 1(2)இன் அட்டவணை 1இன் பந்தி 6.4.3.1.8(i)(ஈ) இல் தரப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் வெளிப்படுத்துகைகளுக்கு தகைமை பெறுவதற்கான பிரமாணத்திற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் வெளிப்படுத்துகை

i. சிறிய நடுத்தர தொழில் முயற்சியொன்றிற்கான கடன் வழங்கல் வங்கியின் உயர்ந்தபட்ச கொடுகடன் வெளிப்படுத்துகை ரூ.200 மில்லியனை விஞ்சக்கூடாது.

ii. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியின் ஆண்டு மொத்தப் புரள்வு ரூ.600 மில்லியனை விஞ்சக்கூடாது.

iii. ஆண்டு மொத்தப் புரள்வு மிகப் பிந்திய கிடைக்கத்தக்க கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றினை அல்லது பட்டயக் கணக்காளரினால் அல்லது உள்நாட்டரசிறைத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளத்தக்க அங்கீகாரம் பெற்ற கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்ட நிதியியல் கூற்றினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். வரைவு நிதியியல் கூற்றினைப் பொறுத்த வரையில், மொத்தப் புரள்வானது பட்டயக் கணக்காளரினால் அல்லது அங்கீகாரம் பெற்ற கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்டு ஓராண்டிற்குள் பெறப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

iv. ரூ.50 மில்லியனுக்குக் குறைவான கொடுகடன் வசதிகளை வழங்கும் விடயத்தினைப் பொறுத்தவரை, மேலே (iii) இல் உள்ள நிபந்தனை ஏற்புடைத்தாகாது என்பதுடன் வங்கிகள் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் ஆண்டு மொத்தப் புரள்வினை சரிபார்ப்பதற்கு தமது சொந்த உள்ளகப் பொறிமுறையினை பின்பற்றுதல் வேண்டும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஒ(1) ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

பீ டி டபிள்யு ஏ சில்வா
**மூத்த துணை ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2011 ஒத்தோபர் 31

## 2011ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை

## மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தம்

2007ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரைகளின் பணிப்புரை 1(2)இன் அட்டவணை 1இன் பந்தி 6.4.3.1.8(i)(ஈ) இல் தரப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் வெளிப்படுத்துகைகளுக்கு தகைமை பெறுவதற்கான பிரமாணத்திற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் வெளிப்படுத்துகை

i. சிறிய நடுத்தர தொழில் முயற்சியொன்றிற்கான கடன் வழங்கல் வங்கியின் உயர்ந்தபட்ச கொடுகடன் வெளிப்படுத்துகை ரூ.200 மில்லியனை விஞ்சக்கூடாது.

ii. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியின் ஆண்டு மொத்தப் புரள்வு ரூ.600 மில்லியனை விஞ்சக்கூடாது.

iii. ஆண்டு மொத்தப் புரள்வு மிகப் பிந்திய கிடைக்கத்தக்க கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றினை அல்லது பட்டயக் கணக்காளரினால் அல்லது உள்நாட்டரசிறைத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளத்தக்க அங்கீகாரம் பெற்ற கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்ட நிதியியல் கூற்றினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். வரைவு நிதியியல் கூற்றினைப் பொறுத்த வரையில், மொத்தப் புரள்வானது பட்டயக் கணக்காளரினால் அல்லது அங்கீகாரம் பெற்ற கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்டு ஓராண்டிற்குள் பெறப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

iv. ரூ.50 மில்லியனுக்குக் குறைவான கொடுகடன் வசதிகளை வழங்கும் விடயத்தினைப் பொறுத்தவரை, மேலே (iii) இல் உள்ள நிபந்தனை ஏற்புடைத்தாகாது என்பதுடன் வங்கிகள் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் ஆண்டு மொத்தப் புரள்வினை சரிபார்ப்பதற்கு தமது சொந்த உள்ளகப் பொறிமுறையினை பின்பற்றுதல் வேண்டும்.

**தொடர்பு எண்: 02/17/600/0034/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2011 நவெம்பர் 8

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

## வங்கித்தொழில் சட்டம், கரைகடந்த வங்கித்தொழில் திட்டக் கட்டளை 2000 இற்கான திருத்தம்

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23, 25 மற்றும் 26ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட 2000ஆம் ஆண்டின் 7ஆம் நாளிடப்பட்ட வங்கித்தொழில் சட்டம் (கரைகடந்த வங்கித்தொழில் திட்டம்) கட்டளை 2000 இன் 5ஆம் கிளை வாசகம் திருத்தப்பட்டுள்ளமை பற்றி தங்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட திருத்தம் தொடர்பான 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் கட்டளை இணைக்கப்பட்டுள்ளது.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23ஆம், 25ஆம் மற்றும் 26ஆம் பிரிவுகளின் கீழ் அமைச்சரின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை.

கே ஜி டி டி தீரசிங்க
**மூத்த துணை ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2011 நவெம்பர் 8

**2011ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்டம், 2ஆம் இலக்கக் கட்டளை**

**வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை**

எடுத்துக்காட்டல்

1. இக் கட்டளையானது 2011ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்டம், 2ஆம் இலக்கக் கட்டளை என எடுத்துக் காட்டப்படலாம். இக்கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க சட்டத்தினுடையவைகளாக இருக்கும்.

2000ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 7ஆம் நாள் விடுக்கப்பட்ட வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபார) கட்டளையின் கிளை வாசகம் 5 இற்கான திருத்தம்

2. 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 7ஆம் நாளிடப்பட்ட வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளையின் 5ஆம் கிளை வாசகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய கிளை வாசகம் புகுத்தப்படுகிறது.

வதிவற்றோர் கணக்கொன்றிற்கு அனுமதிக்கப்பட்ட வைப்புக்கள்

5. கரைகடந்த வங்கித்தொழில் பிரிவொன்றில் வதிவற்றவரினால் பேணப்படும் கணக்கொன்றிற்கு உள்முக பணவனுப்பல்கள் மூலம் பெறப்படும் நிதியங்களையும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் பொதுவான அனுமதி அல்லது சிறப்பு அனுமதியின் கீழ் அனைத்து நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல் தொடர்பாக உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாணயங்களிலமைந்த நிதிய மாற்றல்களையும் வரவு வைக்கலாம்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2011 திசெம்பர் 16

**2011ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை**

**இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பங்குச் சந்தையின் வெளிப்படுத்துகைக்குள்ளாகும் தன்மை மீதான பணிப்புரைக்கான திருத்தம்**

வங்கிகள், பங்குச் சந்தையின் பாதிப்பிற்குள்ளாகும் தன்மை பற்றி நாணயச் சபை மீளாய்வு செய்ததுடன் கடன் வசதி வர்த்தகப்படுத்தல் வசதிகள் மீது மொத்தக் கடன்களில் 5 சதவீதம் கொண்ட கொடுகடன் வரையறைகள் குறைந்தளவில் பயன்படுத்தப்பட்டமையினையும் முன்மதியுடைய இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய வங்கிகளின் கடப்பாடுகளையும் கருத்திற் கொண்ட நாணயச் சபை திடீர் சொத்து விலை அதிகரிப்பு குமிழ்கள் தோன்றுவதற்கான சாத்தியம் இல்லை என்றே கருதியது. ஆகவே நாணயச் சபை, பங்குகளின் மீதான கடன் வசதியளிக்கும் வர்த்தகத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த கொடுகடன் எல்லையினை அகற்றுவதற்குத் தீர்மானித்ததுடன் பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகைகளை கண்காணித்து, தாங்கத்தக்க மட்டங்களின் அடிப்படையில் முன்மதியுடைய உள்ளக வரையறைகளுக்குள் அவற்றைக் கட்டுப்படுத்துமாறு வங்கிகளின் பணிப்பாளர் சபையினை கேட்டுக் கொண்டது.

இதற்கமைய, 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(i) பிரிவினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி நாணயச் சபை, 2011ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையினை பின்வருமாறு திருத்தும் விதத்தில் உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளுக்கான பங்குச் சந்தை வெளிப்படுத்துகை மீது 2011ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையினை இத்தால் விடுக்கிறது.

1. பணிப்புரை இலக்கம் 1(iii) பின்வருவனவற்றை இடுவதன் மூலம் அகற்றப்படுகிறது.

   (iii) பணிப்பாளர் சபை கீழேயுள்ள 4ஆம் பணிப்பரையில் குறிப்பிடப்பட்டுள்ள இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பிற்கு இணங்க தாங்கக் கூடிய மட்டமொன்றின் அடிப்படையில் பங்குகள் மீதான கடன் வசதி வழங்கல் வர்த்தகப்படுத்தல் மீதான உள்ளக வரையறைகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியதுடன் பங்குகள் மீதான கடன் வசதி வழங்கல் வர்த்தகத்திற்கான மொத்த வெளிப்படுத்துகையினை அத்தகைய வரையறையொன்றிற்குள் பேணுதலும் வேண்டும்.

2. 7ஆம் இலக்க பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1) ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2011 திசெம்பர் 16

**2011ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை**

**இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் பங்குச் சந்தையின் வெளிப்படுத்துகைக்குள்ளாகும் தன்மை மீதான பணிப்புரைக்கான திருத்தம்**

வங்கிகள், பங்குச் சந்தையின் பாதிப்பிற்குள்ளாகும் தன்மை பற்றி நாணயச் சபை மீளாய்வு செய்ததுடன் கடன் வசதி வர்த்தகப்படுத்தல் வசதிகள் மீது மொத்தக் கடன்களில் 5 சதவீதம் கொண்ட கொடுகடன் வரையறைகள் குறைந்தளவில் பயன்படுத்தப்பட்டமையினையும் முன்மதியுடைய இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய வங்கிகளின் கடப்பாடுகளையும் கருத்திற் கொண்ட நாணயச் சபை திடீர் சொத்து விலை அதிகரிப்பு குமிழ்கள் தோன்றுவதற்கான சாத்தியம் இல்லை என்றே கருதியது. ஆகவே நாணயச் சபை, பங்குகளின் மீதான கடன் வசதியளிக்கும் வர்த்தகத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த கொடுகடன் எல்லையினை அகற்றுவதற்குத் தீர்மானித்ததுடன் பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகைகளை கண்காணித்து, தாங்கத்தக்க மட்டங்களின் அடிப்படையில் முன்மதியுடைய உள்ளக வரையறைகளுக்குள் அவற்றைக் கட்டுப்படுத்துமாறு வங்கிகளின் பணிப்பாளர் சபையினை கேட்டுக் கொண்டது.

இதற்கமைய, 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(i) பிரிவினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி நாணயச் சபை, 2011ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையினை பின்வருமாறு திருத்தும் விதத்தில் உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளுக்கான பங்குச் சந்தை வெளிப்படுத்துகை மீது 2011ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையினை இத்தால் விடுக்கிறது.

1. பணிப்புரை இலக்கம் 1(iii) பின்வருவனவற்றை இடுவதன் மூலம் அகற்றப்படுகிறது.

   (iii) பணிப்பாளர் சபை கீழேயுள்ள 4ஆம் பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பிற்கு இணங்க தாங்கக் கூடிய மட்டமொன்றின் அடிப்படையில் பங்குகள் மீதான கடன் வசதி வழங்கல் வர்த்தகப்படுத்தல் மீதான உள்ளக வரையறைகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியதுடன் பங்குகள் மீதான கடன் வசதி வழங்கல் வர்த்தகத்திற்கான மொத்த வெளிப்படுத்துகையினை அத்தகைய வரையறையொன்றிற்குள் பேணுதலும் வேண்டும்.

2. 7ஆம் இலக்க பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**

இல. 1690/11 வியாழக்கிழமை 2011 சனவரி 27

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி **I** : தொகுதி **(I)** - பொது

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**நாணயச் சட்டம்**

நாணயச் சட்டம் (அத்தியாயம் 422) பிரிவு 32உ இன் கீழ் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்

**தலைவர்**
**நாணயச் சபை**

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2011 சனவரி 26

**இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள்**

**2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்**

1. எடுத்துக்காட்டல் 1.1 இந்த ஒழுங்குவிதிகள் 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| 2. | மூல ஒழுங்குவிதியில் திருத்தங்கள் | 2.1 | 2010ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28ஆம் திகதியிடப்பட்ட 1673/11ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புதித் திட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகிறது. |
| | "ஒழுங்குவிதி" என்ற சொல்லுக்கு மாற்றீடு | 2.2 | "ஒழுங்குவிதி" எனும் சொல் பிரயோகிக்கப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் "ஒழுங்குவிதி" எனும் சொல் மாற்றீடு செய்யப்படுகின்றது. |
| | ஒழுங்குவிதி 5.2 (iii) இற்கான மாற்றீடு | 2.3 | ஒழுங்குவிதி 5இல் பந்தி 5.2 (iii) நீக்கப்பட்டு, அந்த ஒழுங்குவிதி பின்வரும் பந்தி மூலம் மாற்றீடு செய்யப்படுகின்றது: |

"5.2(iii) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கான 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிச் சட்டம் (கம்பனி ஆளுகை) என்பவற்றினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான பணிப்பாளர்கள், முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் பங்குதாரர்கள் நீங்கலாக ஏனைய தொடர்பான தரப்பினர்களின் வைப்புப் பொறுப்புக்கள்."

**சுற்றிக்கை எண்: 01/2011**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2011 ஏப்பிறல் 20

*இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் அனைத்து உறுப்புரிமை நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் - தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2010 திசெம்பர் 09ஆம் நாளிடப்பட்ட இல. 02/2010 கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 4(இ) இத்தால் பின்வருமாறு திருத்தப்படுவதாக அனைத்து உறுப்புரிமை நிறுவனங்களுக்கும் அறியத் தரப்படுகிறது.

"வெளிநாட்டுக் கிளைகளிலுள்ள வைப்புக்கள் தகுதியுடைய வைப்புக்களாக கருதப்படக்கூடாது"

இதன்படி, கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிலுள்ள வைப்புக்கள் அடுத்த கட்டுப்பணத் திகதியிலிருந்து தகுதியுடைய வைப்புக்களாக கருதப்படல் வேண்டும்

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

பிரதி: வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைப் பணிப்பாளர்
இலங்கை மத்திய வங்கி

இலங்கை மத்திய வங்கி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை
**அதிவிசேடமானது**

இல. 1711/14 புதன்கிழமை 2011 யூன் 22

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**நாணய விதிச் சட்டம்**

நாணய விதிச் சட்டம் (அத்தியாயம் 422) பிரிவு 32உ இன் கீழ் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2011 யூன் 20

**இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள்**

**2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எடுத்துக்காட்டல் | 1.1 | இந்த ஒழுங்குவிதிகள் 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். |
| 2. | மூல ஒழுங்குவிதியில் திருத்தங்கள் | 2.1 | 2010ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28ஆம் திகதியிடப்பட்ட 1673/11ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகிறது. |
| | | 2.2 | ஒழுங்குவிதி 7இல் பந்தி 7.3 நீக்கப்பட்டு, அந்த ஒழுங்குவிதி பின்வரும் பந்தி மூலம் மாற்றீடு செய்யப்படுகின்றது: |
| | ஒழுங்குவிதி 7.3 இற்கான மாற்றீடு | "7.3 | இந்நிதியத்ஶ்ரீதிற்கான பற்றுக்கள் பின்வருமாறு இருக்கும். வைப்பாளர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள், முதலீடுகள் மற்றும் நாணயச் சபையால் தீர்மானிக்கப்பட்ட நடைமுறைச் செலவுகள் என்பனவாகும்." |

**தொடர் எண்: 12/02/008/0002/01**

நாணயத் திணைக்களம்
2011 மாச்சு 07

**சுற்றறிக்கை எண்: 01/2011**
அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

**இலங்கையில் போலி நாணயத் தாள்/ சந்தேகத்திற்குரிய நாணயத் தாள்களைக் கையாள்வதற்கான வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிட்ட விடயம் மீது 2009.01.01ஆம் திகதியிடப்பட்ட எமது சுற்றறிக்கை இல. 01/2009 தொடர்பானது. அநேக வங்கிகள் மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்களை பின்பற்றவில்லை என்பதனை நாம் அவதானித்திருக்கின்றோம். எனவே, வங்கிகள் வழிகாட்டல்களுக்குக் கடுமையாக இணங்கியொழுக வேண்டும் என்பதற்காக அதனை மீண்டும் அனுப்பி வைக்க விரும்புகின்றோம்.

<u>சந்தேகத்திற்குரிய/ போலி நாணயத் தாள்களை வங்கிப்பீடத்தில் கண்டுபிடித்தல்</u>

**அனைத்து நாணயத்தாள்களும் உண்மையான நாணயத் தாள்களா அல்லது போலி நாணயத் தாள்களை என்பதனை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்காக வங்கிப்பீடத்தில் அவற்றினை முழுமையாக பரிசோதித்துக் கொள்வதற்கு மிகச் சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். வங்கிகள் அவற்றினால் பயன்படுத்தப்படும் எண்ணும்/ தரம் பிரிக்கும் பொறிகள் போலி நாணயத் தாள்களைக் கண்டுபிடிக்கும் திறமை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.**

1.1 சந்தேகத்திற்குரிய தாளாக இருப்பின் ஒன்றிற்கு மேற்பட்ட பாதுகாப்புப் பண்புகளை அவதானித்தல் வேண்டும்.

1.2 நாணயத் தாள் போலி நாணயத் தாளாக இருக்குமென சந்தேகப்படின் அதனை வாடிக்கையாளரிடம் திரும்பக் கொடுக்கக்கூடாது.

1.3 போலி நாணயத் தாளாக இருக்கக்கூடும் என சந்தேகப்படும் நாணயத் தாளை துளையிடவோ அல்லது வாடிக்கையாளரிடம் திருப்பிக் கொடுக்கவோ வேண்டாம்.

1.4 வாடிக்கையாளா் சமா்ப்பித்த நாணயத் தாள் போலியானதாக இருக்குமென சந்தேகப்படுமிடத்து, வங்கி அதில் நம்பகமான பாதுகாப்புப் பண்புகள் காணப்படாதமையை அவதானித்து அது போலி நாணயத் தாள் என முடிவு செய்யுமிடத்து வங்கி அத்தாளினை களங்கப்படுத்தாமல் அதன் மீது வாடிக்கையாளரின் கையொப்பத்தினையும் திகதியினையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

1.5 வங்கியின் முத்திரையினைப் பொறிக்கவோ அல்லது எந்த வழியிலேனும் தாளைத் துளையிடவோ வேண்டாம்.

1.6 வாடிக்கையாளரிடமிருந்து பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்:
- பெயர்
- முகவரி
- தொலைபேசி இலக்கம்
- தேசிய அடையாள அட்டை இலக்கம்
- வாடிக்கையாளா் எவ்வாறு இத்தாளினைப் பெற்றார்
- அத்தகைய தாளின்/ தாள்களின் தொடர் இலக்கம்
- தாளின்/ தாள்களின் இனம்
- தாள்களின் மொத்த எண்ணிக்கை

1.7 போலி நாணயத் தாளாக இருக்குமென சந்தேகப்படும் தாளினைக் கண்டுபிடித்ததும் **உடனடியாக** பொலிஸ் திணைக்களத்தின் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத் தாள் பணியகத்திற்கு (தொலைபேசி இலக்கம்: 24 மணி நேர தொடர்புகளுக்கு 011-2422176 அல்லது அலுவலக நேரத்தில்: 011-2326670) அறிவித்து அவர்களின் ஆலோசனையின்படி நடந்து கொள்ளவும் அல்லது அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவும்.

2. <u>தரம் பிரிக்கும் பொழுது அல்லது/ அத்துடன் எண்ணும் பொழுது கண்டறியப்பட்ட சந்தேகத்திற்குரிய/ போலி நாணயத் தாள்கள்</u>

2.1 அவை உண்மையான நாணயத் தாள்களா அல்லது போலி நாணயத் தாள்களா என்பதனை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்காக அனைத்து நாணயத் தாள்களையும் முழுமையாகப் பரிசோதிக்கவும். தாள் போலி நாணயத் தாளாக இருக்குமென சந்தேகப்படுமிடத்து வங்கி முத்திரை போன்றவற்றினால் களங்கப்படுத்தாமல் கையொப்பமும் திகதியும் இடப்படுதல் வேண்டும்.

2.2 சந்தேகத்திற்குரிய தாள்/ தாள்கள் தொடர்பான தகவல்களை (தொடர் இலக்கம், நாணயத்தின் இனம், தாளின் எண்ணிக்கை) பதிவு செய்தல் வேண்டும்.

2.3 தாள்/ தாள்கள் போலி நாணயத் தாள்களாக இருக்குமென சந்தேகப்படுமிடத்து அவற்றை போலி நாணயத் தாள் பணியத்திற்கு அல்லது அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு பதிவு செய்யப்பட்ட தகவல்களுடன் **உடனடியாக** கையளிக்க வேண்டுமென்பதுடன் பின்னைய தொடர்புகளுக்காக அதன் ஒரு பிரதியை வைத்திருத்தலும் வேண்டும். இத்தாள்களை நீண்ட காலத்திற்கு வைத்திருப்பது குற்றமொன்றாகையால் அத்தாள்களை நீண்ட காலத்திற்கு வைத்திருக்கவோ/ பத்திரப்படுத்தவோ வேண்டாம்.

3. தாள் போலியானதா அல்லது மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட உண்மையான நாணயத் தாளா என்பதனை தீர்மானிக்கின்ற ஏக அதிகாரம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

4. போலி நாணயத் தாள்களைத் தயாரிப்பது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியதொரு குற்றமாகும் என்பதுடன் தண்டனைச் சட்டக் கோவையின் 478 அ இலிருந்து ஈ வரையான பிரிவுகளின் கீழ் சிறைத் தண்டனை அல்லது தண்டம் அல்லது இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் என்பதுடன் போலி நாணயத் தாளின் தீங்குபயக்கும் தன்மையினை தணிப்பதில் இலங்கை மத்திய வங்கிக்கும் போலி நாணயத் தாள் பணியகத்திற்கும் உதவிபுரியுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

5. அனைத்து வர்த்தக வங்கிகளும் நாணயங்களைக் கையாள்வதுடன் தொடர்புபட்டுள்ள அவர்களது அனைத்து அலுவலர்களுக்கும் இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றி உடனடியாக அறியத் தரப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இச்சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்கள் அல்லது வழிகாட்டல்கள் பற்றி ஏதேனும் தெளிவுபடுத்தல்களும் உண்மையான இலங்கை நாணயத் தாள்களை அடையாளம் காண்பது தொடர்பான தகவல்களுக்கும் தயவுசெய்து நாணயத் திணைக்களத்தின் பின்வரும் அலுவலர்களைத் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| கண்காணிப்பாளர் | 0112477355 |
| மேலதிகக் கண்காணிப்பாளர் | 0112477603 |
| துணைக் கண்காணிப்பாளர் | 0112477014 |
| துணைக் கண்காணிப்பாளர் | 0112477362 |
| மூத்த உதவிக் கண்காணிப்பாளர் - நாணய முகாமைத்துவம் | 0112477364 அல்லது 2398736 |
| மூத்த உதவிக் கண்காணிப்பாளர் - ஒழுங்குவிதிகள் “உ” | 0112477130 |

ஒப்பம்

**நாணயக் கண்காணிப்பாளர்**

பிரதி: பணிப்பாளர், வங்கி மேற்பார்வை
பணிப்பாளர், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

**தொடர் எண்: 12/02/008/0002/01**

நாணயத் திணைக்களம்
2011 மாச்சு 10

**சுற்றறிக்கை எண்: 02/2011**

அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும்
அனைத்துப் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கும்
அனைத்துப் பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும்
அனைத்து முதனிலை வணிகர்களுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

## இலங்கையில் போலி நாணயத் தாள்/ சந்தேகத்திற்குரிய நாணயத் தாள்களைக் கையாள்வதற்கான வழிகாட்டல்கள்

போலி நாணயத் தாள்கள்/ சந்தேகத்திற்குரிய நாணயத் தாள்களைக் கையாள்வது தொடர்பான விடயங்கள் பற்றி பின்வரும் அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் உடனடியாக பின்பற்றுமாறு மேலேயுள்ள அனைத்து நிறுவனங்களும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

<u>சந்தேகத்திற்குரிய/ போலி நாணயத் தாள்களை காசுப்பீடத்தில் கண்டுபிடித்தல்</u>

**அனைத்து நாணயத்தாள்களும் உண்மையான நாணயத் தாள்களா அல்லது போலி நாணயத் தாள்களை என்பதனை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்காக காசுப்பீடத்தில் அவற்றினை முழுமையாக பரிசோதித்துக் கொள்வதற்கு மிகச் சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். நிறுவனங்கள் அவற்றினால் பயன்படுத்தப்படும் எண்ணும்/ தரம் பிரிக்கும் பொறிகள் போலி நாணயத் தாள்களைக் கண்டுபிடிக்கும் திறமை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.**

1.1 சந்தேகத்திற்குரிய தாளாக இருப்பின் ஒன்றிற்கு மேற்பட்ட பாதுகாப்புப் பண்புகளை அவதானித்தல் வேண்டும்.

1.2 நாணயத் தாள் போலி நாணயத் தாளாக இருக்குமென சந்தேகப்படின் அதனை வாடிக்கையாளரிடம் திரும்பக் கொடுக்கக்கூடாது.

1.3 போலி நாணயத் தாளாக இருக்கக்கூடும் என சந்தேகப்படும் நாணயத் தாளை துளையிடவோ அல்லது வாடிக்கையாளரிடம் திருப்பிக் கொடுக்கவோ வேண்டாம்.

1.4 வாடிக்கையாளர் சமர்ப்பித்த நாணயத் தாள் போலியானதாக இருக்குமென சந்தேகப்படுமிடத்து, நிறுவனம் அதில் நம்பகமான பாதுகாப்புப் பண்புகள் காணப்படாதமையை அவதானித்து அது போலி நாணயத் தாள் என முடிவு செய்யுமிடத்து நிறுவனம் அத்தாளினை களங்கப்படுத்தாமல் அதன் மீது வாடிக்கையாளரின் கையொப்பத்தினையும் திகதியினையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

1.5 நிறுவனத்தின் முத்திரையினைப் பொறிக்கவோ அல்லது எந்த வழியிலேனும் தாளைத் துளையிடவோ வேண்டாம்.

1.6 வாடிக்கையாளரிடமிருந்து பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்:

- பெயர்
- முகவரி
- தொலைபேசி இலக்கம்
- தேசிய அடையாள அட்டை இலக்கம்
- வாடிக்கையாளர் எவ்வாறு இத்தாளினைப் பெற்றார்
- அத்தகைய தாளின்/ தாள்களின் தொடர் இலக்கம்
- தாளின்/ தாள்களின் இனம்
- தாள்களின் மொத்த எண்ணிக்கை

1.7 போலி நாணயத் தாளாக இருக்குமென சந்தேகப்படும் தாளினைக் கண்டுபிடித்ததும் **உடனடியாக** பொலிஸ் திணைக்களத்தின் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத் தாள் பணியகத்திற்கு (தொலைபேசி இலக்கம்: 24 மணி நேர தொடர்புகளுக்கு 011-2422176 அல்லது அலுவலக நேரத்தில்: 011-2326670) அறிவித்து அவர்களின் ஆலோசனையின்படி நடந்து கொள்ளவும் அல்லது அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவும்.

2. தாள் போலியானதா அல்லது மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட உண்மையான நாணயத் தாளா என்பதனை தீர்மானிக்கின்ற ஏக அதிகாரம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

3. போலி நாணயத் தாள்களைத் தயாரிப்பது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியதொரு குற்றமாகும் என்பதுடன் தண்டனைச் சட்டக் கோவையின் 478 அ இலிருந்து ஈ வரையான பிரிவுகளின் கீழ் சிறைத் தண்டனை அல்லது தண்டம் அல்லது இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் என்பதுடன் போலி நாணயத் தாளின் தீங்குபயக்கும் தன்மையினை தணிப்பதில் இலங்கை மத்திய வங்கிக்கும் போலி நாணயத் தாள் பணியகத்திற்கும் உதவிபுரியுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

4. அனைத்து நிறுவனங்களும் நாணயங்களைக் கையாள்வதுடன் தொடர்புபட்டுள்ள அவர்களது அனைத்து அலுவலர்களுக்கும் இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றி உடனடியாக அறியத் தரப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இச்சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்கள் அல்லது வழிகாட்டல்கள் பற்றி ஏதேனும் தெளிவுபடுத்தல்களும் உண்மையான இலங்கை நாணயத் தாள்களை அடையாளம் காண்பது தொடர்பான தகவல்களுக்கும் தயவுசெய்து நாணயத் திணைக்களத்தின் பின்வரும் அலுவலர்களைத் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| கண்காணிப்பாளர் | 0112477355 |
| மேலதிகக் கண்காணிப்பாளர் | 0112477603 |
| துணைக் கண்காணிப்பாளர் | 0112477014 |
| துணைக் கண்காணிப்பாளர் | 0112477362 |
| மூத்த உதவிக் கண்காணிப்பாளர் - நாணய முகாமைத்துவம் | 0112477364 அல்லது 2398736 |
| மூத்த உதவிக் கண்காணிப்பாளர் - ஒழுங்குவிதிகள் “உ” | 0112477130 |

ஒப்பம்
**நாணயக் கண்காணிப்பாளர்**

பிரதி: பணிப்பாளர், வங்கி மேற்பார்வை
பணிப்பாளர், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு
பணிப்பாளர், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை
கண்காணிப்பாளர், பொதுப்படுகடன் திணைக்களம்

சுற்றறிக்கை இல: 35/01/005/0006/29

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
2011 மாச்சு 24

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்

**லங்கா செட்டிலிலுள்ள பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கெதிராக ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பற்றிய 2004 சனவரி 27ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை இல. 35/01/005/0006/05 மற்றும் அதன் பின்னர் திருத்தம் செய்யப்பட்ட 2005 ஏப்பிறல் 28ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை இல. 35/01/005/0006/09 என்பன தொடர்பானது.

நீங்கள் அறிந்தவாறு, ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை விடுவிப்பது தொடர்பான நடைமுறைகள் ஏற்கனவே மாற்றப்பட்டுள்ளன. இதன் விளைவாக, கடந்த காலத்தில் மத்திய வங்கியினால் ஒவ்வொரு விடயமாக ஆராயப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட முறைக்குப் பதிலாக பங்கேற்கும் நிறுவனங்கள் ஒரு நாளுக்குள்ளேயான பல்வேறு திரவ வசதித் தேவைப்பாடுகளை மேற்கொள்வதற்கும் அவற்றின் தற்றுணிபின்படி தீர்ப்பனவு செய்து கொள்வதற்கும் இப்பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இல. 35/01/005/0006/09 கொண்ட திருத்தச் சுற்றறிக்கை இத்தால் புறக்கீடு செய்யப்படுவது பற்றி பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுவதுடன் வியாபார நாளொன்றின் போது ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மேலதிக எடுப்பனவுகள் தொடர்பான ஏற்பாடு மீதான முன் சொல்லப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலுள்ள ஏற்பாடுகள் அவ்வாறே இருப்பினும் கூட மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் (இல. 35/01/005/0006/05) கிளைவாசம் 8 உடனடியாகப் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

> **"பங்கேற்கும் நிறுவனங்கள் ஒரு நாளுக்குள்ளேயான ஏதேனும் அவசரத் திரவத்தன்மை தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக நிதியியல் நிறுவனங்களின் திரவத்தன்மை தேவைப்பாடுகளுக்கேற்ப பங்கேற்கும் நிறுவனங்கள் வியாபார நாளொன்றிற்குள் பல்வேறு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை கோரிக்கைகளை மேற்கொள்ளவும் அவற்றின் தற்றுணிபின்படி தீர்ப்பனவு செய்து கொள்ளவும் முடியும்".**

ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0007/05**

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணக்களம்
2011 ஏப்பிறல் 19

அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

2002ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க நாணய விதிச் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கங்களின் அத்தியாயம் 422) பிரிவுகள் 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் செய்யப்பட்ட அறிவித்தலின்பாலும் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2011 ஏப்பிறல் 19ஆம் நாளன்று வெளியிடப்பட்ட இலக்கம் 1702/3 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின்பாலும் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக, அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தில் எட்டு சதவீதத்திற்கு சமமான தொகையினை (8.00 சதவீதம்) ஒதுக்காகப் பேண வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

3. மேற்குறிப்பிட்ட திருத்தம் 2011 ஏப்பிறல் 29ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். 2003 மாச்சு 20ஆம் நாளிடப்பட்ட இலக்கம் 35/01/005/007/01 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் உள்ளடக்கப்பட்ட மற்றைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடைத்தனவாக இருக்கும்.

ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**தொடர்பு எண்: 06/04/01/2011**

செலவாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
2011 சனவரி 6

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை

**பணிகளின் ஏற்றுமதியாளர்கள் உள்நாட்டு வங்கிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினைக் கடன்படுவதற்கு ஒப்புதலளித்தல்**

தொழிற்படு மூலதனத்தையும் நிலையான மூலதனத் தேவைப்பாடுகளையும் ஈடுசெய்யத்தக்களவிற்கு போதுமான வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகைகளைக் கொண்டுள்ள பணிகளின் ஏற்றுமதியாளர்கள் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

1. அனுமதியளிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள் இணைப்பு 1இல் பட்டியலிடப்பட்ட பணிகளின் ஏற்றுமதியாளர்களாக இருத்தல் வேண்டும்.
2. மீள்கொடுப்பனவு காலமும் வட்டி வீதமும் கடன் வழங்கும் வங்கியினாலும் கடன்பாட்டாளரினாலும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.
3. கடன்பாட்டின் நோக்கம் கடன்பாட்டாளரின் நிலையான அல்லது தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதாக இருத்தல் வேண்டும்.
4. செலுத்தத் தவறும் விடயத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை:

   கொடுக்கல்வாங்கலின் வெளிநாட்டு நாணயத்திலமைந்த ஈட்டிற்கான உள்நாட்டுச் சொத்துக்களின் விற்பனைகளின் மூலம் பெறுகைகளைப் பெற்றுக்கொள்ள அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய முயற்சிகள் தோல்வியடையுமாயின், ரூபாப் பெறுகைகளை எனது முன் அனுமதி இல்லாமலேயே கடனின் வெளிநிற்கும் மீதியை தீர்ப்பனவு செய்வதற்குத் தேவையான தொகை அளவிற்கு மாற்றிக் கொள்ளலாம்.
5. இக்கடன்கள் பணிகளின் ஏற்றுமதியாளர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும். அவர்களது நேர்மை நம்பகத்தன்மை கடன் விண்ணப்பங்களை பரிசீலிக்கின்ற வர்த்தக வங்கியினாலேயே தீர்மானிக்கப்படுதல் வேண்டும். ஏற்றுமதியாளர்களின் நேர்மை நம்பகத்தன்மையினை தீர்மானிக்கும் பொழுது, வர்த்தக வங்கிகள் முன்மதியுடையனவாகவும், நடுநிலையான தன்மையினைப் பயன்படுத்துவனவாகவும் இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.
6. கடன்பாட்டாளரின் கோரிக்கையின் அடிப்படையில் கடன் தொகையானது அதே கடன்பாட்டாளரினால் அதே வங்கியில் பேணப்படும் தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் வழங்குவோருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வரவு வைக்கப்படலாம்.
7. பணிகளின் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணய வசதிகள் தொடர்பாக பின்வருவனவற்றை எடுத்துக்காட்டுகின்ற வகையில் காலாண்டு கூற்றினை சமர்ப்பிக்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்:

   i கம்பனியின் பெயர்

   ii கடன் வசதி வழங்கப்பட்ட திகதி

   iii கடன் வசதியின் வகை

   iv கடன் வசதி வழங்கப்பட்ட காலம்

   v பிணையத்தின் தன்மை

   vi தொகை

   vii நோக்கம்

கூற்றுக்கள், ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து உடனடுத்து வரும் மாதத்தின் 15ஆம் நாளுக்கு முன்னதாக இலங்கை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கண்காணிப்புப் பிரிவு, இலங்கை மத்திய வங்கி, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 இற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

இணைப்பு 1

**வெளிநாட்டு நாணய கடன்களைப் பெறுவதற்கு உரித்துடைய பணி ஏற்றுமதியாளர்கள்**

1. சட்டப் பணிகள்
2. கணக்கீடு, கணக்காய்வு மற்றும் கணக்குப் பதிவுப் பணிகள்
3. வரி விதிப்புப் பணிகள்
4. கட்டிடக்கலைப் பணிகள்
5. பொறியியல் பணிகள்
6. மருத்துவ மற்றும் பற்சிகிச்சைப் பணிகள்
7. விலங்கு மருத்துவப் பணிகள்
8. இயன்மருத்துவர் மற்றும் துணை மருத்துவ ஆளணியினரால் வழங்கப்படும் பணிகள்
9. மென்பொருள் அபிவிருத்திப் பணிகள்
10. தரவு செய்முறைப்படுத்தல் பணிகள்
11. தரவுத்தள அபிவிருத்திப் பணிகள்
12. இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதாபிமானம் என்பன மீதான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்
13. விளம்பரப்படுத்தல் பணிகள்
14. முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள்
15. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைப் பணிகள்
16. புகைப்படவியல் பணிகள்
17. பொதியிடல் பணிகள்
18. அச்சிடல் மற்றும் வெளியிடல் பணிகள்
19. மாநாட்டுப் பணிகள்
20. சுற்றுலாச் சபையுடன் பதிவு செய்யப்பட்டுள்ள சுற்றுலா விடுதிகள்
21. களியாட்டப் பணிகள் (திரையரங்குகள், நேரடி அணிவகுப்பு வாத்தியங்கள்)
22. மோஸ்தர் வடிவமைப்பாளர் பணிகள், உடைகளின் மற்றும் தொப்பிகளின் மாதிரி வடிவமைப்பாளர் பணிகள்
23. செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன்ஒப்புதலுடன் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளிலுள்ள ஏற்றுமதியாளர்களின் பணிகள்

தொடர்பு எண்: 06/04/02/2011

செலவாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
2011 சனவரி 21

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை

அன்புள்ள ஐயா/ அம்மணி

## வெளிமுக முதலீட்டுக் கணக்குகள்

1. இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளிலும் வெளிநாட்டு அரசாங்கங்களினாலும் அரசாங்க நிறுவனங்களினாலும் வழங்கப்பட்ட நாட்டிற்கான முறிகளில் முதலீடு செய்வதற்கும் கீழேயுள்ள துணைப் பந்தி 1.1இல் குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களைக் கொண்ட (இதனகத்துப் பின்னர் "வதிவிட முதலீட்டாளர்" என குறிப்பிடப்படுவர்) முதலீட்டு வகையினரை அனுமதிப்பதற்கு 2011.01.01ஆம் திகதி வெளியிடப்பட்ட இல: 1686/50 இனைக் கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்கிணங்க மாண்புமிகு நிதியமைச்சரினால் பொதுவான அனுமதியொன்று வழங்கப்பட்டுள்ளது. நாட்டிற்கு வெளியே ஏதேனும் கிளையை, தொடர்பு அலுவலகத்தை, சந்தைப்படுத்தலை, முகவராண்மையினை, செயற்றிட்டத்தினை, பிரதிநிதித்துவ அலுவலகத்தினை அல்லது இதனையொத்த அலுவலகத்தினை (இதனகத்துப் பின்னர் "கடல்கடந்த அலுவலகம்" என குறிப்பீடு செய்யப்படும்) அமைத்துப் பேணுவது தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்ய கீழேயுள்ள பந்தி 1.1இன் வகை 3இல் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் நீங்கலான வதிவிட முதலீட்டாளர்களை அனுமதிப்பதற்கு 2011.01.01ஆம் திகதி வெளியிடப்பட்ட இல. 1686/52 இனைக் கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்கிணங்க செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் பொதுவான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

1.1 வகை 1: 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த கம்பனிகள்

வகை 2: இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பங்குடமை

வகை 3: இலங்கையில் வதியும் எவரேனும் தனிப்பட்டவர்கள்

2. மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு, மேற்குறிப்பிட்ட அரச வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கும் கீழேயுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வதியும் முதலீட்டாளர்களின் பெயரில் வெளிமுக முதலீட்டாளர் கணக்குகள் என்ற தலைப்பில் கணக்குகளைத் திறக்கவும், பேணவும், தொழிற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

(i) வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் குறைத்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் வெளிநாட்டு நாணயக் கணக்குகளாக தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

(ii) எந்தவொரு வெளிமுக முதலீட்டுக் கணக்குகளையும் மூடுவதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதி தேவை.

(iii) வெளிமுக முதலீட்டுக் கணக்கிலிருந்தான எந்தவொரு வெளிமுக பணவனுப்பலும் வதியும் முதலீட்டாளர்களினால் இணைப்பு Iஇல் உள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்தன் பின் மட்டுமே மேற்கொள்ளமுடியும்.

(iv) வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கான வரவுகளும் பற்றுக்களும் பின்வருவனவற்றிற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

அ. வரவுகள்

(அ) மேலே குறிப்பிடப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல்களின் வரையறைகளுக்கும் இப்பணிப்புரையின் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தகுதியுடைய வதியும் முதலீட்டாளர்களினால் முதலீட்டு தேவைப்பாட்டிற்கு அளவான தொகைக்கு வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்ட ரூபாய் தொகைகள்.

(ஆ) வதியும் வாடிக்கையாளருக்கு வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து (குறிப்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தவிர) செய்யப்பட்ட மாற்றல்கள்.

(இ) வெளிநாட்டு முதலீடாக நிதியிடும் பொருட்டு செலாவணிக் கட்டுப்பாளரின் முன் அனுமதியுடன் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன் பெறுகைகள்.

(ஈ) வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் பங்கிலாபக் கொடுப்பனவுகளாக பெறப்பட்ட உள்முக பணவனுப்பல்கள்.

(உ) நாட்டிற்கான முறிகளின் விற்பனை மற்றும் முதிர்ச்சிகளிலிருந்து பெறப்பட்ட பெறுகைகள்.

(ஊ) வெளிநாட்டு அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள், நன்மைகள் மற்றும் மிகை நிதியங்கள்.

(எ) இக் கணக்கினூடாக பெறப்பட்ட முதலீடுகள் தொடர்பில் முகாமைத்துவ கட்டணங்கள், ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் தரகுகளாகப் பெறப்பட்ட உள்முக பணவனுப்பல்கள்.

(ஏ) மூலதன இலாபங்கள் உட்பட பங்குகளினது விற்பனைப் பெறுகைகளாகவும் வெளிநாட்டு கம்பனியொன்றினை ஒடுக்கி விடுவதனைப் பொறுத்த வரையிலான ஒடுக்கிவிடுதல் பெறுகைகளாகவும் வெளிநாட்டு அலுவலகமொன்றினை மூடிவிடுவதன் மூலமான பெறுகைகளாகவும் பெறப்பட்ட உள்முக பணவனுப்பல்கள்.

(ஐ) கணக்கில் வரவு வைக்கப்பட்ட நிதியத்திலிருந்து உழைக்கப்பட்ட வட்டி.

ஆ. பற்றுக்கள்

(அ) வெளிநாட்டுக் கம்பனிகளிலுள்ள பங்குகளையும் நாட்டிற்கான முறிகளையும் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவு.

(ஆ) வெளிநாட்டு அலுவலகங்களை ஏற்படுத்திப் பேணுவதற்கான செலவு.

(இ) வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பான வங்கி விதிப்புக்கள், தரகுக் கட்டணங்கள் மற்றும் தரகுகள்.

(ஈ) நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான இலங்கைக்கு வெளியேயான வெளிநாட்டு நாணயங்களிலான கொடுப்பனவுகள்.

(உ) இலங்கை ரூபாவிலான மீளப் பெறுகைகள்.

(v) மேலே வர்த்தமானியில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்துத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்த பின்னர் மாத்திரமே ரூபாப் பெறுகைகள் வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றல் செய்யப்பட்டு வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும் அத்தகைய நிதிகளை முதலீடு செய்யாமல் வெளிமுக முதலீட்டுக் கணக்கில் வைத்திருக்கக்கூடாது.

(vi) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் ஆவணங்களை வதியும் முதலீட்டாளர்களிடமிருந்து பெறவேண்டுமென்பதுடன் அவ்வாறு பெற்ற அத்தகைய ஆவணங்களை அவை சேகரிக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செலாவணிக் கட்டுப்பாட்டாளரிடம் சமர்ப்பித்தலும் வேண்டும்.

அ. வெளிநாட்டுச் செலாவணியின் வெளிமுக பணவனுப்பல் இடம்பெற்று மூன்று மாதங்களுக்குள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வதியும் முதலீட்டாளர்களிடமிருந்து பின்வருவனவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(அ) பட்டியலிடப்படாத கம்பனியொன்றின் பங்குகளில் முதலீடு செய்யப்படும் விடயத்தைப் பொறுத்தவரை நாட்டிற்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட புதிய கம்பனியின் கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ் விஞ்ஞாபனம் மற்றும் அமைப்பின் அகவிதிகள்.

(ஆ) வெளிநாட்டு அலுவலகங்களின் பதிவுச் சான்றிதழ்கள்.

(இ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள பட்டியலிடப்படாத கம்பனியில் செய்யப்பட்ட பங்கு முதலீடு தொடர்பாக வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது வேறு ஏதேனும் சான்றுகள்.

(ஈ) ஊழியர் பங்கு விருப்பத் தேர்வு திட்டத்திற்கு உதவுதொகை வழங்கிய அனைத்து வதியும் ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட பங்கு முதலீடுகள்/ சேர்த்தல் சான்றிதழ்களின் பிரதிகள்.

ஆ. இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பட்டியலிடப்பட்ட பங்குகளிலும் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் அரச அமைப்புக்களினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான முறிகளிலும் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பாக உரிய வெளிநாட்டு பங்கு பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமையிலிருந்தான மாதாந்த அடிப்படையில் அமைந்த கூற்று.

இ. பட்டியலிடப்படாத வெளிநாட்டுக் கம்பனிகள் மற்றும் வெளிநாட்டு அலுவலகங்களின் வருடாந்த அடிப்படையிலான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்.

(vii) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வதியும் வாடிக்கையாளர்கள் தவறுமிடத்து, அத்தகைய காலப்பகுதி முடிவடைந்து ஒரு கிழமைக்குள், அவ்வாறு தவறிவிட்டமை பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

(viii) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளுடன் தொடர்பான அனைத்துக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றியும் இணைப்பு IIஇன் படிவத்திலுள்ளவாறான விதத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டளருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

இணைப்பு I

**வதியும் முதலீட்டாளர்களுக்கான ஆவணங்களின் சரிபார்ப்புப் பட்டியல்**

இப்பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து வெளிநாட்டு முதலீடுகளுக்கும் பின்வரும் ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(i) இணைப்பு IIIஇல் உள்ள விண்ணப்பப் படிவத்துடன் சேர்ந்த கோரிக்கை.

(ii) இணைப்பு IVஇல் உள்ள படிவத்தில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் உறுப்புரிமை பெற்ற ஒருவரினால் செய்யப்பட்ட விதந்துரைப்பு.

(iii) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ், புலனாய்வுகள் எதுவும் நிலுவையில் இல்லை என்பதற்கு சான்றாக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திலிருந்து தீர்ப்பனவு

(iv) இணைப்பு Vஇல் உள்ள சத்தியக்கடதாசி

மேலும், பின்வரும் வகைகளைக் குறித்துரைக்கும் ஆவணங்களும் பெறப்படல் வேண்டும்.

**வகை 1**

(i) கூட்டிணைப்புச் சான்றிதழ் மற்றும் அமைப்பு அகவிதி

(ii) உத்தேச முதலீடுகள் தொடர்பான சபையின் தீர்மானம்

**வகை 2**

(i) பங்குடமை உடன்படிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி

(ii) ஒவ்வொரு பங்காளரினாலும் மேற்கொள்ளப்படும் முதலீட்டுத் தொகையினை உள்ளடக்குகின்ற விதத்தில் வரித் தீர்ப்பனவுச் சான்றிதழ்.

**வகை 3**

முதலீட்டுத் தொகையை உள்ளடக்குகின்ற விதத்தில் வரித் தீர்ப்பனவுச் சான்றிதழ்

**இணைப்பு II**

**வெளிமுக முதலீட்டுக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று**

வங்கியின் பெயர்

| கணக்கு இலக்கம் | நாணயம் | கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | மாதத் தொடக்கத்தில் உள்ளவாறு ஆரம்ப நிலுவை | மாத காலப்பகுதியில் மொத்த உள்முகப் பணவனுப்பல்கள் | மாத காலப்பகுதியில் மொத்த வெளிமுகப் பணவனுப்பல்கள் | மாத இறுதியில் உள்ளவாறு இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**இணைப்பு III**

**வெளிநாட்டு முதலீடுகள் மீதான விண்ணப்பப் படிவம்**

1. **பொதுவான தகவல்கள்**

அ. கம்பனி/ பங்குடமை/ தனிப்பட்டவரின் பெயர்

ஆ. பதிவு இலக்கம்/ தே.அ.அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கம்

2. **வெளிநாட்டு முதலீடுகள் மீதான விபரங்கள்**

2.1 **வெளிநாட்டு கம்பனிகளின் பங்குகளில் முதலீடு**

அ. முதலீடு செய்யப்படவுள்ள மொத்தத் தொகை

ஆ. வெளிநாட்டுக் கம்பனியின் பெயர்

இ. கொள்வனவு செய்யப்படவுள்ள பங்குகளின் எண்ணிக்கை

ஈ. பங்கொன்றின் விலை

2.2 **நாட்டிற்கான முறிகளில் செய்யப்படும் முதலீடுகள்**

அ. முதலீடு செய்யப்படவுள்ள மொத்தத் தொகை

ஆ. வழங்குநரின் பெயர்

இ. கொள்வனவு செய்யப்படவுள்ள முறிகளின் எண்ணிக்கை

ஈ. முறி ஒன்றின் விலை

2.3 **வெளிநாடுகளில் அலுவலகங்களை ஏற்படுத்துவதற்கும் பேணுவதற்குமான முதலீடுகள்**

அ. முதலீடு செய்யப்படவுள்ள மொத்தத் தொகை

ஆ. வெளிநாட்டு அலவலகங்களின் வகையும் நோக்கமும்

எனது சிறந்த அறிவுக்கெட்டிய வரையில் மேலேயுள்ள தகவல்கள் உண்மையானவையும் துல்லியமானவையுமென நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

**பணிப்பாளர்** **பணிப்பாளர்**

**இணைப்பு IV**

**2011.01.01 திகதியிடப்பட்ட அரச வர்த்தமான அறிவித்தல்கள் இல. 1686/50 மற்றும் 1686/52 என்பனவற்றின் நோக்கங்களின் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதற்காக பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினரான ............................................. இனால் செய்யப்பட்ட விதந்துரைப்பு**

முகாமையாளருக்கு

கிளை:

வர்த்தக வங்கியின் பெயர்:

செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் இது தொடர்பாக விதந்துரைக்கப்பட்ட பிரமாணங்களின் அடிப்படையில் கீழேயுள்ள முதலீடு பகுப்பாய்வு செய்யப்பட்டது என்பதனை நான் இத்தால் உறுதிப்படுத்துவதுடன் கீழே தரப்பட்டுள்ள குறிப்பிட்ட முதலீட்டு விபரங்களையும் விதந்துரைக்கின்றேன்.

முதலீட்டாளரின் பெயர்:

ஐ.அ.டொலரில் தொகை (அல்லது ஏனைய குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமனான தொகை)

முதலீட்டின் விபரங்கள்:

**பங்குகள்**

கம்பனி:

பங்குகளின் எண்ணிக்கை:

பங்கொன்றின் விலை:

**நாட்டிற்கான முறி**

வழங்குநர்:

முறிகளின் எண்ணிக்கை:

முறியொன்றின் விலை:

**வெளிநாட்டு அலுவலகங்கள்**

கம்பனி:

முதலீடு செய்யும் நாடு:

**ஒப்பம்**

**திகதி**

## இணைப்பு V

### 1ஆம் பந்தியின் 1.1ஆம் துணைப் பந்தியின் வகை 1இல் குறித்துரைக்கப்பட்டுள்ள முதலீட்டாளர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாதிரி சத்தியக்கடதாசி

......................................... என்னும் முகவரியில் வசிப்பவரும் ................................ என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு என்பவற்றைக் கொண்டவரும் ..................................................................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு (பௌத்த/ இந்து சமயத்தவர் என்ற ரீதியில் உண்மையாயும் பயபக்தியுடனும் பிரகடனம் செய்கின்றேன்/ உறுதிப்படுத்துகின்றேன் கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லீம் என்ற வகையில் சத்தியம் செய்து) பின்வருவற்றை தெரிவித்துக் கொள்கிறேன்.

1. மேற்கூறப்பிட்ட (உறுதிப்படுத்துபவர்/ வாக்குமூலம் அளிப்பவராகியவர்) நான் தான் என்பதுடன் கம்பனியாகிய ................................. இல் (கம்பனியின் பெயர்) .......................................................... பதவியினை வகிப்பவருமாவேன்.

2. இணைக்கப்பட்டிருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்தின்படி கம்பனியின் (கம்பனியின் பெயர்) பணிப்பாளர் சபையினால் இச்சத்தியக்கடதாசியை சமர்ப்பிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளேன்.

3. வேறு ஏதேனும் வங்கியிலுள்ள வேறு ஏதேனும் வெளிமுக முதலீட்டுக் கணக்கிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளுக்காக நிதியமெதனையும் கம்பனி ................................ (கம்பனியின் பெயர்) அனுப்பவில்லை என்பதனை நான் இத்தால் உறுதியளிக்கின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்.

4. மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் உண்மையானதும் சரியானதுமென நான் மேலும் உறுதியளிக்கின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்.

| | |
|---|---|
| இதில் அடக்கப்பட்ட பிரதிக்ஞைகளை இப்பிரதிக்ஞை செய்பவருக்கு (உறுதிப்படுத்துபவர்/ தெரிவிப்பவர்) வாசித்து விளங்கப்படுத்திய பிற்பாடு அதனை விளங்கிக் கொண்டு அதனை உண்மையென ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகின்றார். சத்தியம் செய்து தனது கையொப்பத்தினை ............... ஆகிய திகதியில் .................. வைக்கின்றார். | என் முன்னிலையில்<br><br>(சமாதான நீதிவான்) |

### 1ஆம் பந்தியின் 1.1ஆம் துணைப் பந்தியின் வகைகள் 2 மற்றும் 3இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வதியும் முதலீட்டாளர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாதிரி சத்தியக்கடதாசி

......................................... என்னும் முகவரியில் வசிப்பவரும் ................................ என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு என்பவற்றைக் கொண்டவரும் ..................................................................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு (பௌத்த/ இந்து சமயத்தவர் என்ற ரீதியில் உண்மையாயும் பயபக்தியுடனும் பிரகடனம் செய்கின்றேன்/ உறுதிப்படுத்துகின்றேன் கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லீம் என்ற வகையில் சத்தியம் செய்து) பின்வருவற்றை தெரிவித்துக் கொள்கிறேன்.

1. மேற்கூறப்பிடப்பட்ட பெயரையுடைய உறுதிப்படுத்துபவர்/ வாக்குமூலம் அளிப்பவரும் நானே.

2. வேறு ஏதேனும் வங்கியிலுள்ள வேறு ஏதேனும் வெளிமுக முதலீட்டுக் கணக்கிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்வதற்காக எந்தவொரு நிதியினையும் அனுப்பவில்லை என்பதனை இத்தால் உறுதியளிக்கின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்.

3. புலம்பெயர் படிகளைப் பெற்றுக் கொள்வதற்காக எந்தவொரு வங்கியிலும் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்திருக்கவில்லை என்பதனை நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்.

4. மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் உண்மையானதும் சரியானதுமென நான் மேலும் உறுதியளிக்கின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதில் அடக்கப்பட்ட பிரதிக்ஞைகளை இப்பிரதிக்ஞை செய்பவருக்கு (உறுதிப்படுத்துபவர்/ தெரிவிப்பவர்) வாசித்து விளங்கப்படுத்திய பிற்பாடு அதனை விளங்கிக் கொண்டு அதனை உண்மையென ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகின்றார். சத்தியம் செய்து தனது கையொப்பத்தினை ............... ஆகிய திகதியில் .................. வைக்கின்றார்.

என் முன்னிலையில்

(சமாதான நீதிவான்)

**தொடர்பு எண்: 06/04/03/2011**

செலவாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

2011 மாச்சு 8

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை

அன்புள்ள ஐயா/ அம்மணி

## மீள்காப்புறுதி தொடர்பான பணவனுப்பல்களுக்கு அதிகாரமளித்தல்

செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் விடுக்கப்பட்ட 2001 மாச்சு 13ஆம் நாளிடப்பட்ட இல. 06/02/02/2001 கொண்ட பணிப்புரையின்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2007 திசெம்பர் 19ஆம் நாளிடப்பட்ட இல. 1528/20 கொண்ட அரச வர்த்தமானியின் அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட நிதித் திட்டமிடல் அமைச்சரின் கட்டளையின் நியதிகளுக்கிணங்க, இலங்கையிலுள்ள அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் காப்புறுதிக் கம்பனிகள் செய்து கொண்டுள்ள நீண்டகால மீள்காப்புறுதி உடன்படிக்கைகள் நீங்கலாக ஒவ்வொரு பொது மீள்காப்புறுதிலிருந்தும் தோன்றும் மொத்த பொறுப்புக்களில் 20 சதவீதத்தினை மீள்காப்புறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

இதன்படி, வெளிநாட்டிலுள்ள காப்புறுதியாளர்களுக்கு அவர்களது மீள்காப்புறுதிக் கட்டுப் பணத்தின் கொடுப்பனவு தொடர்பான வெளிமுக பணவனுப்பல்களை மேற்கொள்ளும் நேரத்தில் மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளுடன் காப்புறுதிக் கம்பனிகள் இணங்கியொழுகின்றமை பற்றி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் உறுதிப்படுத்தலொன்றினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது பற்றி தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/04/2011**

செலவாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

2011 யூலை 5

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா

## சீன றென்மின்பியினை குறித்துரைத்தல்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்காக சீன றென்மின்பியினை குறித்துரைப்பதற்கு ஒப்புதலளித்திருக்கின்றமை பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/05/2011**

செலவாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

2011 ஓகத்து 18

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா

## தடுத்து வைக்கப்பட்ட வதிவற்றோர் கணக்குகளைத் திறத்தல்

பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினை தொடர்பு கொள்ளாமலேயே வதிவற்ற இலங்கையர்களின் பெயரில் “வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகள்” இனைத் திறப்பதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளமை பற்றி அவர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. 2011.08.18ஆம் நாளிடப்பட்ட இல. 1719/24 கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கிணங்க இலங்கையில் பெறப்பட்ட விற்பனைப் பெறுகைகள் உள்ளிட்ட வதிவற்ற இலங்கையர்களின் உள்நாட்டு வருமானத்தினை இக்கணக்கில் வரவு வைத்தல் வேண்டும்.
2. இலங்கை ரூபாவிலான பகிர்ந்தளிப்புக்கள் எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படுகிறது.
3. இக்கணக்கிலிருந்தான வெளிமுக பணவனுப்பல்கள் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் ஒப்புதலுக்குட்பட்டதாகும்.
4. ஏற்கனவேயுள்ள வதிவற்ற இலங்கையர்களின் ரூபாக் கணக்குகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் "வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகள்" என மீள குறித்துரைக்க முடியும்.

மேலும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகள் தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் விடுக்கப்பட்ட 02.07.2008ஆம் நாளிடப்பட்ட இல. 06/04/07/2008 கொண்ட பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளையும் நிபந்தனைகளையும் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/06/2011**

செலவாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
2011 ஓகத்து 18

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா

**கல்விசார்ந்த நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள இலங்கைப் பிரசைகள் வெளிநாடுகளிலுள்ள வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்விசார் நிறுவனங்களிலிருந்து பெற்ற கடன்களை மீளச் செலுத்துதல்**

கல்விசார்ந்த நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள இலங்கைப் பிரசைகள் வெளிநாடுகளிலுள்ள வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்விசார் நிறுவனங்களிலிருந்து கடன்படுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வணிகர்களினூடாக இலங்கையிலிருந்து மேற்கொள்வதன் மூலம் அத்தகைய கடன்களை மீளச் செலுத்துவதற்கும் 2011.08.18ஆம் நாளிடப்பட்ட இல. 1719/23 கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கிணங்க செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் பொதுவான அனுமதியொன்று வழங்கப்பட்டிருக்கின்றது.

2. மேற்குறிப்பிட்டவற்றைக் கருத்திற் கொண்டு, கடன்களின் உண்மைத் தன்மையினை ஊர்ஜிதம் செய்த பின்னர் குறிப்பிட்ட மீள்கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் விதத்தில் தொடர்பான கடன்களை வழங்கிய நிறுவனங்களுக்கு பணவனுப்பல்களை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

3. இப்பணிப்புரையின் கீழ் செய்யப்பட்ட மொத்த வெளிமுக பணவனுப்பல்கள் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த அடுத்த 15 நாட்களுக்குப் பிந்தாமல் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு காலாண்டு ரீதியான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/07/2011**

செலவாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
2011 ஓகத்து 18

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா

**வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

எனது 1980.05.14ஆம் நாளிடப்பட்ட இல.ஈசி/19/80(ஈ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்குப் புறம்பாக, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தொழில்நிலை விசாவினை வைத்திருக்கும் இலங்கையில் தொழில் புரியும் இலங்கையரல்லாதோரினால் வைத்திருக்கப்படும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு தொழில்தருநர்களினால் செலுத்தப்பட்ட அத்தகைய ஊழியர்களின் சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய நன்மைகளின் கொடுப்பனவுகளாக பின்வருவனவற்றை வரவு வைப்பதற்கு ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளமை பற்றி இத்தால் அவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது:

1. கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலுள்ள தொழில்தருநர்களின் கணக்குகளிலிருந்தான நிதிய மாற்றல்கள்; அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், தொழில்நிலை ஒப்பந்தம் மற்றும் வெளிநாட்டு ஊழியரின் செல்லுபடியாகக் கூடிய விசா என்பனவற்றை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரவு வைத்திருக்கப்படும் நாளன்று உள்ள செலாவணி வீதத்தில் வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்ட வெளிநாட்டு ஊழியர்களுக்கான மாதாந்தச் சம்பளம்.

   எனினும், மாற்றப்படும் ரூபாவின் மாதாந்த தொகை தொழில்நிலை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளத் தொகையினை எந்தவொரு நேரத்திலும் விஞ்சுதலாகாது.

2. ஆவணச் சான்றுகளை ஊர்ஜிதம் செய்த பின்னர் வரவு வைக்கப்படும் நாளன்று உள்ள செலாவணி வீதத்தில் வெளிநாட்டு நாணயங்களுக்கு மாற்றப்பட்ட ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற இளைப்பாறல் நிதி நன்மைகள் தவிர்ந்த ரூபாவில் அமைந்த வேறு ஏதேனும் ஊழியர்களுக்குரிய நன்மைகள்.

தொழில்தருநர்களினால் மேலதிகமாக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருக்கும் அல்லது தொழில்தருநருக்கு வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் வரவேண்டிய சந்தர்ப்பத்தில் அத்தகைய ஊழியரின் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து பற்று வைக்கப்பட்டு தொழில்தருநரின் கணக்கில் வரவு வைப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளமை பற்றி அவர்களுக்கு மேலும் அறிவிக்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/08/2011**

செலவாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

2011 ஒத்தோபர் 28

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா

## வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் பேணப்படக் கூடிய குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் பட்டியலில் சீன றென்மின்பியும் உள்ளடக்கப்பட வேண்டும் என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/09/2011**

செலவாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

2011 திசெம்பர் 6

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா/ அம்மணி

## பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகள்

இது மேற்குறிப்பிடப்பட்ட விடயம் பற்றிய 2010 மாச்சு 11ஆம் நாளிடப்பட்ட இல. 06/04/01/2010 கொண்ட எமது பணிப்புரைகள் தொடர்பானது.

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்படும் வெளிநாட்டு முதலீடுகளுக்கான தற்போதைய மட்டத்தினை வெளிநின்ற திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற இருப்பின் 10 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கின்றது.

இதற்கமைய, மேலே குறிப்பிடப்பட்ட பணிப்புரையின் 8ஆம் பந்தி இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

"8. தகுதியுடைய முதலீட்டாளர்களின் அனைத்து முதலீடுகளினதும் கூட்டுத் தொகை எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் வெளிநின்ற திறைசேரி முறிகள் அல்லது திறைசேரி உண்டியல்களின் இருப்பில் 12.5 சதவீதத்தினை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டினூடாகவும் திறைசேரி முறிகளையும் திறைசேரி உண்டியல்களையும் கொள்வனவு செய்வதற்கு தகுதியுடை முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். எனினும், இவ்வெல்லையானது வகை 3(v) இன் கீழுள்ள தகுதியுடைய முதலீட்டாளர்களினாலும் வகை (vi) இன் கீழுள்ள வதியும் இலங்கையர்களினாலும் வைத்திருக்கப்படும் திறைசேரி முறிகளுக்கும் திறைசேரி உண்டியல்களுக்கும் பொருந்தாது."

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

இல. 1686/50 சனிக்கிழமை 2011 சனவரி 01

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**அரசாங்க அறிவித்தல்கள்**

**(423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

**17ஆம் பிரிவின் கீழான கட்டளை**

இலங்கைச் சனநாயக சோசலிசன் குடியரசின் அரசியலமைப்பினது 44ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் (1)ஆம், (2)ஆம் உட்பிரிவுகளின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகிய நான், கட்டளையின் மூலம் -

1. இலங்கையில் வதிவுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கம்பனிக்கு அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்காண்மைக்கு கீழே (3)ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட பணிப்புகளுக்கமையவும் காலத்துக்குக் காலம் என்னால் வழங்கப்படும் வேறு ஏதேனும் பணிப்பிற்கமையவும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளையும் வெளிநாட்டு அரசாங்கங்களினாலும் அப்போதைக்கு இலங்கை இறைமைக் கடன் தரப்படுத்துதலின் மீது அல்லது அதற்கு மேல் தரப்படுத்தப்பட்ட அரசாங்க ஒழுங்கமைப்புகளினாலும் வழங்கப்பட்ட இறைமை முறிகளையும் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் கைமாற்றுவதற்கும் அனுமதி அளிக்கின்றேன்.

   ஆயினும், இது பின்வருவன தொடர்பில் ஏற்புடையதாதலாகாது:

   (i) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட ஏதேனும் கம்பனி;

   (ii) அரச சார்பற்ற ஏதேனும் ஒழுங்கமைப்பு;

   (iii) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் எந்த ஆளுக்கு, கம்பனிக்கு அல்லது பங்காண்மைக்கு எதிராக செய்யப்பட்ட தொடர்ச்சியொன்று தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் முடிவுறாதிருக்கின்றனவோ அந்த எவரேனும் ஆள், ஏதேனும் கம்பனி அல்லது பங்காண்மை.

2. பந்தி (1)இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு ஆளும், கம்பனியும் அல்லது பங்காண்மையும்:-

   (i) மேலே (1)ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியால் வழங்கப்படக் கூடியவாறான அத்தகைய பணிப்புரைகளுக்கமைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் ஆரம்பிக்கப்பட்ட வெளிச்செல் முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்து மாத்திரமே வெளிச்செல் அனுப்புகைகளைச் செய்ய வேண்டும் எனவும்;

   (ii) கொடுப்பனவுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் எல்லாப் பங்கிலாபங்கள், மூலதன ஆதாயங்கள், பங்குகளின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள், கலைத்தல் அல்லது வெளிநாட்டுக் கம்பனியொன்றிடமிருந்து பெறப்படற்பாலதானதும் எந்த வெளிச்செல் முதலீட்டுக் கணக்கினூடாக ஆரம்ப முதலீடு செய்யப்பட்டதோ அந்த வெளிச்செல் முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதுமான மூலதனக் குறைப்பு விற்பனை வருவாய்களையும், மூலதன ஆதாயங்கள் உட்பட, எவையுமிருப்பின், அத்தகைய வெளிநாட்டு முறிகள் மீது ஈட்டப்பட்ட வட்டியுடன் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும் எனவும்;

   (iii) அத்தகைய விதப்புரை வழங்கப்பட்ட நேரத்தில் தொழில்முறையில் ஈடுபடுவதற்கு செல்லுபடியான சான்றிதழைத் தமது உடைமையில் கொண்டுள்ள இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் ஒருவரிடமிருந்து விதப்புரையொன்றுடன் சேர்த்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் எனவும்;

   (iv) உட்பந்தி (iii) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட வேண்டுகோள் ஒவ்வொன்றுடனும் வேறு எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாக வெளிச்செல் அனுப்புதொகை எதுவும் பயனுறுத்தப்படவில்லை எனவும் வெளிநாட்டிற்குக் குடிபெயரும் நோக்கத்திற்கு அந்நிய செலாவணி விடுதொகையைப் பெறுவதற்கு விண்ணப்பம் எதுவும் அனுப்பப்படவில்லை எனவும் குறிப்பிடும் சத்தியக்கடதாசி ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும்;

   (v) பந்தி (3) என்பதில் தரப்பட்டுள்ள வரையறைகளை விஞ்சிய முதலீடொன்றைச் செய்வதற்கு முன்னர் நிதி அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறவேண்டும் எனவும்;

   (vi) செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியால் அதிகாரமளிக்கப்பட்ட வணிர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகரால் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களையும் தகவலையும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும்

   பணிக்கின்றேன்.

3. எவரேனும் ஆளுக்கு, ஏதேனும் கம்பனிக்கு அல்லது பங்காண்மைக்கு (1)ஆம் பந்தியின் கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் அனுமதி தொடர்பில் பின்வரும் வரையறைகள் நடைமுறையிலிருத்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன்:-

   (i) கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட கம்பனியொன்று தொடர்பில் ஆண்டொன்றுக்கு ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர் ($ 500,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையொன்று;

   (ii) கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்படாத கம்பனியொன்று தொடர்பில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் ($ 100,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையொன்று;

   (iii) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள பங்காண்மையொன்றின் தொடர்பில் பங்காளர் ஒவ்வொருவராலும் அனுப்பப்படவுள்ள தொகையை ஈடுசெய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு வரி இசைவுச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கமைய ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் ($ 100,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையொன்று;

   (iv) இலங்கையில் வதிவுள்ள எவரேனும் தனியார் தொடர்பில் அனுப்பப்படவுள்ள தொகையை ஈடுசெய்வதற்கு வரி இசைவுச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்கமைய ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் ($ 100,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையொன்று;

   (v) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றிற்குரிய இலங்கையிலுள்ள கிளை அல்லது துணைநிலையொன்றின் தனியாளாகிய ஊழியர் ஒவ்வொருவருக்கும் ஊழியர் பங்கு விருப்புத் தெரிவு செயற்றிட்டத்தின் கீழ் அத்தகைய கம்பனியின் பங்குகளைக் கொள்ளுவதற்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் ($ 100,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையொன்று;

   ஆயின், எவ்வாறாயினும் இலங்கையிலுள்ள கிளையின் அல்லது துணைநிலையின் எல்லா ஊழியர்களாலும் கொள்ளப்படக்கூடிய பங்குகளின் அதிகபட்ச எண்ணிக்கை இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியால் வழங்கப்பட்ட மொத்தப் பங்குகளின் பெறுமதியின் ஐந்து சதவீதத்தை (5%) விஞ்சுதலாகாது.

4. (i) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் போனஸ் வழங்கீட்டின் கீழான பங்குகள், ஒதுக்கங்களை மூலதனமாக்குதலின் மூலம் பெறப்பட்ட பங்குகள் என்பனவும் இக்கட்டளையைப் பின்பற்றி கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) இக்கட்டளையில் அடங்கியுள்ள எதுவும் ஏற்கனவே அளிக்கப்பட்ட விலக்களிப்பு தொடர்பில் மாத்திரம் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட தொழில் முயற்சிகளைப் பாதிப்பதாகவோ அல்லது அவற்றின் மீது தொடர்பு கொண்டிருப்பதாகவோ பொருள் கொள்ளப்படுதலாகாது.

5. இக்கட்டளையில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி:-

“செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்” என்பது (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என பொருள்படும்;

“வெளிநாட்டுக் கம்பனி” என்பது, இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படாத ஒரு கம்பனி எனப் பொருள்படும்;

“வெளிநாட்டு நாணயம்” என்பது (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ள அந்தச் சொல்லமைப்பிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருக்கும்;

“உரிமம் பெற்ற வர்த்தக வங்கி” என்பது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றாகத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமொன்று வழங்கப் பெற்ற ஒரு கம்பனி அல்லது நிறுவனம் என்று பொருள்படும்;

“இலங்கையில் வதியுள்ளவர்” என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு 1972, ஏப்பிறல் 21ஆம் திகதி கொண்ட 15007ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பணிப்புகளில் அச்சொல்லமைப்பிற்குக் குறித்துரைக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருக்கும்; அத்துடன்

“துணைநிலை” என்பது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

மகிந்த ராஜபக்ஷ
**சனாதிபதி**

நிதி, திட்டமிடல் அமைச்சு
கொழும்பு
2011 சனவரி 01

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

இல. 1686/52 சனிக்கிழமை 2011 சனவரி 01

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**அரசாங்க அறிவித்தல்கள்**

**(423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

**7ஆம் பிரிவின் கீழான கட்டளை**

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் பணிப்புரைக்கமைய மேற்படி சட்டத்தின் 3ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் பின்வருமாறு அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1. கீழேயுள்ள (2) ஆம், (3) ஆம் பந்திகளின் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய ஏதேனும் கிளையை, இணைப்பு அலுவலகத்தை, சந்தைப்படுத்தல் முகவராண்மையை, கருத்திட்ட முகவராண்மையை அல்லது ஏனைய ஒத்த அலுவலகங்களை (இதனகத்துப் பின்னர் “கடல் கடந்த அலுவலகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைத்துப் பேணுவதன் நோக்கத்திற்கு அனுமதி தேவைப்படுமிடத்து இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்குக் கொடுப்பனவு செய்வதற்கு 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனிக்கு அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் பங்காண்மைக்கு இத்தால் அனுமதி அளிக்கப்படுகின்றது.

ஆயினும், இது பின்வருவன தொடர்பில் ஏற்புடையதாகமாட்டா:-

(i) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஏதேனும் கம்பனிக்கு;

(ii) ஏதேனும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்பிற்கு;

(iii) (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் எந்தக் கம்பனிக்கு அல்லது பங்காண்மைக்கு எதிராகக் கோப்பிடப்பட்ட வழக்கொன்று தொடர்பில் அந்த ஏதேனும் கம்பனிக்கு அல்லது பங்காண்மைக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முடிவுறாதிருக்கின்றனவோ அந்த ஏதேனும் கம்பனிக்கு அல்லது பங்காண்மைக்கு.

2. எந்தக் கம்பனிகள் அல்லது பங்காண்மைகள் தொடர்பில் (1)ஆம் பந்தியின் கீழ் அளிக்கப்பட்ட அனுமதி ஏற்புடைத்தாகின்றதோ அந்தக் கம்பனிகளும் பங்காண்மைகளும் -

(i) இலங்கைக்கு வெளியே தொழிலிடமொன்றை நிறுவுதல் தொடர்பான சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையொன்றுடன் சேர்த்து அத்தகைய விதப்புரை வழங்கப்படும் நேரத்தில் தொழில் முறையில் ஈடுபடுவதற்குச் செல்லுபடியான சான்றிதழொன்றை வைத்திருக்கும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் ஒருவரால் விதப்புரை செய்யப்பட்ட வேண்டுகோளொன்றை அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் எனவும்;

(ii) ஓராம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியால் வழங்கப்படக் கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்ட வெளிச்செல் முதலீட்டுக் கணக்கிலிருந்து மாத்திரமே வெளிச்செல் அனுப்புத் தொகைகளை அனுப்புதல் வேண்டும் எனவும்;

(iii) கொடுப்பனவுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் எவையேனும் கடல்கடந்த அலுவலகங்களிலிருந்து எல்லா இலாபங்களையும் ஒப்படைப் பணங்களையும் மிகை நிதிகளையும் எந்த வெளிச்செல் முதலீட்டுக் கணக்கினூடாக ஆரம்ப முதலீடு செய்யப்பட்டதோ அந்த வெளிச்செல் முதலீட்டுக் கணக்கின் ஊடாக மாத்திரமே இலங்கைக்குத் திருப்பி அனுப்புமாறும்;

(iv) உட்பந்தி (i)இல் குறிப்பீடு செய்யப்பட்ட வேண்டுகோள் ஒவ்வொன்றுடனும் அதன்கண் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் வணிகரூடாக வெளிச்செல் அனுப்புத் தொகை எதுவும் அனுப்பப்படவில்லை எனக் குறிப்பிடும் சத்தியக் கடதாசியொன்றைச் சமர்ப்பிக்குமாறும்; அத்துடன்

(v) செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகரால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா இயைபான தகவலையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறும்,

பணிக்கின்றேன்.

3. ஓராம் பந்தியின் கீழ் அளிக்கப்பட்ட அனுமதியைப் பின்பற்றி செய்யப்படும் எல்லாக் கொடுப்பனவுகளும் ஒரு இலட்சம் அமெரிக்க டொலரை ($ 100,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையை விஞ்சுதலாகாது

எனக் குறித்துரைக்கின்றேன்:

ஆயின், அத்தகைய அனுமதியைப் பின்பற்றிச் செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவு மேற்கூறப்படும் வரையறையை விஞ்சுமாயின் செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியின் முன் அனுமதி பெறப்படுதல் வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன்.

இந்த அறிவித்தலின் நோக்கத்திற்கு "இலங்கைக்கு வெளியே வதிவுள்ளவர்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 1972 ஏப்பிறல் 21ஆம் திகதி கொண்ட 15007ஆம் இலக்க *வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட பணிப்புகளில் அச்சொல்லமைப்பிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருக்கும்.

பி எச் ஓ சந்திரவன்ச

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2011 சனவரி 01

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

இல. 1686/53 சனிக்கிழமை 2011 சனவரி 01

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**அரசாங்க அறிவித்தல்கள்**

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் நியதிகளிலான அனுமதி

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (423ஆம் அத்தியாயம்) பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 7இன் ஏற்பாட்டு நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் பணிப்புரைகளுக்கு உட்பட்ட விதத்தில் பின்வரும் இவ்வறிவித்தல் இத்தால் விடுக்கப்படுகிறது:-

இலங்கையில் வதியும் எவரேனும் ஆள், 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனி அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் பங்குடைமைக் கம்பனியொன்று, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனியொன்றின் பங்குகளையும் வெளிநாட்டு அரசாங்கங்களினாலும் அரச நிறுவனங்களினாலும் வெளியிடப்பட்ட நாட்டிற்கான முறிகளையும் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக 2011 சனவரி 01 ஆம் திகதியிடப்பட்ட *1686/50 ஆம் இலக்க அரச வர்த்தமானியில்* குறித்துரைக்கப்பட்ட நிதி அமைச்சரின் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அனுமதி வழங்கப்படுகிறது.

இவ்வறிவித்தலின் நோக்கத்திற்காக, "இலங்கையில் வதியும் ஆள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதியும் ஆள்" என்பதன் கருத்து 1972ஆம் ஆண்டின் ஏப்பிறல் 21ஆம் திகதிய 15007 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

பி எச் ஓ சந்திரவன்ச

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2011 சனவரி 01

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

இல. 1719/22 வியாழக்கிழமை 2011 ஓகத்து 18

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்)

1. **செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 7, 10, 11 மற்றும் 15ஆம் நியதிகளில் அனுமதி:**

(அ) திருத்தப்பட்டவாறான 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின்படி தொழிற்படுகின்ற கூறுநம்பிக்கைகளில் உள்ள கூறுகளை வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் பொருந்தத்தக்க விதத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச.வா. 423) பிரிவுகள் 10, 11 மற்றும் 15ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக, 2ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள், இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்டவர்கள் (இலங்கைக்கு வெளியேயுள்ள வதியும் இலங்கையர்கள் உட்பட) ஆகியோர்க்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது;

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் நோக்கங்களுக்காக, ஏதேனும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அல்லது மேலேயுள்ள துணைப் பந்தி (அ) இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு வரவு வைப்பதற்கான அனுமதி இத்தால் வழங்கப்படுவதுடன், அத்தகைய கொடுப்பனவுகள் பந்தி 2(இ) இன் நிபந்தனைகளுக்கிணங்க மட்டுமே மேற்கொள்ள முடியும்.

2. **நிபந்தனைகள்:**

(அ) இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களின் ஒரு தரப்பினராக இருக்கும் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவர் கூறுகளின் கொள்வனவுகளுக்கான விண்ணப்பப் படிவத்தில், அத்தகைய ஆள் இலங்கைக்கு வெளியே வதியும் ஆள் என்பதனை நிரூபிக்கும் பிரகடனமொன்றினைச் செய்தல் வேண்டும்;

(ஆ) இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள ஏதேனும் கூறுகளின் வழங்கலினை கொள்வனவு செய்வதற்காக அல்லது கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகளை செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைவாக இலங்கையிலுள்ள ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்ட பிணையங்கள் முதலீட்டு கணக்கிலிருந்து அல்லது கணக்குகளுக்கும் மட்டுமே மேற்கொள்ள முடியும்;

(இ) இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான மீட்புப் பெறுகைகள், விற்பனைப் பெறுகைகள் அல்லது பணங்கள் அல்லது தரகுகள் போன்ற பணத்தின் கொடுப்பனவுகளின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கம்பனி, நம்பிக்கைப் பொறுப்பாளர், உரிமம் பெற்ற வர்த்தக வங்கி, உரிமம் பெற்ற தரகர் அல்லது மற்றைய எவரேனும் ஆள் அத்தகைய கொடுப்பனவுகளை மேலேயுள்ள துணைப் பந்தி (ஆ)இல் குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு செய்யலாம் அல்லது அதிலிருந்து மட்டுமே கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்;

(ஈ) கூறு உடமையாளர்கள் அல்லது ஏதேனும் கூறு நம்பிக்கைகளினால் வழங்கப்படும் அல்லது மாற்றல் செய்யப்படும் கூறுகளின் பதிவேடுகளைப் பேணுகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவ கம்பனியொன்று அல்லது வேறு எவரேனும் ஆள், வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள் அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர் (இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர் உட்பட) அல்லது அவர்களது நியமனத்தர்களை இவ்வறித்தலின் நியதிகளுக்கிணங்க அத்தகைய வழங்கல் அல்லது மாற்றல்களுக்கு ஏற்புடைத்தான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப அத்தகைய ஆட்கள் திருப்திகரமான சான்றுகளை சமர்ப்பித்தாலொழிய அத்தகைய கூறு நம்பிக்கைக் கூறுகளின் உடமையாளர்களாக பதிவு செய்தலாகாது.

3. விளக்கம்:

(அ) "கூறு நம்பிக்கை", "முகாமைத்துவ கம்பனி", "நம்பிக்கைப் பொறுப்பாளர்", "கூறு நம்பிக்கை உடைமையாளர்" என்பன திருத்தப்பட்டவாறான 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் அதே கருத்துக்களைக் கொண்டிருக்கும்.

(ஆ) "இலங்கையில் வதியும் ஆள்", "இலங்கைக்கு வெளியே வதியும் ஆள்" என்போர் 1972.04.21ஆம் திகதியிடப்பட்ட 15007 ஆம் இலக்க *அரச வர்த்தமானியில்* செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டவாறான அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2011 ஓகத்து 18

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

இல. 1719/23 வியாழக்கிழமை 2011 ஓகத்து 18

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்)**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5 மற்றும் 7ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கிணங்க அனுமதிக்கப்படுகின்றது**

கல்வி சார்ந்த நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள இலங்கைப் பிரசைகள் வெளிநாடுகளிலுள்ள வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்விசார் நிறுவனங்களிலிருந்து கடன் பெறுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வணிகர்களினூடாக இலங்கையிலிருந்து பணவனுப்பல்களை மேற்கொள்வதன் மூலம் அத்தகைய கடன்களை மீளச் செலுத்துவதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

பி எச் ஓ சந்திரவன்ச
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

கொழும்பு
2011 ஓகத்து 18

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

இல. 1719/24 வியாழக்கிழமை 2011 ஓகத்து 18

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்)**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7 மற்றும் 31இன் நியதிகளில் அனுமதி வழங்குதல்**

1. **அனுமதி இத்தால் பின்வருமாறு வழங்கப்படுகிறது:**

(i) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7(அ)இன் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க இலங்கையில் உள்ள ஆட்கள், வதிவற்ற இலங்கையர்களுக்குச் சொந்தமான, இலங்கையிலுள்ள உண்மைச் சொத்துக்களை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் அத்தகைய வதிவற்ற இலங்கையர்களுக்கு இலங்கை ரூபாவில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக அல்லது வரவு வைப்பதற்காக அனைத்துக் கொடுப்பனவுகளும் கீழேயுள்ள பந்தி (ii) இற்கிணங்க விற்பவரின் பெயரில் இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் திறக்கப்பட்டுள்ள “வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகள்” இற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு கொடுப்பனவுகளைச் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

(ii) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 31இன் ஏற்பாட்டு நியதிகளின்படி, வதிவற்ற இலங்கையர்களுக்குச் சொந்தமான உண்மைச் சொத்துக்களை விற்பதற்கு அவர்களின் பெயரில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளைத் திறக்கலாம். எனினும், அத்தகைய கணக்குகளிலிருந்தான வெளிமுகப் பணவனுப்பல்கள் காலத்திற்குக் காலம் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் விடுக்கப்படும் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

பி எச் ஓ சந்திரவன்ச
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

கொழும்பு
2011 ஓகத்து 18

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

இல. 1733/19 செவ்வாய்க்கிழமை 2011 நவெம்பர் 22

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் தொகுதிக் கடன்களை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்குமான அனுமதியளித்தல்

2010 நவெம்பர் 22ஆந் திகதிய 1681/11ஆம் இலக்க இலங்கை *வர்த்தமானியில் (அதிவிசேட)* வெளியிடப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

(i) நிபந்தனை 1.2இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை புகுத்துவதன் மூலமும் -

"இவ்வறிவித்தலின் கீழ் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்களை மீட்கும் அல்லது சாதாரண பங்குகளுக்கு மாற்றல் செய்யும் காலம் இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவாக இருக்கக்கூடாது என்பதுடன், அத்தகைய மாற்றல்கள், 2002, ஏப்பிறல் 19ஆந் திகதியிடப்பட்ட 1232/14ஆம் இலக்கம் கொண்ட அரச *வர்த்தமானி அறிவித்தலில்* குறித்துரைக்கப்பட்ட விலக்கல்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்."

(ii) நிபந்தனை 1.4 இனை நீக்குவதன் மூலமும்

(iii) நிபந்தனை 2.3இனை நீக்குவதன் மூலமும்

(iv) நிபந்தனைகள் 2.4, 2.5 மற்றும் 2.6 இனை முறையே நிபந்தனைகள் 2.3, 2.4 மற்றும் 2.5 ஆக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2011 நவெம்பர் 22

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

இல. 1737/9 செவ்வாய்க்கிழமை 2011 திசெம்பர் 20

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7, 10, 11, 15 மற்றும் 30(5)ஆம் பிரிவுகளின் நியதிகளிலான அனுமதி

2010, திசெம்பர் 21ஆந் திகதியிடப்பட்ட 1685/2ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் *வர்த்தமானியின்* மூலம் *(அதிவிசேடமானது)* இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 2002, ஏப்பிறல் 19ஆந் திகதியிடப்பட்ட 1232/14ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் *வர்த்தமானியில் (அதிவிசேடமானது)* பிரசுரிக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது:-

(i) 2ஆம் பந்தியின் விடயம் (i)இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றினைப் புகுத்துவதன் மூலம்,

"திருத்தப்பட்டவாறான 1981ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 19(அ) பிரிவின் நியதிகளுக்கிணங்க கடன் வசதி வழங்குபவர் என பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றினால், பட்டியலிடப்பட்ட கம்பனியொன்றின் பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்காக முதலீட்டாளர்களுக்குக் கொடுகடன்களை வழங்குகின்ற வியாபாரங்கள் நீங்கலான பணக் கடன் வழங்கல்"

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2011 திசெம்பர் 20

**தொடர்பு எண்: 37/04/001/0004/011**

நிதியியல் உளவறிதல் பிரிவு
2011 மே 6

**சுற்றிக்கை - 01/11**

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்*
*காப்புறுதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*
*மற்றும் பங்குத் தரகர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், இணங்கியொழுகும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வுத் தொழிற்பாடுகளை நிறுவுதல் பற்றிய கணக்காய்வாளரின் பிரகடனம்**

2006ஆம் ஆண்டின் நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 14(1) (இ) பிரிவு குறிப்பிடுகின்ற "அதன் நடவடிக்கை முறைகளும் முறைமைகளும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனை சோதிப்பதற்கான கணக்காய்வுப் பணியொன்றினை தாபிக்குமாறு ஒவ்வொரு நிறுவனங்களும் கேட்டுக் கொள்ளப்படல் வேண்டும்" என்ற விடயம் பற்றி தங்களது கவனத்தினை ஈர்க்க விரும்புகின்றோம்.

இதற்கமைவாக, நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 14(1)(அ) பிரிவின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட இணங்கியொழுகும் அலுவலர், நிறுவனம் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் நடவடிக்கை முறைகளையும் முறைமைகளையும் நிறுவி பேணுமாறு கேட்கப்படுகின்றார்.

ஆகவே, நீங்கள் 2006ஆம் ஆண்டின் நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளுடன் உங்கள் நிறுவனம் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் நடைமுறைப்படுத்தும் பொறிமுறையினை எமக்கு அறிவிப்பீர்களாயின் வரவேற்போம்.

இது தொடர்பான தங்களின் ஒத்துழைப்பினை பெருமளவிற்கு வரவேற்கின்றோம்.

உங்கள் உண்மையுள்ள
ஒப்பம்
பணிப்பாளர்
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

**பிரதி: இணங்கியொழுகும் அலுவலர்**

**தொடர்பு எண்: 37/05/005/0015/011**

நிதியியல் உளவறிதல் பிரிவு
2011 மே 20

**சுற்றறிக்கை எண்: 02/11**

*பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழான அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்**

2006ஆம் ஆண்டு செத்தெம்பர் 15ஆம் திகதியிடப்பட்ட 2006ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பானது.

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின்படி, நிறுவனமொன்று, 2006ஆம் ஆண்டின் நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம், 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் அல்லது 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் என்பனவற்றின் கீழ் ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் ஏதேனும் குற்றவியல் தவறைப் புரிதல் தொடர்பிலானதாக இருக்கக்கூடும் எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணத்தினைக் கொண்டிருக்குமிடத்து குறிப்பிட்ட நிறுவனமானது சந்தேகம் உருவாகிய பின்னர் அல்லது பெறப்பட்ட தகவல்களை சாத்தியமானளவிற்கு விரைவாக கொடுக்கல்வாங்கல்களை அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அல்லது தகவல்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும்.

மேலும், நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 14(ஆ)(iv) ஆம் பிரிவிற்கிணங்க ஒவ்வொரு நிறுவனத்தினதும் இணங்குவிப்பு அலுவலர், நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக நடைமுறைகளையும், முறைமைகளையும் நிறுவிப் பேணி வருதல் வேண்டும்.

எனினும், உங்கள் நிறுவனத்திடமிருந்து அத்தகைய அறிக்கைகள் எதுவும் பெறப்படவில்லை என்பதனை நிதியியல் உளவறிதல் பிரிவு அவதானித்திருக்கின்றது. ஆகவே, நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவிற்கிணங்க உங்கள் நிறுவனத்தின் இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டுள்ள பொறிமுறை பற்றி எமக்கு அறிவிக்குமாறு நீங்கள் தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கிளை மட்டத்தில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அடையாளம் காண்பதற்காக நீங்கள் நடைமுறைப்படுத்தி வரும் நிகழ்ச்சித்திட்டத்தினையும் (விடுக்கப்பட்ட சுற்றறிக்கை போன்றன) சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அடையாளம் காண்பது தொடர்பாக உங்கள் நிறுவனத்தின் அலுவலர்களுக்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள், அடையாளம் காணப்பட்டு இணங்கியொழுகும் அலுவலருக்கு

அறிவிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களினதும் எண்ணிக்கை என்பனவற்றை அனுப்பி வைக்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள
ஒப்பம்
பணிப்பாளர்
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

**பிரதி: இணங்கியொழுகும் அலுவலர்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

இல. 1699/10 திங்கட்கிழமை 2011 மாச்சு 28

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்**

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 2ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் கீழ் நிதியியல் உளவறிதல் பிரிவினால் ஆக்கப்பட்ட விதிகள்

**நிதியியல் உளவறிதல் பிரிவு**

கொழும்பு
2011 மாச்சு 28

**விதிகள்**

1. இவ்விதிகள் 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க உரிமம் பெற்ற வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள், உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் (உ.வா.தெ.) அத்துடன் வாடிக்கையாளரின் உரிய விழிப்புக் கவனம் (வா.உ.வி.) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.
2. இவ்விதிகள் உரிமம் பெற்ற வங்கி மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனி ஒவ்வொன்றுக்கும் (இதனகத்துப் பின்னர் “நிதி நிறுவனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏற்புடையனவாதல் வேண்டும்.
3. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் இயற்கை ஆட்களாகவோ அல்லது சட்ட ஆட்களாகவோ இருக்கக்கூடிய அதன் வாடிக்கையாளர்கள் தொடர்பில் வாடிக்கையாளரை இனங்காணும் தரவை அல்லது தகவலைப் பெறும் நோக்கத்திற்கு இவ்விதிகளில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

**பாகம் I**

**பொது**

**அ. இயற்கை ஆட்கள்**

4. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் இயற்கை ஆட்களிடமிருந்து பின்வரும் தகவலைப் பெறுதல் வேண்டும்:-

(அ) முழுப்பெயரும் பயன்படுத்தப்படும் வேறு எவையேனும் பெயர்களும் (விவாகமாவதற்கு முந்திய பெயர் போன்றது);

(ஆ) ஆணா/ பெண்ணா;

(இ) நிரந்தர முகவரி (முழு முகவரி பெறப்படுதல் வேண்டும்; அஞ்சல் அலுவலகப் பெட்டி இலக்கம் போதாது);

(ஈ) தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் அத்துடன் மின்னஞ்சல் முகவரி;

(உ) பிறந்த திகதி;

(ஊ) பிறந்த இடம்;

(எ) நாட்டினம் அல்லது பிரசாவுரிமை(கள்) (நடப்பு/ முந்திய காலப்பகுதியைச் சேர்க்கவும்);

(ஏ) வாடிக்கையாளரின் புகைப்படமொன்றைத் தாங்கியுள்ள அலுவலக முறையான அடையாள இலக்கம் அல்லது வேறு ஏதேனும் அடையாளம் (உதா: கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, சாரதி உரிமம்);

(ஐ) தொழில், வகித்த பகிரங்க பதவி அத்துடன்/ அல்லது தொழில்தருநரின் பெயர்;

(ஒ) கணக்கின் வகை.

5. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி தகவலை பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு வழியில் செவ்வை பார்த்தல் வேண்டும்:-

(அ) பிறந்த திகதியை அலுவலக முறையான ஆவணமொன்றிலிருந்து உறுதிப்படுத்துதல் (உ-ம்: பிறப்புச் சான்றுப்பத்திரம், கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை);

(ஆ) நிரந்தர முகவரியை உறுதிப்படுத்துதல் (உதா: பயன்பாட்டு விலைப்பட்டியல், வரி மதிப்பீடு, வங்கிக்கூற்று, பகிரங்க அதிகாரியொருவரிடமிருந்து ஒரு கடிதம், கிராம அலுவலரின் சான்றிதழொன்று அல்லது தேர்தல் இடாப்பு);

(இ) கணக்கொன்று திறக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட தகவலை உறுதிப்படுத்துவதற்கு வாடிக்கையாளருடன் தொலைபேசி மூலம், கடிதத்தின் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளுதல் அல்லது தரப்பட்ட தகவலை செவ்வை பார்ப்பதற்கு வெளிக்களப் பார்வையிடல் ஒன்றை மேற்கொள்ளுதல் தகவலின் உறுதிப்படுத்துகை துண்டிக்கப்பட்ட தொலைபேசியை, திருப்பியனுப்பப்பட்ட அஞ்சலை அல்லது பிழையான மின்னஞ்சல் முகவரியை வெளிப்படுத்துமாயின் நிதி நிறுவனம் மேலதிக புலனாய்வை நடாத்துதல் வேண்டும்;

(ஈ) வழங்கப்பட்ட அலுவலக முறையான ஆவணத்தின் செல்லுபடியாகும் தன்மையை அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் ஊடாக அத்தாட்சிப்படுத்துவதன் மூலம் உறுதிப்படுத்துதல்.

**குறிப்பு:** மேலே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்கள் தகவலை செவ்வை பார்ப்பதற்குள்ள ஒரு சில முறைகளாகும். ஆனால் வாடிக்கையாளரின் அடையாளத்தின் திருப்திகரமான சான்றாக முன்வைக்கப்படக்கூடிய இவற்றையொத்த இயல்பினவான வேறு ஆவணங்களும் அல்லது தகவலும் இருக்கலாம்.

6. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் நேர்காணலுக்கு இருக்கக்கூடிய வாடிக்கையாளர்களின் விடயத்திலும் அவ்வாறு இல்லாத வாடிக்கையாளர்களின் விடயத்திலும் வாடிக்கையாளரைப் பயனுறுதியுடன் இனங்காணும் நடவடிக்கை முறையைப் பிரயோகித்தல் வேண்டும்.

7. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் வாடிக்கையாளர் ஒருவரின் எதிர்மறை விளைவின் தன்மை பற்றிய பூர்வாங்க கணிப்பீடொன்றைச் செய்தல் வேண்டும். கூடுதலான எதிர்மறை விளைவின் தன்மை கொண்டதாக இனங்காணப்பட்ட வாடிக்கையாளர்கள் மீது விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தகைய விடயங்களில் அத்தகைய வாடிக்கையாளர்கள் தொடர்பில் பின்வருவன உட்பட மேலதிக விசாரணைகள் செய்யப்படுதல் வேண்டும் அல்லது தகவல் பெறப்படுதல் வேண்டும்.

(அ) வெளிக்களச் சந்திப்பின் மூலம் சுயேச்சையான செவ்வை பார்த்தல் ஊடாக வாடிக்கையாளரின் நிரந்தர முகவரி பற்றிய சான்று;

(ஆ) தனிப்பட்ட ஆற்றுப்படுத்துகை (உதா: அதே நிறுவனத்திலுள்ள வாடிக்கையாளர் ஒருவர் மூலம்);

(இ) வாடிக்கையாளர் தொடர்பில் வங்கியின் முன் ஆற்றுப்படுத்துகையும் நிதி நிறுவனத்துடன் வாடிக்கையாளர் தொடர்பும்;

(ஈ) வாடிக்கையாளரின் செல்வத்தினுடைய மூலவளம்;

(உ) தொழில், முன்னைய/ தற்போதைய பகிரங்க பதவி (தோதானவிடத்து) என்பன தொடர்பில் வாடிக்கையாளரால் வழங்கப்பட்ட விவரங்களை செவ்வை பார்த்தல்.

8 நிதி நிறுவனம் ஒவ்வொன்றும், கொடுக்கல்வாங்கலின் அல்லது இணைந்த கொடுக்கல்வாங்கல்களின் தொடரின் தொகை சட்டத்தின் 6ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் விதித்துரைக்கப்பட்ட தொகையை விஞ்சாதவிடத்து தனியொரு கொடுக்கல்வாங்கல் அல்லது அவ்வப்போது இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இந்த விதிகளின் 4ஆம் விதியில் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தகவலைப் பெறுதல் வேண்டும்.

**ஆ. பங்குடமைகள்:**

9. பங்குடமையொன்றின் விடயத்தில் நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் அத்தகைய பங்குடமையின் பங்காளர் ஒவ்வொருவரினதும் அடையாளத்தை செவ்வை பார்த்தல் வேண்டுமென்பதுடன் அதில் சொத்துரிமையை அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள உடனடுத்த குடும்ப உறுப்பினர்களின் விவரங்களையும் செவ்வை பார்த்தல் வேண்டும்.

10. 4 முதல் 8 வரையிலான விதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் பங்குடைமைகள் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் பின்பற்றப்படுதல் வேண்டும்.

**இ. நிறுவனங்கள்**

11. சம்பந்தப்பட்ட எதிர்மறை விளைவுகளின் வெவ்வெறு மட்டங்களுக்கு விசேட கவனம் செலுத்தி வெவ்வேறு நிறுவனங்கள் தொடர்பில் வாடிக்கையாளரை இனங்காணும் விதிகள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

12. 4 முதல் 8 வரையிலான விதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் நிறுவனங்கள் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் பின்பற்றப்படுதல் வேண்டும்.

**இ1. கூட்டிணைக்கப்பட்ட அமைப்புக்கள்**

13. கூட்டிணைக்கப்பட்ட அமைப்புகளுக்கு பிரதான வழிகாட்டு நெறியானது கட்டுப்பாடும் முகாமைத்துவமும் இறுதியாக யாரைச் சார்ந்திருக்கின்றனவோ அவர்கள் உட்பட தொழிலின் மீதும் அமைப்பின் சொத்துக்கள் மீதும் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பவர்களை இனங்காண்பதற்கு அமைப்பின் பின்னணியைப் பற்றி விசாரணை செய்வதாகும். பங்குதாரர்களுக்கும் கையொப்பமிடுநர்களுக்கும் அல்லது மூலதனத்தின் அல்லது நிதிசார்ந்த ஆதரவின் குறிப்பிடத்தக்க விசிதாசாரத்தை முதலீடு செய்யும் அல்லது வேறு வகையில் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் ஏனையோருக்கும் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். சொந்தக்காரர் கூட்டிணைக்கப்பட்ட வேறோர் அமைப்பாக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாக இருக்குமிடத்து கம்பனியின் அல்லது அமைப்பின் பின்னணியைப் பற்றி விசாரிப்பதற்கும் அதன் முதன்மையாளர்களின் அடையாளத்தை செவ்வை பார்ப்பதற்கும் நியாயமான வழிமுறைகளைப் பொறுப்பேற்பதே குறிக்கோளாகும்.

இவ்விதியின் நோக்கத்திற்கு கட்டுப்பாடு என்பது கூட்டிணைக்கப்பட்ட அமைப்பின் தன்மை எனவும் மேலும் அதிகாரமளிப்பு எதனையும் தேவைப்படுத்தாமல் நிதிகளை, கணக்குகளை அல்லது முதலீடுகளை முகாமை செய்வதற்குப் பணிப்பாணை வழங்கப் பெற்றவர்கள் எனவும் உள்ளக நடவடிக்கை முறைகளையும் கட்டுப்பாட்டுச் செயல்முறைகளையும் புறக்கணிக்கும் நிலையில் உள்ளவர்கள் எனவும் பொருள்படும். கூட்டிணைக்கப்பட்ட அமைப்பொன்று பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்டிருக்குமிடத்து அல்லது அத்தகைய கம்பனியொன்றின் துணை நிலையொன்றாக இருக்குமிடத்து இனங்காணப்படுவதற்கு அக்கம்பனியே முதன்மையாளராகக் கருதப்படலாம். ஆயினும், தனியாள் ஒருவரால், தனியாட்களின் சிறிய குழுவால் அல்லது கூட்டிணைக்கப்பட்ட வேறோர் அமைப்பால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பால், நிரற்படுத்தப்பட்ட கம்பனியொன்றின் பயனுறுதியுள்ட கட்டுப்பாடு இருக்கின்றதா என்பது கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். இச்சூழ்நிலைகளின் கீழ் அந்தக் கட்டுப்பாட்டாளர்களும் முதன்மையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க இனங்காணப்படுதலும் வேண்டும்.

14. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் கூட்டிணைக்கப்பட்ட அமைப்புக்களிடமிருந்து பின்வரும் தகவலைப் பெறுதல் வேண்டும்:-
    (அ) கூட்டிணைக்கப்பட்ட அமைப்பின் பெயர்;
    (ஆ) கூட்டிணைப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி;
    (இ) அமைப்பு அகவிதிகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி;
    (ஈ) கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு பணிப்பாளர் சபையின் தீர்மானமும் கணக்கை செயற்படுத்துவதற்கு அதிகாரம் கொண்டுள்ளவர்களின் அடையாளமும்;
    (உ) அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட அமைப்பின் தொழிலின் தன்மையும் நோக்கமும் அதன் சட்டமுறை நிலையும்;
    (ஊ) கூட்டிணைக்கப்பட்ட அமைப்பின் தொழில் செயற்பாடுகளின்/ நடவடிக்கையின் பிரதான இடம்;
    (எ) கூட்டிணைக்கப்பட்ட அமைப்பு அதன் தொழில் செயற்பாடுகளை/ நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்திய முன்னைய இடப்பரப்புகள் அல்லது அமைவிடங்கள் பற்றிய விவரங்கள் காலவரையறையுடன்;
    (ஏ) கூட்டிணைக்கப்பட்ட அமைப்பின் அஞ்சல் முகவரி;
    (ஐ) தொடர்பு கொள்ளும் தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்கள்;
    (ஒ) அலுவலக முறையான இனங்காணம் ஏதேனும் இலக்கம், இருப்பின் (உதா: கம்பனிப் பதிவிலக்கம், வரி அடையாள இலக்கம்).

15. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் மேற்படி தகவலை பின்வரும் வழிகளுள் ஏதேனும் ஒன்றில் உதா செவ்வை பார்த்தல் வேண்டும்:
    (அ) கூட்டிணைக்கப்பட்ட அமைப்பின் கடைசி நிதிக் கூற்றுக்களின் மீளாய்வொன்றை மேற்கொள்ளல் (கணக்காய்வு செய்யப்பட்டது இருப்பின்);
    (ஆ) தொழில் தகவல் சேவையொன்றின் ஊடாக விசாரணையொன்றை நடத்துதல் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை உறுதிப்படுத்தி நன்மதிப்புப் பெற்ற வழக்கறிஞர்களின் அல்லது கணக்காளர்களின் கழகமொன்றிடமிருந்து பொறுப்பேற்பொன்று;
    (இ) கூட்டிணைக்கப்பட்ட அமைப்பு கலைக்கப்படும், நீக்கப்படும், ஒடுக்கப்படும் அல்லது முடிவுறுத்தப்படும் செயல்முறையில் இருக்கவில்லை அல்லது செயல்முறையிலில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கூட்டிணைக்கப்பட்ட அமைப்பின் நிதிசார்ந்த உறுதிநிலை தொடர்பில் கம்பனித் தேடல் ஒன்றைப் பொறுப்பேற்றல் அல்லது வேறு விசாரணைகளை நடத்துதல்;
    (ஈ) பகிரங்க அல்லது தனியார் தரவுத் தளங்களை அடைதல் போன்ற சுயேச்சையான தகவல் செவ்வை பார்த்தல் செயல்முறையைப் பயன்படுத்துதல்;
    (உ) முன்னரே வங்கிக் குறிப்பீடுகளைப் பெறுதல்
    (ஊ) சாத்தியப்படுமிடத்து கூட்டிணைக்கப்பட்ட அமைப்பை சென்று பார்வையிடல்;
    (எ) கூட்டிணைக்கப்பட்ட அமைப்புடன் தொலைபேசி, அஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளுதல்.

16. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும், கூட்டிணைக்கப்பட்ட வாடிக்கையாளர் ஒருவரின் சார்பில் கணக்கொன்றை ஆரம்பிக்கும் எவரேனும் முகவர் கூட்டிணைக்கப்பட்ட வாடிக்கையாளர் ஒருவரின் அலுவலர் ஒருவராக இல்லையாயின் அந்த முகவரின் அடையாளத்தையும் நன்மதிப்பையும் செவ்வை பார்ப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் வேண்டும்.

**இ2. ஓய்வூதிய நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது இளைப்பாற்று நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்:**

17. ஓய்வூதிய நிகழ்ச்சித்திட்டங்களின் அல்லது இளைப்பாற்று நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களின் விடயத்தில் நம்பிக்கைப் பொறுப்பாளரும் உறவுமுறையின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள வேறு எவரேனும் ஆளும் (உதா: நிர்வாகி, நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் அத்துடன் கணக்குக் கையொப்பமிடுநர்) முதன்மையாளராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் நிதி நிறுவனம் அவர்களின் ஆளடையாளங்களை செவ்வை பார்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்.

அத்தகைய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் 4 முதல் 8 வரையிலான விதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் பின்பற்றப்படுதல் வேண்டும்.

**இ3. சங்கங்களும் கூட்டுறவுகளும்**

18. சங்கங்களினதும் கூட்டுறவுகளினதும் விடயத்தில் முதன்மையாளர்கள் ஒழுங்கமைப்பின் சொத்துக்கள் மீது கட்டுப்பாட்டை அல்லது குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கைப் பிரயோகிப்பவர்களாதல் வேண்டும். பெரும்பாலும் இது சபை உறுப்பினர்களையும் நிறைவேற்றுத் துறையினரையும் கணக்கு ஒப்பமிடுநர்களையும் உள்ளடக்கும்.

**இ4. தரும சபைகள், களரிகள் மற்றும் கழகங்கள்**

19. தரும சபைகளின், களரிகளின் மற்றும் கழகங்களின் விடயத்தில் நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் நிறுவனத்துடன் சேர்த்து குறைந்தபட்சம் இரண்டு கையொப்பமிடுநர்களையாவது இனங்காண்பதற்கும் செவ்வை பார்ப்பதற்கும் நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். முதன்மையாளர்கள் ஒழுங்கமைப்பின் சொத்துக்கள் மீது கட்டுப்பாட்டை அல்லது குறிப்பிடத்தக்களவு செல்வாக்கைப் பிரயோகிப்பவர்களாதல் வேண்டும். பெரும்பாலும் இது ஆளும் குழுமத்தின் அல்லது குழுவின் உறுப்பினர்களை, தலைவரை/ தவிசாளரை, பணிப்பாளர் சபையின் உறுப்பினர் அல்லது முகாமைக் குழுவை, பொருளாளரை அத்துடன் கையொப்பமிடுநர்கள் அனைவரையும் உள்ளடக்கும்.

20. எல்லா விடயங்களிலும் ஈடுபட்டுள்ள ஆட்கள் நிறுவனத்தின் உண்மையான பிரதிநிதிகளாவர் என்பது பற்றிய சுயேச்சையான செவ்வை பார்த்தல் பெறப்படுதல் வேண்டும். நிறுவனத்தின் குறிக்கோள் பற்றிய சுயேச்சையான உறுதிப்படுத்துகையும் பெறப்படுதல் வேண்டும்.

**ஈ. நம்பிக்கைப் பொறுப்புகள், நியமனத்தர்கள் மற்றும் நம்பகக் கணக்குகள்**

21. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் வாடிக்கையாளர் வேறோர் வாடிக்கையாளரின் பெயரை எடுக்கின்றாரா, "முன்னிலை ஆளாக" செயற்படுகின்றாரா, நம்பிக்கைப் பொறுப்பாளராக, நியமனத்தராக அல்லது வேறு இடையீட்டாளராக வேறோர் ஆளின் சார்பில் செயற்படுகின்றாரா என்பதனை நிலைநாட்டுதல் வேண்டும். அப்படியாயின் எவரேனும் இடைவருநர்களினதும் எந்த ஆட்களின் சார்பில் அவர்கள் செயற்படுகின்றார்களோ அந்த ஆட்களினதும் அடையாளம் பற்றிய திருப்திகரமான சான்றும் அத்துடன் நம்பிக்கைப் பொறுப்பின் தன்மை நடைமுறையிலுள்ள வேறு ஏற்பாடுகள் என்பன பற்றிய விவரங்கள் குறிப்பாக, நம்பிக்கைப் பொறுப்பின் அடையாளம் என்பனவற்றின் பெறுகையானது நம்பிக்கைப் பொறுப்பாளர்களையும் வழிமுறைப்படுத்துநர்களையும் கொளடையாளிகளையும் பயனாளிகளையும் உள்ளடக்க வேண்டும் என்பது பூர்வாங்கத் தேவைப்பாடொன்றாதல் வேண்டும்.

22. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் நம்பிக்கைப் பொறுப்பாளரையும் நம்பிக்கைப் பொறுப்பின் வழிமுறைப்படுத்துநர்களையும் (நம்பிக்கைப் பொறுப்பிற்கு சொத்துக்களை வழிமுறைப்படுத்தும் எவரேனும் ஆட்கள் உட்பட) எவரேனும் பாதுகாப்பாளரையும் பயனாளிகளையும் கையொப்பமிடுநரையும் செவ்வை பார்ப்பதற்கு நியாயமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பயனாளிகள் வரைவிலக்கணம் கூறப்படுமிடத்து அவர்கள் இனங்காணப்படுதல் வேண்டும்.

23. மன்றம் ஒன்றின் விடயத்தில் நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் தாபகரையும் முகாமையாளர்களையும் பணிப்பாளர்களையும் பயனாளிகளையம் செவ்வை பார்த்தல் வேண்டும்.

**உ. பயன்பெறும் சொந்தக்காரர்கள்**

24. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் விடயத்தின் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு பயன்பெறும் சொந்தக்காரர்களை இனங்காண்பதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகளின் நியாயத்தன்மையை நியாயப்படுத்தக்கூடியதாயிருத்தல் வேண்டும். நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தையும் அவர் தொடர்பிலான தகவலையும் பற்றி வாடிக்கையாளரிடமிருந்து பொறுப்பேற்பொன்றை அல்லது வெளிப்படுத்துகையொன்றைப் பெறுவதனையம் கருத்திற் கொள்ளலாம்.

**ஊ. உயர்தொழில்சார் இடைநிலையாளர்கள்**

25. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் எந்த வாடிக்கையாளரின் சார்பில் ஒரு வழக்கறிஞர், நொத்தாரிசு, வேறு சுயேச்சையான சட்ட உயர்தொழிலர் அல்லது கணக்காளர் போன்ற தொழில்சார் இடைவருநர் வாடிக்கையாளர் கணக்கொன்றைத் திறக்கின்றாரோ அந்தத் தனியார் வாடிக்கையாளர் ஒவ்வொருவரையும் இனங்காணுதல் வேண்டும். இடைநிலையாளரால் வைத்திருக்கப்படும் நிதிகள் இணைந்து ஒன்று சேராமலிருக்குமிடத்தும் ஆனால் பயன்பெறு சொந்தக்காரர் ஒவ்வொருவருக்கும் ஏற்றிக்கூறப்படற்பாலதாயிருக்கக் கூடிய “துணைக் கணக்குகள்” இருக்குமிடத்தும் இடைநிலையாளர்களால் வைத்திருக்கப்படும் கணக்குகளின் அனைத்துப் பயன்பெறு சொந்தக்காரர்களும் இனங்காணப்படுதல் வேண்டும். நிதிகள் இணைந்து ஒன்றுசேருமிடத்து நிதி நிறுவனம் பயன்பெறு சொந்தக்காரர்களை ஊடறுத்து நோக்குதல் வேண்டும். ஆயின், நிதி நிறுவனம் இடைநிலையாளருக்கும் அப்பால் நோக்க வேண்டியில்லாதிருக்குமிடத்து மேற்பார்வை வழிகாட்டு நெறியில் தரப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் இருக்கலாம். (உதா: இடைநிலையாளர் அதன் வாடிக்கையாளர் தளம் தொடர்பில் நிதி நிறுவனத்தைப் போன்று அதே உரிய விழிப்புக் கவன நியமங்களுக்கு அமைவாயிருக்குமிடத்து).

26. மேற்படி சூழ்நிலைகளில் ஒரு முதலீட்டுக் கம்பனிக்கு நம்பிக்கைப் பொறுப்புக்கூறுக்கு அல்லது வரையறுக்கப்பட்ட பங்குடமைக் கணக்கொன்று திறக்கப்படுமிடத்தும் நிதி நிறுவனத்திற்கு ஏற்புடைத்தான அதே உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாடுகள் அதன் வாடிக்கையாளர் தொடர்பில் நிதி நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தாகுமிடத்தும் பின்வருவன முதன்மையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் நிதி நிறுவனம் பின்வருவனவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்:

(அ) நிதியத்தை;
(ஆ) அது ஒரு கம்பனியாக இருக்குமிடத்து அதன் பணிப்பாளர்கள் அல்லது ஏதேனும் கட்டுப்படுத்தும் சபையை;
(இ) அது கூறுநம்பிக்கைப் பொறுப்புக்கூறாக இருக்குமிடத்து அதன் நம்பிக்கைப் பொறுப்பாளர்;
(ஈ) அதன் முகாமைப் (பொது) பங்காளர்;
(உ) கணக்குக் கையொப்பமிடுநர்கள்;
(ஊ) உறவுமுறையின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள வேறு எவரேனும் ஆள் (உதா: நிதி நிர்வாகி அல்லது முகாமையாளர்).

27. வேறு முதலீட்டு முறைகள் ஈடுபட்டுள்ளவிடத்து அவ்வாறு செய்வது தோதானதாக இருக்குமிடத்து விதி 25 இல் உள்ள அதே நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். மேலதிகமாக நிதிகளின் பயன்பெறும் சொந்தக்காரர்களின் அடையாளத்தையும் நிதிகளின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளவர்களின் அடையாளத்தையும் செவ்வை பார்ப்பதற்கு நியாயமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுதல் வேண்டும்.

28. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் இடைவருநர்களை அத்தகைய நிறுவனத்தின் தனித்தனி வாடிக்கையாளர்களாகக் கருதுதல் வேண்டுமென்பதுடன் இடைநிலையாளரின் நிலைமையைப் புறம்பாக செவ்வை பார்த்தலும் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் 10ஆம், 11ஆம் விதிகளின் ஏற்பாடு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

**எ. ஏனைய வகையான நிறுவனங்கள்**

29. இந்த ஒழுங்குவிதிகளின் ஆ, இ1 - இ4, ஈ, உ, ஊ என்பவற்றின் கீழான தலைப்புகளில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்குகளின் பிரிவுகளுக்கு முதன்மையாளரின் ஆளடையாளத்தை செவ்வை பார்ப்பதற்கு அவசியமான தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாகப் பின்வரும் தகவலும் பெறப்படுதல் வேண்டும்:

(அ) கணக்கின் பெயர்;
(ஆ) அஞ்சல் முகவரி;
(இ) தொடர்பு கொள்ளும் தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்கள்;
(ஈ) ஏதேனும் அலுவலக முறையான அடையாள இலக்கம், இருப்பின் (உதா: கம்பனிப் பதிவிலக்கம், வரி அடையாள இலக்கம்);
(உ) கணக்கு வைத்திருப்பவரின் நோக்கத்தின்/ செயற்பாடுகளின் விவரணம் (உதா: முறைசார்ந்த யாப்பில்);
(ஊ) கணக்கு வைத்திருப்பவரின் சட்டமுறை நிலைப்பாட்டிருக்கையை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பிரதி (உதா: தருமத்தின் பதிவு ஆவணம்).

30. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் பின்வரும் வழிகளுள் ஏதேனும் ஒன்றில் இத்தகவலை செவ்வை பார்த்தல் வேண்டும்:

(அ) சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை உறுதிப்படுத்தி நன்மதிப்பு கொண்ட சட்டவறிஞர்களின் அல்லது கணக்காளர்களின் கழகமொன்றிடமிருந்து சுயேச்சையான பொறுப்பேற்பொன்றைப் பெறுதல்;

(ஆ) முன்னரே வங்கியின் குறிப்பீடுகளைப் பெறுதல்;

(இ) பகிரங்க மற்றும் தனியார் தரவுத் தளங்களை அல்லது அலுவலக முறையான மூலவளங்களை அடைதல்.

**ஏ. அறிமுகம் செய்யப்பட்ட தொழில்**

31. நிதி நிறுவனம் எதுவும் நிதி நிறுவனங்களின் உங்கள் சொந்த வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளல் (உ.வா.தெ.) தொடர்பான நடவடிக்கை முறைகளை செயலாட்சி செய்கின்றவற்றைவிட நலிவான நியமங்களுக்குட்பட்ட அல்லது தங்கள் சொந்த உரிய விழிப்புக்கவன ஆவணங்களைக் கொடுத்துதவ விரும்பாத அறிமுகப்படுத்துநர்களில் தங்கியிருத்தலாகாது.

32. அறிமுகப்படுத்துநர் ஒருவரில் தங்கியிருக்கும் நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் எப்போதும் அறிமுகப்படுத்துநர் இந்த விதிகளில் தரப்பட்டுள்ள நியமங்களுக்கிணங்க அவசியமான உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகிக்கும் பொருத்தமான, தகுந்த ஆள் ஒருவரா என்பதனைக் கவனமாகக் கணிப்பீடு செய்தல் வேண்டும்.

33. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் அறிமுகப்படுத்துநர் ஒருவரில் தங்கியிருக்கலாமா என்பதனைத் தீர்மானிப்பதற்குப் பின்வரும் மூலப் பிரமாணங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்:

(அ) இந்த ஒழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ள குறைந்தபட்ச வாடிக்கையாளரின் உரிய விழிப்புக் கவனத்துடன் இணங்கியொழுகுதல்;

(ஆ) வாடிக்கையாளரை இனங்காணுதல் தொடர்பில் நிதி நிறுவனமொன்று அனுசரிக்க வேண்டிய வாடிக்கையாளரின் அதே உரிய விழிப்புக்கவன நடவடிக்கை முறையைக் கடைப்பிடித்தல்;

(இ) வாடிக்கையாளரின் அடையாளத்தை செவ்வை பார்ப்பதற்கு அறிமுகப்படுத்துநரால் நடைமுறைப்படுத்தப்பட்ட முறைமையின் நம்பகத்தன்மை பற்றித் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளல்;

(ஈ) அறிமுகப்படுத்துநரால் ஏதேனும் கட்டத்தில் பொறுப்பேற்கப்பட்ட உரிய விழிப்புக் கவனத்தை செவ்வை பார்ப்பதற்கு அது அனுமதிக்கப்படும் என்பதற்கு அறிமுகப்படுத்துநருடன் உடன்படிக்கை செய்துகொள்ளல்;

(உ) வாடிக்கையாளரின் அடையாளம் தொடர்பில் இயைபான அனைத்துத் தரவுகளும் வேறு ஆவணங்களும் அறிமுகப்படுத்துநரால் நிதி நிறுவனத்திற்கு உடனடியாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். நிதி நிறுவனம் வழங்கப்பட்ட ஆவணங்களைக் கவனமாக மீளாய்வு செய்தல் வேண்டும். அத்தகைய தகவல் மேற்பார்வையாளராலும் நிதிசார் உளவறிதற் கூறினாலும் மீளாய்வு செய்யப்படுவதற்கு கிடைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஊ) அது எந்த அறிமுகப்படுத்துநரில் தங்கியிருக்கின்றதோ அந்த அறிமுகப்படுத்துநர் மேலே தரப்பட்டுள்ள மூலப்பிரமாணத்திற்குத் தொடர்ந்து ஒத்திசைவதை உறுதிப்படுத்துவதற்கு பருவகால மீளாய்வுகளை நடத்துதல் வேண்டும்.

## பகுதி II

## தேவைப்பாடுகள்

34. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் கீழே குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்:

**கணக்குகளைத் திறத்தல்**

(1) தனியாள் கணக்குகள்:

(அ) பின்வரும் தகவல் பெறப்படுதல் வேண்டும்:-

(i) அடையாளங்காணும் ஆவணத்தில் காணப்படுகின்றவாறு முழுப்பெயர்;

(ii) அடையாளங்காணும் ஆவணம் தேசிய ஆளடையாள அட்டை என செல்லுபடியான கடவுச்சீட்டு என அல்லது செல்லுபடியான சாரதி உரிமம் எனக் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்;

(iii) அடையாளங்காணும் ஆவணத்தில் காணப்படுகின்றவாறு முகவரி, ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய வேறு ஏதேனும் முகவரி மூன்று மாதங்களுக்கு மேல் பழமையல்லாத பயன்பாட்டு விலைப்பட்டியல் ஒன்றினால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும். பயன்பாட்டு விலைப்பட்டியல்கள், மின்சார விலைப்பட்டியல் என, தண்ணீர் விலைப்பட்டியல் என மற்றும் தொலைபேசி அல்லது ஏதேனும் நிலையான இணைப்புத் தொழிற்படுத்துநரின் விலைப்பட்டியல் என குறித்துரைக்கப்படுதல் வேண்டும். அஞ்சல்பெட்டி இலக்கம் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது. "மே/பா" வின் விடயத்தில் ஆதனச் சொந்தக்காரரின் சம்மதமும் இயைபான முகவரியை செவ்வைபார்க்கும் வேறு ஆவணங்களும் பெறப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுகின்றன;

(iv) தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் அத்துடன் மின்னஞ்சல் முகவரி;

(v) நாட்டினம்;

(vi) வாழ்க்கைத்தொழில், வியாபாரம், வகிக்கும் பகிரங்கப் பதவி அத்துடன் தொழில்தருநரின் பெயர்;

(vii) கணக்கு திறக்கப்படுவதன் நோக்கம்;

(viii) எதிர்பார்க்கப்படும் மொத்த விற்பனை வரவு/ வியாபாரத்தின் அளவு;

(ix) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு (NRFC)/ வதிவற்றோர் ரூபா கணக்கு (NRRA) என்பவற்றின் விடயத்தில் வெளிநாட்டு நியாயாதிக்கமொன்றில் கணக்கைத் திறப்பதற்கென தெரிவு செய்ததன் காரணம்;

(x) திருப்திகரமான குறிப்பீடு;

(xi) கையொப்பத்தை செவ்வை பார்த்தல்.

(ஆ) பின்வரும் ஆவணங்கள் பெறப்படுதல் வேண்டும் (ஒவ்வொரு பிரதியும் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதல் வேண்டும்):-

(i) பணிப்பாணை/ கணக்கு திறக்கும் படிவம்

(ii) அடையாளம் காணும் ஆவணத்தின் பிரதி

(iii) முகவரியை செவ்வை பார்க்கும் ஆவணங்களின் பிரதி

(iv) நாட்டினத்தவர் அல்லாதோரின் வதிவுள்ள நாட்டினத்தவர் அல்லாத வெளிநாட்டு நாணயக் கணக்கு (RNNFC)/ வதிவற்றோர் ரூபாக் கணக்கு (NRRA)/ வதிவுள்ளோர் விருந்தினர் வெளிநாட்டுக் கணக்கு (RGF) என்பவற்றின் விடயத்தில் செல்லுபடியான விசா/ அனுமதிப்பத்திரத்தின் பிரதி

(v) கணக்கு வியாபாரப் பதிவின் நோக்கத்திற்காகத் திறக்கப்படின் வியாபாரப் பதிவின் பிரதி

(2) உரித்தாண்மை/ பங்குடமைக் கணக்குகள்:

(அ) பின்வரும் தகவல் பெறப்படுதல் வேண்டும்:-

(i) பதிவு ஆவணத்தில் காணப்படுகின்றவாறு முழுப்பெயர்;

(ii) தனியாள் கணக்குகளின் விடயத்திற் போன்று உரிமையாளரின்/ பங்காளர்களின் தனிப்பட்ட விவரங்கள்;

(iii) பதிவு செய்யப்பட்ட முகவரி அல்லது பிரதான தொழிலிடம் மற்றும் உரிமையாளரின்/ பங்காளர்களின் நிரந்தர முகவரி;

(iv) தொடர்பு கொள்ளும் தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள்;

(v) வரிக்கோப்பு இலக்கம்;

(vi) திருப்திகரமான குறிப்பீடு;

(vii) கையொப்பம்;

(viii) சொத்துரிமைக் கட்டுப்பாட்டின் அளவு;

(ix) தொடர்புடைய வேறு வியாபார அக்கறைகள்.

(ஆ) பின்வரும் ஆவணங்கள் பெறப்படுதல் வேண்டும் (ஒவ்வொரு பிரதியும் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதல் வேண்டும்):-

(i) பணிப்பாணை/ கணக்கு திறக்கும் படிவம்;

(ii) வியாபாரப் பதிவு ஆவணம்;

(iii) உரிமையாளர்களின்/ பங்காளர்களின் தகவல் ஆவணம்;

(iv) அடையாளங்காணும் ஆவணங்களினதும் முகவரியை செவ்வை பார்க்கும் ஆவணங்களினதும் பிரதி.

(3) கூட்டுத்தாபனங்கள்/ பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி:

(அ) பின்வரும் தகவல் பெறப்படுதல் வேண்டும்:-

(i) நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட பெயர்;

(ii) நிறுவனத்தின் பிரதான வியாபாரத் தொழிற்பாட்டிடம்;

(iii) அஞ்சல் முகவரி, ஏதுமிருப்பின்;

(iv) வியாபாரத்தின் தன்மையும் நோக்கமும்;

(v) தொலைபேசி/ தொலைநகல்/ மின்னஞ்சல்;

(vi) வருமான வரிக்கோப்பு இலக்கம்;

(vii) வங்கிக் குறிப்பீடுகள்;

(viii) தனியாள் வாடிக்கையாளர்களின் விடயத்திற் போன்று எல்லாப் பணிப்பாளர்களினதும் தனிப்பட்ட விவரங்கள்;

(ix) பிரதான பங்குதாரர்களும் அவர்களின் நிதிசார்ந்த அக்கறையும் கட்டுப்பாடும்;

(x) இணை நிறுவனங்களின் துணை நிலைகளின் நிரலும் வேறு வியாபாரத் தொடர்புகளும்;

(xi) கையொப்பங்கள்.

(ஆ) பின்வரும் ஆவணங்கள் பெறப்படுதல் வேண்டும் (ஒவ்வொரு பிரதியும் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதல் வேண்டும்):-

(i) பணிப்பாணை/ கணக்கு திறக்கும் படிவம்;

(ii) கூட்டிணைப்புச் சான்றிதழினதும் (படிவம் 40 அல்லது படிவம் 1 இன் பிரதி) அமைப்பு அகவிதிகளினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி;

(iii) கணக்கு திறத்தலுக்கு அதிகாரமளிக்கும் சபைத் தீர்மானம்;

(iv) படிவம் 18இன் பிரதி;

(v) படிவம் 20இன் பிரதி;

(vi) படிவம் 44இன் பிரதி (கரைக்கப்பாலுள்ள கம்பனிகளுக்கு ஏற்புடைத்தாகும்);

(vii) படிவம் 45இன் பிரதி (கரைக்கப்பாலுள்ள கம்பனிகளுக்கு ஏற்புடைத்தாகும்);

(viii) முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியொன்றாயின் முதலீட்டுச் சபை (BOI) உடன்படிக்கையின் பிரதி;

(ix) ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் (EDB) அங்கீகரிக்கப்பட்ட கம்பனியாயின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தின் பிரதி;

(x) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றாயின் வியாபாரத்தைத் தொடங்குவதற்கான சான்றிதழின் பிரதி;

(xi) கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள், இருப்பின்.

குறிப்பு: மேற்படி ஆவணங்கள் வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றுக்கும் ஏற்புடைத்தாகும்.

மேற்படி ஆவணங்கள் இல்லாதவிடத்து ஆவணங்கள் சாராத முறைகள் கொடுகடன் தகவல் பணியகத்தின் (CRIB) வங்கிக் குறிப்பீடுகளின் தளத்தின் அத்துடன் வாடிக்கையாளரின் வியாபார இணையத்தளத்தின் தேடுகையைத் தேவைப்படுத்தும்.

(4) களரிகள், சங்கங்கள், தரும சபைகள், கழகங்கள் மற்றும் அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்புகள்

(அ) பின்வரும் தகவல் பெறப்படுதல் வேண்டும்:-

(i) பட்டயம், யாப்பு முதலியவற்றில் காணப்படுகின்றவாறு பெயரும் முகவரியும்

(ii) குறைந்தபட்சம் இரண்டு பதவி தாங்குநர்கள், நிர்வாகிகள், ஆளும் குழுமத்தின் அல்லது குழுவின் உறுப்பினர்கள் அல்லது தனியாள் கணக்குகளின் விடயத்திற் போன்று அமைப்பின் தொழிற்பாடுகள் மீது கட்டுப்பாட்டையும் செல்வாக்கையும் கொண்டுள்ள வேறு எவரேனும் ஆள் பற்றிய விரிவான தகவல்

(iii) கணக்கு திறக்கப்படுவதன் நோக்கம், குறிக்கோள்கள் மற்றும் செயற்பாட்டுத்துறைகள்

(iv) வருமானத்தின்/ நிதியளிப்பின் மூலவளமும் மட்டமும்

(v) ஏனைய சார்புடைய நிறுவனங்கள்/ கழகங்கள்/ ஒழுங்கமைப்புகள்

(vi) தொலைபேசி/ தொலைநகல் இலக்கங்கள்/ மின்னஞ்சல் முகவரி

(ஆ) பின்வரும் ஆவணங்கள் பெறப்படுதல் வேண்டும் (ஒவ்வொரு பிரதியும் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதல் வேண்டும்):-

(i) பதிவு ஆவணம்/ யாப்பு, பட்டயம் முதலியன;

(ii) தனியாள் கணக்குகளின் விடயத்திற் போன்று வாடிக்கையாளர் தகவல் படிவம்;

(iii) பணிப்பாணை/ கணக்கு திறக்கும் படிவம்.

(5) நம்பிக்கைப் பொறுப்பு, நியமத்தர்கள் மற்றும் நம்பகக் கணக்குகள்:

(அ) பின்வரும் தகவல் பெறப்படுதல் வேண்டும்:-

(i) எல்லா நம்பிக்கைப் பொறுப்பாளர்களினதும் வழிமுறைப்படுத்துநர்களினதும்/ கொடை வழங்குநர்களினதும் அத்துடன் பயனாளிகளினதும் அடையாளம்;

(ii) வாடிக்கையாளர் “முன்னிலை” ஒருவராக செயற்படுகின்றாரா அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர், நியமத்தர் அல்லது வேறு இடைவருநர் ஒருவராக செயற்படுகின்றாரா என்பது.

(ஆ) பின்வரும் ஆவணங்கள் பெறப்படுதல் வேண்டும் (ஒவ்வொரு பிரதியும் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதல் வேண்டும்):-

(i) பணிப்பாணை/ கணக்கு திறக்கும் படிவம்;

(ii) நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் பிரதி;

(iii) எல்லா தனியாட்களினதும் விவரங்கள்.

(6) ஏக உரிமையாளர்கள்

வியாபாரப் பதிவின், உரிமத்தின்/ அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்று (ஒவ்வொரு பிரதியும் மூலப்பிரதியுடன் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

**கணக்குகளைப் பேணுதல்**

1. நிதி நிறுவனம் எதுவும் உத்தேச வாடிக்கையாளரின் போதியளவிலான அடையாளம் பெறப்பட்டாலன்றியும் பெறப்படும் வரையிலும் கணக்கொன்றை ஆரம்பித்தலாகாது பின்னரான திகதியொன்றில், கொடுத்துதவப்பட்ட தகவலின் முரண்பாடு எதுவும் இருப்பதாகத் தோன்றுமாயின் அத்தகைய தகவலின் உண்மையான தன்மை உறுதிப்படுத்தப்படும் வரை கணக்கு இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

2. ஆரம்பத்திலேயே பதியப்பட வேண்டிய பொது வாடிக்கையாளர் தகவலானது வாடிக்கையாளரின் வியாபாரம், உயர்தொழில், வருமானத்தின் மட்டம், பொருளாதார விவரம், வியாபாரக் கூட்டுகள் மற்றும் வேறு தொடர்புகள், நிதிகளின் மூலவளம், கணக்கு திறக்கப்படுவதன் நோக்கம் போன்ற விவரங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

3. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் எல்லா அடையாளம் காணும் ஆவணங்களினதும் முகவரியை செவ்வை பார்க்கும் ஆவணங்களினதும் பிரதிகளை தன்னகத்தே வைத்திருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள நிரந்தர முகவரி கணக்கைத் திறக்குமாறு விடுக்கும் வேண்டுகோளைப் பெற்றுக்கொள்ளும் கிளையிலிருந்து தூ ரத்திலுள்ள அமைவிடமொன்றில் இருக்குமிடத்து வேண்டுகோள் ஊக்கமிழக்கச் செய்யப்படுதல் அல்லது நிராகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏற்றுக்கொள்ளத்தக்கதும் செல்லுபடியானதுமான காரணமொன்று தரப்பட்டாலான்றி வாய்ப்புள்ள வாடிக்கையாளருக்கு அவரது வதிவிடத்திற்கு அல்லது வியாபாரத்திற்கு மிக அண்மையிலுள்ள கிளையில் கணக்கைத் திறப்புமாறு வேண்டுகோள் விடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விலக்களிப்புக்கள் கோவையின் பதியப்படுதல் வேண்டும். கணக்கு திறக்கப்பட்ட பின்னர் முகவரி மாற்றமொன்று செய்யப்படுமாயின் கணக்கு அவ்வங்கிக்கு மிக அருகாமையிலுள்ள கிளைக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

5. வாடிக்கையாளர் ஒருவரால் ஒரே வங்கியில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கணக்குகள் திறக்கப்படுமிடத்து, நிதி நிறுவனம் எல்லா கணக்குகளினதும் உரிய விழிப்புக் கவனம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதை இயலச் செய்வதற்காக அத்தகைய கணக்குகள் திறக்கப்பட்டதற்கான குறித்துரைக்கப்பட்ட நோக்கத்தைப் பதிதல் வேண்டும்.

6. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் குடிவரவு கட்டுப்பாட்டதிகாரி, சுங்கப் பணிப்பாளர் தலைமை அதிபதி, மத்திய வங்கி ஆளுநர், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் போன்ற இயைபான அரசாங்க அதிகாரிகளினால் வழங்கப்பட்டதான அறியப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட பயங்கரவாதிகளின் நிரல் அல்லது எச்சரிக்கை நிரலில் எவரேனும் வாய்ப்புள்ள வாடிக்கையாளர் காணப்படுகின்றாரா என செவ்வை பார்த்தல் வேண்டும்.

7. நிதிகளை ஒரு கணக்கிலிருந்து வேறொன்றுக்கு மாற்றுமாறு வாடிக்கையாளரிடமிருந்து அறிவுறுத்தல்கள் கிடைக்கப் பெறும் பொழுது வருங்கால குறிப்பீட்டிற்குத் துணையாக இலக்கங்கள் உள்ளக ரீதியில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

8. இலங்கையில் வதியும் இலங்கையரல்லாதோருக்கான/ வெளிநாட்டுக் கடவுச் சீட்டுகள் வைத்திருப்போருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளும் தற்காலிக ரூபா கணக்குகளும் திறக்கப்படும் பொழுது அவர்கள் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தின் போது அவர்களது நிரந்தர முகவரியாக உள்ளூர் முகவரியொன்று பெறப்படுதல் வேண்டும். கடவுச்சீட்டு, செல்லுபடியாகும் காலப்பகுதியுடனான வீசா என்பவற்றின்

பிரதியொன்றும் வெளிநாட்டு முகவரி, கணக்கு திறக்கப்படும் நோக்கம் என்பன கோவையில் இருக்கச் செய்தல் வேண்டும். விசா முடிவுறுவதன் மீது தோதான அறிவுறுத்தல்கள் கிடைக்கப் பெற்றாலன்றியும் வேறு வகையிலும் கணக்கின் செயற்பாடு இல்லாதொழிதல் வேண்டும். நாட்டை விட்டுச் செல்லும் போது கணக்கு மூடப்படுதல் வேண்டும் அல்லது வதிவற்றோர் கணக்கொன்றாக மாற்றப்படுதல் வேண்டும். நிதி நிறுவனங்கள் கணக்கு அவற்றுடன் தொடர்ந்திருக்கும் பொழுது எல்லா நேரங்களிலும் செல்லுபடியான விசாவொன்று அவர்களால் வைத்திருக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

9. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் வதிவற்றோருக்கு (வெளிநாட்டுக் கடவுச் சீட்டுகள் வைத்திருப்போர்) ரூபா கணக்கு திறக்கப்பட்டு பேணப்படும் போது நிரந்தர முகவரியொன்றாகவும் கடிதத் தொடர்பிற்காகவும் வெளிநாட்டு முகவரியொன்றைப் பயன்படுத்துதல் வேண்டும்.

10. வதிவுள்ள இலங்கையரல்லாதோருக்கான எல்லா ரூபா கணக்குகளும் இலங்கை முகவரியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும், கணக்கு வைத்திருப்பவர் வெளிநாட்டில் வதிவுள்ளவராக இருக்கும் வரையில் வெளிநாட்டு முகவரியொன்று தற்காலிகமாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் வாடிக்கையாளர் திரும்பி வருவதன் மீது நடைமுறையிலுள்ள உரிய விழிப்புக் கவன நியமங்களின் கீழ் முகவரியை நாளது வரை சீராக்குதல் வேண்டும். கூட்டுக் கணக்குகளின் விடயத்தில் எல்லா திறத்தவர்களும் வெளிநாட்டில் வதியும் போது மட்டுமே வெளிநாட்டு முகவரியொன்று பயன்படுத்தப்படலாம். எவரேனும் ஒரு திறத்தவர் நாட்டில் தங்கியிருப்பின் உள்ளூர் முகவரி பேணப்படுதல் வேண்டும்.

11. தரும மற்றும் உதவி வழங்கும் ஒழுங்கமைப்புகளுக்கும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளுக்கும் இலாபமற்ற ஒழுங்கமைப்புகளுக்கும் வங்கிக் கணக்குகள் அப்போதைக்கு தரும மற்றும் உதவி வழங்கும் ஒழுங்கமைப்புகளையும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளையும் இலாபமற்ற ஒழுங்கமைப்புகளையும் ஒழுங்குபடுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரசபையின் பதிவுடனும் வேறு தோதான நம்பிக்கைக்குரிய ஆதாரச் சான்றுகளுடனும் மட்டுமே திறக்கப்படுதல் வேண்டும். அதாவது மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை திணைக்களம் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தாலும் செலாவணிக் கட்டுப்பாட்டாளராலும் வழங்கப்பட்ட அவற்றின் தொழிற்பாடுகளை செயலாட்சி செய்யும் குறித்துரைக்கப்பட்ட பணிப்புகளுக்குரிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

12. அரசியல் ரீதியில் பாதுகாப்பற்ற ஆட்களுக்கு கணக்குகள் திறப்பதற்கு சிரேஷ்ட முகாமைத் துறையின் அதிகாரமளிப்பு பெறப்படுதல் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கத்திற்கு அரசியல் ரீதியில் பாதுகாப்பற்ற ஆட்கள் என்பது "இலங்கையில் அல்லது வெளிநாட்டில் முக்கியமான பகிரங்கப் பணிகள் பொறுப்பிக்கப்பட்ட அல்லது பொறுப்பிக்கப்பட்டுள்ள தனியாட்கள்" அதாவது அரச அல்லது அரசாங்கத் தலைவர்கள், சிரேஷ்ட அரசியல்வாதிகள், சிரேஷ்ட அரசாங்க, நீதித்துறை அல்லது இராணுவ அலுவலர்கள், அரசுக்குச் சொந்தமான சிரேஷ்ட நிறைவேற்றுத் துறையினர்கள், முக்கியமான அரசியற் கட்சி அலுவலர்கள் என்று பொருள்படும். அத்தகைய ஆட்களின் குடும்ப உறுப்பினர்களுடனான அல்லது நெருக்கமான தொடர்புடையவர்கள் அத்தகைய ஆட்களையொத்த நன்மதிப்பு சார்ந்த எதிர்மறை விளைவுகளுடன் சம்பந்தப்பட்டவர்களாவர், இதன் மூலம் மேற்போந்த பிரிவுகளிலுள்ள நடுத்தர வரிசையிலுள்ள அல்லது மேலும் கனிஷ்ட அலுவலர்களை உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்படவில்லை.

13. சேமிப்பு அத்துடன்/ அல்லது நடைமுறைக் கணக்குகளுக்கு மூன்றாம் தரப்பினர்களால் செய்யப்படும் எல்லா பண வைப்பீடுகளும் வைப்பீட்டாளரின் அடையாளத்தை பதிவில் கொண்டிருத்தல் வேண்டும். தேவைப்படும் விவரங்களாவன, பெயர், முகவரி, செல்லுபடியான அடையாள ஆவணமொன்றின் அடையாள இலக்கம், நோக்கம் மற்றும் கையொப்பம் என்பனவாகும். ஆயினும் கணக்குகளைக் கையாள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வியாபார இல்லங்களின் எழுதுவினைஞர்கள், கணக்காளர்கள் மற்றும் ஊழியர்கள் "மூன்றாம் தரப்பினர்கள்" என்ற வரைவிலக்கணத்திற்கு உட்படமாட்டார்கள்.

14. வெளிநாட்டு நாணயத்திலிருந்து வெளிநோக்கிய பண அனுப்புதல்கள்/ தந்தி கைமாற்றல்கள் செய்யப்படும் போது பெயர், முகவரி, கணக்கு இலக்கம், அடையாள இலக்கம், அத்தகைய கைமாற்றல்களின் நோக்கம் பற்றிய சுருக்கமான விவரம் போன்ற முக்கியமான, அர்த்தமுள்ள மூலகர்த்தாவைப் பற்றிய தகவலை உள்ளடக்கிய முழுமையான விண்ணப்பமொன்று நிதி நிறுவனத்திற்கு அனுப்புதல் கட்டாயமானதாகும்.

15. நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயம் ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கணக்கின் வரவிற்கு ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் நிதி நிறுவனம் நிதிகளின் மூலவளத்தையிட்டு திருப்தியடைதல் வேண்டும்.

16. இறக்குமதி ஆவணங்கள் சேகரிப்பு அடிப்படையில் வாடிக்கையாளர்கள் அல்லாத நிதி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படும் போது தகுந்த வாடிக்கையாளர் இனங்காணல் அல்லது உறவுமுறையொன்று நிலைநாட்டப்படுதல் வேண்டும். இனங்காணல் ஆளின் அல்லது வியாபாரத்தின் சரியான முகவரியை உள்ளடக்குதல் வேண்டும்.

17. இந்த விதிகள் எந்த நிதி நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தாகின்றனவோ அந்த நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் 2011, யூன் 30ஆம் திகதியளவில் எல்லாக் கணக்குகளையும் நாளது வரையிலான சீராக்கத்தைப் பூர்த்தி செய்யுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

18. சட்டத்தின் 6(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் விதித்துரைக்கப்பட்டவாறு தொடக்க நிலை வரையறைக்குக் குறைவாக அடிக்கடி இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் கட்டாயத் தேவைப்பாட்டை வாடிக்கையாளர் இடைமறிக்க முயல்கின்றார் எனக் காட்டும் அத்தகைய முறையில் அறிக்கையிடும் கணக்குகள் தோதான நடவடிக்கைக்காக நிதி நிறுவனத்தின் இணக்கப்பாட்டு அலுவலருக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

19. கணக்குக் கொடுக்கல்வாங்கல் பதிவிலுள்ள வாடிக்கையாளரின் விவரக் குறிப்புடன் ஒத்திருத்தல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். ஒவ்வாமை எதுவும் விசாரணை செய்யப்பட்டு சரியான நிலைமை பதியப்படுதல் வேண்டும். ஒவ்வாதனவாயிருக்கும் கொடுக்கல்வாங்கல்கள் தோதான நடவடிக்கைக்காக நிதி நிறுவனத்தின் இணக்கப்பாட்டு அலுவலருக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

**புதிய தொழில்நுட்பவியல்களை அறிமுகம் செய்தல்:**

1. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் அநாமதேயத்திற்கு சாதகமாக அமையக்கூடிய இணைய வங்கித்தொழில் உட்பட புதிய அல்லது அபிவிருத்தியடைந்து வரும் தொழில்நுட்பவியலிலிருந்து எழக்கூடிய ஏதேனும் பணம் தூய்தாக்கலின் அச்சுறுத்தலுக்கு விசேட கவனம் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு தேவைப்படுத்தப்படுமிடத்து பணம் தூய்தாக்கல் செயற்றிட்டத்தில் அவற்றின் பயன்பாட்டைத் தடை செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுதலும் வேண்டும். பண்டங்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கும் பணக் கொடுக்கல்வாங்கல் பொறிகளிலிருந்து (ATM) காசைப் பெறுவதற்கும் நிதிகளை இலத்திரனியல் முறையில் கைமாற்றுவதற்கும் பல்வேறு வகையான இலத்திரனியல் அட்டைகள் வாடிக்கையாளர்களால் பயன்படுத்தப்படுவதை நிதி நிறுவனங்கள் கருத்திற்கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக கடன் அட்டைகளை முன் நிரப்பீடு செய்தல் ஏனையவற்றுடன் பணம் தூய்தாக்கலுக்கும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கும் பயன்படுத்தப்படலாமென்பதுடன் அவ்வாறு செய்வது கடன் அட்டைகளின் துஷ்பிரயோகமாக அமையலாம் ஆதலால் அது அனுமதிக்கப்படுதலாகாது.

2. கடன் அட்டை வணிகர்களின் தொழிலின் தன்மையின் மீது விசேட கவனம் செலுத்தி மேலதிகமாக "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" (KYC) மற்றும் உளதாம் அத்துடன் புதிய கடன் அட்டை வணிகர் தளத்தின் மீது (CDD) வாடிக்கையாளரை உன்னிப்பாகக் கண்காணித்தல் என்பன பொறுப்பேற்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நி.கொ.வா.அ. சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி எதேனும் சட்ட விரோதமான செயற்பாட்டில் ஈடுபடும் எவரேனும் வாடிக்கையாளருக்கு, கொடுக்கல்வாங்கலுக்கு அல்லது வணிகருக்கு எதிரான தோதான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுதலும் வேண்டும். கடன் அட்டை வாடிக்கையாளர்களால் இணையத்தின் ஊடாகச் செய்யப்படும் கொடுப்பனவுகள் குறிப்பாக சட்ட விரோதமான செயற்பாடுகளுக்கு கொடுப்பனவு செய்யப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்கு மிகவும் நெருக்கமான கவனத்தை தேவைப்படுத்துகின்றன.

3. வாடிக்கையாளர்களுக்கும் கடன் அட்டையின் சந்தைப்படுத்துதல் முகவர்கள் ஊடாகச் செய்யப்படுமிடத்து முகவர்களுக்கும் உ.வா.தெ. (KYC) நடவடிக்கை முறைகள் பிரயோகிக்கப்படுவதை நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4. கணக்குகளைத் திறப்பதற்கான விண்ணப்பங்கள் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் ஊடாக பெறப்படுமிடத்து கணக்குகளைத் திறப்பதற்கு முன்னர் அல்லது அவற்றை செயற்படுத்துவதற்கு முன்னர் வாடிக்கையாளரின் உண்மையான அடையாளத்தைப் பதிவதற்குரிய கவனம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். எது விடயத்திலும் வாய்ப்புள்ள வாடிக்கையாளர் நேரில் சமூகமளிக்க இயலாதிருக்கின்றார் என்ற காரணத்தினால் மாத்திரம் நிதி நிறுவனங்கள் தேவைப்படுத்தப்பட்ட இனங்காணும் நடவடிக்கை முறையிலிருந்து புறம் செல்லல் ஆகாது.

5. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் உள்நோக்கிய பண அனுப்புகையுடன் சேர்ந்து வரும் உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதிசார்ந்த தொலைத்தொடர்பு (SWIFT) செய்திகளை ஆறு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பேணுதல் வேண்டும்.

6. பணம் மாற்றுநர்களுக்கு/ பணம் அனுப்புநர்களுக்கு நிதி நிறுவனம் கணக்குகளைப் பேணும் பொழுது நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் அத்தகைய வாடிக்கையாளர்கள் பிரத்தியேகமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் நியதி நிபந்தனைகளுடன் இணங்கியொழுகி பணம் மாற்றும்/ பணம் அனுப்பும் தொழிலில் மாத்திரமே ஈடுபட்டுள்ளன என்பதனை அறிந்திருத்தல் வேண்டும். பணம் மாற்றுநர்கள் 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூய்தாக்கலைத் தடை செய்யும் சட்டத்தின் ஏற்படுகளால் மேவப்பட்டுள்ளதால் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் அவர்கள் முழுமையாக இணங்கியொழுகுவதை உறுதி செய்தல் நிதி நிறுவனங்களின் கடமையாகும். அதிகாரமளிக்கப்படாத நிதிசார்ந்த கொடுக்கல்வாங்கல்கள் எவற்றிலும் ஈடுபடுதல் தோதான நடவடிக்கைக்கென நிதி நிறுவனத்தின் இணக்கப்பாட்டு அலுவலரின் கவனத்திற்குக் கொணரப்படுதல் வேண்டும். எனவே நிதிகளின் மூலவளத்தை ஆய்ந்தறிவது இன்றியமையாததாகின்றது.

**மாற்றுப்பண அனுப்பு முறைமைகள் (கவுந்தி, கவாலா முதலியன):**

எந்த முறைசார்ந்த பண ஆனுப்புகை சேவைகளினதும் வேறு பண அல்லது பெறுமதி கைமாற்ற முறைமைகளினதும் ஊடாக நிதிகள் அல்லது வேறு பெறுமதி ஒரு புவியியல் அமைவிடத்திலிருந்து மற்றொன்றுக்கு முறைசாராத மற்றும் கண்காணிக்கப்படாத வலையமைப்புகள் அல்லது செயல்முறைகள் ஊடாக நகர்த்தப்படுகின்றதோ அந்த முறைசார்ந்த பண அனுப்புகை சேவைகளையும் வேறு பண அல்லது பெறுமதி கைமாற்ற முறைமைகளையும் வேறுபடுத்திக் காட்டுவதற்கு நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் விசேட விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

**தொடர்பு வங்கிகளும் தனித்தியங்கும் (Shell) வங்கிகளும்:**

தொடர்பு வங்கிகளுடன்/ நிதி நிறுவனங்களுடன் வங்கித்தொழில் உறவு முறைகளைத் தொடங்கு முன்னர் நிதி நிறுவனங்கள் அவற்றின் முகாமைத்துவம், பிரதான தொழில் நடவடிக்கைகள் அவற்றின் பணம் தூய்தாக்கலைத் தடை செய்யும் மற்றும் கண்டுபிடிக்கும் முயற்சிகள் என்பன தொடர்பான போதியளவு தகவலை சேகரித்தல் வேண்டும். கணக்கின் நோக்கம் பிரத்தியேகமாக வங்கித்தொழிற் செயற்பாடுகளுக்கே என்பதனையும் வங்கியின் உரிய விழிப்புக் கவனத்திற்கும் அந்நாட்டிலுள்ள பணம் தூய்தாக்கலுக்கு எதிரான நியமங்களுக்கும் இயைபான அதிகாரிகளால் பயனுறுதியுடன் கண்காணிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதும் நிதி நிறுவனத்தின் கடமையாகும். சீரற்ற "உ.வ.தெ." (KYC) நியமங்களைக் கொண்ட நியாயாதிக்கங்களில் அமைந்துள்ள நிதி நிறுவனங்களுக்கு அல்லது பணம் துயதாக்கலுக்கும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பு செய்வதற்கும் எதிரான போராட்டத்தில் "ஒத்துழைக்காதவை" என இனங்காணப்பட்ட நிதி நிறுவனங்களுடன் தொழிலில் ஈடுபடுவதை அல்லது தொழிலைக் கொண்டு நடாத்துவதனை நிதி நிறுவனங்கள் மறுத்தல் வேண்டும். அவற்றின் தொடர்பு நிதி நிறுவனங்கள் தனித்தியங்கும் (Shell) நிதி நிறுவனங்களுடன் தொழிலைப் பொறுப்பேற்கமாட்டா என்பதை நிதி நிறுவனங்கள் உறுதிப்படுத்துவதும் இன்றியமையாததாகும். செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியின் முன்னங்கீகாரமின்றி தனித்தியங்கும் நிதி நிறுவனங்களுக்கு கணக்குகள் எவையும் திறக்கப்படுதலாகாது.

**திறைசேரி வணிகத் தொடர்புகள்:**

வெளிநாட்டு செலாவணி (Forex), பணச் சந்தை, முறிகள், பிணையங்கள், அரும் உலோகங்கள் முதலியவற்றிலான வணிகத் தொடர்புகள் தொடர்பில் இணக்கப்பாடில்லாத நாடுகளுடன்/ அமைப்புகளுடன் கொடுக்கல்வாங்கல்களைத் தடைசெய்வதற்கு எதிர் திறத்தவர்கள் பணம் தூய்தாக்கலுக்கு எதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கு எதிரான விதிகளைக் கடைப்பிடித்தல் பற்றி எதிர் திறத்தவர்களிடமிருந்து உறுதிப்படுத்துதல்கள் பெறப்படுதல் வேண்டும்.

**வியாபார நிதி/ கடனுறுதிப்பத்திரம் மற்றும் எதிர்பாராத வேறு நிகழ்வுகள்:**

வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்ட பணம் தூய்தாக்கலும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலும் வழமையாக விலைப்பட்டியலின் கையாடலுடன் சம்பந்தப்பட்டிருப்பதுடன் நிதிசார்ந்த ஒளிவுமறைவற்ற தன்மையையும் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் தவிர்ப்பதற்கு வியாபார நிதி மார்க்கங்களையும் வியாபாரப் பண்டங்களையும் பயன்படுத்துகின்றன. இந்த வசதிகளின் பயன்பாடு காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். கடனெடுக்கும் வசதிகள் கொண்ட அல்லது ஏனைய நிறுவனங்களுடன் பாரிய வைப்பீடுகளைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களால் கோரப்பட்ட வசதிகள் உன்னிப்பான நுனித்தாய்வுக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும். ஏனைய உதாரணங்கள் வெளிப்படையாக தொடர்பில்லாத மூன்றாம் திறத்தவர் ஒருவருக்கு வருவாய்களை சாட்டுதல் செய்தல், பண்டங்களின் விவரணங்கள் இல்லாமல் ஒப்படைப்புப் பொருட்பட்டியல்களைப் பயன்படுத்துதல் பண்டங்களின் விவரணத்தையும் ஏனைய தோதான ஆதார ஆவணங்களையும் வழங்குவதற்கு தயக்கம் என்பனவாகும்.

## பாகம் III

### நானாவிதம்

35. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் சட்டத்தின் 14ஆம் பிரிவின் நியதிகளின்படி இணக்கப்பாட்டு அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றது. இவர் நிறுவனத்தால் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும். இந்த அலுவலர்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

36. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (1) (இ) என்னும் உட்பிரிவின் நியதிகளின்படி இணங்கியொழுகுவதற்கான அதன் நடவடிக்கை முறையையும் முறைமைகளையும் சோதிப்பதற்கு கணக்காய்வுப் பணியொன்றைத் தாபித்தல் வேண்டும்.

37. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பு செய்தல் என்பன தொடர்பிலான சட்டங்களை அதன் அலுவலர்களும் ஊழியர்களும் அறிந்திருக்கச் செய்தல் வேண்டுமென்பதுடன் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களைக் கண்டு கொள்வதற்கு அதன் அலுவலர்களையும் ஊழியர்களையும் பயிற்றுவித்தலும் வேண்டும். எல்லா ஆட்களையும் ஊழியர்களாக வாடகைக்கு அமர்த்துவதற்கு முன்னர் அவர்களை அலசி ஆராயும்படியும் நிதி நிறுவனங்கள் தேவைப்படுத்தப்படுகின்றன.

38. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் அதன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கிளைகளும் துணைநிலை நிறுவனங்களும் உள்ளூர் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் ஏற்புடைத்தாகும் அளவுக்கு வழிமுறைகளைக் கடைப்பிடித்தலும் அனுசரித்தலும் வேண்டுமென்பதுடன் வெளிநாட்டுக் கிளைகள்/ துணைநிலை நிறுவனங்கள் நிதிசார்ந்த செயற்பாட்டுச் செயலணியின் விதப்புரைகளுடன் இணங்கியொழுகாத அல்லது போதியளவில் இணங்கியொழுகாத நியாயாதிக்கங்களில் அத்தகைய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவும் அனுசரிக்கவும் இயலாதிருக்குமிடத்து அத்தகைய விடயம் தோதான நடவடிக்கைக்கென நிதி நிறுவனத்தின் இணக்கப்பாட்டு அலுவலருக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

39. நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் சிக்கலான, வழமைக்கு மாறான, அல்லது வெளிப்படையாக பொருளாதார மற்றும் சட்டபூர்வமான நோக்கத்தைக் கொண்டிராத அவற்றின் பாரிய கொடுக்கல்வாங்கல் அனைத்தினதும் பின்னணியை நுனித்தாய்தலும் பரிசீலனை செய்தலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய பரிசீலனையின் எழுத்திலான பதிவேட்டை வைத்துக்கொள்ளுதலும் வேண்டும்..

40. விதி 14 முதல் விதி 15 வரையில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் இந்த விதிகளின் பாகம் I இன் இ3, இ4, ஈ என்னும் விடயங்களில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஆட்கள் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் பின்பற்றப்படுதல் வேண்டும்.

41. இந்த விதிகளில் -

"சட்டம்" என்பது, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார்ந்த கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் எனப் பொருள்படும்.

"உரிமம் பெற்ற வங்கி" என்பது, 1988ஆம் அண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் அளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கி எனப் பொருள்படும்.

"பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்" என்பது, 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் எனப் பொருள்படும்; அத்துடன்

"பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை" என்பது, 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உரிமம் அளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை எனப் பொருள்படும்.

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2011 சனவரி 07

**சுற்றிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/01/2011**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**2011 சனவரி 14ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்**

2011 சனவரி 14ஆம் நாளன்று (தமிழ் தைப்பொங்கல் தினம் சனிக்கிழமை வருவதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது) லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களினது கட்டுப்படுத்தப்பட்ட அலுவலக நேரத்தினைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி 2011 சனவரி 14ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. இதற்கமைய 2011 சனவரி 14ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணை நண்பகல் 12.00 மணிக்குப் பின்னரான நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவுகள் | பி.ப. 12.45 |
| ரூபா வரைவுத் தீர்ப்பனவின் பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் மற்றும் சீராக்க தீர்ப்பனவுகள் | பி.ப. 2.00 |
| மூன்றாந்தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 2.15 |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - இலங்கை உள்ளகக் கொடுப்பனவு முறைமை (பிரிவு 2) | பி.ப. 2.15 |
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (நிதியியல் வசதி) தீர்ப்பனவுகள் | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான நேர்மாற்று மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுத் தீர்ப்பனவுகள் | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 3.00 |
| கணனி முறையினை மூடிவிடுதல் | பி.ப. 3.30 |

எஸ் எஸ் ரத்நாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**பொதுப் பணிப்புரை இல: 01/2011**

**2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டம்**

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பொதுப் பணிப்புரை.

பி. டி. ஜே. பர்னாந்து
**துணை ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு

2011 சனவரி 27

**பொதுப் பணிப்புரை**

இப்பணிப்புரையானது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் சட்டத்தின் 44ஆம் பிரிவின் நியதிகளில் மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளை பொருத்தமான விதத்திலும் வினைத்திறனுடனும் நடைமுறைக்கிடுவதற்காகவும் நிருவகித்து, வலுவுக்கிடுவதற்குமாக விடுக்கப்படுகிறது. இப்பணிப்புரையானது 01/2011 ஆம் இலக்க இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை மீதான பொதுப் பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டிற்கும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் (சிலிப்ஸ்) பங்கேற்பாளர்களுக்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டும் என்பதுடன் 2011 சனவரி 11ஆம் நாளன்று தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

இப்பணிப்புரையானது ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிகள் என்பனவற்றிற்கு மேலதிகமாகவும் அவற்றின் வலுவினைக் குறைக்காததாகவும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைகளின்

பங்கேற்பாளர்களுக்கான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவும் அத்துடன்/ அல்லது காலத்திற்குக் காலம் செய்யப்படும் சட்டங்களுக்கு உட்பட்டதாகவும் இருக்கும்.

மேற்குறிப்பிட்ட பந்தியின் பொதுவாந்தன்மைக்கு பங்கமேதுமில்லாமல், இப்பணிப்புரையானது 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடுகள் அல்லது பொறுப்பாண்மைகளை மட்டுப்படுத்தும் விதத்தில் பொருள் கொள்ளப்படுதலும் ஆகாது.

**அறிமுகம்**

சிலிப்ஸ் முறையானது பணக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கான கொடுப்பனவுக் கட்டளையைச் செயன்முறைப்படுத்துகின்ற இலத்திரனியல் முறைமையொன்றாகும். சிலிப்ஸ் முறைமையானது வங்கிகளுக்கிடையிலான பின்னர் செய்யப்படுகின்ற கொடுப்பனவு முறைமையொன்றாக 1993இல் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2002இல் இலங்கை மத்திய வங்கி காசோலைகளின் தீர்ப்பனவினையும் சிலிப்ஸ் முறைகளையும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டிடம் கையளித்தது. சிலிப்ஸ் முறைமையின் நோக்கம் யாதெனில் ஒரேவிதமான சீரான தன்மையினையும் பொதுவான இலத்திரனியல் சில்லறை கொடுப்பனவு முறையினையும் நிறுவுவதும் கொடுப்பனவு முறைமைப் பாதுகாப்பினையும் வினைத்திறனையும் மேம்படுத்துகின்ற வேளையில் நாட்டின் சில்லறை கொடுப்பனவு முறைமையின் பரிணாம வளர்ச்சியில் சிலிப்ஸ் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களிடையேயான ஒத்துழைப்பினை மேம்படுத்துவதுமேயாகும். அதே வியாபார நாளன்று கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதற்கு வசதியளிக்கும் விதத்தில் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் 2010 செத்தெம்பரில் சிலிப்ஸ் முறைமையானது அதேநேர வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையொன்றாகத் தரமுயர்த்தப்பட்டது.

**அ. வரைவிலக்கணங்கள்**

1. **"நன்மை பெறுநர்"** என்பது கொடுப்பனவுக் கட்டளையிலுள்ள நாணயப் பெறுமதியின் நன்மை பெறுநராக பெயரிடப்பட்டுள்ள சட்ட ரீதியான அல்லது இயல்பான எவரேனுமாள் அத்துடன் அல்லது அத்தகைய ஆளின் நியமனத்தர், முகவர் அல்லது பிரதிநிதி எனப் பொருள்படும்.
2. **"வியாபார நாள்"** என்பது வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் சங்கம் (உத்தரவாதப்படுத்தப்பட்டது) மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பனவற்றின் இணக்கத்துடன் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் வியாபாரமற்ற நாள் என பிரகடனப்பட்டிருந்தாலொழிய, கலண்டர் ஆண்டின் எந்தவொரு நாளிலும் சிலிப்ஸ் முறைமை தொழிற்படுகின்ற நாள் எனப் பொருள்படும்.
3. **"தீர்ப்பனவு வட்டம்"** என்பது ஒரு தீர்ப்பனவு நேரத்திலிருந்து அடுத்து வரும் தீர்ப்பனவு நேரம் வரையிலான காலப்பகுதி எனப் பொருள்படும்.
4. **"வாடிக்கையாளர்"** என்பது ஆளொருவர் தனது சொந்த சார்பாக அல்லது மூன்றாம் தரப்பினரின் சார்பாக கொடுப்பனவுக் கட்டளையொன்றினை வழங்குகின்ற, பணிக்கின்ற அல்லது அதிகாரமளிக்கின்ற எவரேனும் சட்ட ரீதியான அல்லது இயல்பான ஆள் எனவும், அத்துடன் அதனை அடையும் விதத்தில் சிலிப்ஸ் பங்கேற்பாளரை கணக்கிலிருந்து பற்று வைப்பதற்கு அல்லது கொடுப்பனவு அட்டையின் பெறுமதிக்கான தொகையினை வழங்குவதற்கு அதிகாரமளிப்பவர் எனவும் பொருள்படும்.
5. **"இலங்கை மத்திய வங்கி"** என்பது நாணய விதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட (அத்தியாயம் 422) இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்.
6. **"டிஜிட்ரல் சான்றிதழ்"** என்பது நிதியியல் துறைக்கான சான்றிதழ் பணி வழங்குநர் என்ற தன்மையின் அடிப்படையில் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் சிலிப்ஸ் செய்திகளினை மதித்தல், உறுதிப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் என்பனவற்றினைப் பேணுகின்ற நோக்கங்களுக்காக சிலிப்ஸ் இன் முதனிலை அத்துடன் அல்லது இரண்டாந்தர பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட சான்றிதழ் என பொருள்படும்.
7. **"இலத்திரனியல் தகவல்"** என்பது ஊடகத்தினைக் கருத்திற் கொள்ளாது இலத்திரனியல், மின்காந்தம், ஒளித்தன்மை அல்லது இது போன்ற தன்மைகளின் மூலம் உருவாக்கப்பட்ட, அனுப்பப்பட்ட, பெறப்பட்ட அல்லது சேமிக்கப்பட்ட தகவல் எனப் பொருள்படும்.
8. **"இலத்திரனியல் ரீதியாக"** என்பதன் கருத்து ஒன்றில் இணையத்தளம் அல்லது மின்னஞ்சல் மூலமானவை உட்பட அதேநேர தொலைத் தொடர்பூட்டல்கள் அல்லது ஒலிப்பதிவு நாடாக்கள், நெகிழ்வட்டுக்கள் அல்லது அதேநேரத்திற்குப் புறம்பான இதே போன்ற கருவிகள் என பொருள்படும்.
9. **"நிதியம்"** என்பதன் கருத்து காசு, வைப்புக்கள், நாணய பெறுமானங்கள் மற்றும் கணக்கொன்றில் மீளப் பெறுவதற்கு கிடைக்கத்தக்கதாக இருக்கும் வேறு ஏதேனும் வரவுகள் எனப் பொருள்படும்.
10. **"உரிமம் பெற்ற வர்த்தக வங்கி"** அல்லது **"வங்கி"** என்பதன் கருத்து திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் நிதித் துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடமிருந்து வங்கித்தொழில் உரிமத்தினைப் பெற்றுள்ள இலங்கையில் அல்லது வெளிநாட்டில் சரியான முறையில் கூட்டிணைக்கப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்று எனப் பொருள்படும்.
11. **"லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்"** என்பதன் கருத்து 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீளப் பதிவு செய்யப்பட்டதுமான லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் என பொருள்படுவதுடன் இது இலங்கையில் சிலிப்ஸ் முறைமையினை தொழிற்படுத்துவதற்கான சட்ட ரீதியான அதிகார சபையாகவும் விளங்குகின்றது.
12. **"பணப் பரிமாற்றம்"** என்பது பணப் பெறுமதியினை வழங்குதல் அத்துடன்/ அல்லது பணத்தினைப் பெறுதல் அல்லது ஒன்றில் வாடிக்கையாளரிடமிருந்து அல்லது அனுப்புவரிடமிருந்து அல்லது நன்மைபெறுநர் ஒருவருக்காகப் பணம் அனுப்புதல் அல்லது பணப் பெறுமதி சம்பந்தமாகப் பணம் அல்லது பணப் பெறுமதியினைப் பெறுதல் என்று பொருள்படும். அத்துடன் பணம் மீளப் பெறுவதற்கான கணக்குகளிடையே பணப் பெறுமதியைக் கைமாற்றுவதற்கான அல்லது மூன்றாம் தரப்பினருக்கு பணப் பெறுமதியினை கொடுப்பனவு செய்வதற்கான வசதியொன்றை ஏற்பாடு செய்தலையும் உள்ளடக்கும். இப்பதமானது அனுப்புவரோ அல்லது நன்மைபெறுநரோ அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு அல்லது ஒழுக்கேற்பாட்டுக்கு ஒரு திறந்தவராக அல்லது நேரடிப் பங்குபற்றுநராக இருக்காதிருப்பினும் கூட, அனுப்புபவரிடமிருந்து நன்மைபெறுநருக்குப் பண அனுப்புகை நிறைவேற்றுவதில் சம்பந்தப்பட்டுள்ள ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களில் அல்லது ஒழுக்கேற்பாட்டில் பங்குபற்றுதலையும் உள்ளடக்கும். சிலிப்ஸ் முறைமையின் கீழான பணக் கொடுக்கல்வாங்கல்கள் இலங்கைக்குள் உள்நாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

13. **"நாணயப் பெறுமதி"** என்பது உள்ளடக்கப் பெறுமதி, கொடுப்பனவுச் சாதனம் அல்லது கணக்கொன்றிற்கான வரவு என்ற வடிவத்திலுட்பட நாணயத்தின் மீட்கப்படப்பாலதாயினும் சரி அல்லாததாயினும் சரி பரிமாற்றல் ஊடகமென்று பொருள்படும்.

14. **"கொடுப்பனவுக் கட்டளை"** என்பது பெயர் குறிப்பிடப்பட்ட சிலிப்ஸ் பங்கேற்பாளரொருவரினூடாக பெயர் குறிப்பிடப்பட்ட நன்மைபெறுநர் ஒருவருக்கு நாணயப் பெறுமதியிலான கொடுப்பனவொன்றினை மேற்கொள்வதற்கும் நிறைவேற்றுவதற்குமாக சிலிப்ஸ் முதனிலை பங்கேற்பாளரொருவருக்கு அல்லது சிலிப்ஸ் இரண்டாந்தர பங்கேற்பாளரொருவருக்கு பணிப்புரை அல்லது அறிவுறுத்துகின்ற விதத்தில் வாடிக்கையாளரினால் எழுத்தில் விடுக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஒன்று எனப் பொருள்படும்.

15. **"தேறிய பணவனுப்பல்"** என்பதன் கருத்து சிலிப்ஸ் முறைமையின் கீழ் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களினால் பெறப்பட்ட அனைத்துக் கொடுப்பனவு அட்டைகளினதும் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுக் கட்டளைகளினதும் தேறிய நாணயப் பெறுமதி எனப் பொருள் கொள்ளப்படுவதுடன் அத்தகைய சிலிப்ஸ் பங்கேற்பாளர் ஒவ்வொரு தீர்ப்பனவு வட்டத்தின் இறுதியிலும் இன்னொரு சிலிப்ஸ் பங்கேற்பாளருக்கு ஒன்றில் தேறிய கடன்பாட்டாளராக அல்லது தேறிய கடன் வழங்குநராக இருக்கின்றார்.

16. **"தொழிற்பாட்டு நடைமுறைக் கைநூல்"** என்பதன் கருத்து சிலிப்ஸ் முறைமைகளின் தொழிற்பாடுகள் தொடர்பாக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினதும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களினதும் வழிகாட்டலுக்காக ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளை உள்ளடக்கிய ஆவணமெனப் பொருள்படும்.

17. **"பணமனுப்புவர்"** என்பதன் கருத்து சிலிப்ஸ் கொடுக்கல்வாங்கல்களுக்கான முயற்சிகளை மேற்கொண்டு உருவாக்கி கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு பெறுநருக்கு எவர் அதிகாரமளிக்கின்றாரோ அந்த சிலிப்ஸ் பங்கேற்பாளர் எனப் பொருள்படும்.

18. **"பெறுபவர்"** என்பதன் கருத்து அனுப்புனர் ஒருவரிடமிருந்து சிலிப்ஸ் கொடுக்கல்வாங்கல்களைப் பெறுகின்ற பங்கேற்பாளராகவும் உள்ளடக்கப்பட்டுள்ள சிலிப்ஸ் தரவின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒருவராகவும் இருப்பவர் எனப் பொருள்படும்.

19. **"அ.தே. மொ. தீர்ப்பனவு முறைமை"** என்பது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை எனப் பொருள்படும். இது, இலங்கை மத்திய வங்கிக்குச் சொந்தமானதும் அதனால் தொழிற்படுத்தப்படுகின்றதுமான முழுமையாகத் தன்னியக்கப்படுத்தப்பட்ட முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த முறைமையாகும். அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை லங்கா செட்டில் முறைமையின் ஒரு கூறாகும்.

20. **"சிலிப்ஸ்"** என்பதன் கருத்து இலங்கை மத்திய வங்கிக்காகவும் அதன் சார்பிலும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் செயன்முறைகளை அல்லது ஒழுங்குகளைப் பேணுகின்ற அத்துடன் அல்லது மைய ரீதியாக கட்டுப்படுத்தப்படுகின்ற, கொடுப்பனவுக் கட்டளைகளையும் ஏனைய செய்திகளையும் தொடர்பூட்டல் செயன்முறைப்படுத்துவதற்கு வசதியளிப்பதுடன் பணக் கொடுக்கல்வாங்கல்களை, பண மீளப் பெறுகைகளை அல்லது நாணயப் பெறுமதியின் மாற்றல் மேற்கொள்வதற்கும் கட்டளை பெறுவதற்கும் இயலுமைப்படுத்துவதற்கும் அதிகாரமளிப்பதற்கு அல்லது வசதிப்படுத்துவதற்குமானதொரு இலத்திரனியல் முறைமை எனப் பொருள்படுவதுடன் லங்கா கிளியர் பிறைவேட் முறைமைகள் செயன்முறைகள் மற்றும் இலத்திரனியல் மாற்றல்களுக்கான நடைமுறைகளையும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவுப் பரிமாற்றல்களையும் உள்ளடக்கியிருத்தலும் எனப் பொருள்படும்.

21. **"சிலிப்ஸ் தரவு"** என்பது தனியொரு அடையாள குறியீடு எனப் பொருள்படுவதுடன் வெளிமுகத் தரவுகள் மற்றும் உள்முகத் தரவுகள் இரண்டினையும் உள்ளடக்குகின்ற சிலிப்ஸ், சிலிப்ஸ் பங்கேற்பாளர்கள் மற்றும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் என்பனவற்றினால் உருவாக்கப்பட்ட தரவுகளிலிருந்து பெறப்பட்ட மற்றைய அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியுள்ள ஒன்று எனப் பொருள்படும்.

22. **"சிலிப்ஸ் கோவை"** என்பது இது வெளிமுக சிலிப்ஸ் கொடுக்கல்வாங்கல்களையும் தீர்ப்பனவிற்காக சிலிப்ஸ் முறைமையினூடாக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டிற்கு மாற்றல் செய்யப்பட்டவற்றையும் உள்ளடக்கி சிலிப்ஸ் பங்கேற்பாளர்களினால் உருவாக்கப்பட்ட சிலிப்ஸ் தரவுக் கோவை எனப் பொருள்படும்.

23. **"சிலிப்ஸ் கொடுக்கல்வாங்கல்கள்"** என்பது சிலிப்ஸ் முறைமைகளினூடாக கொடுப்பனவுக் கட்டளைகளை மேற்கொள்வதற்கு, தொடர்புபடுத்துவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு சிலிப்ஸ் பங்கேற்பாளர்களினால் அத்துடன்/ அல்லது இலங்கை மத்திய வங்கியினால் உருவாக்கப்பட்ட இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் எனப் பொருள்படும்.

24. **"சிலிப்ஸ் பதிவேடு"** என்பது தெளிவான உருவ ஊடகமொன்றில் எழுதப்பட்டுள்ள அல்லது இலத்திரனியல் அல்லது வேறு ஊடகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதும் உணரத்தக்க வடிவமொன்றில் மீள் தன்னியக்கப்படுத்தப்பட்டுள்ளதுமான சிலிப்ஸ் உடன் தொடர்பான தகவல்கள் எனப் பொருள்படும்.

25. **"சிலிப்ஸ் முறைமை"** என்பது எவ்வித வரையறைகளும் இல்லாமல் சிலிப்ஸ் தரவுகளை அனுப்புதல், பெறுதல், செயன்முறைப்படுத்தல் மற்றும் சுவடிப்படுத்தல் என்பன உட்பட சிலிப்ஸ் தொடர்பாக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களினால் தொழிற்படுத்தப்பட்டு, பேணப்படுகின்ற முறைமைகள் மற்றும் செயன்முறைகள் எனப் பொருள்படும்.

26. **"சிலிப்ஸ் பங்கேற்பாளர்"** என்பது சிலிப்ஸ் முதனிலைப் பங்கேற்பாளர் அத்துடன்/ அல்லது சிலிப்ஸ்சின் இரண்டாந்தரப் பங்கேற்பாளர் எனப் பொருள்படும்.

27. **"சிலிப்ஸ் முதனிலை பங்கேற்பாளர்"** என்பது இலங்கை மத்திய வங்கி அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற உரிமம் பெற்ற ஏதேனும் வர்த்தக வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கியுடனான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர் மற்றும் சிலிப்ஸ் முறைமையில் பங்கேற்பதற்கு இலங்கை மத்திய வங்கியினாலும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினாலும் அதிகாரமளிக்கப்பட்டவர்கள் எனப் பொருள்படும்.

28. **"சிலிப்ஸ் இரண்டாந்தரப் பங்கேற்பாளர்"** என்பது சிலிப்ஸ்ஸின் மீதான கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கும் குறிப்பிடப்பட்ட முதனிலைப் பங்கேற்பாளரினால் பேணப்படும் அதே நேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கினூடாக தேறிய நிலுவைகளை தீர்ப்பனவு செய்வதற்குமாக அத்துடன் சிலிப்ஸ் முறைமையில் பங்கேற்பதற்காக இலங்கை மத்திய வங்கியினாலும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினாலும் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் சட்ட ரீதியான நிறுவனம் எனப் பொருள்படும்.

29. **"தீர்ப்பனவு நாள்"** என்பது இலங்கையில் வியாபாரத்திற்காக வங்கிகள் திறக்கப்படுகின்ற நாள் (மத்திய வங்கியின் சம்மதத்துடன் இலங்கை வங்கியாளர் சங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டவாறு) என்பதுடன், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாக பல்புடை தேறிய தீர்ப்பனவு/ தீர்ப்பனவுகள் இடம்பெறுகின்ற நாள் எனவும் பொருள்படும்.

30. **"தீர்ப்பனவு நேரம்"** என்பது இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் நேரம் எனப் பொருள்படும். இந்த நேரத்தில் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களிடையேயான தேறிய தீர்ப்பனவானது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் தீர்மானிக்கப்படுகிறது.

31. **"இ.வ. சங்கம்"** என்பது வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் சங்கம் (உத்தரவாதப்படுத்தப்பட்டது) எனப் பொருள்படும்.

32. **"கொடுக்கல்வாங்கல் வரையறைகள்"** என்பது இலங்கை மத்திய வங்கி, லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் சிலிப்ஸ் முதனிலைப் பங்கேற்பாளர்களினாலும் அவர்களிடையேயும் இணங்கப்பட்டவாறு சிலிப்ஸ் முறைமையில் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர்ந்தபட்சப் பெறுமதி என பொருள்படும்.

33. **"பயன்படுத்துநர் உடன்படிக்கை"** என்பது சிலிப்ஸ் முறைமைகள் தொடர்பாக சிலிப்ஸ் முதன்மைப் பங்கேற்பாளர்களுடனும் அத்துடன்/ அல்லது இரண்டாந்தரப் பங்கேற்பாளர்களுடனும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை எனப் பொருள்படும்.

34. **"பயன்படுத்துநர் கடவுச்சொல்"** என்பது சிலிப்ஸ் முறைமையினை சிலிப்ஸ் முதனிலை பங்கேற்பாளர்களும் அத்துடன்/ அல்லது சிலிப்ஸ் இரண்டாந்தரப் பங்கேற்பாளர்களும் அடைவதற்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் வழங்கப்பட்ட இரகசியக் குறியீடு எனப் பொருள்படும்.

35. **"செல்லுபடியாகும் திகதி"** என்பது கொடுப்பனவுக் கட்டளையிலுள்ள அனுப்புனர் அல்லது வாடிக்கையாளரினால் குறித்துரைக்கப்பட்ட திகதி எனப் பொருள்படுவதுடன் இத்திகதியில் நன்மைபெறுநர் கொடுப்பனவுக் கட்டளையில் குறிக்கப்பட்டுள்ள நாணயப் பெறுமதியினைப் பெறவும் உரித்துடையவராக இருத்தல் வேண்டும்.

**ஆ. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினதும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களினதும் பொறுப்பாண்மைகள்**

1. சிலிப்ஸ் முறைமையில் பங்கேற்பது மற்றும் தொழிற்படுவது தொடர்பில் ஒவ்வொரு சிலிப்ஸ் பங்கேற்பாளரும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பயன்படுத்துநர் உடன்படிக்கையொன்றினைச் செய்தல் வேண்டும்.

2. தெளிவான தன்மையினையும் நியமங்களையும் உறுதிப்படுத்துவதற்காக, சிலிப்ஸ் முறைமை தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் இணக்கத்துடன் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் உருவாக்கப்பட்ட குறித்துரைப்புக்களை சிலிப்ஸ் பங்கேற்பாளர்களும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டும் பின்பற்றுதல் வேண்டும்.

3. லங்கா கிளியர், சிலிப்ஸ் பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் டிஜிட்டல் சான்றிதழினையும் கடவுச் சொற்களையும் வழங்குதல் வேண்டும். இவற்றை சிலிப்ஸ் பங்கேற்பாளர்கள் மிகவும் இரகசியமாகப் பேணுதல் வேண்டும்.

4. சிலிப்ஸ் பங்கேற்பாளர்களும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டும் விதிகள், நடைமுறைகள் அல்லது இலங்கை மத்திய வங்கியின் சம்மதத்துடன் லங்கா கிளியர் லிமிடெட்டினால் காலத்திற்குக் காலம் விபரிக்கப்படுகின்ற மற்றைய ஒழுங்குமுறைகள் போன்றன உட்பட இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் தொடர்பாக அவர்களிடையேயான ஒழுங்குகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

5. சிலிப்ஸ் பங்கேற்பாளர்களும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டும், தொழிற்பாடுகள் நடைமுறைக் கைநூலில் தெரிவிக்கப்பட்ட குறித்துரைப்புக்களையும் வழிகாட்டல்களையும், தொழிற்பாட்டு நடைமுறைக் கைநூலில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள தொடர்பான அறிவித்தல்களையும் பின்பற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

6. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டும் சிலிப்ஸ் இரண்டாந்தரப் பங்கேற்பாளர்களும் அத்தகைய பங்கேற்பாளர்களின் கொடுப்பனவுக் கட்டளைகளை தீர்ப்பனவு செய்யவும் கொடுத்துத் தீர்க்கவும் சிலிப்ஸ் முதனிலைப் பங்கேற்பாளர்களினூடாக மட்டுமே ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

**இ. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டின் பொறுப்பாண்மைகள்**

1. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் சிலிப்ஸ் முறைமையின் ஏக தொழிற்பாட்டாளராக விளங்குதல் வேண்டும்.

2. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட், வியாபார நாட்களில் சிலிப்ஸ்ஸின் தொழிற்பாடுகளை மத்திய வங்கியின் சம்மதத்துடன் அறிவிக்கப்பட்டவாறான அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது அதன் முதன்மைத் தலத்தில் முக்கியமான தொழிற்பாடுகள் பழுதடைகின்ற சந்தர்ப்பத்தில் அனர்த்த மீட்புத் தலத்திலும் மேற்கொள்வதற்கு பொறுப்பாக இருக்கும்.

3. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் சிலிப்ஸ்ஸினை நிறுவுவதற்கும் ஏற்படுத்துவதற்கும் பேணுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் பாதுகாப்பிற்கும் மற்றும் கட்டுப்பாடுகளை அணுகுவதற்கும் அத்தடன் சிலிப்ஸ்ஸிற்கும் சிலிப்ஸ்ஸின் தொடர்பூட்டல் வலையமைப்பிற்குமிடையிலான தொடர்பூட்டல்களை நிறுவிப் பேணுவதற்கு அவசியமான வேறு ஏதேனும் முறைமைகளுக்கும் பொறுப்பாக இருக்கும்.

4. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் சிலிப்ஸ் முறைமையினை தொழிற்படுத்துவதுடன், சிலிப்ஸ் பங்கேற்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவுக் கட்டளைகளின் அடிப்படையில் தேறிய கோரல்கள் மற்றும் பொறுப்புக்களை கணிப்பதன் மூலம் பல்புடைத் தீர்ப்பனவுக் கோட்பாடுகளுக்கிணங்க சிலிப்ஸ் பங்கேற்பாளர்களுக்கான கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல்களுக்கு வசதியளிக்கின்றது.

5. லங்கா கிளியர், பங்கேற்பாளர்களின் கொடுப்பனவுத் தகவல்கள், தொழில்நுட்ப மற்றும் நிறுவன அமைப்பு ரீதியான தகவல்கள் உட்பட அனைத்து உணர்வு பூர்வமான அல்லது மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களையும் பங்கேற்பாளர் வெளிப்படுத்தலாம் என எழுத்து மூலமாக சம்மதம் தெரிவித்தாலொழிய அல்லது ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் மூலம் தரவுகளும் தகவல்களும் வெளிப்படுத்தப்படுவதற்கு கேட்டுக் கொள்ளப்பட்டாலொழிய, இரகசியமாகவே வைத்திருத்தல் வேண்டும்.

6. ஒவ்வொரு சிலிப்ஸ் முதனிலைப் பங்கேற்பாளர்களின் தேறிய தீர்ப்பனவு நிலையினை நிர்ணயிக்கின்ற சிலிப்ஸ் பல்புடை கொடுத்துத்தீர்த்தல் தொகுதிக் கோவைகளையும் சிலிப்ஸ் முறைமையின் தொழிற்பாடுகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கிக்கு தேவைப்படக்கூடிய ஏனைய ஒன்று சேர்ந்த புள்ளிவிபரத் தரவுகளையும் இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட ஒவ்வொரு தீர்ப்பனவு சுற்று வட்டத்தினதும் கொடுத்துத்தீர்த்தல் காலப்பகுதிக்கு முன்னதாக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

7. இலங்கை மத்திய வங்கியினது சம்மதத்துடன் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் சிலிப்ஸ் முறைமை விதிகளையும் சிலிப்ஸ் முறைமைக்கான தொழிற்பாட்டு நடைமுறைக் கைநூலினையும் உருவாக்கி வழங்கும். சிலிப்ஸ் முறைமையின் அத்தகைய விதிகளும் தொழிற்பாட்டு நடைமுறைகளும் தெளிவாகவும் அனைத்தையுமுள்ளடக்கிய விதத்திலும் உருவாக்கப்படுதல் வேண்டும். லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் விடுக்கப்பட்ட

முறைமை விதிகளும் தொழிற்பாட்டு நடைமுறைக் கைநூலும் சிலிப்ஸ் முறைமையின் தொழிற்பாடுகளையும் நிருவாகத்தினையும் நிருவகிக்க வேண்டியதுடன் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களைப் பிணித்தலும் வேண்டும்.

8. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் இலங்கை மத்திய வங்கியின் இணக்கத்துடன் முறைமை விதிகளையும் அத்துடன்/ அல்லது தொழிற்பாட்டு நடைமுறை விதிகளையும் எப்பொழுது தேவையோ அதற்கேற்றவாறு திருத்திக் கொள்ள முடியும் என்பதுடன் அத்தகைய திருத்தங்களை சிலிப்ஸ் முறைமையின் பங்கேற்பாளர்களுக்கு சுற்றறிக்கை மூலமாக அறிவித்தல் வேண்டும்.

9. சிலிப்ஸினூடாக பரிமாற்றம் செய்யப்பட்ட அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும்

   i. பாதுகாப்பு மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பரிமாற்றல்கள் என்பனவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் பாதுகாப்பான வழிமுறைகளுக்கு இணங்கியொழுகுவதாகவும்; அத்துடன்

   ii. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கு இணங்க சுவடிப்படுத்தப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

10. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் தகுதி, தேர்ச்சி மற்றும் அறிவு மற்றும் முன்மதியுடைய தரம், கவனிப்பு மற்றும் நுணுக்கமாகக் கவனித்தல் ஆகியவற்றிற்கு இணங்க சிலிப்ஸ்ஸின் தொழிற்பாடுகள் தொடர்பாக அதன் கடமைகள், கடப்பாடுகள் மற்றும் அதன் பொறுப்புக்களை அவதானிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

11. எதிர்நோக்கப்படுகின்ற ஏதேனும் பணி தொடர்பான இடர்ப்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சிலிப்ஸ் முறைமையின் பங்கேற்பாளர்களுக்கு உதவுகின்ற விதத்தில் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட், லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டில் உதவிப்பீடமொன்றினை உருவாக்கிப் பேணுதல் வேண்டும். உதவிப்பீடம் வியாபார நாள் முழுவதிலும் கிடைக்கத்தக்கதாக இருக்க வேண்டியதுடன் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் தொழிற்பாட்டு நடைமுறைக் கைநூலில் தரப்படுதலும் வேண்டும்.

12. அனைத்து வர்த்தக வங்கிகளினாலும் இலங்கை மத்திய வங்கியினாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டின் பணிப்பாளர் சபையானது கட்டணங்களை காலத்திற்குக் காலம் திருத்தியமைக்கும் உரிமையினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

13. இணங்கி ஒழுகாமை மற்றும் விதிகளை மீறியமை தொடர்பிலான தண்டப் பணங்களையும் குற்றப் பணங்களையும் உள்ளடக்கிய அட்டவணையானது மத்திய வங்கியின் ஆலோசனையுடன் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் இது பற்றி சிலிப்ஸ் பங்கேற்பாளர்களுக்கு காலத்திற்குக் காலம் அறிவிக்கப்படவும் வேண்டும்.

14. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டானது சிலிப்ஸ் முறைமை தொடர்பாக சிலிப்ஸ் பங்குபற்றுனர்களுக்கும் பொதுமக்களுக்கும் தொடர்ச்சியாக பயிற்சிகளையும் தெளிவுபடுத்தல் மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தும்.

**ஈ. சிலிப்ஸ் பங்கேற்பாளர்களின் பொறுப்பாண்மைகள்**

ஒவ்வொரு சிலிப்ஸ் பங்கேற்பாளரும்

1. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் சில்லறைக் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைகள் தவிர்ந்த, மத்தியில் தீர்ப்பனவு செய்யப்படுகின்ற சில்லறைக் கொடுப்பனவுகளான ஏதேனும் தேசிய மட்ட வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை தொழிற்படுத்தவோ அல்லது அதில் பங்கேற்கவோகூடாது.

2. அவர்களின் சொந்த வன்பொருள், மென்பொருள் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்புக்களின் கொள்வனவிற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

3. கொள்வனவு செய்யப்பட்ட வன்பொருள் மற்றும் மென்பொருட்கள் சிலிப்ஸ் முறைமையின் கீழான கொடுக்கல்வாங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அவற்றை நிறைவேற்றுவதற்குமேற்ற விதத்தில் இருப்பதனையும் எதிர்காலத்தில் முன்னேற்றங்களை ஏற்படுத்தக்கூடிய ஏற்பாடுகளை அவை கொண்டிருப்பதனையும் அத்தகைய வன்பொருட்களும் மென்பொருட்களும் நல்ல நிலையில் தொழிற்படும் விதத்தில் அவற்றைப் பேணுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4. கோவை வடிவப்படுத்தல் இணங்குவிப்பு மற்றும் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பாய்ச்சல், உரிய நேரத்தில் வாடிக்கையாளர் மற்றும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களின் கொடுப்பனவுக் கட்டளைகளை சரியாகவும் துல்லியமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் இறுதிப்படுத்தல் மற்றும் அனைத்துக் கொடுப்பனவுக் கட்டளைகளையும் உறுதிப்படுத்துதல் என்பனவற்றிற்கும் பொறுப்பாக இருத்தல்.

5. சிலிப்ஸ் முறைமையினைப் பாதுகாப்பதற்கும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களுக்கு விடுக்கப்பட்ட அனைத்துப் பாதுகாப்புப் பண்புகளையும் அறிவுறுத்தல்களையும் அனுசரித்து அவற்றினை அவதானத்தில் கொள்ளுதல் மற்றும் ஏதேனும் நடவடிக்கை/ நடவடிக்கைகள் அல்லது தவறுகள் ஒட்டுமொத்த சிலிப்ஸ் முறைமையினதும் பாதுகாப்பிற்கு அல்லது ஏதேனும் மற்றைய பங்கேற்பாளர்களினது முறைமையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை அல்லது பங்கத்தினை ஏற்படுத்தாமல் இருப்பதனை உறுதிப்படுத்துதல்.

6. அதிகாரமளிக்கப்படாதவர்கள் அணுகுவதனை (ஊடுருவல், நெரிசலை உருவாக்குதல், தொடர்ச்சியான கண்காணிப்பு) போன்றவற்றையும் சிலிப்ஸ் முறைமையினை மாற்றுகின்ற/ சேதப்படுத்துகின்ற மற்றும் கேடு விளைக்கின்ற மற்றைய நடவடிக்கைகளையும் தடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

7. சிலிப்ஸ் முறைமையில் பங்கேற்பதற்கான அதன் சட்ட அந்தஸ்திலும் இயலளவிலும் ஏற்படக்கூடிய ஏதேனும் மாற்றங்களை இலங்கை மத்திய வங்கிக்கும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டிற்கும் அறிவித்தல்.

8. ஒவ்வொரு தீர்ப்பனவுச் சுற்றின் இறுதியிலும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள சிலிப்ஸ் பல்புடை தேறிய தீர்ப்பனவுக் தொகுதியினை தீர்ப்பனவு செய்வதற்கு அவர்களின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைத் தீர்ப்பனவுக் கணக்குகளில் போதுமான நிதி கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்துதல்.

9. சிலிப்ஸ் முறைமையினூடாக வாடிக்கையாளர்களுக்கான பணப் பரிமாற்றல் பூரணப்படுத்தப்பட்டமையினை/ பூரணப்படுத்தப்படாமையினை அறிவிப்பதற்கான நடைமுறையொன்றினை/ பொறிமுறையினை ஏற்படுத்தல்.

10. சிலிப்ஸ் முறைமை தொடர்பாக, லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் தொழில்நுட்பம், சட்டம், நிருவாகம், பாதுகாப்பு மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை பின்பற்றுதல்.

11. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டிடமிருந்து தொடர்பான தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதும் கொடுப்பனவுக் கட்டளையின் பெறுமதித் திகதியன்று, கொடுப்பனவுக் கட்டளையின் பெறுமதிக்கு அளவான தொகையினை பயன்பெறுநரின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையினை அல்லது அதற்கான நாணயப் பெறுமதி வழங்கப்பட்டமையினை உறுதிப்படுத்துதல்.

12. மேலே 11இல் குறிப்பிடப்பட்ட வசதிகளை வழங்குவதற்கான பணி விதிகளையும் நியமங்களையும் ஏற்படுத்துவதுடன் உட்கட்டமைப்பினையும் பேணுதல்.

13. சிலிப்ஸ் முறைமை தொடர்பாக தரவுத் தளங்கள் மற்றும் அதன் அனைத்து தகவலையும் கிரமமாக வேறொரு மீள்காப்பு இடத்தில் பேணுவதற்கு பொறுப்பாக இருத்தல்.

14. நாளாந்த கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை மீள் இணக்கப்படுத்துவதுடன் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் மூலக் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்ற நேரத்திலிருந்து ஒரு வியாபார நாளுக்குப் பிந்தாமல் அதனை எழுத்து மூலமாக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டின் உதவிப்பீடத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

15. சிலிப்ஸ் முறைமையின் தொழிற்பாடுகள் தொடர்பான ஏற்புடைத்தான சட்டங்கள் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் நடைமுறைகள் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட ஏதேனும் மற்றைய பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல்.

16. குறிப்பிட்ட வாடிக்கையாளரிடமிருந்து சிலிப்ஸ் முறைமையினூடாக மேற்கொள்வதற்காக வழமைக்கு மாறான முறையில் அதிக எண்ணிக்கையிலும் பெறுமதியிலும் கொடுப்பனவுக் கட்டளைகள் பெறப்படுமிடத்து, 2006ஆம் ஆண்டில் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளின்படியும் நிதியியல் உளவறிதல் பிரிவின் அறிவுறுத்தலுக்கிணங்கவும் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும்.

**உ. தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல்**

1. முறைமை ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு முறைமைக்குத் தேவைப்படுகின்ற மிக உயர்ந்தமட்ட முறைமைக் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதற்குத் தொடர்பான பணிப்பாளர் சபையினால் உறுதிப்படுத்தப்பட்ட சிலிப்ஸ் முறைமைத் தொழிற்பாடுகளுக்காக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்கள் நன்கு வரையறுக்கப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. தற்பொழுது இடம்பெற்று வரும் சிலிப்ஸ் தொழிற்பாடுகளை தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் மேற்கொள்ளும் விதத்தில் தடங்கல்களுக்குப் பின்னர் அதனை உடனடுத்து வியாபாரத் தொழிற்பாடுகளை மீண்டும் தொடங்கும் விதத்தில் சிலிப்ஸ் முறைமைக்காக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களும் முழுமையாகச் சாதனங்கள் பொருத்தப்பட்ட அனர்த்த மீட்பு அமைவிடத்தையும் நன்கு பயிற்சியளிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ மற்றும் வியாபார மீட்புக் குழுக்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. எந்தவொருவித தடங்கலுமில்லாமல் சிலிப்ஸ் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு தொழிலாளர் பிணக்குகள் உள்ளிட்ட எதிர்பாராத சூழ்நிலைகளில் பணியில் அமர்த்துவதற்காக சிலிப்ஸ்ஸின் மையத் தொழிற்பாடுகள் தொடர்பாக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் தேர்ச்சியும் பயிற்சியும் பெற்ற மீள்காப்பு அலுவலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் சிலிப்ஸ்ஸில் அதன் தொழிற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குத் தடையாக விளங்கும் ஏதேனும் தொழில்நுட்ப அல்லது தொழிற்பாட்டுப் பிரச்சனைகளைக் கொண்டிருக்குமாயின், அத்தகைய பிரச்சனை தெரிய வந்த 15 நிமிடங்களுக்குள் அத்தகைய பிரச்சனைகளை இலங்கை மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும். பிரதான அமைவிடத்தில் திருத்த முடியாத விதத்தில் பழுதுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில், லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதுடன் சிலிப்ஸ் தொழிற்பாடுகளை அனர்த்த மீட்பு அமைவிடத்தில் தொழிற்பாடுகளைத் தொடக்க வேண்டியதுடன் சிலிப்ஸ்ஸில் பல்புடை தேறிய தீர்ப்பனவு தொகுதிக் கோவையினையும் மத்திய வங்கியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். முதன்மைத் தலத்திலும் அனர்த்த மீட்புத் தலத்திலும் நீண்ட காலத்திற்கு திருத்தப்பட முடியாத பழுதுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதுடன் பழுதடைந்த நேரத்திற்கான இறுதிச் சுற்றிலிருந்து முறைமை பழுதடைந்த நேரம் வரையான காலப்பகுதிக்கான சிலிப்ஸ் பல்புடை தேறிய தீர்ப்பனவினைப் பெறுவதற்கான மாற்று ஏற்பாட்டு முறைகளையும் பயன்படுத்த வேண்டுமென்பதுடன் அதனை இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

5. சிலிப்ஸ் பங்கேற்பாளர்கள் சிலிப்ஸ் தொடர்பான அவற்றின் தரவுத் தளங்களையும் அதன் அனைத்து தகவல்கள் மற்றும் தரவுகளையும் கிரமமான முறையில் பின்னூட்டல் செய்வதற்கும் வெட்டு நேரத்தினை ஈடுசெய்யும் பொருட்டு கணனி முறைமை பழுதடைதல் அல்லது தரவுத் தவறுகள் அல்லது இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மிகையான தரவுகளையும் மீட்பு நடவடிக்கைகளையும் நிறுவிப் பேணுவதற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**ஊ. சிலிப்ஸ் தரவு மற்றும் பதிவேடுகளின் இரகசியத்தன்மை**

1. சிலிப்ஸ் பங்கேற்பாளர்கள், கொடுக்கல்வாங்கல்கள், கணக்குகள் மற்றும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களுக்கு விடுக்கப்படுகின்ற ஏதேனும் அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட சிலிப்ஸ் பதிவேடுகள் தொடர்பாக இரகசியத்தன்மையினைப் பேண வேண்டியதுடன் அதன் அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள் அத்துடன்/ அல்லது எந்தவொரு தரத்திலும் தொழில்புரியும் வேறு எவரேனும் ஆட்கள் இப்பணிப்புரைக்கு இணங்கவும் ஏற்புடைத்தான சட்டங்களுக்கு இணங்கவும் எல்லா நேரங்களிலும் இரகசியத்தினைப் பேணுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டும் அனைத்து சிலிப்ஸ் பங்கேற்பாளர்களும், சிலிப்ஸ் தொழிற்பாடுகள் தொடர்பாக சட்டத்தினாலும் அல்லது வேறு விதத்தினாலும் காலத்திற்குக் காலம் கையளிக்கப்பட்ட ஏதேனும் அல்லது அதன் அனைத்துத் தொழிற்பாடுகளையும் அதிகாரங்களையும் பயன்படுத்துகையில் அவை கூட்டாகவும் அநேகமாகவும் மத்திய வங்கியின் கட்டுப்பாடு, மேற்பார்வை, ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை என்பனவற்றிற்கு உட்பட்டனவாக இருத்தல் வேண்டுமென்பதுடன் மத்திய வங்கியின் கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்துதலும் வேண்டும்.

3. நடைபெற்று வரும் நடடிவக்கைகளை நிறைவேற்றும் விதத்திலும் அவற்றிற்குப் பங்கமின்றியும், இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலமும் ஏதேனும் ஒரு நேரத்திலும் சிலிப்ஸ் முறைமைகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டையும்

சிலிப்ஸ் பங்கேற்பாளர்களையும் கேட்டுக் கொள்ளமுடியும் என்பதுடன் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களும் அத்தகைய தகவல்களை மத்திய வங்கிக்கு வழங்குவதற்குப் பிணிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

4. இப்பணிப்புரையில் ஏற்பாடுகளை சிலிப்ஸ் பின்பற்றுவது தொடர்பாக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் மற்றும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களிடமிருந்தும் கிடைக்கும் அனைத்து அறிக்கைகளும் தகவல்களும் துல்லியமாகவும் பூரணமானவையாகவும் இருத்தல் வேண்டும்.

**எ. பிணக்குகளைத் தீர்த்தல்**

1. சிலிப்ஸ் தொழிற்பாடுகள் தொடர்பாக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டிற்கும் சிலிப்ஸ் பங்கேற்பாளர்களுக்கும் அத்துடன்/ அல்லது சிலிப்ஸ் பங்கேற்பாளர்களுக்குமிடையேயும் ஏற்படக்கூடிய ஏதேனும் பிணக்குகளை பரஸ்பர கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் அல்லது மத்தியஸ்த முறைகளினூடாக தீர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. பிரச்சனைகளுக்குரிய பிணக்குகளுக்கு பரஸ்பர கலந்துரையாடல், பேச்சுவார்த்தைகள், மத்தியஸ்தம் போன்றவற்றினூடாக தீர்வுகளைக் காணத் தவறுமிடத்து மட்டுமே சட்ட ரீதியான நீதிமன்றமொன்றின் முன் நடுவர் தீர்ப்பு அல்லது வழக்காடல் மூலம் தீர்வுகாண முயலல் வேண்டும்.

3. அத்தகைய பரஸ்பர கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் அல்லது மத்தியஸ்தம் மற்றும் நடுவர் தீர்ப்பு போன்றவற்றிற்கான நடைமுறைகள் சிலிப்ஸ் முறைமைகளின் விதிகளில் தெளிவாகவும் பரந்த அடிப்படையிலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**ஏ. குற்றங்கள்**

இங்கு காட்டப்பட்டுள்ள பணிப்புரைகள் அல்லது வேறு ஏதேனும் பணிப்புரை, அறிவுறுத்தல் அல்லது ஆக்கப்பட்ட விதிகள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள் 2005ஆம் ஆண்டில் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் சட்டத்தின் கீழ் குற்றமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

## வங்கி வழிநடத்தும் செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளுக்கான 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க செல்லிடக் கொடுப்பனவு வழிகாட்டல்கள்

**1. அறிமுகம்**

1.1 இலங்கை மத்திய வங்கி கொடுக்கல்வாங்கல் நிலைமைகளை பரந்தளவில் பயன்படுத்துவதற்கான வினைத்திறன், ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செலவு, பாதுகாப்பு மற்றும் சாத்தியமான தன்மை என்பனவற்றினைக் கருத்திற் கொண்டு நிதியியல் பணிகளின் வாடிக்கையாளர்களிடையே இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவிக்கின்றதொரு நிலையினை எடுத்திருக்கின்றது. செல்லிடத் தொலைபேசி வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டு வரும் விரைவான வளர்ச்சியின் விளைவாக, இலங்கையில் இலத்திரனியல் கொடுப்பனவுப் பணிகளை வழங்குவதற்கான விருப்பத்தேர்வாக நிதியியல் தொழில் துறையினால் செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுப் பிரயோகங்களின் சாத்தியத்தன்மை பற்றி ஆராயப்பட்டு வருகின்றது. உண்மையில், ஒரு சில வங்கிகள் செல்லிடத் தொலைபேசிகளினூடாக அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு வங்கித்தொழில் பணிகளை வழங்குவதனை ஏற்கனவே தொடங்கியிருக்கின்றன. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பு மீது குறிப்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பின்பற்றப்பட வேண்டிய இவ்வழிகாட்டல்களின் தொகுப்பினை மத்திய வங்கி விடுத்திருக்கிறது.

1.2 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் கீழ் நிதியியல் முறைமைகளின் ஒட்டுமொத்த உறுதிப்பாட்டிற்கு வசதியளிப்பதற்காகவும் கொடுப்பனவு முறைமை பாதுகாப்பு வினைத்திறன் மற்றும் கட்டுப்பாட்டு இடர்நேர்வு என்பனவற்றை மேம்படுத்துவதற்காகவும் இலங்கைக்கு கொடுப்பனவு முறைமைக் கொள்கையொன்றினை வடிவமைப்பதற்கும் பின்பற்றுவதற்கும் கண்காணிப்பதற்குமாக இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்களையும் அதேபோன்று பணி வழங்குவோரையும் பாதுகாத்துக் கொள்வதற்கு நாட்டிலுள்ள இலத்திரனியல் கொடுப்பனவு பொறிமுறையினை மேம்படுத்த வேண்டியமையையும் அவை பன்னாட்டு நியமங்களினாலும் சிறந்த நடைமுறைகளினாலும் வழிநடத்தப்பட்டு வரவேண்டியமையின் அவசியத்தினையும் கருத்திற் கொண்டு 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைப் பணி வழங்குவோர் ஒழுங்குவிதிகள் (இதனகத்துப் பின்னர் “ஒழுங்குவிதிகள்” எனக் குறிப்பிடப்படும்) 2009 யூலை 31ஆம் நாள் விடுக்கப்பட்டன. இவ்வழிகாட்டல்களை விடுப்பதன் நோக்கம் யாதெனில் செல்லிட கொடுப்பனவுப் பணிகளின் பாதுகாப்பினையும் வினைத்திறனையும் மேம்படுத்தி அதன் மூலம் அத்தகைய பணிகளைப் பயன்படுத்துபவர்களின் நம்பிக்கையினை உயர்த்துவதேயாகும். இவ்வழிகாட்டல்கள் செல்லிட கொடுப்பனவுப் பணிகளை வழங்குகின்ற வங்கித்தொழில் நிறுவனங்களினால் பின்பற்றப்பட வேண்டிய பரந்தளவு கோட்பாடுகளையும் நியமங்களையும் எடுத்துக்காட்டுவதாக இருப்பதுடன் உடனடியாக நடைமுறைக்கு வருதாதலும் வேண்டும்.

**2. ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையிடல் ஏற்பாடுகள்**

2.1 செல்லிட கொடுப்பனவுப் பணிகளை வழங்குகின்ற வங்கிகள் இவ்வழிகாட்டல்களுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். வங்கிகள் செல்லிட கொடுப்பனவு முறைமைகளை அடிப்படையாகக் கொண்ட வாடிக்கையாளர் கணக்கினைத் தொழிற்படுத்த வேண்டியதுடன் அதனூடாக அவற்றின் கணக்கு வைத்திருப்போருக்கு மட்டும் பணிகளை வழங்க முடியும். வாடிக்கையாளர் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட முறைமையின் கீழ் மூன்று வகையான செல்லிட கொடுப்பனவுப் பணி வசதிகளை வழங்க முடியும். அவையாவன:

i. அடிப்படை வகை

நிதிய மாற்றல்களுடன் தொடர்புபடாதவையான கணக்கு மீதிகள் பற்றிய தகவல்களைப் பெறல், முன்னய கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், கொடுப்பனவுக் கட்டளைகள் என்பனவற்றிற்கான வசதி.

ii. நியம வகை

அடிப்படை வகைப் பணிகளுக்குப் புறம்பாக, நிதிய மாற்றல்கள் மற்றும் கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கான வசதி. நிதிய மாற்றல்கள் செல்லிடத் தொலைபேசிகளினூடாக அனுப்பப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் பொதுப் பயன்பாட்டுப் பட்டியல்களைச் செலுத்துதல், சொந்த நிதிய மாற்றல்கள் மற்றும் மூன்றாந்தரப்பினரின் நிதிய மாற்றல்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

iii. விரிவாக்கப்பட்ட வகை - முகவர்களினூடாக தொழிற்படுத்தல்

அடிப்படை மற்றும் நியம வகைப் பணிகளுக்குப் புறம்பாக, தொடர்பான வங்கிகளினால் நியமிக்கப்பட்ட முகவர்களினூடாக காசு வைப்புக்கள்/ மீளப் பெறுகைகளுக்கான வசதி.

கொடுப்பனவு அட்டைப் பணி வழங்குவோராக தொழிற்படுவதற்கு ஒழுங்குவிதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்கள் வாடிக்கையாளர் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிட கொடுப்பனவுப் பணிகளை வழங்கக்கூடாது. எனினும், செல்லிட கொடுப்பனவுகள் தொடர்பான அடிப்படை வகைப் பணிகளை மாத்திரம் வழங்குகின்ற வங்கிகளுக்கு, அத்தகைய வங்கிகள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திலுள்ள தொடர்பான ஏற்பாடுகளையும் இது தொடர்பாக தொழிற்பாட்டிலுள்ள மற்ற சட்ட ரீதியான வேறு ஏதேனும் ஏற்பாடுகளையும் பின்பற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒழுங்குவிதிகளின் கீழ் உரிமம் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளன.

2.2 செல்லிடக் கொடுப்பனவுப் பணிகள் இலங்கை ரூபாவில் இருக்க வேண்டியதுடன் உள்நாட்டு கொடுக்கல்வாங்கல்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படலும் வேண்டும்.

2.3 செல்லிடக் கொடுப்பனவுப் பணிகள் 18 வயதிற்கு மேற்பட்ட வதிகின்ற இலங்கையர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுதல் வேண்டும்.

2.4 வங்கிகள் செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்கும் போதும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் போதும் மென்பொருள்/ வன்பொருள் முறைமைகளைத் தரமுயர்த்தும் பொழுதும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டம், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம், 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டம் மற்றும் 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்பனவற்றை மட்டும் கவனத்தில் கொள்ளாது ஏற்புடைத்தான அனைத்துச் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2.5 பணம் தூய்தாக்கலுக்கு எதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதன் ஒரு பகுதியாக "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" மற்றும் "வாடிக்கையாளர்களை நுணுக்கமாகக் கவனித்தல்" என்பன மீதான வழிகாட்டல்களும் செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட வங்கித்தொழில் பணிகளைப் பெறுகின்ற வாடிக்கையாளர்களுக்கு ஏற்புடைத்ததாக இருக்க வேண்டியதுடன் இவை இணங்கியொழுகப்படுகின்ற விதத்தில் வாடிக்கையாளர் கணக்குகளுக்கு செல்லிட கொடுப்பனவுப் பணிகளை வழங்குவதிலும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.6 வங்கிகள் விரிவாக்கப்பட்ட வகை செல்லிட கொடுப்பனவுப் பணிகளை வழங்குவதற்காக முகவர்களின் பணிகளைப் பயன்படுத்தலாம் என்பதுடன் அத்தகைய முகவர்களை நியமிக்கும் பொழுதும் பணிகளை பெற்றுக் கொள்கின்ற பொழுதும் ஏற்புடைத்தான அனைத்துச் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுதலும் வேண்டும்.

**3. செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளுக்காக வாடிக்கையாளர்களைப் பதிவு செய்தல்**

3.1 வங்கிகள் அவர்களது சொந்த வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்கலாம்.

3.2 செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுப் பணிகளை வழங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளர்களைப் பதிவு செய்வதற்குப் பொருத்தமான முறைமைகளை வங்கிகள் கொண்டிருத்தல் வேண்டும்.

3.3 கையொப்பமிடப்பட்ட ஆவணங்களினூடாகவே வாடிக்கையாளர் பதிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**4. தொழில்நுட்பம் மற்றும் தகவல் பாதுகாப்பு நியமங்கள்**

4.1 கொடுப்பனவு வசதிகளை வழங்குவதற்காகப் பின்பற்றப்படுகின்ற தொழில்நுட்பங்கள் பாதுகாப்பானதாகவும் பத்திரமானதாகவும் இருக்க வேண்டியதுடன் இரகசியத்தன்மை, ஒருங்கிணைப்பு, நம்பத்தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்துவதாகவும் கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் மறுதலிக்கப்பட முடியாதனவாகவும் இருத்தல் வேண்டும்.

4.2 செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட வழங்கல் வழிகளின் பாதுகாப்புத் தேவைப்பாடுகளைப் போதுமான விதத்தில் வலியுறுத்துவதற்காக தகவல் பாதுகாப்புக் கொள்கைகளை வங்கிகள் நாளது வரை இற்றைப்படுத்தி நடைமுறைக்கிடுதல் வேண்டும்.

4.3 தெளிவான ஆனால் தீர்க்கமற்ற கட்டமைப்பொன்று இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளது.

**5. உள்ளக - தொழிற்பாட்டுத் தன்மை**

5.1 வங்கிகள் செல்லிட கொடுப்பனவுப் பணிகளை வழங்கும் பொழுது, பணிக்கான கோரிக்கையினை விடுக்கக் கூடியதொரு நிலையில் வாடிக்கையாளர்கள் ஏதேனுமொரு வலையமைப்பு தொழிற்பாட்டாளரின் செல்லித் தொலைபேசியை வைத்திருக்கின்றார் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

5.2 செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகளைப் பொறுத்த வரையில் இலங்கை மத்திய வங்கியின் நீண்டகாலக் குறிக்கோள் யாதெனில் வாடிக்கையாளரினால் பயன்படுத்தப்பட்டு வரும் செல்லிடத் தொலைபேசி வலையமைப்பினைக் கருத்திற் கொள்ளாது, எந்தவொரு இடத்திலிருந்தும் எந்தவொரு நேரத்திலும் வங்கியொன்றின் ஒரு கணக்கிலிருந்து அதே வங்கியின் இன்னொரு கணக்கிற்கு அல்லது வேறு ஒரு வங்கியின் கணக்கிற்கு அதேநேர அடிப்படையில் நிதிய மாற்றல்களை மேற்கொள்ளக் கூடிய தன்மையினை உறுதிப்படுத்துவதேயாகும். ஆகவே, வங்கிகள் தீர்வுகளை விருத்தி செய்யும் பொழுது அல்லது செல்லிடக் கொடுப்பனவு தீர்வுப் பணிகளை வழங்குவோருடன் ஒப்பந்தகளைச் செய்யும் பொழுது இக்குறிக்கோளினைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**6. வங்கிகளுக்கிடையிலான நிதிய மாற்றல்களுக்கான தீர்ப்பனவும் கொடுத்துத் தீர்த்தலும்**

6.1 வங்கிகளுக்கிடையிலான நிதிய மாற்றல்களுக்காக, வங்கிகள் இருபுடை அல்லது பல்புடை ஒழுங்குகளைச் செய்ய முடியும்.

**7. வாடிக்கையாளர் பாதுகாப்பு**

7.1 வங்கிகள் செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளின் பயன்பாட்டிற்கு ஏற்புடைத்தான நியதிகளையும் நிபந்தனைகளையும் வெப்தளம், சிற்றேடுகள் மற்றும் பதிவு செய்தல் படிவங்களில் பொருத்தமானதொரு முறையில் வழங்குதல் வேண்டும். இந்நியதிகளும் நிபந்தனைகளும் வாடிக்கையாளர் விரும்புகின்ற மூன்று மொழிகளில் எந்தவொரு மொழியிலும் (சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம்) மற்றைய விடயங்களுடன் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ. கொடுப்பனவுகளின் அதிகாரமளிக்கப்பட்ட வகைகள்;

ஆ. செல்லிட கொடுப்பனவுப் பணிகள் தொடர்பாக வங்கிகள், கணக்கு வைத்திருப்போர் மற்றும் முகவர்களின் உரிமைகளும் பொறுப்புக்களும்;

இ. ஏற்புடைத்தான அனைத்து கட்டணங்களும் விதிப்புக்களும்;

ஈ. செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளின் நன்மைகள், ஊக்குவிப்புக்கள் மற்றும் வெகுமதிகள்;

உ. பிணக்குகளின் தீர்விற்கான ஏற்பாடுகள்;

ஊ. செல்லிடத் தொலைபேசிகள் தொலைந்து போதல் அல்லது திருடப்படுதல் பற்றி அறிவிப்பதற்கான நடைமுறை;

எ. கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கான நடைமுறை;

ஏ. வாடிக்கையாளர் பணிகள் பற்றி தொடர்பு கொள்வதற்கான இலக்கங்கள்.

7.2 வாடிக்கையாளர் விரும்பும் மூன்று மொழிகளில் ஏதேனுமொன்றில், பொருத்தமான தொடர்பூட்டல் ஊடகமொன்றினூடாக வாடிக்கையாளர்களுக்கு எழுத்து மூலமான முன்னறிவித்தலின்றி செல்லிடக் கொடுப்பனவு தொழிற்பாடுகள் மீதான நியதிகளையும் நிபந்தனைகளையும் மாற்றவோ திருத்தவோ கூடாது என்பதனை வங்கிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

7.3 வங்கிகள், வாடிக்கையாளர் தகவல்களின் இரகசியத்தன்மையினை பேண வேண்டியதுடன் அவர்களின் பணி வழங்குவோரும் அதேபோன்று வாடிக்கையாளரின் தகவல்களை இரகசியமாகப் பேணுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதும் வங்கிகளின் பொறுப்பாகும். செல்லிடக் கொடுப்பனவுகளுடன் இணைந்திருக்கும் உயர்ந்தளவு தகவல் பாதுகாப்பு இடர்நேர்வுகளின் காரணமாக வங்கிகளைப் பாதிக்கச் செய்யக்கூடிய இரகசிய மீறல்களின் பேரில் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்நேர்வு பொறுப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்காக வங்கிகள் பொருத்தமானதும் போதுமானதுமான இடர்நேர்வுக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை உருவாக்குதல் வேண்டும்.

7.4 செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளுக்கு சந்தா செலுத்தும் கணக்கு வைத்திருப்போருடனான உடன்படிக்கைகளுக்குப் புறம்பாக வங்கிகள் பணி வழங்குவோருடன் வர்த்தக ரீதியான உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இவ்வுடன்படிக்கைகளினூடாக ஒவ்வொரு தரப்பினரினதும் உரிமைகளும் கடப்பாடுகளும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டியதுடன் நீதிமன்ற சட்டத்தின்படி செல்லுபடியானதாகவும் நடைமுறைப்படுத்தப்படக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

7.5 கணக்கு வைத்திருப்போருக்கு செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்கும் பொழுது, கையொப்பத்திற்கான பதிலீடாக, உண்மையான பயன்படுத்துநர்கள் தொடர்பில் பின்பற்றப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளுக்கும் பொருந்தத்தக்க சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

**8. வாடிக்கையாளர் கல்வி, மனக்குறை மற்றும் நிவர்த்தி செய்யும் பொறிமுறை**

8.1 வங்கிகள், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்புப் பணிகளைப் பிரயோகித்தல், இயலாற்றல்தன்மை மற்றும் அவர்களின் தனிப்பட்ட பாதுகாப்புத் தகவல்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம் என்பனபற்றி கல்வியறிவூட்டுதல் முக்கியமானதாகும்.

8.2 பிணக்குகளைக் கொண்ட கொடுப்பனவுகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் தொலைந்தமை என்பனவற்றைக் கையாள்வதற்காக வங்கிகள் பிணக்குகளைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். வங்கிகள், வாடிக்கையாளரின் விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் அழைப்பு மையமொன்றினை நிறுவுதல் வேண்டும். பெறப்படும் ஒவ்வொரு முறைப்பாட்டிற்கும் தொடர்பு இலக்கம் வழங்கப்பட வேண்டியதுடன் 3 வேலைநாட்களுக்கிடையில் அவற்றிற்கு தீர்வு காணப்படவும் வேண்டும்.

8.3 பிணக்கிற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக வாடிக்கையாளர் ஒருவர் முறைப்பாடொன்றினைச் செய்யும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளரின் மனக்குறையினைப் போக்குவதற்கு வங்கிகள் தயாராக இருத்தல் வேண்டும். அத்தகைய வாடிக்கையாளரின் குறைகளை களைவதற்கான விதிப்புக்களை மீண்டும் பெற்றுக் கொள்ளும் நடைமுறைகளை வங்கிகள் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**9. பொதுவான விதிகளும் நிபந்தனைகளும்**

9.1 செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளை தொழிற்படுத்த எண்ணுகின்ற வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு அத்தகைய பணிகளை வழங்குவதற்கு முன்னதாக அவர்களது தொடர்பான சபைகளின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். சபையின் ஒப்புதலானது, தொழிற்பாட்டின் அளவு, வங்கியினால் அனுமானிக்கப்படும் மோசடி இடர்நேர்வு மற்றும் அத்தகைய இடர்நேர்வுகளை தணிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வங்கியின் செயன்முறைகள் மற்றும் கொள்கைகள் என்பனவற்றை ஆவணப்படுத்தல் வேண்டும். செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்குவதற்கு ஏற்கனவே தொடங்கியிருக்கும் வங்கிகள் நிலையினை மீளாய்வு செய்ய வேண்டியதுடன் இவை வழங்கப்பட்டதிலிருந்து ஐந்து மாத காலப்பகுதிக்குள் இவ்வழிகாட்டல்களுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

9.2 விரிவாக்கப்பட்ட வகையிலான செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்கும் வங்கிகள் ஒவ்வொரு பணி வழங்கல் நிலையத்திலும் வங்கியினையும் செல்லிடப் பணி வழங்குநரினையும் பிரசன்னப்படுத்துகின்ற இலட்சினையுடன் கூடிய இசைவு அறிவித்தலொன்றினையும் வங்கியினையும் செல்லிடப் பணி வழங்குபவரினையும் பிரதிபலிக்கின்ற இலட்சினையுடன் கூடிய முகவர்களுக்கு வழங்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரங்களையும் வாடிக்கையாளர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

9.3 விரிவாக்கப்பட்ட வகையிலான செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்குகின்ற வங்கிகள், நியமிக்கப்பட்ட முகவர்கள் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் மீளப் பெறுகைகளை அனுமதித்தல் ஆகிய பணிகளை வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு மட்டும் வழங்குவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் முன்னொப்புதல் பெறாமல் முகவர்கள் ஏதேனும் வங்கிப் பணிகளை வழங்குவதற்கு வங்கிகள் அனுமதிக்கக்கூடாது. மத்திய வங்கியின் முன்னொப்புதலுடன் வங்கிகள் கொடுக்கல்வாங்கல் வரையறைகளையும் நாளொன்றுக்கான வரையறைகளையும் முகவர்களுக்கு குறித்துரைக்கலாம்.

9.4 விரிவாக்கப்பட்ட வகையிலான செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்குகின்ற வங்கிகள், நியமிக்கப்பட்ட முகவர்களுடன் வாடிக்கையாளர்கள் மேற்கொள்கின்ற வைப்புக்களும் மீளப் பெறுகைகளும் அதேநேர அடிப்படையில் கணக்கிடப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

9.5 நியமிக்கப்பட்ட முகவர்கள் அதிகாரமளிக்கப்படாத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வங்கிகள் நியமிக்கப்பட்ட முகவர்களைக் கண்காணித்து மேற்பார்வை செய்தல் வேண்டும்.

9.6 பயன்படுத்துநரின் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு இத்தொழில் துறையிலுள்ள மிகச் சிறந்த நடைமுறைகளுடன் இணங்கிச் செல்லக்கூடிய முறைகளைப் பயன்படுத்த வங்கிகள் முயற்சித்தல் வேண்டும்.

9.7 வாடிக்கையாளர்கள் அவர்களது முன்னுரிமைக்கேற்ப கொடுப்பனவு எச்சரிக்கைகளையும் அறிவித்தல்களையும் பெறுவதற்கான இயலாற்றலை அவர்களுக்கு வழங்குகின்ற கட்டுப்பாடுகளை வங்கிகள் வழங்குதல் வேண்டும்.

9.8 வங்கிகள் பாதுகாப்பு இடர்நேர்வுகளை தீவிரமான முறையில் அடையாளம் காணவும், மதிப்பிடவும் கண்காணிக்கவும் வீரியம் மிக்க பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைக்கிடுதல் வேண்டும். பாதுகாப்பு முறைமை பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அ. உணர்திறன்மிக்க தகவல்களின் இரகசியத்தன்மை, அனைத்து இரகசியமான தகவல்களும் பாதுகாப்பான முறையில் பேணப்பட வேண்டியதுடன் தகவல்களைக் கடத்தும் போதும் சேமித்து வைக்கும் போதும் அதிகாரமளிக்கப்படாதவர்கள் இவற்றினைப் பாவிப்பதிலிருந்தும் அல்லது மாற்றங்கள் செய்வதிலிருந்தும் பாதுகாத்தல்;

ஆ. செய்முறைப்படுத்தப்பட்ட, களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது கடத்தப்பட்ட தகவல்களின் துல்லியமான தன்மை, நம்பகத்தன்மை மற்றும் தகுதியான தன்மை;

இ. பயன்படுத்துநர்கள் மற்றும் முகவர்களைச் சரியான முறையில் உறுதிப்படுத்தல்;

ஈ. பயன்படுத்துநர் மற்றும் முகவர்களினால் ஆற்றப்பட்ட தொழிற்பாடுகளுக்குச் சரியான முறையில் அங்கீகாரமளித்தல்.

9.9 செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்குகையில் முகவர் தொடர்பான இடர்நேர்வுகளை அதாவது கொடுகடன் இடர்நேர்வு, தொழிற்பாடு சார்ந்த இடர்நேர்வு, சட்ட இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, நன்மதிப்பு சார்ந்த இடர்நேர்வு மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியத்தின் பாதுகாப்பு தொடர்பிலான இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது தணிப்பதற்கு அல்லது ஒழித்துவிடுவதற்கு வங்கிகள் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

9.10 வங்கிகள் தரமான தடங்கலற்ற வியாபாரத்தினையும் அனர்த்த மீட்பு நடைமுறைகளையும் பேணுதல் வேண்டும். ஏதேனும் அனர்த்தங்கள் அல்லது தொழிற்பாட்டுத் தவறுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவை வாடிக்கையாளர்களுக்கு எவ்வித வசதியீனமும் ஏற்படாமல் தொழிற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய இயலாற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். தடங்கலற்ற வியாபாரத்திட்டமும் அனர்த்த மீட்பு அமைவிடமும் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

10. சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இவ்வொழுங்கு விதிகளில்

அ. "முகவர்" என்பது செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை மேற்கொள்வதற்காக வங்கிகளினால் நியமிக்கப்பட்ட நிறுவனங்கள்/ ஆட்கள் என பொருள்படும்;

ஆ. "வாடிக்கையாளர்" என்பது கணக்கு வைத்திருப்போர் என பொருள்படும்;

இ. "உரிமம் பெற்ற வர்த்தக வங்கி" மற்றும் "உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி" என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி மற்றும் உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கி என்பனவற்றின் அதே பொருளினைக் கொண்டிருக்கும்;

ஈ. "உரிமம் பெற்ற பணி வழங்குநர்" என்பது 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைப் பணி வழங்குவோர் ஒழுங்குவிதிகளின் கீழ் உரிமம் பெற்ற செல்லிடக் கொடுப்பனவு பணி வழங்குவோர் எனப் பொருள்படும்;

உ. "செல்லிடக் கொடுப்பனவுகள்" என்பதன் கருத்து செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதனூடான நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்காக வங்கிகளுக்கும் அவற்றின் வாடிக்கையாளர்களுக்குமிடையிலான தகவல் பரிமாற்றம் என பொருள்படும்;

ஊ. "பணி வழங்குவோர்" என்பது செல்லிடக் கொடுப்பனவு தீர்ப்பனவுகளை வழங்குபவர்களையும் தொடர்பான செல்லிட வலையமைப்பு தொழிற்பாட்டாளர்களையும் குறிக்கும்.

ஒப்பம்
பி. டி. ஜே. பர்னாந்து
**துணை ஆளுநர்**
2011 மார்ச் 09

**இணைப்பு I**

## கொடுப்பனவுப் பணிகளை அடிப்படையாகக் கொண்ட செல்லிடத் தொலைபேசிப் பணி வழங்குவோருக்கான தொழில்நுட்ப வழிகாட்டல்கள்

### 1. தொழில்நுட்பவியல் தடைகள், பாதுகாப்புப் பிரச்சனைகள், தத்துவங்கள் மற்றும் நடைமுறைகள்

குறிப்பிட்ட தொழில்நுட்பவியல் தடைகள் மற்றும் கம்பியில்லா தொழில்நுட்பவியலின் இயல்பான பண்புகள் என்பனவற்றின் காரணமாக செல்லிட பயன்படுத்துநர்கள்/ வாடிக்கையாளர்கள் செல்லிடக் கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் பாதுகாப்புப் பிரச்சனைகளையும் மேலும் தரம் குறைந்த பணிகளையும் எதிர்நோக்குகின்றனர். வாடிக்கையாளர்களின் மீதும் நிதியியல் முறைமைகளின் மீதும் ஏற்படக்கூடிய ஏதேனும் எதிர்மாறான தாக்கத்தினைத் தவிர்ப்பதற்கு இவற்றினைக் குறைப்பது அவசியமாகும். ஆகவே வங்கிகள் இடர்நேர்வுகளையும் அச்சுறுத்தலையும் கட்டுப்படுத்தக்கூடிய விதத்தில் போதுமான பாதுகாப்பு வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டுள்ளதையும் நம்பகமான முறைமைகள் நிறுவப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்த வேண்டியதுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள வலையமைப்பினையும் பணிகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு ஏற்பாடுகளையும் கருத்திற் கொள்ளாது மிக உயர்தரப் பணிகளை மட்டும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இயக்கவியல் சார்ந்த தன்மை கம்பியில்லா சூழலில் காணப்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தலின் அளவு என்பனவற்றைக் கருத்திற் கொள்கையில், வங்கிகள் புதிய சாதனங்கள் அல்லது பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவர்களது முறைமைகள் தொடர்பாக பாதுகாப்பு பாதிக்கப்படும் தன்மை பற்றிய சுதந்திரமான மதிப்பீடொன்றினையும் மீளாய்வினையும் காலத்திற்குக் காலம் மேற்கொள்வது கட்டாயமானதாகும். அதன் பின்னர் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கெதிராக போதுமான தணிப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கு விடயங்களை இற்றைப்படுத்துவதும் மீளாய்வு செய்வதும்

கிரமமான முறையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய மீளாய்வுகளை வசதிப்படுத்துவதற்கு பாதுகாப்பு ரீதியில் வடிவமைக்கப்பட்ட தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டு இற்றைப்படுத்தப்படுவது அவசியமானதாகும்.

பாதுகாப்பு மற்றும் தொடர்புபட்டிருக்கும் இடர்நேர்வுகளின் நியதிகளில் பொருத்தமான பணிகளை வழங்குதல் மற்றும் தொடர்புபட்டுள்ள இடர்நேர்வுகளைத் தளர்த்தல் என்பனவற்றின் பொருட்டு வங்கிகள் பணி வழங்கும் வழிகளை மதிப்பீடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

### 1.1 உறுதிப்படுத்துதல் மற்றும் மறுதலிக்காமை

உறுதிப்படுத்தல் மற்றும் மறுதலிக்காமையை உறுதிப்படுத்துவது தொடர்பாகவும் பின்வரும் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

அ. வங்கிப் பணிகளுக்காக வாடிக்கையாளர்கள் அவர்களது கடவுச் சொற்களை அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படும் பொழுது அவை பெறப்படும் பொழுதே உடனடியாக இரகசியக் குறியீட்டு முறைப்படுத்தல் வேண்டும். செல்லிடத் தொலைபேசித் திரையில் தெளிவான உரைகள் காட்சிப்படுத்தப்படும் விதத்தில் உணர்திறன் கொண்ட தரவுகள் எதுவும் அனுமதிக்கப்படக்கூடாது.

ஆ. பொருத்தமானவிடத்து கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு ஒன்றிற்கும் மேற்பட்ட காரணிகளினை அடிப்படையாகக் கொண்ட உறுதிப்படுத்தல் முறைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

இ. வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்ட காலப்பகுதி முழுவதிலும் இரகசியக் குறியீடும் உறுதிப்படுத்தப்பட்ட தன்மைகளும் முழுமையாக பேணப்பட்டமையை உறுதிப்படுத்துதல்.

ஈ. கணனி அமர்வு பழுதடைந்து அதனைத் தொடர்ந்து அது மீள ஆரம்பிக்கப்பட்ட பின்னர் உறுதிப்படுத்தல் செயன்முறை மீண்டும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

உ. நிறைவடையாத அல்லது முதிராத கொடுக்கல்வாங்கல்கள் உட்பட அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களினதும் விபரங்கள் பதியப்பட வேண்டியதுடன் அத்தகைய பதிவுகள் பாதுகாப்பு வரம்பு மீறல்களை ஏற்படுத்தக்கூடிய அசாதாரண தன்மை அல்லது பிறழ்வுகளின் பொருட்டு நாளாந்தம் மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

### 1.2 தனிப்பட்ட அடையாள இலக்கத்தின் பாதுகாப்பு

செல்லிட மார்க்கத்தினூடாக வங்கிக் கணக்குகள் நேரடியாக மதிப்பீடு செய்யப்படும் பொழுது அதிகாரமளிக்கப்படாத பயன்படுத்துநர்களினால் இவை தவறாகப் பயன்படுத்தப்படுவதனை தடுப்பதற்காகவும் அல்லது மோசடியான தன்மைகளை ஒழிப்பதற்காகவும் உயர்மட்டப் பாதுகாப்பு தேவைப்படுகிறது. செல்லிடக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிப்பதற்கு வங்கிகள் புதிய செல்லிடத் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அடையாள இலக்கங்கள் வங்கிகளினால் வழங்கப்பட்டு அவற்றினால் உறுதிப்படுத்தப்படலும் வேண்டும். செல்லிடக் கொடுப்பனவுகளுடன் தொடர்புபட்டுள்ள வங்கிகளும் பல்வேறுபட்ட பணி வழங்குவோரும் செல்லிடத் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை வழங்கல் மற்றும் பயன்பாடு தொடர்பாக இத்தொழில் துறையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்புத் தத்துவங்களுக்கும் நடைமுறைகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

செல்லிடத்திற்கு அணித்தான/ தொடர்புகளில்லாத கொடுப்பனவுகளை அடிப்படையாகக் கொண்ட செல்லிடமல்லாத வலையமைப்புத் தொழிற்பாட்டாளர்களைப் பொறுத்த வரையில் செல்லிடத் தனிப்பட்ட அடையாள இலக்கத்துடன் சேர்த்து இரண்டாந்தரக் காரணி உறுதிப்படுத்தல் பயன்படுத்தப்படல் வேண்டும். இரண்டாந்தரக் காரணி உறுதிப்படுத்தலாக செல்லிடத் தொலைபேசி இலக்கத்தினைப் பயன்படுத்துவதிலும் பார்க்க அட்டை இலக்கத்தினை அல்லது ஒரு தடவை மட்டுமான கடவுச் சொற்களினை பயன்படுத்துவதற்கு யோசனை தெரிவிக்கப்படுகிறது.

### 1.3 இரகசியக் குறியீட்டு திறவுகோல் முகாமைத்துவம்

இரகசியக் குறியீட்டு முறையினையும் இலக்கமுறைச் சான்றிதழ்களையும் காத்திரமான முறையில் பயன்படுத்துவதற்கு பொருத்தமான திறவுகோல் முகாமைத்துவம் இன்றியமையாததாகும். இரகசியக் குறியீட்டு திறவுகோல்களை உருவாக்குவதற்கும் பாதுகாப்பான முறையில் அவற்றை சேமித்து வைக்கவும், விநியோகிக்கவும், அகற்றவும், நீக்கிவிடவும் அல்லது அழித்துவிடவும் வங்கிகள் போதுமான கட்டுப்பாட்டு வழிமுறைகளையும் நடைமுறைகளையும் நிறுவிக் கொள்வது அவசியமாகும். தொடர்பான பாதுகாப்பு நடைமுறைகளின் தொடர்பில் உயர்ந்தளவு நம்பகத்தன்மையினைப் பேணுவதற்கு காலத்திற்குக் காலம் கணக்காய்வுகளையும் இணங்கியொழுகும் தன்மைகளினையும் மீளாய்வு செய்து கொள்ளுதல் வேண்டும்.

### 1.4 வலையமைப்பு மற்றும் முறைமையின் பாதுகாப்பு

வலையமைப்புத் தொடர்பூட்டல் மற்றும் முறைமைப் பாதுகாப்புத் தொடர்பாக பின்வரும் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

அ. பரிமாற்றத்தின் போது வங்கியினதும் வாடிக்கையாளர்களினதும் உணர்திறன் மற்றும் இரகசியத் தகவல்களைப் பாதுகாப்பதற்காக வலுவான இரகசியத்தன்மை வாய்ந்த குறிமுறையாக்க நியமம் பயன்படுத்தப்படல் வேண்டும்.

ஆ. பொருத்தமான தகவல் பாதுகாப்பு முறைமைகளையும் தற்செயலான நிகழ்வுகளுக்குப் பதிலிறுத்தும் நடைமுறைகளையும் நிறுவுதல்.

இ. தொடர்பான முறைமைகள் மற்றும் வலையமைப்புகளின் இடர்நேர்வு முகாமைத்துவ பகுப்பாய்வினையும் பாதுகாப்பு பாதிக்கப்படக்கூடிய தன்மை பற்றிய மதிப்பீடுகளையும் காலத்திற்குக் காலம் நடத்துதல்

ஈ. மேற்கொள்ளப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவப் பகுப்பாய்வுகள் மற்றும் பாதிக்கப்படக் கூடிய தன்மை பற்றிய மதிப்பீடு என்பனவற்றின் அடிப்படையில் செல்லிடக் கொடுப்பனவுகள் மற்றும் கொடுப்பனவு முறைமைகளில் பயன்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகள், வழிகாட்டல்கள், முறைகள் மற்றும் வழிமுறைகள் என்பனவற்றின் இற்றைப்படுத்தப்பட்ட ஆவணங்களை சரியாகவும் கிரமமாகவும் பேணுதல்.

உ. அதிகாரமின்றி முறைமைகளை அடைதல், ஒழுங்கற்ற தலையீடுகள் என்பனவற்றிலிருந்து முறைமை நுழைவாயில்கள், வலையமைப்புச் சாதனங்கள், சேமிப்பிகள், வழங்கல் கணனிகள் மற்றும் ஏனைய வன்பொருள்/ மென்பொருள் என்பனவற்றைப் பாதுகாப்பதற்காக பொருத்தமான பௌதீக பாதுகாப்பு முறைகளை நடைமுறைக்கிடல். வங்கியினதும் பணி வழங்குவோரினதும் தரவு மையங்கள் கம்பியுடைய மற்றும் கம்பியற்ற தரவு வலையமைப்புப் பாதுகாப்புப் பொறிமுறையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### 1.5 கொடுக்கல்வாங்கல் பதிவுகள்

செல்லிட வங்கித்தொழில் மற்றும் கொடுப்பனவு முறைமைகள், ஏதேனும் பிணக்குகள் அல்லது தவறுகள் நிகழும் சந்தர்ப்பத்தில் மீள்கட்டமைக்கப்படுவதற்கான கணக்காய்வு பரீட்சிப்பு செயன்முறைகளை இயலச் செய்வதற்காக விபரமான கொடுக்கல்வாங்கல் பதிவுகளை பேணுதல் வேண்டும். பதிவுகளை பேணி வைத்திருக்கும் காலம் ஆறு வருடங்களாக இருத்தல் வேண்டும். அத்தகைய தகவல்களை ஏதேனும் இழப்புக்கள் அல்லது சேதங்களிலிருந்து பாதுகாக்கப்படுவதனை வங்கிகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்படாத மாற்றியமைத்தல்கள் அல்லது அழித்துவிடல்களிலிருந்து தகவல்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைக்கிடப்படல் வேண்டும்.

**1.6 தரவின் இரகசியத்தன்மையும் ஒருங்கிணைப்பும்**

தரவின் இரகசியத்தன்மை மற்றும் ஒருங்கிணைப்பு தொடர்பாக பின்வரும் வழிகாட்டல்கள் பின்பற்றப்படல் வேண்டும்.

அ. பேணும் காலம் முழுவதும் தரவுப் பதிவு சாதனங்களிலிருந்தான அத்தகைய தரவுகள் பாதிப்பின்றி முழுமையாக பேணப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் உணர்திறன் வாடிக்கையாளர்களின் பிரயோகமொன்றை ஆரம்பித்து அது முடியும் வரையிலான இரகசியக் குறியீட்டு விபரங்களும் தனிப்பட்ட அடையாள இலக்கம் போன்ற உறுதிப்படுத்தல் தரவுகளும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

ஆ. வாடிக்கையாளர்கள் சிறந்த கம்பியில்லா பணிகளைக் கொண்ட பிரதேசத்திலிருந்து அத்தகைய பணிகள் குறைந்தளவில் உள்ளடக்கப்படும் பிரதேசங்களுக்கு செல்லும் பொழுது உள்ளக அமர்வு நடவடிக்கைகளின் தாமதங்கள் அல்லது அமர்வு பழுதடைதல் போன்றவற்றின் விளைவாக இரட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் ஏற்படுவதனை தவிர்ப்பதற்காக கம்பியல்லா பிரயோகங்களுக்கான மென்பொருட்கள் போதுமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

இ. வங்கிகளும் பணி வழங்குவோரும் உடனடியாக மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அவற்றின் இயலாற்றலை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் போதுமான பாதுகாப்பு வழிமுறைகள், வைரஸ் பாதுகாப்பு இடை நுழைவுகளைக் கண்டுபிடித்தல்/ முறைகளை தடை செய்தல், கண்காணிப்பு, கட்டுப்பாட்டு நடைமுறைகள் என்பனவற்றை நிறுவிக் கொள்ளுதல் வேண்டும். முறைமைகளின் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் முறைமைகள், கோவைகள் மற்றும் குறியீடுகள் மீதான ஒருங்கிணைக்கப்பட்ட பரிசோதனைகளையும் நடைமுறைக்கிடுதல் வேண்டும். அத்தகைய முறைமைகளிலுள்ள அனைத்து மாற்றங்களும் சரியான முறையில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**1.7 முறைமைகளின் கிடைப்பனவும் மீண்டு வரக்கூடிய தன்மையும்**

முறைமை பழுதடைந்து போவதன் காரணமாக பணிகளுக்கு ஏற்படக்கூடிய தடங்கல்களை குறைப்பதற்காக நடைமுறையிலுள்ள பொருத்தமான மீண்டு வரும் தன்மை மற்றும் பின்னூட்டல் திட்டங்களை வங்கிகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய திட்டங்கள் விரைவாக மீண்டு வரும் தன்மை மற்றும் உயர்ந்த முறைமைக் கிடைப்பனவின் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவு என்பனவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் பழுதுகளுக்கு தனியொரு முனையத்திலான திருத்தங்களை வழங்குதல் வேண்டும். இயலளவுப் பிரச்சனைகளின் காரணமாக ஏற்படும் ஏதேனும் பணிகள் தரம் குறைந்து வருவதனை உரிய நேரத்தில் திருத்திக் கொள்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் செல்லிடப் போக்குவரத்து முறைமை இயலளவும் மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

**2. ஏனைய தொடர்பான வழிகாட்டல்கள்**

வங்கிகள் பின்வருவனவற்றையும் மனதில் கொள்ளல் வேண்டும்.

**2.1 பாதுகாப்புடன் தொடர்புபட்ட நடைமுறைகள்**

அ. செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் வங்கித்தொழில் முறைமைகளை, பணி வழங்குவோருக்கு திறந்துவிட்டமையானது வங்கித்தொழில் முறைமை மற்றும் வாடிக்கையாளர் தொடர்பான அறிவாற்றலினையும் பகிரங்கப்படுத்துவதாக அமையும். எனவே, உணர்திறனான வாடிக்கையாளர் தரவு, கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைப்பு என்பன பாதுகாக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

ஆ. வங்கியின் பக்கத்தில் அல்லது பணி வழங்குவோரின் பக்கத்தில், ஏதேனுமொன்றில் செல்லிடக் கொடுப்பனவுப் பணியாளர்கள் ஒவ்வொரு வங்கியினதும் பாதுகாப்பு வழிகாட்டல்களுடன் இணங்கியொழுகுவதனை சரியான முறையில் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும், வங்கிகள் அத்தகைய பாதுகாப்பு வழிகாட்டல்கள் முழுமையாக இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக செல்லிடக் கொடுப்பனவிற்காகப் பயன்படுத்தப்படும் அனைத்து முறைமைகளின் மீதும் கிரமமான பாதுகாப்பு கணக்காய்வுகளை நடத்துதல் வேண்டும்.

இ. தொலைபேசி இலக்கத்தினை அடையாள இலக்கமாகக் கொண்டிராத வழிப்படுத்தல்களுக்காக இணையத்தள வங்கித்தொழில் அடையாள அட்டையிலிருந்து வேறுபடுகின்ற அடையாள அட்டைக்கான தனியான பதிவும் கடவுச் சொற்களும் வழங்கப்பட வேண்டும் என விதந்துரைக்கப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியினால் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தாலொழிய வங்கிகள் அவற்றின் சொந்த இடர்நேர்வுத் தன்மைகளைப் பொறுத்து கொடுக்கல்வாங்கல் வரையறை (கொடுக்கல்வாங்கலொன்றிற்கு, நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம்) கொடுக்கல்வாங்கல் வேகத்தின் வரையான, மோசடிப் பரிசோதனை, பணம் தூய்தாக்கலுக்கெதிரான பரிசோதனை போன்ற பொருத்தமான இடர்நேர்வுத் தணிப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**2.2 தொலைபேசி தொலைந்து போதல்/ களவாடப்படுதல்களிலிருந்து தோன்றக் கூடிய நிதியியல் இழப்புக்களைக் குறைத்தல்**

அ. அண்மையிலுள்ள கள தொடர்பூட்டலினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளைப் பயன்படுத்துகின்ற வேளையில் குற்றவியல் நடவடிக்கையினை தடுப்பதற்காக பாதுகாப்பு வழிமுறைகளைப் பலப்படுத்துதல். செல்லிடத் தொலைபேசிகள் பற்று/ வரவு மற்றும் முன்கூட்டிய சேமிப்புப் பெறுமதி அட்டை போன்றவற்றை ஒத்தவிதத்தில் பயன்படுத்தப்படுவதனை அனுமதிக்கின்ற புதிய செல்லிடத் தொலைபேசி தொழில்நுட்பங்கள் தவறாகப் பயன்படுத்தப்படும் குற்றவியல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்து ஆர்வலர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

ஆ. குறித்துரைக்கப்பட்ட பெறுமதிக்கு மேலாக - இலங்கை மத்திய வங்கியினால் வரையறுக்கப்பட்டட உயர்ந்தபட்ச தொடர்புகளில்லாத கொடுப்பனவு பெறுமதிக்கு மேலான எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களுமான தனிப்பட்ட அடையாள இலக்க சரிபார்ப்பு கோரிக்கையானது தனிப்பட்ட அடையாள இலக்கம் போன்ற மேலதிக பாதுகாப்பு வழிமுறைகள்/ சரி பார்ப்புக்களைத் தேவைப்படுத்தும். இது, குறிப்பிட்ட எண்ணிக்கையான குறைந்த பெறுமதி கொண்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்ந்து விரைவான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்தும் ஏற்புடைத்தாக இருக்கும்.

இ. கொடுப்பனவு தொழில்நுட்பத்துடனான கருவியுடன் கூடிய செல்லிடத் தொலைபேசி தொலைந்துவிட்டது அல்லது களவாடப்பட்டுவிட்டது என அறிவிக்கப்பட்டதும் தொடர்புகளற்ற கொடுப்பனவுத் தொழிற்பாடுகள், சிம் அட்டை மற்றும் தொலைபேசி என்பன உடனடியாக முடக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். வேறு ஏதேனும் நிறுவப்பட்ட நிதியியல் பிரயோகங்களும் கூட முடக்கப்பட வேண்டும்.

**2.3 வாடிக்கையாளர் அறிவூட்டல்**

அ. வாடிக்கையாளரின் செல்லிடத் தொலைபேசிகளில் தனிப்பட்ட அடையாள இலக்கக் கோரிக்கை செயற்படுத்தப்பட்டமையினை

உறுதிப்படுத்துதல் புதிய செல்லிடத் தொலைபேசிக் கொள்வனவு செய்யப்பட்டதும் தனிப்பட்ட அடையாள இலக்கக் குறியீடு மாற்றப்பட வேண்டும்.

ஆ. தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை எவ்வாறு பாதுகாப்பாக பேண வேண்டுமென்பது பற்றியும் அவற்றை இன்னொரு தரப்பினருக்கு காட்டக்கூடாது என்பது பற்றியும் வாடிக்கையாளருக்கு அறிவூட்டுதல் வேண்டும்.

இ. சில செல்லிடத் தொலைபேசி அலகுகளில் பதிவு செய்யப்படும் தனிப்பட்ட அடையாள இலக்கங்கள் பதிவு செய்யப்பட்டதும் மீள் சுழற்சிப் பட்டியலை மீள அழைக்கமுடியும். முன்னைய சுழற்சி இலக்கங்களை அணுகுவதன் மூலம் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினைக் கண்டறிவதனை தடுப்பதற்காக தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை உடனடியாக தொலைபேசியின் நினைவூட்டல் முறைமையிலிருந்து அழித்துவிடுமாறு வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்படல் வேண்டும்.

ஈ. வெவ்வேறுபட்ட வழங்கல் வழிகள் அல்லது முறைமைகள் அவை ஒவ்வொன்றுடனும் இணைந்துள்ள பாதுகாப்பு இடர்நேர்வுகளைப் பொறுத்து வெவ்வேறுபட்ட பாதுகாப்பு மட்டங்களையும் சிக்கல்களையும் கொண்டிருப்பதனால் வாடிக்கையாளர்களை ஒரே தனிப்பட்ட அடையாள இலக்கங்களை மற்றையவற்றிற்குப் பயன்படுத்த வேண்டாமென அறிவுறுத்தப்படுகின்றனர்.

உ. வாடிக்கையாளர்கள் செல்லிடத் தொலைபேசிகளில் கடவுச் சொற்கள், கொடுகடன் அட்டை, வங்கி அட்டையின் தனிப்பட்ட அடையாள இலக்கம் போன்ற இரகசியத் தகவல்களை சேமிப்பதனை தவிர்ப்பதனை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், வாடிக்கையாளர் தொலைபேசியை விற்றலும் அல்லது அதனை பயன்படுத்தாமல் விட்டதும் அத்தகைய தகவல்களை அழித்துவிடுமாறு வாடிக்கையாளர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஊ. செல்லிடத் தொலைபேசி தொலைந்துவிடும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்கள் செல்லிடத் தொலைபேசியின் பன்னாட்டு செல்லிடச் சாதன அடையாளக் குறியீட்டினை தனியான இடமொன்றில் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். செல்லிட வலையமைப்பு தொழிற்பாட்டாளர்களுக்கு தொலைபேசியின் பன்னாட்டு செல்லிடச் சாதன அடையாளக் குறியீட்டினை அறிவிப்பதன் மூலம் வாடிக்கையாளர்கள் அவர்களின் தொலைந்த/ களவாடப்பட்ட செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தி அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகளை மேற்கொள்ளப்படுவதனை தடுக்கமுடியும்.

எ. வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்கள் செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் மற்றும் கொடுப்பனவுப் பணிகளை அடைவதற்கு அவர்களது சொந்த செல்லிடத் தொலைபேசிகளை கைகளினால் ஒன்று சேர்க்குமாறு கேட்டுக் கொள்ளுமிடத்து வங்கிகள் தெளிவான ஒன்று சேர்க்கும் அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும்.

ஏ. செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் மற்றும் கொடுப்பனவுப் பணிகளைப் பயன்படுத்தும் பொழுது மேலதிக எச்சரிக்கையுடன் இருக்குமாறு வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஐ. எந்தவொரு கொடுப்பனவினையும் செய்ய முன்னர், நிறுவப்பட்டுள்ள தொடர்புகளின் உறுதிப்படுத்தல்களை பாதுகாப்பான முறையில் பரிசோதிப்பதற்கு வாடிக்கையாளர்களை இயலச் செய்யும் விதத்தில் அவர்களுக்கு அறிவூட்டுதல்.

ஒ. பிணக்குளைக் கையாளுதல், அறிக்கையிடும் நடைமுறைகள் மற்றும் தீர்வு காணப்படுவதற்கு எடுக்கப்படும் நேரம் என்பன பற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவுரை வழங்குதல்.

ஓ. வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை மேற்கொள்கையில் சிக்கலான தன்மைகள், சட்ட ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியில் புரியாத விதத்தில் பேசுதல் என்பனவற்றை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

## கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிட கொடுப்பனவுப் பணிகளுக்கான 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க செல்லிடக் கொடுப்பனவு வழிகாட்டல்கள்

### 1. அறிமுகம்

1.1 இலங்கை மத்திய வங்கி தோற்றம் பெற்று வரும் இலத்திரனியல் கொடுப்பனவு பொறிமுறையினை வசதிப்படுத்தும் அதேவேளையில் அத்தகைய பொறிமுறையின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மை என்பனவற்றை மேம்படுத்தும் நோக்குடன் புத்தம் புதிய கொடுப்பனவு முறைமைகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை உருவாக்குவதனூடாக வழிகாட்டல்களை வழங்குவதில் ஈடுபட்டிருக்கிறது. இதன்படி, நிதியியல் தொழில்துறை செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறைமைகளைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தி வருகின்றதொரு சூழ்நிலையில், இலங்கை மத்திய வங்கி செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற ஆரம்ப நடவடிக்கையாக, செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளை தொழிற்படுத்துகின்ற வங்கிகளினால் இணங்கியொழுகுவதற்காக வங்கி வழிநடத்தும் செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளுக்காக 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க செல்லிடக் கொடுப்பனவு வழிகாட்டல்களை வெளியிட்டது. செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை விரிவுபடுத்துவதற்காகவும் கட்டுக்காப்பு கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளை தொழிற்படுத்துகின்ற பணி வழங்குவோருக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்காகவும் மேலதிக வழிமுறையாக மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட இவ்வழிகாட்டல்கள் அத்தகைய பணி வழங்குநர்களினால் பின்பற்றப்படுதல் வேண்டும்.

1.2 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் கீழ் நிதியியல் முறைமைகளின் ஒட்டுமொத்த உறுதிப்பாட்டிற்கு வசதியளிப்பதற்காகவும் கொடுப்பனவு முறைமைப் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் கட்டுப்பாட்டு இடர்நேர்வு என்பனவற்றை மேம்படுத்துவதற்கும் இலங்கைக்கு கொடுப்பனவு முறைமைக் கொள்கையொன்றினை வடிவமைப்பதற்கும் பின்பற்றுவதற்கும் கண்காணிப்பதற்குமாக இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இலத்திரனியல் கொடுப்பனவு பொறிமுறைகளில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர் மற்றும் பணி வழங்குவோரின் நலவுரித்துக்களை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் அவை பன்னாட்டு சிறந்த நடைமுறைகளினால் வழிநடத்தப்படுவதனையும் கருத்திற் கொண்டு 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கக் கொடுப்பனவு அட்டைப் பணி வழங்குவோர் ஒழுங்குவிதிகள் (இதனகத்துப் பின்னர் "ஒழுங்குவிதிகள்" எனக் குறிப்பிடப்படும்) 2009 யூலை 31ஆம் நாள் விடுக்கப்பட்டன. குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின் 21ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க, இவ்வழிகாட்டல்கள் கட்டுக்காப்பு கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்குகின்ற பணி வழங்குவோருக்கான பரந்தளவு கோட்பாடுகளையும் நியமங்களையும் எடுத்துக்காட்டுவதற்காக வழங்கப்பட்டுள்ளதுடன் உடனடியாக நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

1.3 கட்டுக்காப்பு கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவுப் பணிகள், கொடுப்பனவு அட்டைப் பணிகளை வழங்குவோராகத் தொழிற்படுவதற்கான ஒழுங்குவிதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட பணி வழங்குவோரினால் மட்டுமே தொழிற்படுத்தப்படல் வேண்டும். கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட முறைமைகளின் கீழ் உரிமம் பெற்ற பணி வழங்குபவர்கள் வாடிக்கையாளர்கள்/ வணிகர்களிடமிருந்து பணத்தினைப் பெற்றுக் கொள்வதன் மூலமாக இ-பணத்தினை வழங்கலாம். மறுபுறத்தில், கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளைத் தொழிற்படுத்துகின்ற உரிமம் பெற்ற பணி வழங்குவோர் நேரடியாகவோ அல்லது நியமிக்கப்பட்ட வணகரூடாகவோ இ-பணத்தினை, இ-பண உடமையாளர்களுக்காக (காசு நிலையங்கள்) அவர்களின் கோரிக்கைக்கிணங்க பணமாக மாற்ற முடியும். வாடிக்கையாளர்களினாலும் வணிர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் அடிப்படையில் இ-பணக் கணக்குகள் அதேநேர அடிப்படையில் இற்றைப்படுத்தப்படுவது கட்டாயமானதாகும். கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைகளை தொழிற்படுத்துகின்ற உரிமம் பெற்ற பணி வழங்குவோர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியுடன்/ வங்கிகளுடன் கட்டுக்காப்புக் கணக்குகளைத் தொழிற்படுத்த வேண்டியதுடன் கட்டுக்காப்புக் கணக்கில்/ கணக்குகளிலுள்ள அனைத்து இ-பணக் கணக்கு வைத்திருப்போரிடமிருந்தும் சேகரிக்கப்பட்ட ஒன்று திரண்ட தொகையினை எல்லா நேரங்களிலும் பேணுதலும் வேண்டும்.

**2. ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையிடல் ஏற்பாடுகள்**

2.1 கட்டுக்காப்புக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளைத் தொழிற்படுத்துகின்ற உரிமம் பெற்ற பணி வழங்குவோர் இவ்வழிகாட்டல்களுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2.2 செல்லிடக் கொடுப்பனவுப் பணிகள் இலங்கை ரூபாவில் இருக்க வேண்டியதுடன் உள்நாட்டுக் கொடுக்கல்வாங்கல்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படவும் வேண்டும்.

2.3 செல்லிடக் கொடுப்பனவுப் பணிகள் 18 வயதிற்கு மேற்பட்ட வதிகின்ற இலங்கையர்களுக்கு மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

2.4 உரிமம் பெற்ற பணி வழங்குவோர் செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்கும் போதும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் போதும் மற்றும் மென்பொருள்/ வன்பொருள் முறைமைகளை தரமுயர்த்தும் போதும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டம், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம், 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டம் மற்றும் 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்பனவற்றை மட்டும் கவனத்தில் கொள்ளாது ஏற்புடைத்தான அதைத்துச் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2.5 உரிமம் பெற்ற பணி வழங்குவோர் பணம் தூய்தாக்கலுக்கு எதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதன் ஒரு பகுதியாக "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" மற்றும் "வாடிக்கையாளர்களை நுணுக்கமாகக் கவனித்தல்" என்பன மீதான வழிகாட்டல்களை பின்பற்றுதல் வேண்டும். உரிமம் பெற்ற பணி வழங்குவோர் உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நுணுக்கமாகக் கவனித்தல் ஆகிய தேவைப்பாடுகளுக்கிணங்கி ஒழுகும் வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே இ-பண ஏற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**3. இ-பணப் பணிகளுக்கான வாடிக்கையாளர்களைப் பதிவு செய்தல்**

3.1 உரிமம் பெற்ற பணி வழங்குவோர் இ-பணப் பணிகளை வழங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளர்களைப் பதிவு செய்வதற்காக வழமையான முறைமைகளை கொண்டிருக்க வேண்டியதுடன் வாடிக்கையாளர் பதிவுகள் கையொப்பமிடப்பட்ட ஆவணங்களினூடாக மேற்கொள்ளப்படவும் வேண்டும்.

3.2 உரிமம் பெற்ற பணி வழங்குவோர் ஒரே தடவையில் பதிவு செய்யும் நடைமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். எனினும், வாடிக்கையாளர் அவரது/ அவளது செல்லிடத் தொலைபேசி இலக்கத்தினை அல்லது பதிவு செய்யப்பட்ட பெயரினை மாற்றும் போது உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு, கேட்டுக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் ஏற்கனவேயுள்ள பதிவுகள் முடிவுறுத்தப்பட்டு மீள் பதிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். வாடிக்கையாளர்கள் உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் ஏற்புடைத்தானவிடத்து ஏதேனும் வேறு தரவு திருத்தியமைத்தல்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுமிடத்து தற்பொழுதுள்ள வாடிக்கையாளர் கணக்கின் விபரங்கள் இற்றைப்படுத்தப்படுதல் வேண்டும்.

3.3 உரிமம் பெற்ற பணி வழங்குவோர், பதிவு செய்யும் நேரத்தில், வாடிக்கையாளரின் முன்னுரிமைப்படி மூன்று மொழிகளில் (சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில்) ஏதேனுமொன்றில், இரட்டித்தலில் ஒவ்வொரு வாடிக்கையாளருடனும் ஒப்பந்தங்களைச் செய்தல் வேண்டும். உடன்படிக்கையின் ஒரு பிரதி வாடிக்கையாளருக்கு வழங்கப்பட வேண்டியிருந்ததுடன் அத்தகைய உடன்படிக்கையானது எல்லா நேரங்களிலும் பணி வழங்குவோரினால் பாதுகாக்கப்படல் வேண்டும்.

**4. தொழில்நுட்பம் மற்றும் தகவல் பாதுகாப்பு நியமங்கள்**

4.1 கொடுப்பனவு வசதிகளை வழங்குவதற்காகப் பின்பற்றப்படுகின்ற தொழில்நுட்பங்கள் பாதுகாப்பானதாகவும் பத்திரமானதாகவும் இருக்க வேண்டியதுடன் இரகசியத்தன்மை, ஒருங்கிணைப்பு, நம்பத்தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்துவதாகவும் கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் மறுதலிக்கப்பட முடியாதனவாகவும் இருத்தல் வேண்டும்.

4.2 செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட வழங்கல் வழிகளின் பாதுகாப்புத் தேவைப்பாடுகளைப் போதுமான விதத்தில் வலியுறுத்துவதற்காக தகவல் பாதுகாப்புக் கொள்கைகளை வங்கிகள் நாளது வரை இற்றைப்படுத்தி நடைமுறைக்கிடுதல் வேண்டும்.

4.3 தெளிவான ஆனால் தீர்க்கமற்ற கட்டமைப்பொன்று இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளது.

**5. கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட முறைமையின் தொழிற்பாடுகள்**

5.1 கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளை தொழிற்படுத்துகின்ற உரிமம் பெற்ற பணி வழங்குவோர் இ-பண கணக்குகளுக்கு நிதி ஏற்றம் செய்யப்பட்டமையினையும் இ-பண கணக்கிலிருந்து காசு வெளியேற்றம் செய்யப்பட்டுள்ளமையினையும் வாடிக்கையாளர் கணக்குகளில் சேமிக்கப்பட்டுள்ள இ-பணத்தின் அதிகரிப்புக்கள்/ வீழ்ச்சிகள் பற்றிய வேறு ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களையும் அதேநேர அடிப்படையில் அவர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

5.2 உரிமம் பெற்ற பணி வழங்குவோர், ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் தனித்தனியாக இ-பணக் கணக்குகளைத் திறக்க வேண்டுமென்பதுடன் இ-பணக் கணக்குகள் தொடர்பான கூற்றுக்களை காலத்திற்குக் காலம் இலத்திரனியல் ஊடாக அல்லது அச்சு வடிவில் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

5.3 உரிமம் பெற்ற பணி வழங்குவோர் பின்வருவனவற்றை மேற்கொள்ளக்கூடாது:

அ. இ-பண உடமையாளர்களுக்கு எந்தவொரு வடிவத்திலும் கொடுகடன் வழங்கல்;

ஆ. இ-பணத்தின் நாணயப் பெறுமதியினை அதிகரிக்கின்ற விதத்தில் இ-பணத்தின் நிலுவையின் மீது வட்டியை அல்லது இலாபத்தினைச் செலுத்துதல்;

இ. இ-பணத்தினை கழிவிடலில் வழங்கல் அதாவது பெறப்பட்ட தொகையிலும் பார்க்க உயர்ந்த பணப் பெறுமதியினைக் கொண்ட இ-பணத்தினை வழங்குதல்;

ஈ. இ-பண உடமையாளர்களினால் செய்யப்பட்ட வைப்புக்களின் நாணயப் பெறுமதியினை விஞ்சுகின்ற விதத்தில் வேறு ஏதேனும் வசதி.

5.4 தனிப்பட்ட சேமிப்புப் பெறுமதி வரையறை, கொடுக்கல்வாங்கல் வரையறை, வணிக வரையறை மற்றும் நாளொன்றிற்கான வரையறை என்பன இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய வரையறைகளுக்குப் பின்னர் செய்யப்படக்கூடிய திருத்தங்களையும் இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடனேயே மேற்கொள்ளுதல் வேண்டும்.

5.5 இ-பண உடமையாளர் அவரின்/ அவளின் இ-பணக் கணக்கினை மூடிவிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுமிடத்து, உரிமம் பெற்ற பணி வழங்குபவர் இ-பண உடமையாளருக்கு அவரின்/ அவளின் இ-பணக் கணக்கில் கிடைக்கத்தக்கதாக இருக்கும் எஞ்சிய தொகையினை மீட்டுக் கொள்வதற்கு எழுத்து மூலமாக கோரிக்கை விடுக்குமாறு கேட்டுக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில், கொடுக்கல்வாங்கல்களை பூரணப்படுத்துவதற்கு அவசியமான செலவினைவிட வேறு மேலதிக செலவுகளுமின்றி கோரல் மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குப் பிந்தாமல் மீட்புத் தொகையினை செலுத்துதல் வேண்டும். உரிமம் பெற்ற பணி வழங்குநர் இ-பணக் கணக்கினை மூடும் செயன்முறைகள் பூர்த்தியடைந்த பின்னர் இ-பண உடமையாளருக்கு எழுத்து மூலமாக இதனை அறிவித்தல் வேண்டும்.

5.6 கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமையினைத் தொழிற்படுத்துவதற்கு உரிமம் வழங்கப்பட்ட பணி வழங்குவோராக ஒழுங்குவிதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டிருக்கின்ற செல்லிட வலையமைப்புத் தொழிற்பாட்டாளர்களைப் பொறுத்தவரை, அத்தகைய உரிமம் பெற்ற பணி வழங்குபவர் வாடிக்கையாளரின் செல்லிடக் கணக்கில் இ-பணக் கணக்காகத் தனித்தனியாக பேணப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். செல்லிடக் கணக்கில் சேமிக்கப்பட்டுள்ள கதைக்கக்கூடிய நேரத்தின் நாணயப் பெறுமதி இ-பணக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. எனினும் வாடிக்கையாளர் இ-பணக் கணக்கிலுள்ள மீதியைப் பயன்படுத்தி கதைக்கக்கூடிய நேரத்தினை கொள்வனவு செய்யமுடியும்.

5.7 கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட முறைமையினை தொழிற்படுத்துகின்ற உரிமம் பெற்ற பணி வழங்குபவர் பின்வருவனவற்றிற்கு பொறுப்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

அ. வாடிக்கையாளரை பதிவு செய்வதிலும் வாடிக்கையாளர் கணக்குகளைப் பேணுவதிலும் “உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்” மற்றும் “வாடிக்கையாளர்களை நுணுக்கமாக கவனித்தல்” தொடர்பான நடைமுறைகளை கடுமையாகப் பின்பற்றுதல் வேண்டும்;

ஆ. இ-பண உடமையாளர்களும் வணிகர்களும் அனுமதிக்கப்பட்ட பணிகளில் மட்டுமே ஈடுபட்டிருக்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அவர்களது நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும்;

இ. இ-பண உடமையாளர்களின் நிலுவைகளையும் நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் பொருட்டு, கட்டுக்காப்பு வங்கியினால் கேட்டுக் கொள்ளப்படும் நேரத்திலும் விதத்திலும் காலாந்தர அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் இ-பண முறைமையை அடைவதற்கான வழியினையும் வழங்குதல் வேண்டும்;

ஈ. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில் நிறுவப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி, ஏதேனும் ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை கட்டுக்காப்பு வங்கிக்கு அறிக்கையிடல் வேண்டும்;

உ. கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட முறைமையினை பொறுத்தவரை இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட எந்தவொரு பணிப்புரைக்கும் இணங்கியொழுக வேண்டியதுடன் மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட அறிக்கையிடும் தேவைப்பாடுகளையும் பின்பற்றி நடத்தல் வேண்டும்;

ஊ. கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட முறைமைக்கு ஏற்புடைத்தான வழிகாட்டல்களுக்கிணங்க அனைத்து வாடிக்கையாளர்களினதும் வணிகர்களினதும் பிணக்குகளைக் கையாளுதல் வேண்டும்.

**6. கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு**

6.1 கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளை தொழிற்படுத்துகின்ற உரிமம் பெற்ற பணி வழங்குவோர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியில்/ வங்கிகளில் கட்டுக்காப்புக் கணக்கினை/ கணக்குகளை திறக்கலாமென்பதுடன் இ-பண பரிவர்த்தனையில் இ-பண உடமையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியத்தினை இக்கணக்கில் வைப்புச் செய்யலாம். உரிமம் பெற்ற பணி வழங்குவோர் இவ்வழிகாட்டல்களிலுள்ள 5.7 மற்றும் 6.2 ஆம் பிரிவுகளில் தரப்பட்டுள்ள பொறுப்புக்களையும் மற்றைய விடயங்களையும் உள்ளடக்கிய உடன்படிக்கையொன்றினை முறைமையின் நிதிய நகர்வுகள் வெளிப்படையானவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கட்டுக்காப்பு வங்கியொன்றுடன் உடன்படிக்கையொன்றில் கையொப்பமிடல் வேண்டும். எனினும், உரிமம் பெற்ற பணி வழங்குவோர் ஒன்றிற்கும் மேற்பட்ட வர்த்தக வங்கிகளில் பல்வேறு கட்டுக்காப்புக் கணக்குகளைத் திறக்கும் பொழுது, உரிமம் பெற்ற பணி வழங்குநர், ஒவ்வொரு கட்டுக்காப்புக் கணக்குடனும் தொடர்பான இ-பணக் கணக்குகளை தெளிவாக நிர்ணயித்துக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தகவல்கள் தொடர்பான கட்டுக்காப்பு வங்கிக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

6.2 கட்டுக்காப்பு வங்கி பின்வருவனவற்றிற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்:

அ. பணி வழங்குவோரினால் பின்பற்றப்படுவதற்காக உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் என்பன தொடர்பான நடைமுறைகளை உருவாக்க வேண்டியதுடன் பணி வழங்குவோர் அதற்கு இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்துதல்;

ஆ. நியமிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்ட பணிகள் தவிர்ந்த அனுமதிக்கப்படாத நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லையென்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அவர்களின் நடவடிக்கைகளை கண்காணித்து மேற்பார்வை செய்யும் பொறுப்புக்களை உரிமம் பெற்ற பணி வழங்குவோர் உறுதிப்படுத்தல்;

இ. முன்னரே தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் கட்டுக்காப்பு வங்கியுடன் உரிமம் பெற்ற வழங்குநர்கள் மேற்கொண்ட அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் கண்காணித்து, கிரமமான வங்கிக் கணக்கொன்றிற்கு ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகளின்படி இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிடுதல்;

ஈ. உரிமம் பெற்ற பணி வழங்குநரினால் வழங்கப்பட்ட அனைத்து இ-பணிக் கணக்குகளின் ஒன்றுசேர்ந்த பெறுமதியுடன் கட்டுக்காப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள நிதியத்துடன் மீள் இணக்கப்படுத்துதல். இ-பணக் கணக்கிற்கும் கட்டுக்காப்பு கணக்கிற்குமிடையில் காணப்படும் ஏதேனும் வேறுபாடுகள் 7 நாட்களுக்கிடையில் மீள் இணக்கம் செய்து தீர்க்கப்படுதல் வேண்டும். இவ்வேறுபாடுகளை இக்காலப்பகுதிக்குள் தீர்க்கமுடியாவிடின் அதனை தகவலுக்காக இலங்கை மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும். எவ்வாறெனினும் கட்டுக்காப்பு வங்கி, அத்தகைய வேறுபாடுகளை நியாயமானதொரு காலப்பகுதிக்குள் தீர்ப்பதற்கான பொறிமுறையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்;

உ. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க நிறுவப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட வழிகாட்டலினை அடிப்படையாகக் கொண்டு இ-பண உடமையாளர்களின் ஏதேனும் ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை உரிமம் பெற்ற பணி வழங்குவோர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை அதே சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுதலும் வேண்டும்;

ஊ. உரிமம் பெற்ற பணி வழங்குநர்களுடனான இ-பணக் கணக்குகளை கிரமமாகக் கணக்காய்வு செய்தல்;

எ. உத்தேசத் தீர்வுகளின் ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட நேரத்தில் அல்லது அதன் பின்னர் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வேறு ஏதேனும் தேவைப்பாடுகள் என்பனவற்றிற்கு உரிமம் பெற்ற பணி வழங்குவோர் இணங்கியொழுகுவதனைக் கண்காணித்தல்;

ஏ. இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையிடல் தேவைப்பாடுகளைப் பின்பற்றுதல்;

ஐ. வங்கியின் வைப்புப் பொறுப்புக்களின் ஒரு பகுதியாக கட்டுக்காப்பு வங்கியிலுள்ள வைப்புக்களை அறிக்கையிடுதல்;

ஒ. உரிமம் பெற்ற பணி வழங்குநரின் தொழிற்பாடுகள் தடங்கலுறும்/ மூடப்படும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக பொருத்தமான பொறிமுறையொன்றினை உருவாக்குதல்.

6.3 செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை மேற்கொள்வதற்கான உரிமத்தினைப் பெறுவதற்காக விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் வேளையில், தொடர்பான கட்டுக்காப்பு வங்கி/ வங்கிகள், கட்டுக்காப்பு வங்கி 6.2இல் தரப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கும் அனைத்துப் பொறுப்புக்களை ஆற்றுவதற்கும் பொறுப்பேற்கின்ற கடிதமொன்றினையும் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

6.4 இவ்வழிகாட்டல்களுக்கு ஏதேனும் முரண்பாடுகள் இருப்பினும் கூட கட்டுக்காப்பு வங்கி கட்டுக்காப்பு கணக்கில், வட்டி உழைக்கின்ற கணக்கில் நிதியினை முதலீடு செய்ய அதிகாரமளிக்கலாம். எனினும், உரிமம் பெற்ற பணி வழங்குநர்கள் கட்டுக்காப்பு கணக்கிலுள்ள நிதியத்தினைப் பெறுவதற்கு அனுமதிக்கப்படக்கூடாது என்பதுடன் கட்டுக்காப்புக் கணக்கிலுள்ள நிதியினை எந்தவொரு நேரத்திலும் பிணையமாகவோ அல்லது பிணையாகவோ பயன்படுத்தக்கூடாது.

6.5 உரிமம் பெற்ற பணி வழங்குவோருக்காக கட்டுக்காப்பு வங்கி வட்டி உழைக்கும் கட்டுக்காப்பு கணக்கொன்றினை திறக்கலாம். எனினும், கட்டுக்காப்பு கணக்கினூடாக உழைக்கப்படும் வட்டி தனியான கணக்குகளில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

6.6 உரிமம் பெற்ற பணி வழங்குவோரும் கட்டுக்காப்பு வங்கியும் கட்டுக்காப்பு கணக்கிற்கான வரவுகள் மற்றும் பற்றுக்கள், செல்லிடக் கொடுப்பனவு முறைமையிலுள்ள இ-பணத்தின் ஒன்று சேர்ந்த தொகையில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு மட்டுமே செய்யப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

6.7 உரிமம் பெற்ற பணி வழங்குவோர் செயற்பாடற்ற இ-பணக் கணக்குகளை அடையாளங்கண்டு, கட்டுக்காப்புக் கணக்கிலிருந்து செயற்படாத வைப்புக்களின் தொகையினைத் தனியாக ஒதுக்கி இ-பண உடமையாளரின் தனிப்பட்ட விபரங்களுடன் கட்டுக்காப்பு வங்கிக்கு அறிக்கையிடுதல் வேண்டும். கட்டுக்காப்பு வங்கி/ வங்கிகள் அடையாளம் காணுதல், அறிக்கையிடுதல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பாக 2009 செத்தெம்பர் 02ஆம் நாள் விடுக்கப்பட்ட 2009ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கிணங்க அத்தகைய வைப்புக்கள் பற்றி அறிக்கையிடுதல் வேண்டும்.

6.8 உரிமம் பெற்ற பணி வழங்குவோரின் வங்கி முறிவு/ வியாபாரத்தினை மூடுதல் போன்ற சந்தர்ப்பங்களில் கட்டுக்காப்பு கணக்கிலுள்ள நிதியம் தடுத்து வைக்கப்படுவதனை கட்டுக்காப்பு வங்கி உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

6.9 கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்டு தொழிற்படுகின்ற உரிமம் பெற்ற பணி வழங்குவோர், உரிமம் பெற்ற பணி வழங்குநரின் வங்கி முறிவு/ வியாபாரத்தினை மூடிவிடுதல் போன்ற சந்தர்ப்பத்தில் கட்டுக்காப்பு கணக்கிலுள்ள பணத்தின் மீது கோரல்கள் எதனையும் மேற்கொள்ள முடியாது.

**7. வணிகர்களை நியமித்தல்**

7.1 உரிமம் பெற்ற பணி வழங்குவோர், செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகள் தொடர்பான அதிகாரமளிக்கப்பட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக வணிகர்களை நியமிக்கலாம்.

7.2 இ-பணக் கணக்குகளுக்கு நாணயப் பெறுமதிகளை கூட்டுகின்ற/ அல்லது அக்கணக்கிலிருந்து அப்பெறுமதியினைக் குறைக்கின்ற நோக்கங்களுக்காக உரிமம் பெற்ற பணி வழங்குவோரின் சார்பாக நிதிகளை ஏற்றுக்கொள்ளவும் காசுகளை கொடுப்பனவு செய்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வணிகருடன் உரிமம் பெற்ற பணி வழங்குவோர் உடன்படிக்கையொன்றினைச் செய்தல் வேண்டும். அனைத்துக் கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் அத்தகைய வணிகர்களினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் என்பன தொடர்பான உடன்படிக்கையில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

7.3 கட்டுக்காப்புக் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட முறைமையினைத் தொழிற்படுத்துகின்ற உரிமம் பெற்ற பணி வழங்குவோர், வணிகர்களை பதிவு செய்யும் போது வாடிக்கையாளர்களை நுணுக்கமாகக் கவனித்தலை மேற்கொள்ளப் பொறுப்புடையவராவர்.

7.4 இ-பணப் பணிகளை வழங்கும் பொழுது, உரிமம் பெற்ற பணி வழங்குவோர் வணிகத்துடன் தொடர்பான இடர்நேர்வுகளை அதாவது கொடுகடன் இடர்நேர்வு, தொழிற்பாட்டு இடர்நேர்வு, சட்ட இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, நன்மதிப்பு தொடர்பான இடர்நேர்வு மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியத்தின் பாதுகாப்பு தொடர்பான இடர்நேர்வுகளை கட்டுப்படுத்துவதற்கு, தணிப்பதற்கு அல்லது ஒழித்து விடுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 8. வாடிக்கையாளர் பாதுகாப்பு

8.1 உரிமம் பெற்ற பணி வழங்குவோர் இ-பணப் பணிகளின் பயன்பாட்டிற்கு ஏற்புடைத்தான நியதிகளையும் நிபந்தனைகளையும் வெப்தளம், சிற்றேடுகள் மற்றும் பதிவு செய்தல் படிவங்களில் பொருத்தமானதொரு முறையில் வழங்குதல் வேண்டும். இந்நியதிகளும் நிபந்தனைகளும் வாடிக்கையாளர் விரும்புகின்ற மூன்று மொழிகளில் எந்தவொரு மொழியிலும் (சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம்) வழங்கப்பட வேண்டுமென்பதுடன் மற்றைய விடயங்களுடன் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தலும் வேண்டும்.

அ. கொடுப்பனவுகளின் அதிகாரமளிக்கப்பட்ட வகைகள்;

ஆ. இ-பணப் பணிகள் தொடர்பாக உரிமம் பெற்ற பணி வழங்குவோர், இ-பண உடமையாளர் மற்றும் வணிகர்களின் உரிமைகளும் பொறுப்புக்களும்;

இ. ஏற்புடைத்தான அனைத்து கட்டணங்களும் விதிப்புக்களும்;

ஈ. இ-பணப் பணிகளின் நன்மைகள், ஊக்குவிப்புக்கள் மற்றும் வெகுமதிகள்;

உ. பிணக்குகளின் தீர்விற்கான ஏற்பாடுகள்;

ஊ. செல்லிடத் தொலைபேசிகள் தொலைந்து போதல் அல்லது திருடப்படுதல் பற்றி அறிவிப்பதற்கான நடைமுறை;

எ. கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கான நடைமுறை;

ஏ. வாடிக்கையாளர் பணிகள் பற்றி தொடர்பு இலக்கங்கள்.

8.2 வாடிக்கையாளர் விரும்பும் மூன்று மொழிகளில் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஏதேனுமொன்றில், பொருத்தமான தொடர்பூட்டல் ஊடகமொன்றினூடாக வாடிக்கையாளர்களுக்கு எழுத்து மூலமான முன்னறிவித்தலின்றி செல்லிடக் கொடுப்பனவு தொழிற்பாடுகள் மீதான நியதிகளையும் நிபந்தனைகளையும் மாற்றவோ திருத்தவோ கூடாது என்பதனை உரிமம் பெற்ற பணி வழங்குவோர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

8.3 உரிமம் பெற்ற பணி வழங்குவோர், வாடிக்கையாளர் தகவல்களின் இரகசியத்தன்மையினை பேண வேண்டியதுடன் அவர்களின் பணி வழங்குவோரும் அதேபோன்று வாடிக்கையாளரின் தகவல்களை இரகசியமாகப் பேணுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதும் வங்கிகளின் பொறுப்பாகும்.

8.4 இ-பணப் பணிகளுக்கான சந்தா செலுத்தும் இ-பணக் கணக்கு வைத்திருப்போருடனான உடன்படிக்கைகளுக்குப் புறம்பாக உரிமம் பெற்ற பணி வழங்குவோருடன் வர்த்தக ரீதியான உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இவ்வுடன்படிக்கைகளினூடாக ஒவ்வொரு தரப்பினரினதும் உரிமைகளும் கடப்பாடுகளும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டியதுடன் நீதிமன்ற சட்டத்தின்படி செல்லுபடியானதாகவும் நடைமுறைப்படுத்தப்படக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

8.5 இ-பணக் கணக்கு வைத்திருப்போருக்கு இ-பணக் கொடுப்பனவுப் பணிகளை வழங்கும் பொழுது, கையொப்பத்திற்கான பதிலீடாக, உண்மையான பயன்படுத்துநர்கள் தொடர்பில் பின்பற்றப்படுகின்ற பாதுகாப்பு நடைமுறைகளுக்கும் பொருந்தத்தக்க சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

## 9. வாடிக்கையாளர் கல்வி, மனக்குறை மற்றும் நிவர்த்தி செய்யும் பொறிமுறை

9.1 உரிமம் பெற்ற பணி வழங்குவோர், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்புப் பணிகளைப் பிரயோகித்தல், இயலாற்றல்தன்மை மற்றும் அவர்களின் தனிப்பட்ட பாதுகாப்புத் தகவல்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம் என்பனபற்றி அறிவூட்டுதல் முக்கியமானதாகும்.

9.2 பிணக்குகளைக் கொண்ட கொடுப்பனவுகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் தொலைந்தமை என்பனவற்றைக் கையாள்வதற்காக வங்கிகள் பொருத்தமான பிணக்குகளைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். உரிமம் பெற்ற பணி வழங்குவோர் வாடிக்கையாளரின் விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் அழைப்பு மையமொன்றினை நிறுவுதல் வேண்டும். பெறப்படும் ஒவ்வொரு முறைப்பாட்டிற்கும் தொடர்பு இலக்கம் வழங்கப்பட வேண்டியதுடன் 3 வேலைநாட்களுக்கிடையில் அவற்றிற்கு தீர்வு காணப்படவும் வேண்டும்.

9.3 பிணக்கிற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக வாடிக்கையாளர் ஒருவர் முறைப்பாடொன்றினைச் செய்யும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளரின் மனக்குறையினைப் போக்குவதற்கு உரிமம் பெற்ற பணி வழங்குவோர் தயாராக இருத்தல் வேண்டும். அத்தகைய வாடிக்கையாளரின் குறைகளை களைவதற்கான விதிப்புக்களை மீண்டும் பெற்றுக் கொள்ளும் நடைமுறைகளை வங்கிகள் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

## 10. பொதுவான விதிகளும் நிபந்தனைகளும்

10.1 கட்டுக்காப்புக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளை தொழிற்படுத்த எண்ணுகின்ற உரிமம் பெற்ற பணி வழங்குவோர் வாடிக்கையாளர்களுக்கு அத்தகைய பணிகளை வழங்குவதற்கு முன்னதாக அவர்களது தொடர்பான சபைகளின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். சபையின் ஒப்புதலானது, தொழிற்பாட்டின் அளவு, உரிமம் பெற்ற பணி வழங்குவோரினால் அனுமானிக்கப்படும் மோசடி இடர்நேர்வு மற்றும் அத்தகைய இடர்நேர்வுகளை தணிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வங்கியின் செயன்முறைகள் மற்றும் கொள்கைகள் என்பனவற்றை ஆவணப்படுத்தல் வேண்டும்.

10.2 உரிமம் பெற்ற பணிகளை வழங்குவோர் ஒவ்வொரு பணி வழங்கல் நிலையத்திலும் வணிகர்களுக்கு வழங்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரங்களையும் வாடிக்கையாளர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் எடுத்துக்காட்டும் இசைவு அறிவித்தலொன்றினையும் காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

10.3 பயன்படுத்துநரின் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு இத்தொழில் துறையிலுள்ள மிகச் சிறந்த நடைமுறைகளுடன் இணங்கிச் செல்லக்கூடிய முறைகளைப் பயன்படுத்த உரிமம் பெற்ற பணி வழங்குவோர் முயற்சித்தல் வேண்டும்.

10.4 வாடிக்கையாளர்கள் அவர்களது முன்னுரிமைக்கேற்ப கொடுப்பனவு எச்சரிக்கைகளையும் அறிவித்தல்களையும் பெறுவதற்கான இயலாற்றலை அவர்களும் வழங்குகின்ற கட்டுப்பாடுகளை உரிமம் பெற்ற பணி வழங்குவோர் வழங்குதல் வேண்டும்.

10.5 உரிமம் பெற்ற பணி வழங்குவோர், தொடர்பான இ-பணித் திட்டத்தின் தொழிற்பாட்டு இழப்புக்களைத் தணிப்பதற்குப் போதுமான தொழிற்பாட்டு ஒழுங்குகளை நிறுவுதல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டுமேயொழிய அவற்றிற்கு மட்டும் வரையறுக்கப்படக்கூடாது.

அ. எதிர்பாராதவற்றிற்கான ஒழுங்குகள் உட்பட இ-பணத்தின் பத்திரமான தன்மை, பாதுகாப்பு மற்றும் தொழிற்பாட்டு நம்பகத்தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள்;

ஆ. வேறு ஏதேனும் வியாபார நடவடிக்கைகள் நீங்கலாக இதன் இ-பண நடவடிக்கைகளுக்காக தனித்தனியான பதிவேடுகளையும் கணக்குகளையும் பேணுதல்;

இ. முறைமைகள் மற்றும் தனியாள் நிருவாகங்களுக்கான போதுமான உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கான ஏற்பாடுகள்.

ஈ. முறைமையானது வினைத்திறனுடனும் நம்பகத்தன்மையுடனும் பாதுகாப்பாகவும் தொழிற்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் உத்வேகம் மிக்க தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் ஒழுங்குகளுக்கான ஏற்பாடுகள்.

உ. இ-பணக் கொடுக்கல்வாங்கல்களுக்காக பொருத்தமான மீள் இணைக்கப்படுத்தல் செயன்முறை மற்றும் கணக்கீட்டு முறைகளின் நோக்கத்திற்காக போதுமான தகவல்களையும் துல்லியமான கணக்கீடுகளையும் பேணுதல்.

10.6 வங்கிகள் பாதுகாப்பு இடர்நேர்வுகளை தீவிரமான முறையில் அடையாளம் காணவும், மதிப்பிடவும் கண்காணிக்கவும் வங்கிகள் வீரியம் மிக்க பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைக்கிடுதல் வேண்டும். பாதுகாப்பு முறைமை பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அ. உணர்திறன்மிக்க தகவல்களின் இரகசியத்தன்மை - அனைத்து இரகசியமான தகவல்களும் பாதுகாப்பான முறையில் பேணப்பட வேண்டியதுடன் தகவல்களை அனுப்பும் போதும் சேமித்து வைக்கும் போதும் அதிகாரமளிக்கப்படாதவர்கள் இவற்றினைப் பாவிப்பதிலிருந்தும் அல்லது மாற்றங்கள் செய்வதிலிருந்தும் பாதுகாத்தல்;

ஆ. செய்முறைப்படுத்தப்பட்ட, களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட தகவல்களின் துல்லியமான தன்மை, நம்பத்தன்மை மற்றும் தகுதியான தன்மை;

இ. பயன்படுத்துநர்கள் மற்றும் முகவர்களைச் சரியான முறையில் உறுதிப்படுத்தல்;

ஈ. பயன்படுத்துநர் மற்றும் முகவர்களினால் ஆற்றப்பட்ட தொழிற்பாடுகளுக்குச் சரியான முறையில் அங்கீகாரமளித்தல்.

10.7 உரிமம் பெற்ற பணி வழங்குவோர் தரமான தடங்கலற்ற வியாபாரத்தினையும் அனர்த்த மீட்பு நடைமுறைகளையும் பேணுதல் வேண்டும். ஏதேனும் அனர்த்தங்கள் அல்லது தொழிற்பாட்டுத் தவறுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவற்றினால் வாடிக்கையாளர்களுக்கு எவ்வித வசதியீனமும் ஏற்படாமல் தொழிற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய இயலாற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். தடங்கலற்ற வியாபாரத்திட்டமும் அனர்த்த மீட்பு அமைவிடமும் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

**11. விளக்கம்**

சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இவ்வழிகாட்டல்களில்:

அ. "காசு - வெளிச்செல்லல்" என்பது இ-பணத்தினை உண்மையான பணத்திற்கு மாற்றி அதனை இ-பண உடமையாளர்களுக்கு வழங்குகின்ற செயன்முறை என்று பொருளாகும்;

ஆ. "வாடிக்கையாளரை நுணுக்கமாகக் கவனித்தல்" என்பது மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள், வாடிக்கையாளரின் அறிவிற்கும் வாடிக்கையாளரின் வியாபாரம் மற்றும் இடர்நேர்வு தோற்றப்பாடு போன்றவற்றுடனும் இசைந்து செல்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வாடிக்கையாளருடனான வியாபார உறவுமுறைக் காலம் முழுவதும் மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கலின் தற்போது இடம்பெற்றுவரும் நுண்ணாய்வு எனப் பொருள்படும்;

இ. "கட்டுக்காப்பு வங்கி" என்பது உரிமம் பெற்ற பணி வழங்குவோரின் சார்பில் கட்டுக்காப்புக் கணக்குகளைப் பேணும் வர்த்தக வங்கியென்று பொருள்படும்;

ஈ. "வாடிக்கையாளர்" என்பது இ-பண உடமையாளர் எனப் பொருள்படும்;

உ. "இ-பணம்" என்பது செல்லிடக் கொடுப்பனவுகளுக்காக செல்லிடச் சாதனங்களினூடாக பயன்படுத்தப்படுவதற்காக, தனிப்பட்டவர்களின் இ-பணக் கணக்குகளில் சேமிக்கப்பட்ட நாணயப் பெறுமதி எனப் பொருள்படும்;

ஊ. "இ-பணக் கணக்கு" என்பது கட்டுக்காப்பு கணக்கினை அடிப்படையாகக் கொண்ட முறைமையின் கீழ் உரிமம் பெற்ற பணி வழங்குநர்களினால் பேணப்படுகின்ற தனிப்பட்ட கணக்குகள் எனப் பொருள்படும்;

எ. "உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் நடைமுறை" என்பது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கிணங்க பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை எனப் பொருள்படும்;

ஏ. "உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்" என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கி என்று பொருள்படும்;

ஐ. "உரிமம் பெற்ற பணி வழங்குவோர்" என்பது 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கக் கொடுப்பனவு அட்டைப் பணி வழங்குவோர் ஒழுங்குவிதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட செல்லிடக் கொடுப்பனவுப் பணி வழங்குபவர் எனப் பொருள்படும்;

ஒ. "வணிர்கள்" என்பது செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்குவதற்காக உரிமம் பெற்ற பணி வழங்குபவரினால் நியமிக்கப்பட்ட நிறுவனங்கள்/ ஆட்கள் எனப் பொருள்படும்;

ஓ. "செல்லிடக் கொடுப்பனவுகள்" என்பது செல்லிடத் தொலைபேசிகளின் பயன்பாட்டினூடாக பரிவர்த்தனை செய்யப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் கொடுக்கல்வாங்கல் எனப் பொருள்படும்;

ஔ. "பணிகள் வழங்குவோர்" என்பது செல்லிடக் கொடுப்பனவு தீர்வுகாணல்களை வழங்குவோர் மற்றும் தொடர்பான செல்லிட வலையமைப்புத் தொழிற்பாட்டாளர்கள்;

க. "பணத்தினைப் போடுதல்" என்பது வணிகர்களுக்கு உண்மையான பணத்திற்கு சமமான தொகையினை கொடுப்பனவு செய்வதன் மூலம் இ-பணத்தினைக் கொள்வனவு செய்தல் எனப் பொருள்படும்.

ஒப்பம்
பி. டி. ஜே. பர்னாந்து
**துணை ஆளுநர்**
2011 மாச்சு 09

**இணைப்பு I**

## கொடுப்பனவுப் பணிகளை அடிப்படையாகக் கொண்ட செல்லிடத் தொலைபேசிப் பணி வழங்குவோருக்கான தொழில்நுட்ப வழிகாட்டல்கள்

### 1. தொழில்நுட்பவியல் தடைகள், பாதுகாப்புப் பிரச்சனைகள், தத்துவங்கள் மற்றும் நடைமுறைகள்

குறிப்பிட்ட தொழில்நுட்பவியல் தடைகள் மற்றும் கம்பியில்லா தொழில்நுட்பவியலின் இயல்பான பண்புகள் என்பனவற்றின் காரணமாக செல்லிட பயன்படுத்துநர்கள்/ வாடிக்கையாளர்கள் செல்லிடக் கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் பாதுகாப்புப் பிரச்சனைகளையும் மேலும் தரம் குறைந்த பணிகளையும் எதிர்நோக்குகின்றனர். வாடிக்கையாளர்களின் மீதும் நிதியியல் முறைமைகளின் மீதும் ஏற்படக்கூடிய ஏதேனும் எதிர்மாறான தாக்கத்தினைத் தவிர்ப்பதற்கு இவற்றினைக் குறைப்பது அவசியமாகும். ஆகவே வங்கிகள் இடர்நேர்வுகளையும் அச்சுறுத்தலையும் கட்டுப்படுத்தக்கூடிய விதத்தில் போதுமான பாதுகாப்பு வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டுள்ளதையும் நம்பகமான முறைமைகள் நிறுவப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்த வேண்டியதுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள வலையமைப்பினையும் பணிகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு ஏற்பாடுகளையும் கருத்திற் கொள்ளாது மிக உயர்தரப் பணிகளை மட்டும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இயக்கவியல் சார்ந்த தன்மை, கம்பியில்லா சூழலில் காணப்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தலின் அளவு என்பனவற்றைக் கருத்திற் கொள்கையில், வங்கிகள் புதிய சாதனங்கள் அல்லது பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவர்களது முறைமைகள் தொடர்பான பாதுகாப்பு பாதிக்கப்படும் தன்மை பற்றிய சுதந்திரமான மதிப்பீடொன்றினையும் மீளாய்வினையும் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்வது கட்டாயமானதாகும். அதன் பின்னர் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கெதிராக போதுமான தணிப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கு விடயங்களை இற்றைப்படுத்துவதும் மீளாய்வு செய்வதும் கிரமமான முறையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய மீளாய்வுகளை வசதிப்படுத்துவதற்கு பாதுகாப்பு ரீதியில் வடிவமைக்கப்பட்ட தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டு இற்றைப்படுத்தப்படுவது அவசியமானதாகும். தொடர்புபட்டிருக்கும் பாதுகாப்பு மற்றும் இடர்நேர்வுகளின் நியதிகளிலும் பொருத்தமான பணிகளை வழங்குதல் மற்றும் தொடர்புபட்டுள்ள இடர்நேர்வுகளைத் தளர்த்தல் என்பனவற்றின் பொருட்டு வங்கிகள் பணி வழங்கும் வழிகளை மதிப்பீடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

#### 1.1 உறுதிப்படுத்துதல் மற்றும் மறுதலிக்காமை

உறுதிப்படுத்தல் மற்றும் மறுதலிக்காமையை உறுதிப்படுத்துவது தொடர்பாகவும் பின்வரும் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

அ. வங்கிப் பணிகளுக்காக வாடிக்கையாளர்கள் அவர்களது கடவுச் சொற்களை அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படும் பொழுது அவை பெறப்படும் பொழுதே உடனடியாக அவற்றை இரகசியக் குறியீட்டு முறைப்படுத்தல் வேண்டும். செல்லிடத்திரையில் தெளிவான உரைகள் காட்சிப்படுத்தப்படும் விதத்தில் உணர்திறன் கொண்ட தரவுகள் எதுவும் அனுமதிக்கப்படக்கூடாது.

ஆ. பொருத்தமானவிடத்து கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு ஒன்றிற்கும் மேற்பட்ட காரணிகளினை அடிப்படையாகக் கொண்ட உறுதிப்படுத்தல் முறைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

இ. வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்ட காலப்பகுதி முழுவதிலும் இரகசியக் குறியீட்டிலும் உறுதிப்படுத்தப்பட்ட தன்மைகளும் முழுமையாக பேணப்பட்டமையை உறுதிப்படுத்துதல்.

ஈ. பழுதடைந்த அமர்வுகள் திருத்தப்பட்டு அவை மீள ஆரம்பிக்கப்பட்ட பின்னர் உறுதிப்படுத்தல் செயன்முறை மீண்டும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

உ. நிறைவடையாத அல்லது முதிராத கொடுக்கல்வாங்கல்கள் உட்பட அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களினதும் விபரங்கள் பதியப்பட வேண்டியதுடன் அத்தகைய பதிவுகள் பாதுகாப்பு வரம்பு மீறல்களை ஏற்படுத்தக்கூடிய அசாதாரண தன்மை அல்லது பிறழ்வுகளின் பொருட்டு நாளாந்தம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

#### 1.2 தனிப்பட்ட அடையாள இலக்கத்தின் பாதுகாப்பு

செல்லிடக் கொடுப்பனவுகளை வசதிப்படுத்தும் விதத்தில் உரிமம் பெற்ற பணி வழங்குவோர் புதிய செல்லிடத் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அடையாள இலக்கங்கள் உரிமம் பெற்ற பணி வழங்குநரினால் வழங்கப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். செல்லிடக் கொடுப்பனவுகளுடன் தொடர்புபட்டுள்ள உரிமம் பெற்ற பணி வழங்குவோரும் பல்வேறுபட்ட பணி வழங்குவோரும் செல்லிடத் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை வழங்கல் மற்றும் பயன்பாடு தொடர்பாக இத்தொழில் துறையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்புத் தத்துவங்களுக்கும் நடைமுறைகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

செல்லிடத்திற்கு அணித்தான/ தொடர்புகளில்லாத கொடுப்பனவுகளை அடிப்படையாகக் கொண்ட செல்லிடமல்லாத வலையமைப்புத் தொழிற்பாட்டாளர்களைப் பொறுத்த வரையில் செல்லிடத் தனிப்பட்ட அடையாள இலக்கத்துடன் சேர்த்து இரண்டாந்தரக் காரணி உறுதிப்படுத்தல் பயன்படுத்தப்படல் வேண்டும். இரண்டாந்தரக் காரணி உறுதிப்படுத்தலாக செல்லிடத் தொலைபேசி இலக்கத்தினைப் பயன்படுத்துவதிலும் பார்க்க அட்டை இலக்கத்தினை அல்லது ஒரு தடவை மட்டுமான கடவுச் சொற்களினை பயன்படுத்துவதற்கு யோசனை தெரிவிக்கப்படுகிறது.

#### 1.3 இரகசியக் குறியீட்டியல் திறவுகோல் முகாமைத்துவம்

இரகசியக் குறியீட்டு முறையினையும் இலக்கமுறைச் சான்றிதழ்களையும் காத்தரமான முறையில் பயன்படுத்துவதற்கு பொருத்தமான முக்கிய முகாமைத்துவம் இன்றியமையாததாகும். இரகசியக் குறியீட்டு திறவுகோல்களை உருவாக்குவதற்கும் பாதுகாப்பான முறையில் அவற்றை

களஞ்சியப்படுத்தி வைக்கவும், விநியோகிக்கவும், அகற்றவும், நீக்கிவிடவும் அல்லது அழித்துவிடவும் வங்கிகள் போதுமான கட்டுப்பாட்டு வழிமுறைகளையும் நடைமுறைகளையும் நிறுவிக் கொள்வது அவசியமாகும். தொடர்பான பாதுகாப்பு நடைமுறைகளின் தொடர்பில் உயர்ந்தளவு நம்பகத்தன்மையினைப் பேணுவதற்கு காலத்திற்குக் காலம் கணக்காய்வுகளையும் இணங்கியொழுகும் தன்மைகளினையும் மீளாய்வு செய்து கொள்ளுதல் வேண்டும்.

### 1.4 வலையமைப்பு மற்றும் முறைமையின் பாதுகாப்பு

வலையமைப்புத் தொடர்பூட்டல் மற்றும் முறைமைப் பாதுகாப்புத் தொடர்பாக பின்வரும் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

அ. பரிமாற்றத்தின் போது வங்கியினதும் வாடிக்கையாளர்களினதும் உணர்திறன் மற்றும் இரகசியத் தகவல்களைப் பாதுகாப்பதற்காக வலுவான இரகசியத்தன்மை வாய்ந்த குறிமுறையாக்க நியமம் பயன்படுத்தப்படல் வேண்டும்.

ஆ. பொருத்தமான தகவல் பாதுகாப்பு முறைமைகளையும் தற்செயலான நிகழ்வுகளுக்குப் பதிலிறுத்தும் நடைமுறைகளையும் நிறுவுதல்.

இ. தொடர்பான முறைமைகள் மற்றும் வலையமைப்புகளின் இடர்நேர்வு முகாமைத்துவ பகுப்பாய்வினையும் பாதுகாப்பு பாதிக்கப்படக்கூடிய தன்மை பற்றிய மதிப்பீடுகளையும் காலத்திற்குக் காலம் நடத்துதல்

ஈ. மேற்கொள்ளப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவப் பகுப்பாய்வுகள் மற்றும் பாதிக்கப்படக் கூடிய தன்மை பற்றிய மதிப்பீடு என்பனவற்றின் அடிப்படையில் செல்லிடக் கொடுப்பனவுகள் மற்றும் கொடுப்பனவு முறைமைகளில் பயன்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகள், வழிகாட்டல்கள், முறைகள் மற்றும் வழிமுறைகள் என்பனவற்றின் இற்றைப்படுத்தப்பட்ட ஆவணங்களை சரியாகவும் கிரமமாகவும் பேணுதல்.

உ. அதிகாரமின்றி முறைமைகளை அடைதல், ஒழுங்கற்ற தலையீடுகள் என்பனவற்றிலிருந்து முறைமை நுழைவாயில்கள், வலையமைப்புச் சாதனங்கள், சேமிப்பிகள், வழங்கல் கணனிகள் மற்றும் ஏனைய வன்பொருள்/ மென்பொருள் என்பனவற்றைப் பாதுகாப்பதற்காக பொருத்தமான பௌதீக பாதுகாப்பு முறைகளை நடைமுறைக்கிடல். வங்கியினதும் பணி வழங்குவோரினதும் தரவு மையங்கள் கம்பியுடைய மற்றும் கம்பியற்ற தரவு வலையமைப்புப் பாதுகாப்புப் பொறிமுறையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### 1.5 கொடுக்கல்வாங்கல் பதிவுகள்

செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள், ஏதேனும் பிணக்குகள் அல்லது தவறுகள் நிகழும் சந்தர்ப்பத்தில் மீள்கட்டமைக்கப்படுவதற்கான கணக்காய்வு பரீட்சிப்பு செயன்முறைகளை இயலச் செய்வதற்காக விபரமான கொடுக்கல்வாங்கல் பதிவுகளை பேணுதல் வேண்டும். பதிவுகளை பேணி வைத்திருக்கும் காலம் ஆறு வருடங்களாக இருத்தல் வேண்டும். அத்தகைய தகவல்களை ஏதேனும் இழப்புக்கள் அல்லது சேதங்களிலிருந்து பாதுகாக்கப்படுவதனை பணி வழங்குவோர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்படாத மாற்றியமைத்தல்கள் அல்லது அழித்துவிடல்களிலிருந்து தகவல்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைக்கிடப்படல் வேண்டும்.

### 1.6 தரவின் இரகசியத்தன்மையும் ஒருங்கிணைப்பும்

தரவின் இரகசியத்தன்மை மற்றும் ஒருங்கிணைப்பு தொடர்பாக பின்வரும் வழிகாட்டல்கள் பின்பற்றப்படல் வேண்டும்.

அ. பேணும் காலம் முழுவதும் தரவுப் பதிவு சாதனங்களிலிருந்தான அத்தகைய தரவுகளை பாதிப்பின்றி முழுமையாக பேணப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் உணர்திறன் வாடிக்கையாளர்களின் பிரயோகமொன்றை ஆரம்பித்து அது முடியும் வரையிலான இரகசியக் குறியீட்டு விபரங்களும் தனிப்பட்ட அடையாள இலக்கம் போன்ற உறுதிப்படுத்தல் தரவுகளும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

ஆ. வாடிக்கையாளர்கள் சிறந்த கம்பியில்லா பணிகளைக் கொண்ட பிரதேசத்திலிருந்து அத்தகைய பணிகள் குறைந்தளவில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களுக்கு செல்லும் பொழுது உள்ளக அமர்வு நடவடிக்கைகளின் தாமதங்கள் அல்லது அமர்வு பழுதடைதல் போன்றவற்றின் விளைவாக இரட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் ஏற்படுவதனை தவிர்ப்பதற்காக கம்பியில்லா பிரயோகங்களுக்கான மென்பொருட்கள் போதுமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

இ. உரிமம் பெற்ற பணி வழங்குவோரும் ஏனைய பணி வழங்குவோரும் உடனடியாக மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அவற்றின் இயலாற்றலை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் போதுமான பாதுகாப்பு, வழிமுறைகள், வைரஸ் பாதுகாப்பு இடை நுழைவுகளைக் கண்டுபிடித்தல்/ முறைகளை தடை செய்தல், கண்காணிப்பு, கட்டுப்பாட்டு நடைமுறைகள் என்பனவற்றை நிறுவிக் கொள்ளுதல் வேண்டும். முறைமைகளின் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் முறைமைகள், கோவைகள் மற்றும் குறியீடுகள் மீதான ஒருங்கிணைக்கப்பட்ட பரிசோதனைகளையும் நடைமுறைக்கிடுதல் வேண்டும். அத்தகைய முறைமைகளிலுள்ள அனைத்து மாற்றங்களும் சரியான முறையில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

### 1.7 முறைமைகளின் கிடைப்பனவும் மீண்டு வரக்கூடிய தன்மையும்

முறைமை பழுதடைந்து போவதன் காரணமாக பணிகளுக்கு ஏற்படக்கூடிய தடங்கல்களை குறைப்பதற்காக நடைமுறையிலுள்ள பொருத்தமான மீண்டு வரும் தன்மை மற்றும் பின்னூட்டல் திட்டங்களை உரிமம் பெற்ற பணி வழங்குவோர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய திட்டங்கள் விரைவாக மீண்டு வரும் தன்மை மற்றும் உயர்ந்த முறைமைக் கிடைப்பனவின் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவு என்பனவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் பழுதுகளுக்கு தனியொரு முனையத்திலான திருத்தங்களை வழங்குதல் வேண்டும். இயலளவுப் பிரச்சனைகளின் காரணமாக ஏற்படும் ஏதேனும் பணிகள் தரம் குறைந்து வருவதனை உரிய நேரத்தில் திருத்திக் கொள்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் செல்லிடப் போக்குவரத்தும் முறைமை இயலளவும் மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

### 2. ஏனைய தொடர்பான வழிகாட்டல்கள்

உரிமம் பெற்ற பணி வழங்குவோர் பின்வருவனவற்றையும் மனதில் கொள்ளல் வேண்டும்.

### 2.1 பாதுகாப்புடன் தொடர்புபட்ட நடைமுறைகள்

அ. உரிமம் பெற்ற பணி வழங்குவோரின் பக்கத்தில் அல்லது பணி வழங்குவோரின் பக்கத்தில், ஏதேனுமொன்றில் செல்லிடக் கொடுப்பனவுப் பணியாளர்கள் ஒவ்வொரு வங்கியினதும் பாதுகாப்பு வழிகாட்டல்களுடன் இணங்கியொழுகுவதனை சரியான முறையில் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும், வங்கிகள் அத்தகைய பாதுகாப்பு வழிகாட்டல்கள் முழுமையாக இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக செல்லிடக் கொடுப்பனவிற்காகப் பயன்படுத்தப்படும் அனைத்து முறைமைகளின் மீதும் கிரமமான பாதுகாப்பு கணக்காய்வுகளை நடத்துதல் வேண்டும்.

ஆ. தொலைபேசி இலக்கத்தினை அடையாள இலக்கமாகக் கொண்டிராத வழிப்படுத்தல்களுக்காக இணையத்தள வங்கித்தொழில் அடையாள அட்டையிலிருந்து வேறுபடுகின்ற அடையாள அட்டைக்கான தனியான பதிவும் கடவுச் சொற்களும் வழங்கப்பட வேண்டும் என விதந்துரைக்கப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியினால் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தாலொழிய உரிமம் பெற்ற பணி வழங்குவோர் அவர்களின் சொந்த இடர்நேர்வுத் தன்மைகளைப் பொறுத்து கொடுக்கல்வாங்கல் வரையறை (கொடுக்கல்வாங்கலொன்றிற்கு, நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம்) கொடுக்கல்வாங்கல் வேகத்தின் வரையான, மோசடிப் பரிசோதனை, பணம் தூய்தாக்கலுக்கெதிரான பரிசோதனை போன்ற பொருத்தமான இடர்நேர்வுத் தணிப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2.2 **தொலைபேசி தொலைந்து போதல்/ களவாடப்படுதல்களிலிருந்து தோன்றக் கூடிய நிதியியல் இழப்புக்களைக் குறைத்தல்**

அ. அண்மையிலுள்ள கள தொடர்பூட்டலினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளைப் பயன்படுத்துகின்ற வேளையில் குற்றவியல் நடவடிக்கையினை தடுப்பதற்காக பாதுகாப்பு வழிமுறைகளைப் பலப்படுத்துதல். செல்லிடத் தொலைபேசிகள் பற்று/ வரவு மற்றும் முன்கூட்டிய சேமிப்புப் பெறுமதி அட்டை போன்றவற்றை ஒத்தவிதத்தில் பயன்படுத்தப்படுவதனை அனுமதிக்கின்ற புதிய செல்லிடத் தொலைபேசி தொழில்நுட்பங்கள் தவறாகப் பயன்படுத்தப்படும் குற்றவியல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்து ஆர்வலர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

ஆ. குறித்துரைக்கப்பட்ட பெறுமதிக்கு மேலாக - இலங்கை மத்திய வங்கியினால் வரையறுக்கப்பட்ட உயர்ந்தபட்ச தொடர்புகளில்லாத கொடுப்பனவு பெறுமதிக்கு மேலான எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களுமான தனிப்பட்ட அடையாள இலக்க சரிபார்ப்பு கோரிக்கையானது தனிப்பட்ட அடையாள இலக்கம் போன்ற மேலதிக பாதுகாப்பு வழிமுறைகள்/ சரி பார்ப்புக்களைத் தேவைப்படுத்தும். இது, குறிப்பிட்ட எண்ணிக்கையான குறைந்த பெறுமதி கொண்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்ந்து விரைவான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்தும் ஏற்புடைத்ததாக இருக்கும்.

இ. கொடுப்பனவு தொழில்நுட்பத்துடன் கூடிய கருவியுடன் செல்லிடத் தொலைபேசி தொலைந்துவிட்டது அல்லது களவாடப்பட்டுவிட்டது என அறிவிக்கப்பட்டதும் தொடர்புகளற்ற கொடுப்பனவுத் தொழிற்பாடுகள் சிம் அட்டை மற்றும் தொலைபேசி என்பன உடனடியாக முடக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். வேறு ஏதேனும் நிறுவப்பட்ட நிதியியல் பிரயோகங்களும் கூட முடக்கப்பட வேண்டும்.

2.3 **வாடிக்கையாளர் அறிவூட்டல்**

அ. வாடிக்கையாளரின் செல்லிடத் தொலைபேசிகளில் தனிப்பட்ட அடையாள இலக்கக் கோரிக்கை செயற்படுத்தப்பட்டமையினை உறுதிப்படுத்துதல் புதிய செல்லிடத் தொலைபேசிக் கொள்வனவு செய்யப்பட்டதும் தனிப்பட்ட அடையாள இலக்கக் குறியீடு மாற்றப்பட வேண்டும்.

ஆ. தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை எவ்வாறு பாதுகாப்பாக பேண வேண்டுமென்பது பற்றியும் அவற்றை இன்னொரு தரப்பினருக்கு காட்டக்கூடாது என்பது பற்றியும் வாடிக்கையாளருக்கு அறிவூட்டுதல் வேண்டும்.

இ. சில செல்லிடத் தொலைபேசி அலகுகளில் பதிவு செய்யப்படும் தனிப்பட்ட அடையாள இலக்கங்கள் பதிவு செய்யப்பட்டதும் மீள் சுழற்சிப் பட்டியலை மீள அழைக்கமுடியும். முன்னைய சுழற்சி இலக்கங்களை அணுகுவதன் மூலம் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினைக் கண்டறிவதனை தடுப்பதற்காக தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை உடனடியாக தொலைபேசியின் நினைவூட்டலிலிருந்து அழித்துவிடுமாறு வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்படல் வேண்டும்.

ஈ. வெவ்வேறுபட்ட வழங்கல் வழிகள் அல்லது முறைமைகள் அவை ஒவ்வொன்றுடனும் இணைந்துள்ள பாதுகாப்பு இடர்நேர்வுகளைப் பொறுத்து வெவ்வேறுபட்ட பாதுகாப்பு மட்டங்களையும் சிக்கல்களையும் கொண்டிருப்பதனால் வாடிக்கையாளர்களை ஒரே தனிப்பட்ட அடையாள இலக்கங்களை மற்றையவற்றிற்குப் பயன்படுத்த வேண்டாமென அறிவுறுத்தப்படுகின்றனர்.

உ. வாடிக்கையாளர்கள் செல்லிடத் தொலைபேசிகளில் கடவுச் சொற்கள், கொடுகடன் அட்டை, வங்கி அட்டையின் தனிப்பட்ட அடையாள இலக்கம் போன்ற இரகசியத் தகவல்களை சேமிப்பதனை தவிர்ப்பதனை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், வாடிக்கையாளர் தொலைபேசியை விற்றலும் அல்லது அதனை பயன்படுத்தாமல் விட்டதும் அத்தகைய தகவல்களை அழித்துவிடுமாறு வாடிக்கையாளர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஊ. செல்லிடத் தொலைபேசி தொலைந்துவிடும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்கள் செல்லிடத் தொலைபேசியின் பன்னாட்டு செல்லிடச் சாதன அடையாளக் குறியீட்டினை தனியான இடமொன்றில் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். செல்லிட வலையமைப்பு தொழிற்பாட்டாளர்களுக்கு தொலைபேசியின் பன்னாட்டு செல்லிடச் சாதன அடையாளக் குறியீட்டினை அறிவிப்பதன் மூலம் வாடிக்கையாளர்கள் அவர்களின் தொலைந்த/ களவாடப்பட்ட செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தி அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகளை மேற்கொள்ளப்படுவதனை தடுக்கமுடியும்.

எ. வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்கள் செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் மற்றும் கொடுப்பனவுப் பணிகளை அடைவதற்கு அவர்களது சொந்த செல்லிடத் தொலைபேசிகளை கை முறையினால் அமைவடிவாக்குமாறு கேட்டுக் கொள்ளுமிடத்து வங்கிகள் தெளிவான அமைவடிவாக்கும் அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும்.

ஏ. செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் மற்றும் கொடுப்பனவுப் பணிகளைப் பயன்படுத்தும் பொழுது மேலதிக எச்சரிக்கையுடன் இருக்குமாறு வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஐ. எந்தவொரு கொடுப்பனவினையும் செய்ய முன்னர், நிறுவப்பட்டுள்ள தொடர்புகளின் உறுதிப்படுத்தல்களை பாதுகாப்பான முறையில் பரிசோதிப்பதற்கு வாடிக்கையாளர்களை இயலச் செய்யும் விதத்தில் அவர்களுக்கு அறிவூட்டுதல்.

ஒ. பிணக்குகளைக் கையாளுதல், அறிக்கையிடும் நடைமுறைகள் மற்றும் தீர்வு காணப்படுவதற்கு எடுக்கப்படும் நேரம் என்பன பற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவுரை வழங்குதல்.

ஓ. வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை மேற்கொள்கையில் சிக்கலான தன்மைகள், சட்ட ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியில் புரியாத விதத்தில் பேசுதல் என்பனவற்றை தவிர்த்துக் கொள்ளுதல்.

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

2011 மாச்சு 16

**சுற்றிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/02/2011**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

## லங்கா செட்டில் முறைமை விதிகளுக்கான திருத்தங்கள் - லங்கா செட்டிலுள்ள முறைமை ஆர்ரிஜிஎஸ்/ எஸ்எஸ்எஸ்எஸ் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களின் திருத்தம்

லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பார்களுக்கும் லங்கா செட்டில் முறைமை விதிகளின் தொகுதி 4இன் 8ஆம் விதியிலுள்ளவாறும் விஞ்ஞாபன உடன்படிக்கையின் 4ஆம் கிளை வாசகத்தின் படியும் 2011 மே 2ஆம் நாளிலிருந்து கொடுக்கல்வாங்கல் கட்டணத்தினை இலங்கை ரூபா 420/- இலிருந்து இலங்கை ரூபா 450/- இற்கு அதிகரிக்கும் விதத்தில் முறைமை விதிகளுக்கான இணைப்பு ஆ, இங்கேயுள்ள அட்டவணையிலுள்ளவாறு இத்தால் திருத்தப்படுகின்றமை பற்றி இத்தால் அறியத்தரப்படுகின்றது.

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

எஸ் எஸ் ரத்நாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**இணைப்பு ஆ (2011 மாச்சு 16ஆம் நாள் திருத்தப்பட்டது)**

## லங்கா செட்டில் கட்டணம் மற்றும் விதிப்புக்களின் அட்டவணை

இலங்கை மத்திய வங்கி, 2011 மே 2ஆம் நாளிலிருந்து அனைத்து லங்கா செட்டில் பங்கேற்பாளர்களிடமிருந்தும் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு அனைத்துமுட்பட கட்டணமாக இலங்கை ரூ.450 இனை விதிக்கும்.

கட்டணம் மற்றும் விதிப்புக்களின் நோக்கத்திற்காக “கொடுக்கல்வாங்கல்” என்பது பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

(1) பின்வரும் செய்திகளைப் பயன்படுத்துவதன் மூலமாக லங்கா செட்டிலிலுள்ள பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் அவர்களது சொந்த கணக்குகளுக்கு தீர்ப்பனவு செய்யப்படும் எந்த ஒன்றிற்கும்

- அ) எம்ரி 102 - பல் வாடிக்கையாளர் வரவு மாற்றல்
- ஆ) எம்ரி 103 - தனியொரு வாடிக்கையாளர் வரவு மாற்றல்
- இ) எம்ரி 202 - பொதுவான நிதியியல் நிறுவனங்களின் மாற்றல்
- ஈ) எம்ரி 205 - நிதியியல் நிறுவனங்களின் மாற்றல்களை நிறைவேற்றுதல்
- உ) எம்ரி 541 - கொடுப்பனவிற்கு எதிராக பெறப்படுபவை

(2) எம்ரி 540 - இலவசமாக செய்திகளைப் பெறுதல் - இதனைப் பயன்படுத்துவதனூடாக லங்கா செட்டிலில் பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பனவு செய்யப்பட்ட பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் கட்டணங்களுக்குப் புறம்பாக, பங்கேற்பாளர்கள் சுவிப்ற் தகவல் அனுப்புவதுடன் தொடர்பான கட்டணங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும். இவை சுவிப்றினால் தனியான முறையில் பட்டியற்படுத்தப்படவுள்ளதுடன் பங்கேற்பாளர்களினால் சுவிப்றக்கு நேரடியாகச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

2011 ஏப்பிறல் 7

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/03/2011**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## 2011 ஏப்பிறல் 15ஆம் திகதியை அரச மற்றும் சிறப்பு வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தல்

அரசாங்கம் 2011 ஏப்பிறல் 15ஆம் திகதியினை (வெள்ளி) அரச மற்றும் சிறப்பு வங்கி விடுமுறையாக பிரகடனப்படுத்தியிருப்பதன் காரணமாக அன்று லங்கா செட்டில் முறைமை வியாபாரத்திற்காக திறக்கப்படமாட்டாது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றோம். 2011 ஏப்பிறல் 15ஆம் திகதியை பெறுமதித் திகதியாகக் கொண்ட எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களையும் முறைமையில் பதிவு செய்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்துப் பங்கேற்பாளர்களும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 2011 ஏப்பிறல் 15ஆம் திகதியை பெறுமதித் திகதியாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களை நீங்கள் ஏற்கனவே பதிவு செய்திருப்பின் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை லங்கா செட்டிலின் அடுத்த வேலை நாளின் பெறுமதித் திகதிக்கு மீள பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

எஸ் எஸ் ரத்நாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

2011 மே 24

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/04/2011**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**2011 மே 27ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் தொழிற்பாடுகள்**

**2011 மே 27ஆம் நாளன்று (வெள்ளிக்கிழமை)** இலங்கை மத்திய வங்கி லங்கா செட்டிலின் வழமையான நாளாந்தத் தொழிற்பாடுகள் அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளப்படுமென்பதனை தங்களுக்கு அறிவித்துக் கொள்ளுகின்றது. எனினும், பங்கேற்பாளர்களுக்கான தொழில்நுட்ப மாற்றங்கள் எதுவும் இருக்காது என்பதனால் வழமையான முறையில் உங்கள் முறைமைகளை தொழிற்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இது விடயமாக இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான அலுவலர்களை 2011 மே 27ஆம் நாளன்று பின்வரும் வழிமுறைகளூடாக தொடர்பு கொள்ளமுடியும்.

தொலைபேசி : 2477858, 2477832, 4858876, 4858879

தொலைநகல் : 2866184, 2873244

மின்னஞ்சல் : மின்னஞ்சல் முகவரியில் மாற்றமில்லை

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

எஸ் எஸ் ரத்நாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

2011 மே 19

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/05/2011**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**வரையறுக்கப்பட்ட கொழும்பு யூனியன் வங்கியின் பெயர் மாற்றம்**

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட கொழும்பு யூனியன் வங்கியின் பெயர் கொழும்பு யூனியன் வங்கி பிஎல்சி என மாற்றப்பட்டுள்ளது.

இதற்கமைய லங்கா செட்டில் முறைமையின் நிலையான தரவு 2011 மே 23ஆம் நாளிலிருந்து கீழே காட்டப்பட்டவாறு மாற்றப்படவுள்ளது.

**பங்கேற்கும் நிறுவனத்தின் பெயர்:** கொழும்பு யூனியன் வங்கி பிஎல்சி

கொழும்பு யூனியன் வங்கி பிஎல்சி இனது கணக்கின் பெயரும் சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடும் மாற்றமின்றிக் காணப்படும்.

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

எஸ் எஸ் ரத்நாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

2011 யூலை 29

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/06/2011**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**அமானா வங்கி லிமிடெட்டினை லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராக நியமித்தல்**

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ், இல. 480, காலி வீதி, கொழும்பு 3இல் அமைந்துள்ள அமானா வங்கி லிமிடெட்டிற்கு உள்நாட்டு வங்கித்தொழில் வியாபாரங்களையும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரங்களையும் மேற்கொள்வதற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இது 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் நேரடிப் பங்கேற்பாளராகவும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளராகவும் நியமிக்கப்பட்டிருப்பதுடன் லங்கா செட்டில் முறைமையின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை என்பனவற்றின் பங்கேற்பாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

அமானா வங்கி லிமிடெட்டின் சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கணக்கு இலக்கம் மற்றும் தொடர்பு விபரங்கள் என்பன கீழே தரப்பட்டுள்ளன:

சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு : AMNALKLXXXX

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கு : AMNALKLXXXX010004427

**தொடர்பு விபரங்கள்:**

| | |
|---|---|
| முதன்மை நிறைவேற்று அலுவலர் | : திரு. எம். ஓ பைசால் சாலி |
| தொலைபேசி | : +94-11-4710087 |
| தொலைநகல் | : +94-11-2574419 |
| மின்னஞ்சல் | : fsalieh@amana.lk |

அமானா வங்கி லிமிடெட் அதன் முதனிலை பங்கேற்பாளர் வெளிநிலை அடையாள அட்டை AMNALKLXXXX இனைப் பயன்படுத்தி 2011 ஓகத்து 01ஆம் நாளிலிருந்து லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும்.

எஸ் எஸ் ரத்நாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2011 செத்தெம்பர் 19

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/07/2011**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

### வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட்டினை லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராக நியமித்தல்

இல. 32 காசல் வீதி, கொழும்பு 8இல் அமைந்துள்ள வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் அரச பிணையங்களின் முதனிலை வணிகராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இது 2011 செத்தெம்பர் 21 இலிருந்து லங்கா செட்டில் முறைமையின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை என்பனவற்றின் பங்கேற்பாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட்டின் சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கணக்கு இலக்கம் மற்றும் தொடர்பு விபரங்கள் என்பன கீழே தரப்பட்டுள்ளன:

சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு : WTEYLKLXXXX

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கு : WTEYLKLXXXX010004564

**தொடர்பு விபரங்கள்:**

| | |
|---|---|
| முதன்மை நிறைவேற்று அலுவலர் | : திரு. டி. எச். பீ. றணவன |
| தொலைபேசி | : +94-11-2689823 |
| தொலைநகல் | : +94-11-2689605 |
| மின்னஞ்சல் | : ranawana@wealthtrust.lk |

வெல்த்றஸ்ட் லிமிடெட் அதன் முதனிலை பங்கேற்பாளர் வெளிநிலை அடையாள அட்டை WTEYLKLXXXX இனைப் பயன்படுத்தி 2011 செத்தெம்பர் 21ஆம் நாளிலிருந்து லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும்.

எஸ் எஸ் ரத்நாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2011 நவெம்பர் 4

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/08/2011**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

### 2011 நவெம்பர் 7ஆம் திகதியை அரசாங்க, வங்கி விடுமுறை நாளாக பிரகடனம் செய்தல்

இத்-உல்-அல்கா (ஹஜ் கொண்டாட்டம்) இனைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் 2011 நவெம்பர் 7ஆம் திகதியினை அரசாங்க மற்றும் வங்கி விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தியிருப்பதன் காரணமாக லங்கா செட்டில் முறைமை 2011 நவெம்பர் 7ஆம் நாளன்று (திங்கட்கிழமை) திறக்கப்படமாட்டாது என்பதனை அறியத்தருகிறோம். 2011 நவெம்பர் 7ஆம் திகதியை பெறுமதித் திகதியாகக் கொண்ட எந்தவொரு கொடுக்கல்வாங்கலையும் முறைமையில்

பதிவு செய்ய வேண்டாமென அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. 2011 நவெம்பர் 7ஆம் நாளினை பெறுமதித் திகதியாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களை நீங்கள் ஏற்கனவே பதிவு செய்திருப்பின் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை 2011 நவெம்பர் 8ஆம் திகதியை பெறுமதி நாளுக்கு மீள பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

எஸ் எஸ் ரத்நாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2011 திசெம்பர் 15

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/09/2011**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## 2011 திசெம்பர் 16ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் தொழிற்பாடுகள்

2011 திசெம்பர் 16ஆம் நாளன்று (வெள்ளிக்கிழமை) 1200 மணியிலிருந்து 1630 மணிவரை லங்கா செட்டில் முறைமையின் தொழிற்பாடுகள் அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளப்படுமென்பதனை மத்திய வங்கி தங்களுக்கு அறிவித்துக் கொள்ளுகின்றது. எனினும், பங்கேற்பாளர்களுக்கு தொழில்நுட்ப மாற்றங்கள் எதுவும் இருக்காது என்பதனால் வழமையான முறையில் உங்கள் முறைமைகளை தொழிற்படுத்துமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இது விடயமாக இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான அலுவலர்களை 2011 திசெம்பர் 16ஆம் நாளன்று 1200 மணியிலிருந்து 1630 மணிவரை பின்வரும் வழிமுறைகளினூடாக தொடர்பு கொள்ளமுடியும்.

தொலைபேசி : 2477858, 2477832, 4858876, 4858879

தொலைநகல் : 2866184, 2873244

மின்னஞ்சல் : மின்னஞ்சல் முகவரியில் மாற்றமில்லை

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

எஸ் எஸ் ரத்நாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**தொடர்பு எண்: தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2011 திசெம்பர் 28

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/10/2011**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## அக்ஷிஷ் பாங்க் லிமிடெட்டினை லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராக நியமித்தல்

இல. 356, காலி வீதி, கொழும்பு 3இல் அமைந்துள்ள அக்ஷிஷ் பாங்க் லிமிடெட்டிற்கு 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உள்நாட்டு வங்கித்தொழில் வியாபாரம் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் ஆகிய இரண்டினையும் மேற்கொள்வதற்கு உரிமம் வழங்கப்பட்டது. இது 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் நேரடிப் பங்கேற்பாளராகவும் வணிகர் நேரடி பங்கேற்பாளராகவும் நியமிக்கப்பட்டிருப்பதுடன் லங்கா செட்டில் முறைமையின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை என்பனவற்றின் பங்கேற்பாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

அக்ஷிஷ் பாங்க் லிமிடெட்டின் சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கணக்கு இலக்கம் மற்றும் தொடர்பு விபரங்கள் என்பன கீழே தரப்பட்டுள்ளன:

சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு : AXISLKLXXXX

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கு : AXISLKLXXXX010004428

**தொடர்பு விபரங்கள்:**

| | |
|---|---|
| முதன்மை நிறைவேற்று அலுவலர் | : திரு. அசோக் குமார் பாசு |
| தொலைபேசி | : +94-11-2577733 |
| தொலைநகல் | : +94-11-2577724 |
| மின்னஞ்சல் | : ashok.basu@axisbank.com |

அக்ஸிஸ் பாங்க் லிமிடெட் அதன் முதனிலை பங்கேற்பாளர் வெளிநிலை அடையாள அட்டை AXISLKLXXXX இனைப் பயன்படுத்தி 2011 திசெம்பர் 30ஆம் நாளிலிருந்து லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும்.

ஏ ஜே லக்ஸ்மன் பீரிஸ்
**மேலதிகப் பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

ஜே பி ஆர் கருணாரத்ன
**பதில் கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

தொடர்பு எண்: 08/24/008/0018/001

பொதுப்படுகடன் திணைக்களம்
2011 பெப்புருவரி 09

முதனிலை வணிகர் நிறுவனங்களின் அனைத்து முதனிலை நிறைவேற்று அலுவலர்களுக்கும்

## அமைப்பு அகவிதிகளுக்கான திருத்தங்கள்

நீங்கள் அறிந்தவாறு, அரச பிணையங்களில் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பத்துடன், மற்றைய ஆவணங்களுடன் விண்ணப்பதாரக் கம்பனியின் அமைப்பு அகவிதிகளும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதன்படி, இதன் கருத்து, அத்தகைய அமைப்பு அகவிதிகளுக்கான திருத்தங்கள் இலங்கை மத்திய வங்கியின் முன்னொப்புதல் பெற்றிருக்க வேண்டும் என்பதேயாகும்.

ஆகவே நீங்கள், உங்கள் கம்பனி அமைப்பு அகவிதிகளுக்கு ஏதேனும் திருத்தங்களை செய்ய எண்ணுகின்ற சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உன்மையுள்ள
எஸ். எஸ். ரத்னாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன் தொழிற்பாடுகள்**

## பின்னிணைப்பு

## சுனாமிக்குப் பின்னைய கரையோர புனரமைப்பு மற்றும் மூலவள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் மீதான நிருவாக உடன்படிக்கைக்கானது

இப்பின்னிணைப்பு ("பின்னிணைப்பு") திருத்தப்பட்டதுடன் இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் (இதனகத்துப் பின்னர் இலங்கை அரசாங்கம் எனக் குறிப்பிடப்படும்) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினால் முறையாக நிறுவப்பட்ட நிறுவனமான இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்குமிடையில் 2010 ஏப்பிறல் 20ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்ட சுனாமிக்குப் பின்னைய கரையோர புனரமைப்பு மற்றும் மூலவள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் என அறியப்படும் தற்பொழுதுள்ள உடன்படிக்கையில் இத்தால் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் முதன்மை வியாபார இடமாக இல. 30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் (இதனகத்துப் பின்னர் இலங்கை மத்திய வங்கி எனக் குறிப்பிடப்படும்) அமைந்திருக்கும்.

அவ்வாறிருக்கையில்

2010 யூன் 28ஆம் நாளிலிருந்து யூலை 27ஆம் நாள் வரையான காலப்பகுதியில் இலக்கு விஜயம் செய்த வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் இடைக்கால மீளாய்வுக் குழு உடன்படிக்கையினை மதிப்பீடு செய்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் தற்போதைய செலவின மட்டத்தினைப் பரிசீலனையில் கொண்டு இணங்கிக் கொள்ளப்பட்ட கொடுகடன் தொகையினை குறைப்பதற்கு யோசனை தெரிவித்ததுடன் செயற்றிட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் காணப்பட்ட ஆரம்பத் தொகைகளுக்கு கொடுகடன் தொடர்களைக் குறைப்பதற்கும் விதந்துரைத்தது.

1. எனவே, உடன்படிக்கைக் கடன் தொகை இத்தால் குறைக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் தொகை காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ. கடன் எல்கே 664 | சிஎஉ | 80,000 |
| ஆ. கடன் எல்கே 693 | சிஎஉ | 940,000 |

2. உடன்படிக்கையின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருந்தன.

இங்கே கீழேயுள்ள கையொப்பதாரர் ஒவ்வொருவரும் அதன் பெயரிலும் அதன் சார்பிலும் இப்பின்னிணைப்பு உரிய முறையில் நிறைவேற்றப்பட காரணமாக இருப்பர்.

| அரசாங்கம் | இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை |
|---|---|
| ......................................... | .................................................................................... |
| **அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி** | **அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி** |
| **திறைசேரியின் துணைச் செயலாளர்** | **துணை ஆளுநர்** |
| **நிதி திட்டமிடல் அமைச்சு** | **இலங்கை மத்திய வங்கி** |

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/பிஆர்/2010/03 (திருத்தம்)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
2011 ஏப்பிறல் 01

*அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் கடன் மேல் எல்லையினை உயர்த்துதல்**

2010 மாச்சு 22ஆம் திகதியிடப்பட்ட இல: ஆர்டிடி/பிஆர்/2010/03 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் 3, 4, 6 மற்றும் 7ஆம் பிரிவுகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளமை பற்றி தங்களுக்கு அறியத்தரப்படுகிறது.

பிரிவு 3

| | | | |
|---|---|---|---|
| 3.2 | கடன் எல்லைகள் | : | வேளாண்மை, விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடித் துணைத் துறைகளிலுள்ள நடவடிக்கைகள் தவிர்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மத்திய வங்கியிடமிருந்து துணைச் செயற்றிட்டமொன்றிற்கு உயர்ந்தபட்சம் ரூ.25 மில்லியன்கள் மீள் நிதியிடலைப் பெறுவதற்கு தகுதியுடையனவாகும். துணைச் செயற்றிட்டமொன்றிற்காக ரூ.500,000 இற்கு மேற்பட்ட துணைக் கடன் தொகையினை விதந்துரைக்கின்ற கிளை முகாமையாளரொருவர் பதிவு விண்ணப்பத்துடன் செயற்றிட்ட மதிப்பீட்டினையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். |
| 3.6 | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான மீள் நிதியிடல் மீதான வட்டி வீதம் | : | ஆண்டிற்கு 4 சதவீதம் |
| 3.7 | துணைக் கடன்களுக்கான வட்டி வீதம் | : | ஆண்டிற்கு 9 சதவீதம் |

பிரிவு 4

| | | | |
|---|---|---|---|
| 4. | தகுதியுடைய துணைச் செயற்றிட்டங்கள் | : | சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் மீள் நிதியிடல் கோரிக்கைகளுக்கு பின்வரும் தொழில் முயற்சிகள் மாத்திரம் தகுதியுடையனவாகும். |

i நிலம் மற்றும் கட்டடங்கள் நீங்கலாக ரூ.40 மில்லியன்களுக்கும் குறைவான மொத்தச் சொத்துப் பெறுமதியினைக் கொண்ட 5 - 100 ஆட்கள் தொழில்புரியும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகள்.

**6. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்**

பின்வரும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- அட்டன் நஷனல் வங்கி பிஎல்சி
- கொமர்ஷல் வங்கி
- சம்பத் வங்கி லிமிடெட்
- செலான் வங்கி பிஎல்சி
- பிரதேசிய சங்வர்த்தன வங்கி
- லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி
- சனச அபிவிருத்தி வங்கி
- தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி
- நேசன்ட்றஸ்ட் வங்கி பிஎல்சி

- பிஏபிசி வங்கி பிஎல்சி
- கொழும்பு யூனியன் வங்கி லிமிடெட்
- டிஎவ்சிசி வங்கி
- வரையறுக்கப்பட்ட டிஎவ்சிசி வர்த்தன வங்கி

**7. துணைக் கடன்பாட்டாளர்களைப் பதிவு செய்தல்**

7.1 வங்கி முகாமையாளர் திருத்தப்பட்ட இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளவாறு பதிவு விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினூடாக பதிவு செய்யப்படுவதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புதல் வேண்டும்.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் ரூ.500,000 இற்கு மேற்பட்ட துணைக் கடன்கள் தொடர்பில் கடன் பதிவு விண்ணப்பங்களின் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் கொடுகடன் மதிப்பீட்டு அறிக்கையினையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. **சௌபாக்கியா கடன் திட்டத்தின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்துமிருக்கும்.** இத்திருத்தப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் 2011 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

உங்கள் உண்மையுள்ள

ஈ.ஏ. எட்டியாராச்சி
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**திருத்தப்பட்ட இணைப்பு 1**

**பதிவு இலக்கம்** ..........................................

## சௌபாக்கிய கடன் திட்டம்

### கடன் பதிவு விண்ணப்பம்

1. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பெயர் : ..........................................................................................................
2. கிளையின் பெயர் : ..........................................................................................................
3. கிளையின் முகவரி : ..........................................................................................................
..........................................................................................................
4. தொலைபேசி இலக்கம்/ தொலைநகல் இலக்கம் : ..........................................................................................................
5. விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளின் நிலை : தனிப்பட்ட ☐ பங்குடமை ☐
6. விண்ணப்பதாரர்/ பங்குடமையாளர்/ பணிப்பாளரின் பெயரும் முகவரியும்

| பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கம் | தே.அ. அட்டை இலக்கம் |
|---|---|---|---|
| i. | | | |
| ii. | | | |
| iii. | | | |

7. செயற்றிட்ட அமைவிடம் மற்றும் அமைந்துள்ள இடத்தின் பூரணமான முகவரி:
..........................................................................................................
8. மாவட்டம்: ..........................................
9. துணைச் செயற்றிட்டத்தின் வகை:
1. சிறிய தொழில் முயற்சிகள் ☐
2. நடுத்தர தொழில் முயற்சிகள் ☐
10. சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்படவுள்ள செயற்றிட்டம் பற்றிய சுருக்கமான விபரம் (கடனின் நோக்கம்):
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

11. செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு : ரூ. ............................................
12. கடன்பாட்டாளர்களின் பங்குடமைப் பகிர்ந்தளிப்பு : ரூ. ............................................
13. தேவையான கடன் தொகை : ரூ. ............................................
14. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் விதந்துரைக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்பட்ட தொகை : ரூ. ............................................

மேலே 10இல் விபரிக்கப்பட்டுள்ள உத்தேச செயற்றிட்டம் என்னால்/ கொடுகடன் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டதென்றும் அது போதுமான காசுப்பாய்ச்சலை இலாபத்தன்மைக்காக கொண்டுள்ளதென்பதனையும் உறுதிப்படுத்துவதுடன் சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் நிதிக்காகவும் விதந்துரைக்கின்றேன்.

............................................ ............................................................................................................

திகதி கிளை முகாமையாளரின் கையொப்பம்/ இறப்பர் முத்திரை

**தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதியக் கொடுகடன் திட்டத்தின் கீழான**
**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் திருத்தம் (2011) இல.: ஆர்டிடி/ரிடிபிஆர்எவ்/2006/02**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
2011 யூன் 01

*அனைத்துப் பங்கேற்கும் நிறுவனங்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதியக் கொடுகடன் திட்டம்**

மேற்குறிப்பிட்ட கொடுகடன் திட்டம் தொடர்பான இல. ஆர்டிடி/ரிடிபிஆர்எவ்/2006/02 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பின்வரும் நடவடிக்கைகளையும் உள்ளடக்கும் விதத்தில் திருத்தப்பட்டுள்ளமை பற்றி தங்களுக்கு அறியத் தரப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் 3.4 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் கீழ் தகுதியான துணைச் செயற்றிட்டங்களின் பொருட்டு பெருந்தோட்ட அமைச்சு, தேயிலை சிறு உடமையாளர் அதிகாரசபை மற்றும் இலங்கைத் தேயிலைச் சபை என்பனவற்றின் ஆலோசனையுடன் மேற்குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைத் திருத்துவதற்கு தீர்மானித்தது. இதன்படி, பின்வரும் நடவடிக்கைகள்/ நோக்கங்கள் இத்திட்டத்தின் கீழ் நிதியிடுவதற்கு பரிசீலிக்கப்படுவதற்கு தகுதியுடையனவாகும்.

**3.4 நிதியிடலுக்கு தகுதியுடைய நடவடிக்கைகள்**

**01. பச்சைத் தேயிலையைக் கொண்டு செல்லுதல் (தேயிலை)**

**நிதியத்தின் மொத்த ஒதுக்கு - ரூ.50 மில்லியன்**

(i) போக்குவரத்து ஊர்தியின் கொள்வனவு

| | |
|---|---|
| • ஒரு அலகிற்கான உயர்ந்தபட்சக் கடன் தொகை | - ரூ.1.5 மில்லியன் |
| • மீள்கொடுப்பனவுக் காலம் | - உயர்ந்தபட்சம் 5 ஆண்டுகள் (சலுகைக் காலம் இல்லை) |
| • தகுதியான ஊர்திகள் | - 2 சில்லு இழுபொறிகள் 4 சில்லு இழுபொறிகள் மற்றும் சரக்கு வண்டிகள் |
| (ii) பொருள்களை அடுக்கும் சட்டங்கள் மற்றும் கூடைகளின் கொள்வனவு | - அலகொன்றிற்கு உயர்ந்தபட்சக் கடன் தொகை ரூ. 200,000/- |

(i)இன் கீழ் கடன் பெறுவதற்கு தகுதி பெறுபவர்கள் (ii)இன் கீழான கடன்களையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.

- பதிவு விண்ணப்பத்துடன் சேர்த்து தேயிலை ஆணையாளரின் விதந்துரைப்பினையும் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்குமாறு விண்ணபதாரிகள்/ பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**02. தேயிலை நிலங்களை அபிவிருத்தி செய்தல்**

**நிதியத்தின் மொத்த ஒதுக்கு - ரூ.150 மில்லியன்**

நிதியத்தினை மீள்பயிரிடல், இடைப் பயிரிடல் மற்றும் நாற்றுமேடை அபிவிருத்தி என்பனவற்றிற்கும் பயன்படுத்த முடியும்.

| | |
|---|---|
| (i) தேயிலை மீள்பயிரிடல் மற்றும் இடைப் பயிரிடல் | - எக்டேயரொன்றிற்கு உயர்ந்தபட்சக் கடன் தொகை ரூ.750,000/- (உயர்ந்தபட்சம் 2 எக்டேயர்களை பரிசீலனையில் கொள்ளலாம்) |
| (ii) நாற்றுமேடை அபிவிருத்தி | - 100,000 தேயிலைக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கான அலகொன்றிற்கான உயர்ந்தபட்சக் கடன் தொகை ரூ.1 மில்லியனாகும். |

தேயிலைப் பரிசோதகரினதும் தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதேச முகாமையாளரினதும் விதந்துரைப்புக்களை பதிவு விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

**"பந்தி 3.5"** செஸ்வரி தள்ளுபடி கொடுப்பனவொன்றிற்கான கோரிக்கையின் மீது தேயிலை சிறு உடமையாளர் அதிகாரசபையினால் மீள் நடுகைக்காக 50 சதவீத வட்டி உதவுதொகையினைப் பெறுவதற்கு தகுதி பெறுவதற்காக விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/ரிடிபிஆர்எவ்/2006/02 நீக்கப்படுகின்றது.

தேயிலை அபிவிருத்தி செயற்றிட்ட சுழலும் நிதித் திட்டத்தின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

இது யூன் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

உங்கள் உண்மையுள்ள

ஈ.ஏ. எட்டியாராச்சி

**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

## 2011 செத்தெம்பர் 23ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

**அட்டவணை உள்ளடக்கம்**


1. முன்னுரை
2. திட்டத்தின் நோக்கங்கள்
3. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்
4. கடன்பாட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணம்
   - 4.1 விண்ணப்பதாரி
   - 4.2 காணிச் சொத்துடமை
   - 4.3 கடன்பாட்டாளரின் கொடுகடன் வரலாறு
   - 4.4 கடன்பாட்டாளருக்கான வயதெல்லை
5. நிதியின் அளவு
   - 5.1 நிதியின் அளவுகளை அறிவித்தல்
   - 5.2 நிதி அளவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளை விஞ்சுகின்ற கடன்கள்
   - 5.3 பயிர்ச்செய்கைக் கடன்களின் பிரிவு
   - 5.4 நிதி அளவுகளில் மாற்றங்களைச் செய்வதற்கான அதிகாரம்
6. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகம்/ பொறுப்புக்கள்
   - 6.1 கடன்களை வழங்குவதற்கான மூலவளங்கள்
   - 6.2 தகுதியான பயிர்கள்
   - 6.3 கடன்பாட்டாளர்களுக்கான வட்டி
   - 6.4 கடன்பாட்டாளர்களின் தெரிவு
   - 6.5 மற்றைய உள்ளீடுகள் கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்தல்
   - 6.6 பயிர்க் காப்புறுதி மற்றும் அவற்றிடையேயான உத்தரவாதங்கள்
   - 6.7 கடன்களைப் பகிர்ந்தளித்தல்
   - 6.8 தரவுகளையும் தகவல்களையும் சமர்ப்பித்தல்
   - 6.9 முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்பட்ட விண்ணப்பங்கள்
   - 6.10 மேற்பார்வைக் கடப்பாடுகள்
   - 6.11 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பொறுப்புக்கள்
7. இலங்கை மத்திய வங்கியின் பொறுப்புக்கள்
   - 7.1 செயன்முறைகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல்
   - 7.2 பரீட்சிப்புக்கள்
   - 7.3 வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத்திற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கங்கள்
   - 7.4 இலங்கை அரசாங்கத்திற்கான வட்டி உதவுதொகை விதந்துரைப்பு
   - 7.5 கொடுகடன் உத்தரவாதத்திற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம்
   - 7.6 அநேக பயிர்களுக்கான கடன்கள்
   - 7.7 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் செய்யப்பட்ட மாற்றங்களை அறிவித்தல்

8. வட்டி உதவுதொகைக் கொடுப்பனவு
    8.1 வட்டி உதவுதொகைக் கொடுப்பனவின் கட்டங்கள்
    8.2 அனுமதியளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும்
    8.3 பயன்படுத்தப்பட வேண்டிய படிவமுறை
    8.4 தலைமை அலுவலகத்தின் தொகுப்பு
    8.5 சமர்ப்பிக்கும் நாள்
    8.6 வட்டி உதவுதொகை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்
9. செலுத்தத் தவறிய கடன்கள்
    9.1 வேண்டுமென்றே செலுத்தத் தவறியவை
    9.2 வேண்டுமென்றில்லாமல் செலுத்தத் தவறியவை
10. அறவிடல்கள்
    10.1 அறவிடல்களுக்கான நடைமுறை
    10.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின்படியான அறவிடல்கள்
    10.3 மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள்
11. சட்ட நடவடிக்கை
    11.1 மத்தியஸ்த சபை
    11.2 வழக்குத் தொடர்தல்
12. கொடுகடன் உத்தரவாதத்தினைத் தீர்த்தல்
    12.1 பணிப்பாளரின் அதிகாரம், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
    12.2 தகுதியுடைய கடன்கள்
    12.3 உள்ளடக்கப்படாத கடன்கள்
    12.4 உத்தரவாதத்தின் அளவு
    12.5 கட்டுப்பணம்
    12.6 கோரல்கள்
    12.7 இழப்புக்களைக் கணித்தல்
13. வேண்டுமென்றில்லாமல் கடனைச் செலுத்தத் தவறியவர்களின் கடன்களை மீள அட்டவணைப்படுத்தல்.
    13.1 மீள் அட்டவணைப்படுத்துவதற்கு தகுதியான கடன்கள்
    13.2 குழுவினால் இழப்புக்கள் தீர்மானிக்கப்படுதல்
    13.3 குழு வேலைகளைப் பூரணப்படுத்துவதற்கான காலப்பகுதி
    13.4 ஆரம்பக் கொடுப்பனவின் அளவு
    13.5 வேண்டுமென்றில்லாமல் கடனைச் செலுத்தத் தவறியவர்களுக்கான சலுகைகள்
    13.6 வட்டி உதவுதொகைக்கான தகுதி
    13.7 மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களுக்கான அறவிடல் காலம் மற்றும் வட்டி உதவுதொகைக்கு ஏற்புடைத்தான வீதம்
    13.8 அறவிடல்கள் மீதான தகவல்கள்
    13.9 பயன்படுத்தப்பட வேண்டிய படிவமுறை
    13.10 கடன்பாட்டாளருக்கான நன்மைகள்
    13.11 வட்டி உதவுதொகைகளின் கொடுப்பனவு
    13.12 மீள் அட்டவணையிடப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல்
    13.13 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்
14. கோரல்களுக்குப் பின்னைய பணவனுப்பல்கள்
    14.1 அறவிடல் பிரிவுகளும் பயன்படுத்தப்பட வேண்டிய படிவமுறைகளும்
    14.2 அறவிடல்களைச் சமர்ப்பித்தல்
    14.3 தாமதமாகச் சமர்ப்பிக்கப்பட்டமைக்கான தண்ட வீதம்
    14.4 கணக்குகளும் ஆவணங்களைப் பேணுதலும்
    14.5 தலைமை அலுவலகத்தின் தொழிற்பாடுகள்
15. பரிசோதனைகள்
16. நவீனப்படுத்தல்கள் மற்றும் துணை நிரப்பு ஏற்பாடுகள்

**செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல. ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011**

**1. முன்னுரை**

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டமானது, நுண்பாக சமூக பொருளாதார நிலைமைகளையும் குறைந்த செலவில் தொழிற்படுகின்ற மூலதனத் தேவைப்பாடுகளை வழங்குவதன் மூலம் பருவகாலப் பயிர்களின் (குறுங்காலம்) பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள சிறியளவு வேளாண்மையாளர்களையும் உயர்த்துவதனை முக்கிய நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்தின் மூலம், இயற்கை அனர்த்தம் அல்லது வேறு ஏதேனும் அனர்த்தங்களின் போது மீண்டும் மீண்டும் பயன்படுத்தத்தக்க வசதிகளை வழங்குவதற்கான கடன்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதற்கும் கடனின் ஒரு பகுதிக்கு உத்தரவாதமளிப்பதன் மூலம் செலுத்தத் தவறுவதனால் ஏற்படும் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டமானது, இலங்கை அரசாங்கத்தின் நிதி திட்டமிடல் அமைச்சின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும். **வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதம் போன்ற திட்டங்களுக்கான நிதியங்கள் இலங்கை அரசாங்கத்தினால் வரவு செலவுத்திட்ட ஒதுக்கங்களிலிருந்து காலத்திற்குக் காலம் கிடைக்கச் செய்யப்படும்.** இத்திட்டத்தினை தொழிற்படுத்துவதற்குமான அதிகாரம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2. திட்டத்தின் நோக்கங்கள்**

2.1 குறுங்காலப் பயிர்ச்செய்கைக்காக வேளாண்மையாளர்களின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை வழங்குதல்

2.2 நாற்றுமேடைக்கான தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை வழங்குதல்

2.3 வேளாண்மை சமூகங்களிடையே நிதியியல் உள்ளடக்கங்களை மேம்படுத்தல்

2.4 உள்நாட்டு வேளாண்மைத் துறையின் மேம்பாடு/ அபிவிருத்தி

2.5 சிறுவேளாண்மையாளர்களின் வருமான மட்டத்தினை மேம்படுத்தல்

2.6 கிராமிய வறுமையினைக் குறைத்தல்

**3. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்**

இலங்கையில் தொழிற்படுகின்ற பின்வரும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், அவை இத்திட்டத்தில் பங்கேற்குமிடத்து புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியுடையனவாகும்.

இலங்கை வங்கி
மக்கள் வங்கி
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி
அட்டன் நஷனல் வங்கி பிஎல்சி
செலான் வங்கி பிஎல்சி
சம்பத் வங்கி பிஎல்சி
டிஎவ்சிசி வங்கி
கொழும்பு யூனியன் வங்கி பிஎல்சி
பிரதேசிய சங்வர்த்தன வங்கி
தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி
சணச அபிவிருத்தி வங்கி லிமிடெட்
லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி லிமிடெட்

**4. விண்ணப்பதாரிகளுக்கான தகுதிப் பிரமாணம்**

பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்ற கடன்பாட்டாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கடன்களைப் பெறத் தகுதியுடையவராவர்.

4.1 விண்ணப்பதாரி வேளாண்மையாளராக இருத்தல் வேண்டும்.

4.2 இத்திட்டத்தின் கீழான கடன்கள் பின்வருவோருக்கு வழங்கப்படலாம்.

4.2.1 நிலத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ள வேளாண்மையாளர்

4.2.2 குத்தகை நிலத்தையுடைய வேளாண்மையாளர்

4.2.3 வாடகை நிலத்தையுடைய வேளாண்மையாளர்

4.2.4 நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிராத ஆனால் அரச உரிமம், அனுமதிப்பத்திரம் என்பனவற்றை உடைய வேளாண்மையாளர்

4.2.5 நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிராத ஆனால் நிலச் சொந்தக்காரரிடமிருந்து பயிர்செய்வதற்கான உரிமைகளையும் அதிகாரத்தையும் வைத்திருக்கும் வேளாண்மையாளர்.

4.3 கடன்பாட்டாளர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனமொன்றிலிருந்து பெற்ற கடன் தொடர்பாக செலுத்தத் தவறிய ஒருவராக இருத்தல்கூடாது.

4.4 65 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதையுடைய ஒருவர் கடனைப் பெறுவதற்கு குடும்ப உறுப்பினர் ஒருவர் (துணைவர் அல்லது மகன் அல்லது மகள்) கடன்பாட்டாளருடன் கூட்டுக்கடன்பாட்டாளராக சேர்க்கப்படல் வேண்டும்.

**5. நிதியின் அளவுகள்**

5.1 நிதியின் ஏற்புடைத்தான அளவுகள் இணைப்பு II இல் தரப்பட்டுள்ளன. அளவுகள், தற்பொழுது நிலவுகின்ற பயிர்ச்செய்கைச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. வேளாண்மைத் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்பட்ட ஒவ்வொரு பயிருக்குமான நிதியின் அளவினை ஒவ்வொரு பயிர்ச்செய்கைப் பருவகாலத்தினதும் தொடக்கத்தில் பங்கேற்கும் நிதி நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திற்கு இலங்கை மத்திய வங்கி அறிவிக்கும்.

5.2 திட்டத்தின் கீழான வசதிகள் நிதியின் அளவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தின் அளவிற்கேற்ப வழங்கப்படுகின்றன. பங்கேற்கும் நிதியியல் நிறுவனமொன்று அளவில் குறிப்பிட்டதிலும் கூடுதலான கடன்களை வர்த்தக வீதத்தில் வழங்க முடியும். (மிகையான தொகைக்கு) வட்டி உதவுதொகை வழங்கப்படமாட்டாது.

5.3 கடன் தொகை பயிர்ச்செய்கைக்கான மொத்தச் செலவில் 75 சதவீதத்தினை விஞ்சக்கூடாது. வேளாண்மையாளர் பயிர்ச்செய்கையின் மொத்தச் செலவில் குறைந்தபட்சம் 25 சதவீதத்தினை காசாகவோ பண்டமாகவோ பங்களித்தல் வேண்டும்.

5.4 இலங்கை மத்திய வங்கி, வேளாண்மைத் திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்பான திணைக்களங்களின் ஆலோசனையுடன் காலத்திற்குக் காலம் நிதியின் அளவில் மாற்றங்களைச் செய்வதற்கான உரிமையினைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

**6. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் பொறுப்புக்களும்**

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்கு தகுதிபெறும் விதத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் வகிபாகத்தையும் பொறுப்புக்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

6.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த மூலவளங்களைப் பயன்படுத்தி கடன் வசதிகளை வழங்க வேண்டியதுடன் திட்டத்தின் நிதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கி நடத்தலும் வேண்டும்.

6.2 இணைப்பு 1இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு மட்டுமே கடன்களை வழங்குதல்.

6.3 இலங்கை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீதத்தினை மட்டுமே (தற்பொழுது ஆண்டிற்கு 8 சதவீதம்) கடன்பாட்டாளரிடமிருந்து பெறுதல்.

6.4 கடன்களை வழங்குகையில் உண்மையான வேளாண்மையாளர்களை அடையாளம் காண்பது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பொறுப்பாகும். கிளை முகாமையாளர்கள் கள அலுவலர்களினூடாக கடன்பாட்டாளர்கள் உண்மையான வேளாண்மையாளர்கள் தான் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

6.5 கடன்களை வழங்கும் பொழுது, பயிர்ச்செய்கைக்குத் தேவையான பொருத்தமான நிலம், நீரின் கிடைப்பனவு, வேளாண்மைக்கான உள்ளார்ந்த வளம் போன்ற கடன்பாட்டாளரின் உண்மையான தேவைப்பாடுகளுக்காக வேண்டப்படும் மூலவளங்கள் கிடைப்பதனையும் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலளவினையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

6.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் ஏற்புடைத்தானவிடத்து கடன்பாட்டாளரிடமிருந்து வாக்குறுதிச் சான்றிதழொன்றையும் பயிர்க் காப்புறுதிக் கொள்கையொன்றையும் ஒப்படைக்குமாறும் அவற்றுடன் கடனை ஒழுங்காகச் செலுத்திய இரண்டு வேளாண்மையாளர்களின் உத்தரவாதங்களையும் கோரலாம்.

6.7 கடன்பாட்டாளரின் வேளாண்மைத் தொழிற்பாடுகளின் பல்வேறு கட்டங்களிலும் காணப்படும் தேவைப்பாடுகளுடன் பொருந்தும் விதத்தில் கட்டம் கட்டமாகக் கடன்கள் விடுவிக்கப்படுதல் வேண்டும். கடனானது மூன்று அல்லது அதற்கும் கூடுதலான தவணைகளில் வழங்கப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு தவணைத் தொகையும் அதற்கு முன்னைய தவணைப் பணத்தின் பயன்பாட்டினைச் சரிபார்த்த பின்பே வழங்கப்படுதல் வேண்டும்.

6.8 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பான படிவங்களில் உரிய தலைமை அலுவலகங்களினூடாக முடிவுத் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைப்பதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

6.8.1 கட்டுப்பணத்தினைச் செலுத்துதல்.

6.8.2 வட்டி உதவுதொகை, கொடுகடன் உத்தரவாதம் மற்றும் பின்னைய கோரல்கள் என்பன தொடர்பான தேவையான தரவுகளையும் தகவல்களையும் வழங்குதல்.

6.8.3 பின்னைய கோரல் அளவீடுகளை அனுப்புதல். அத்தகைய தகவல்களை சமர்ப்பிப்பதற்கான நேரகாலம் இணைப்பு III இல் இணைக்கப்பட்டுள்ள நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6.9 முடிவுத் திகதிக்கு பின்னர் செய்யப்படும் வட்டி உதவுதொகை விண்ணப்பங்கள், கொடுகடன் உத்தரவாத விண்ணப்பங்கள் மற்றும் கட்டுப்பணக் கொடுப்பனவுகள் என்பன தன்னியக்கமாகவே நிராகரிக்கப்படும்.

6.10 பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் அவர்களினால் வழங்கப்பட்ட கடன்களுக்காக முன் மற்றும் பின் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். பின்வருவன பங்கேற்கும் நிறுவனங்களின் கடப்பாடுகளாகும்.

6.10.1 கடன்பாட்டாளர்களுக்கு கடன்களைப் பகிர்ந்தளிப்பதில் வழமையான கவனத்தினையும் முன்மதியினையும் கவனத்தில் கொள்ள வேண்டியதுடன் கடன்கள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக நியாயமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

6.10.2 வரவேண்டிய கடன் தொகையினை அளவிடுவதற்கு சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். பங்கேற்கும் நிறுவனங்கள் அறவிடல் நடவடிக்கைகளை **அறுவடைக் காலத்தில்** மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

6.11 சரியான மேற்பார்வை, கவனிப்பு மற்றும் கடன் வழங்கலில் முன்மதியுடைய தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வேண்டுமென்றே புறக்கணித்தமையின் விளைவாக போலியான கடன்கள் பெறப்பட்டமைக்கு அல்லது கடன்பாட்டாளர்களினால் கடன்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமைக்கு அல்லது கடன் வழங்குவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏதாவது தவறான நடத்தையினை இழைத்திருக்கின்றன என்பதற்கு சான்றுகள் காணப்படுமிடத்து மத்திய வங்கி அதன் பொறுப்பினை மறுக்கலாம் என்பதுடன் கோரல்கள் அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து அவற்றின் மீது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகையினை நிராகரிப்பதற்கான உரிமையினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**7. இலங்கை மத்திய வங்கியின் பொறுப்புக்கள்**

இத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தும் முகவர் என்ற அதன் தகைமை ரீதியில் மத்திய வங்கி பின்வரும் தொழிற்பாடுகளை ஆற்றும்;

7.1 இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கி திட்டத்தினைக் கண்காணித்து செயன்முறைகளை மதிப்பிடுகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அவசியமான கொள்கை நடவடிக்கைகளையும் நடைமுறைக்கிடும்.

7.2 அவசியமானது எனக் கருதுமிடத்து மத்திய வங்கி களப் பரிசோதனை, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விஜயம் செய்தல் மற்றும் பேரேடுகள் நூல்கள் போன்றவற்றை பரிசோதித்தல் மற்றும் வேறு ஏதேனும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமையினைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

7.3 மத்திய வங்கி நடைமுறையாண்டிற்கான வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதக் கொடுப்பனவு என்பனவற்றிற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கங்களை எதிர்வு கூறுவதுடன் ஒப்புதலுக்காக அவற்றை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கும்.

7.4 இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தத்தக்க வட்டி உதவுதொகையினை கணித்து அவற்றினை விதந்துரைத்து அத்தகைய தகவல்களை இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கும்.

7.5 அரசாங்கத்திடமிருந்து கிடைக்கத்தக்க நிதியத்திற்கு உட்பட்டு மத்திய வங்கி வேண்டுமென்றே செலுத்தத் தவறியவர்களின் செலுத்தத் தவறிய தொகை தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கொடுகடன் உத்தரவாதங்களை வழங்கும்.

7.6 வேளாண்மைக் கடன்பாட்டாளரொருவருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட பயிர்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்ற பொழுது தகுதியான உயர்ந்தபட்ச கடன் தொகையினைத் தீர்மானிக்கும் உரிமையினை மத்திய வங்கி கொண்டுள்ளது.

7.7 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில், நிதியின் அளவில் அல்லது வேறு ஏதேனும் தகவல்களில் மாற்றங்கள் ஏற்படுமிடத்து மத்திய வங்கி அத்தகைய மாற்றங்களை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கும்.

**8. வட்டி உதவுதொகை**

நிதி அளவுகளில் குறிப்பிடப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கி, தமது சொந்த மூலவளங்களிலிருந்து கடன் முற்பணங்களை வழங்குகின்ற பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற வீதத்தில் வட்டி உதவுதொகைகளை வழங்கும். இவ்வுதவுதொகைக்கு தகைமை பெறும் பொருட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீதத்தில் வேளாண்மையாளர்களுக்கு கடன்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படும்.

8.1 வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள் இரண்டு கட்டங்களில் அதாவது முன்கூட்டிய கொடுப்பனவாகவும் இறுதிக் கொடுப்பனவாகவும் வழங்கப்படும்.

8.1.1 முன்கூட்டிய கொடுப்பனவு ஒப்புதலளிக்கப்பட்ட தொகையின் மீது அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் 90 நாள் காலப்பகுதியிக்கு கணிக்கப்படும். இந்நோக்கத்திற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கால அட்டவணையில் (இணைப்பு IVஇல் தரப்பட்டுள்ளது) குறிப்பிடப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/1 (இணைப்பு IIIஇல் தரப்பட்டுள்ளது) இனை சமர்ப்பித்தல் வேண்டும்.

8.1.2 270 நாட்களைக் கொண்ட காலப்பகுதியின் பின்னரும் கூட கடன்களை அறவிடுவது பிரச்சனைக்குரியதாக இருக்குமிடத்து, விடயத்திற்கேற்றவாறு, உயர்ந்தபட்சம் 180 நாட்கள் என்ற நிபந்தனைக்குட்பட்டு எஞ்சிய காலப்பகுதிக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் அறவிடல் திகதிகள் அறிவிக்கப்பட்ட பின்னர் இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். இந்நோக்கத்திற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவை வழங்கிய வேளாண்மைக் கடன்களின் தொகை, அறவிடல்களின் தொகை மற்றும் திகதி என்பனவற்றை அவை அறிக்கையிடுவதனை இயலச் செய்யும் பொருட்டு படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/2 (இணைப்பு Vஇல் தரப்பட்டுள்ளது) அனுப்பி வைக்கப்படும்.

8.2 வழங்கப்பட்ட கடன் தொகை ஒப்புதலளிக்கப்பட்ட தொகையிலும் பார்க்க கூடுதலாக இருக்குமிடத்து, வட்டி உதவுதொகை ஒப்புதலளிக்கப்பட்ட தொகைக்கே வழங்கப்படும் என்பதுடன் வழங்கப்பட்ட தொகை ஒப்புதலளிக்கப்பட்ட தொகையிலும் பார்க்கக் குறைவாக இருக்குமிடத்து வட்டி உதவுதொகை வழங்கப்பட்ட தொகைக்கு மட்டுமே வழங்கப்படும்.

8.3 இலங்கை அரசாங்கத்திடமிருந்து வட்டி உதவுதொகை முற்பணக் கொடுப்பனவுகளையும் வட்டி உதவுதொகை இறுதிக் கொடுப்பனவினையும் கோருவதற்கு முறையே ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/1 மற்றும் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/2 படிவங்களைப் பயன்படுத்துமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இந்நோக்கத்திற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் விபரிக்கப்பட்ட படிவங்களை அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்.

8.4 பங்கேற்கும் நிதி நிறுவனங்களின் தலைமை அலுவலகம் கிளைவாரியாக தகவல்களைத் தொகுத்து அவற்றை வட்டி உதவுதொகை விண்ணப்பங்களுடன் (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/1 மற்றும் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/2 சேர்த்து பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

8.5 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வட்டி உதவுதொகை விண்ணப்பங்களை (மென்பிரதி மற்றும் வன்பிரதிகள் இரண்டும்) தகைமையுடைய கட்டுப்பணத்துடன் சேர்த்து உரிய திகதிக்கு முன்னதாக/ குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

8.6 இதற்கமைய, இலங்கை அரசாங்கத்திடமிருந்து வட்டி உதவுதொகையினைக் கோருகின்ற அனைத்து விண்ணப்பங்களும் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினூடாக பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல. 30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரியினை அடைதல் வேண்டும்.

**9. செலுத்தத் தவறிய கடன்கள்**

பயிர்ச்செய்கைப் பருவகாலம் முடிவடைகையில் கிளை முகாமையாளர்கள் செலுத்தத் தவறிய வேளாண்மையாளர்களை வேண்டுமென்று செலுத்தத் தவறியோர் வேண்டுமென்றில்லாமல் செலுத்தத் தவறியோர் என இரண்டு வகைகளாகப் பிரித்தல் வேண்டும். இப்பகுப்பாய்வினை கள அலுவலரினூடாக முகாமையாளருக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

9.1 வேண்டுமென்று செலுத்தத் தவறியவர்கள்

கடன்பாட்டாளர்களுக்குச் சிறந்த அறுவடை கிடைத்தும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான அவர்களின் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்யத் தவறியிருக்கின்றார்கள் என்பதனைக் கிடைக்கத்தக்க தகவல்கள் எடுத்துக்காட்டுமிடத்து அவரை வேண்டுமென்றே செலுத்தத் தவறியவராக வகைப்படுத்த வேண்டும்.

9.2 வேண்டுமென்றில்லாமல் செலுத்தத் தவறியவர்கள்

வெள்ளம், வரட்சி அல்லது பூச்சியின் தாக்கம் போன்ற இயற்கை அனர்த்தங்களினால் அல்லது கடன்பாட்டாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறு ஏதேனும் குறிப்பிட்ட காரணங்களினால் பயிர்கள் சேதமடைந்தமையின் விளைவாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான அவர்களின் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதில் கடன்பாட்டாளர்கள் இடர்ப்பாடுகளை அனுபவிக்குமிடத்து அவர்கள் வேண்டுமென்றில்லாமல் கடன் செலுத்தத் தவறியவர் என வகைப்படுத்தப்படல் வேண்டும்.

**10. அறவிடல்கள்**

10.1 இந்த இரண்டு வகைகளையும் பொறுத்த வரையில் அறவிடல் நடவடிக்கைகளுக்கான நடைமுறைகள் பின்வருமாறு:

10.1.1 செலுத்தத் தவறியவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகளினூடாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சட்ட நடவடிக்கைகளினூடாக வரவேண்டிய தொகையினை அறவிடுவதற்கான விபரமான நடவடிக்கைகள் பிரிவு II இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

10.1.2 வேண்டுமென்றில்லாமல் செலுத்தத் தவறியவர்களைப் பொறுத்த வரையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளருடனான அவர்களின் தனிப்பட்ட தொடர்புகளை நிறுவ வேண்டியதுடன் 13ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு மீள் அட்டவணைப்படுத்தல் வசதிகளையும் வழங்குதல் வேண்டும்.

10.2 வரவேண்டிய எந்தவொரு தொகையினையும் அறவிடுவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சாத்தியமான அனைத்து வழிகளிலும் பொருத்தமானதும் சாத்தியமானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் கோரல்களைச் சமர்ப்பித்த பின்னரும் கூட, இலங்கை அரசாங்கத்திடமிருந்து கொடுகடன் உத்தரவாதங்களைப் பெற்ற பின்னரும் கூட கடன்களை அறவிடுவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீவிரமாக ஈடுபடவேண்டும் என இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. எனவே, இலங்கை மத்திய வங்கியினால் யோசனை தெரிவிக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொள்ள பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடமைப்பட்டனவாகும்.

10.3 இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் குறைந்தபட்ச தேவைப்பாடுகள் பின்வருமாறு. கடன் நிலுவையில் இருக்கும் பொழுது கடனைச் சரியான முறையில் செலுத்துவதற்கு கடன்பாட்டாளரை தூண்டும் விதத்தில் கிளை முகாமையாளர்கள் உடனடியான அறவிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கலாம்:

(i) செலுத்தப்படாமைக்கான காரணங்களைக் கண்டறியும் பொருட்டு கடன்பாட்டாளரிடம் விஜயம் (குறைந்தபட்சம் 2 விஜயம்) செய்ய வேண்டியதுடன் வரவேண்டிய தொகையை மீளச் செலுத்துவதற்கு அவர்களைத் தூண்டுதல் வேண்டும்;

(ii) கடன்பாட்டாளரினால் எதிர்நோக்கப்பட்ட இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து பரீட்சிக்க வேண்டியதுடன் கடன்பாட்டாளர் அத்தகைய இடர்நேர்வுகளை வெற்றி கொள்வதற்கு அவர்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளை விதந்துரைத்தல்;

(iii) இடர்ப்பாடுகள் உண்மையானதாகவும் வேளாண்மையாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவும் இருக்குமிடத்து, கடனை மீள அட்டவணைப்படுத்தி அவரின் வருமானத்தின் தன்மைக்கேற்ப புதிய தவணைத் திட்டமொன்றினை வழங்குதல்;

(iv) வேண்டுமென்றே கடனைச் செலுத்தாதவர்களைப் பொறுத்தவரை, கடன்பாட்டாளர் மற்றும் உத்தரவாதி ஆகிய இருவர் மீதும் கோரிக்கை அறிவித்தலினை விடுத்தல்;

(v) கடன் தொகை தவறாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது கண்டறியப்படுமிடத்து கேள்வி அறிவித்தல் உடனடியாக விடுக்கப்பட வேண்டியதுடன் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தல்.

**11. சட்ட நடவடிக்கை**

11.1 பிரிவு 10.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறவிடல் நடவடிக்கைகளை எடுத்த பின்னரும் கூட பங்கேற்கும் நிறுவனங்கள் செலுத்தத் தவறியவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையினைச் சேகரிக்கத் தவறுமிடத்து, அத்தகைய வழக்குகள் முதலில் முதல் தவணை நிலுவைக்கு வந்த நாளிலிருந்து 6 - 9 மாதங்களுக்குள் மத்தியஸ்த சபையிடம் பாரப்படுத்தப்படல் வேண்டும்.

11.2 செலுத்தத் தவறியவர்கள் தீர்வொன்றிற்கு வராத பொழுது முதல் தவணை நிலுவைக்கு வந்த செலுத்தப்பட வேண்டிய நாளிலிருந்து 9 - 12 மாதங்களுக்கிடையில் அத்தகைய செலுத்தத் தவறியவர்களுக்கெதிராக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பொருத்தமான நீதிமன்றமொன்றில் அவர்களுக்கெதிராக வழக்கினைத் தொடர்தல் வேண்டும்.

**12. கொடுகடன் உத்தரவாதத் தீர்ப்பனவுகள்**

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 108அ பிரிவின் நியதிகளில், இலங்கை மத்திய வங்கி இணைப்பு 1இல் வழங்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பாக புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்திலுள்ள பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு உத்தரவாதங்களை வழங்கும். எதிர்பார்க்கப்பட்ட கடன் மீள்கொடுப்பனவு தவணைகள் செலுத்தப்படாதமையின் காரணமாக எழுகின்ற திரவத்தன்மைப் பற்றாக்குறைக்கு வசதியளிக்குமொன்றாக இலங்கை மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குவதுடன் செலுத்தத் தவறியவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையினை பெற்றுக் கொண்டதும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய கொடுகடன் உத்தரவாத தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

12.1 பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு கட்டுப்பணத்தினைச் சேகரித்தல், அரசாங்கத்தின் பங்களிப்புக்களை பெற்றுக் கொள்ளுதல், மிகையான நிதியினை முதலீடு செய்தல், உத்தரவாத கோரல்களை கொடுப்பனவு செய்தல், கோரல்கள் போன்றன தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் அறவிடல்களை இரத்துச் செய்தல் போன்றவற்றிற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

12.2 தகுதியான கடன்கள்

இத்திட்டத்தின் நோக்கத்திற்காக புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனைத்துக் கடன்களும் உத்தரவாதத்திற்குத் தகுதியுடையனவாகும். இத்திட்டத்தின் கீழ் உத்தரவாதமொன்று பின்வருவனவற்றிற்காக கடன்களை வழங்குமிடத்து தேவைப்படுகின்றன.

12.2.1 இணைப்பு Iஇல் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காக வழங்கப்பட்டனவாக இருத்தல்.

12.2.2 கடன் தொகை இணைப்பு IIஇல் தரப்பட்டுள்ள நிதியின் அளவுகளுக்குள் இருத்தல் வேண்டும்.

12.2.3 கட்டுப்பணங்கள் சரியான நேரத்தில் இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்தப்பட்டிருத்தல்.

12.3 உள்ளடக்கப்படாத கடன்கள்

12.3.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அரசாங்கத்தின் உத்தரவாதங்கள் அல்லது ஏதேனும் அரசாங்க நிறுவனமொன்றின் உத்தரவாதங்களை எக்கடனுக்குப் பெற்றுக் கொண்டனவோ அக்கடன்கள் இத்திட்டத்தின் கீழ் கொடுகடன் உத்தரவாதங்களுக்குள் உட்படுத்தப்படத் தகுதியுடையனவாகா.

12.3.2 கொடுகடன் உத்தரவாதக் கட்டுப்பணம் உரிய காலப்பகுதிக்குள் மத்திய வங்கிக்குச் செலுத்தப்படாத கடன்கள் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வசதிகளைப் பெறுவதற்கு தகுதியுடையனவாகா.

12.4 உத்தரவாதங்களை நீடித்தல்

12.4.1 இத்திட்டமானது இழப்பின் முதல் தொகையில் அல்லது உத்தரவாதம் வழங்கப்பட்ட தொகையில் எது குறைவானதோ அதில் 60 சதவீதம் கொண்ட உத்தரவாத உள்ளடக்கத்தினை வழங்குகின்றது. கொடுகடன் உத்தரவாதக் கோரல்கள் இரண்டு தவணைகளில் செலுத்தப்படும்.

12.4.2 விண்ணப்பங்கள் கிடைத்ததும் முதல் தவணையில் கோரல்களில் 75 சதவீதம் கொண்ட தொகை செலுத்தப்படுவதுடன் மீதி 25 சதவீதம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் செலுத்தத் தவறிய கடன்பாட்டாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்து நீதிமன்ற வழக்கின் இலக்கம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட பின்னர் செலுத்தப்படும்.

12.5 கட்டுப்பணம்

12.5.1 கட்டுப்பணம் என்பது பயிர்ச்செய்கைக் கடன்கள் அவை வழங்கப்படும் பொழுது அவற்றின் மீது இலங்கை மத்திய வங்கிக்குக் செலுத்தப்பட வேண்டிய அரைச் சதவீதம் கொண்டதொரு தொகையாகும். உத்தரவாதத்திற்கென தனியான விண்ணப்பப் படிவமெதுவுமில்லை. எனவே, கட்டுப்பணம் வட்டி உதவுதொகைக்கான விண்ணப்பத்துடன் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் இது நிதியின் அளவுகளின்படி, திட்டத்தின் கீழ் தகுதியுடைய மொத்தக் கடன் தொகையின் மீது கணிக்கப்படுதலும் வேண்டும்.

12.5.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான பருவ காலத்திற்கான கட்டுப்பணத்தினை உரிய தலைமை அலுவலகங்களினூடாக செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் அவற்றின் அனைத்துக் கிளைகளினாலும் வழங்கப்பட்ட கடன்களுக்கான கட்டுப்பணத்திற்கான காசோலையினை பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தத்தக்க விதத்தில் வட்டி உதவுதொகை விண்ணப்பங்களின் மென்பிரதி மற்றும் வன்பிரதிகளுடன் சேர்த்து குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. எவ்வாறெனினும் கட்டுப்பணமின்றி பெறப்படுகின்ற வட்டி உதவுதொகை விண்ணப்பங்கள் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்திற்கு தகுதியுடையனவாகா.

12.5.3 கொடுகடன் உத்தரவாதத்திற்கான கட்டுப்பணம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட வேண்டும். அவற்றை கடன்பாட்டாளர் மீது சுமத்தக்கூடாது.

12.5.4 காசோலை தேறல் செய்யப்பட்டதும் உத்தரவாதங்கள் வலிதுடையனவாக மாறும். சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் ஒவ்வொரு தொகுதிக்கும் இலங்கை மத்திய வங்கி தனித்தனியாக உத்தரவாத உள்ளடக்கக் குறிப்புக்களை வழங்கமாட்டாது.

12.6 கோரல்கள்

12.6.1 இவ்வுத்தரவாதத்தின் நோக்கத்திற்காக இழப்பிலுள்ளவை என வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஏதேனும் தொகை காணப்படுமிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இந்நோக்கத்திற்காக குறிக்கப்பட்ட படிவத்தில் (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/1) பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கிக்கு கோரல் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பயிர்ச்செய்கைப் பருவகாலமும் முடிவடையும் நேரத்தில் நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினது தலைமை அலுவலகத்திற்கு இப்படிவங்களை அனுப்பி வைக்கும்.

12.6.2 இத்திட்டத்தின் கீழான கடனொன்று பின்வரும் நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் இழப்பிலுள்ளதாகக் கருதப்படும்.

அ. கடனை மீளச் செலுத்துவதற்கு கடன்பாட்டாளரைத் தூண்டும் விதத்தில் அவரிடம் விஜயம் செய்தமை, உத்தரவாதங்கள் எங்கு பெறப்பட்டனவோ அந்த உத்தரவாதியின் உதவியினை தயவாகப் பெற்றுக் கொண்டமை மற்றும் கடன்பாட்டாளருக்கு கேள்வி அறிவித்தலை வழங்கியமை போன்ற கிடைக்கக்கூடிய வழிவகைகள் அனைத்தையும் பங்கேற்கும் நிறுவனங்கள் மேற்கொண்டதன் பின்னர் அக்கடன் இழப்பிலுள்ளதாகக் கருதப்படும். அத்தகைய விஜயங்களின் பதிவேடுகளை பங்கேற்கும் நிதி நிறுவனங்களின் பரிசோதனையின் போது மத்திய வங்கி அலுவலர்களுக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். பங்கேற்கும் நிதி நிறுவனங்கள் கேள்வி அறிவித்தலை கடன்பாட்டாளருக்கும் பொருத்தமானவிடத்து உத்தரவாதிக்கும் வழங்குதல் வேண்டும்.

ஆ. மேலே 12.6.2இல் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடையாதவிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய விடயங்களை பிரிவு 11.1 இல் குறித்துரைக்கப்பட்டவாறு மத்தியஸ்த சபைக்கு பாரப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

12.6.3 இதன்படி, பங்கேற்கும் நிறுவனங்கள் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டியதுடன் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளையும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஆரம்பித்தல் வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் முதல் தவணைக்காக இலங்கை மத்திய வங்கியினால் கொடுகடன் உத்தரவாத கோரல்கள் (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/1) அனுப்பி வைக்கப்படும் திகதியன்று செலுத்தத் தவறியவர்களுக்கெதிரான வழக்குகள் மத்தியஸ்த சபைக்கு ஏற்கனவே பாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

12.6.4. உத்தரவாதங்கள் செலுத்தப்பட்டிருக்கும் கடன்களை எந்தவொரு சூழ்நிலையிலும் இலங்கை மத்திய வங்கியின் முன்னொப்புதல் இல்லாமல் பதிவழிக்கக்கூடாது என பங்கேற்கும் நிதி நிறுவனங்களுக்கு கடுமையான முறையில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்களை அறவிடுவதற்கு கொடுகடன் உத்தரவாதக் கொடுப்பனவுகளுக்குப் பின்னரும் கூட நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

12.6.5 மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களைப் பொறுத்தவரையிலும் மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் மீதான கடப்பாடுகளைக் கடன்பாட்டாளர்கள் நிறைவேற்றத் தவறுமிடத்தும் கடன்கள் இழப்பில் இருக்கின்றன என கருதப்படுவதற்கும் கோரல்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கும் முன்னதாக 12.6.2ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

12.6.6 கோரல்படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/1 பெறப்பட்டவுடன் இலங்கை மத்திய வங்கியானது மத்திய வங்கியின் பொறுப்புக்களில் 75 சதவீதத்தினை, கிளையானது கேட்டுக் கொள்ளப்பட்டவாறு அவசியமான மேற்பார்வையினை மேற்கொள்ளத் தவறியிருக்கின்றதென பின்னர் கண்டறியப்படின் அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வரவேண்டிய தொகையினை பின்னர் அறவிட்டிருக்குமிடத்து அவற்றை நிராகரிக்கும் உரிமைக்குட்பட்டுச் செலுத்தும்.

12.6.7 கோரல்களின் மீதி 25 சதவீதம், சட்ட நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட நீதிமன்ற வழக்கு இலக்கத்துடன் சேர்த்து ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிசி/2 படிவத்தினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்ததும் வழங்கப்படும். பிரதேச அபிவிருத்தி வங்கி இந்நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்ட படிவத்தினை (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/2) மேலேயுள்ள 12.6.6 இல் உள்ள முதலாவது கொடுப்பனவிலிருந்து ஆறு மாதத்திற்குள் அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினதும் தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்குமென்பதுடன் சட்ட நடவடிக்கையின் மூலம் பெறப்பட்ட நீதிமன்ற வழக்கு இலக்கங்களுடன் எஞ்சிய கோரல்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

12.6.8 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் 2ஆவது தவணைக்கான கோரல் படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/2 உடன் நீதிமன்ற வழக்கு இலக்கத்தினை சமர்ப்பிக்காதவிடத்து கொடுகடன் உத்தரவாதத்தின் 1ஆவது தவணைக்காக செலுத்தப்பட்ட தொகைகளை இரத்துச் செய்யும் அதிகாரத்தினை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

12.7 இழப்புக்களையும் கோரல்களையும் கணித்தல்

இழப்பிலுள்ள தொகையினைக் கணிக்கும் நோக்கத்திற்காக, பிரிவு 12.4.1 இல் விபரிக்கப்பட்டவாறு வெளிநின்ற முதல் மூலதன நிலுவைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**13. வேண்டுமென்றில்லாமல் செலுத்தத் தவறியவர்களின் கடன்களை மீள அட்டவணைப்படுத்தல்**

13.1 இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட மீள் அட்டவணைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்படி, நிலுவையிலுள்ள கடன்களை மீள் அட்டவணைப்படுத்தும் வசதியானது வெள்ளம், வரட்சி, பூச்சிகளின் தாக்கம், இயற்கை அனர்த்தங்கள் போன்ற வேளாண்மையாளர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகள் மற்றும் மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய காரணங்கள் என்பனவற்றின் விளைவாக பயிர் இழப்புக்களினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தது. பாதிக்கப்பட்ட பிரதேசம், பயிர்களுக்கு அல்லது எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலில் ஏற்பட்ட சேதங்களின் அளவு தீர்மானிக்கப்பட்டு தொடர்பான பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட குழுவினால் மதிப்பிடப்பட்டன.

13.2 ஒவ்வொரு மாவட்டத்திலும் மீள் அட்டவணைப்படுத்தலைத் தீர்மானிப்பதற்கு பொறுப்பான குழு பின்வரும் அலுவலர்களை உள்ளடக்கியிருக்கும்.

அ. பிரதேச முகாமையாளர் - இலங்கை வங்கி

ஆ. பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி

இ. துணைப் பொது முகாமையாளர் - பிரதேச சங்வர்த்தன வங்கி

ஈ. ஏனைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மூத்த அலுவலர்கள் - பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெருமளவு கடன்களை வழங்கியிருக்கும் (மேலேயுள்ள மூன்று வங்கிகள் நீங்கலான) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து

உ. தொடர்பான மாகாணங்களின் மாகாண முகாமையாளர் - இலங்கை மத்திய வங்கி

ஊ. காப்புறுதிச் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்

மேலும், குழுவிற்குத் தொடர்பான வேளாண்மை அலுவலர்களிடமிருந்து அல்லது வேறு எவரேனும் அலுவலர்களிடமிருந்து விதந்துரைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. குழுவானது பயிருக்கு அல்லது எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலுக்கு ஏற்பட்ட சேதங்களின் அளவினை தீர்மானிப்பதுடன் இலங்கை மத்திய வங்கிக்கும் அறிவிக்கும். இலங்கை மத்திய வங்கிக் குழுவினால் கண்டறியப்பட்ட விடயங்களை இறுதியானதாகக் கொள்ளும்.

13.3 மேலே பிரிவு 13.2 குறிப்பிடப்பட்ட தொடர்பான குழு, பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள் மீள் அட்டவணையிடல் வசதியைப் பயன்படுத்துவதற்கும் இயலச்செய்வதற்கும் அதேபோன்று அடுத்த பயிர்ச்செய்கைப் பருவகாலத்திற்காக புதிய கடன்களை பெறச் செய்வதற்கும் அனுமதிக்கும் விதத்தில் அத்தகைய காரணிகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களினை தீர்மானிக்கின்ற பணியினை உயர்ந்தபட்சமாக ஒரு மாதத்திற்கிடையில் பூரணப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

13.4 மீள் அட்டவணைப்படுத்தும் நேரத்தில் கடன்பாட்டாளர்களினால் 10 சதவீதம் கொண்ட ஆரம்பக் கொடுப்பனவொன்று செய்யப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்ட தேவைப்பாட்டினைத் தளர்த்துவதற்காக பயிர் இழப்புக்களின் அளவு மொத்தமாக ஏற்பட்டதா அல்லது குறிப்பிடத்தக்களவிலானதா என்பதனையும் குழு தீர்மானித்தல் வேண்டும்.

13.5 மேலே 13.1ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு வேண்டுமென்றில்லாமல் செலுத்தத் தவறியவர்கள் என இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடன்பாட்டாளரொருவர் பின்வரும் சலுகைகளுக்குத் தகுதியுடையவராவர்;

(அ) தொடர்பான கடன்பாட்டாளரினால் கடன் தொகையில் குறைந்தபட்சம் 10 சதவீதம் அல்லது அதற்குக் கூடுதலான தொகை மேலே 13.4 ஆம் பிரிவிற்கு உட்பட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(ஆ) தொடர்ந்து 4 இற்கு மேற்பட்ட பயிர்ச்செய்கைப் பருவகாலங்களாக அல்லது கீழே 13.6ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான முறையில் 36 மாதங்களுக்கு மேல் நிலுவையில் இருந்த கடனை மீள் அட்டவணைப்படுத்தும் வசதி.

(இ) கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலைப் பரிசீலனையில் கொண்டு எதிர்வரும் பருவகாலத்திற்காக புதிய பயிர்ச்செய்கைக் கடன்களைப் பெறுதல்.

(ஈ) நிலுவையில் உள்ள கடன்களின் மீது தண்ட வீத வட்டி விதிக்கப்படமாட்டாது.

(உ) மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களின் மீது கடன்பாட்டாளர்களிடமிருந்து இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதமொன்று (தற்பொழுது ஆண்டிற்கு 8 சதவீதம்) விதிக்கப்படும்.

13.6 மேலே குறிப்பிடப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய மீள் அட்டவணையிடப்படட கடன்கள் தொடர்பில் வட்டி உதவுதொகைக்கான விண்ணப்பங்கள் படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஆர்ஈஎஸ்/1 இல் செய்யப்படுதல் வேண்டும். 36 மாத காலத்தை உள்ளடக்கிய மீள் அட்டவணையிடப்பட்ட கடனுக்காக தொடர்பான கடன்பாட்டாளரிடமிருந்து கேள்வி வாக்குறுதிச் சான்றிதழொன்றினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

13.7 நிலுவையிலிருந்த கடன்கள் 4 தொடர்ச்சியான பயிர்ச்செய்கைப் பருவகாலத்திற்கு அல்லது 36 மாத காலங்களுக்கு மேற்பட்டதொரு காலப்பகுதிக்கான நடுத்தர காலக்கடன்களாக மீள் அட்டவணைப்படுத்தப்படும். அத்தகைய மீள் அட்டவணையிடப்பட்ட வசதிக்காக செலுத்தப்பட வேண்டிய வட்டி உதவுதொகை வீதம் இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட தற்போது நிலவும் வட்டி வீதங்களாக இருக்கும்.

13.8 மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் தொடர்பில் தொடர்ச்சியான பயிர்ச்செய்கைப் பருவகாலத்தில் செய்யப்பட்ட அறவிடல்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். 36 மாத காலம் முடிவடைவதற்கு முன்னதாக அட்டவணையிடப்பட்ட கடன்களைக் கடன்பாட்டாளர்கள் முழுமையாகச் செலுத்திவிடுமிடத்து அத்தகைய அறவிடல்கள் மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

13.9 கடன் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட பின்னர் கடந்த தவணைப் பணம் கிரமமாக மீளச் செலுத்தப்பட்டுவருமிடத்து, தொடர்பான பயிர்ச்செய்கைப் பருவகாலத்தின் முடிவிலுள்ளவாறான வெளிநின்ற கடன் நிலுவை படிவம் இல: ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஆர்ஈஎஸ்/1 இன் நிரல் ஐந்தில் காட்டப்படல் வேண்டும்.

உதாரணம்: மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன் தொகை ரூ.10,000 ஆக இருக்குமிடத்து பின்வரும் கால இறுதியில் வெளிநின்ற கடன் நிலுவை முறையே:

| | |
|---|---|
| முதலாவது பயிர்ச்செய்கைப் பருவகாலத்தில் | ரூ. 7,500 ஆகவும் |
| இரண்டாவது பயிர்ச்செய்கைப் பருவகாலத்தில் | ரூ. 5,000 ஆகவும் |
| மூன்றாவது பயிர்ச்செய்கைப் பருவகாலத்தில் | ரூ. 2,500 ஆகவும் |

இருக்கும்.

13.10 மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களின் நன்மைகளைக் கடன்பாட்டளர்களுக்கு வழங்காமல் மீள் அட்டவணைப்படுத்தல் வசதியின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள நன்மைகளுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டாமென பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றன.

13.11 மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் தொடர்பான வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள் பின்வருமாறு வழங்கப்படும்.

அ. வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள் ஒவ்வொரு பயிர்ச்செய்கை பருவகாலத்தின் இறுதியிலும் செலுத்தப்பட வேண்டிய தொகையைக் கழித்த பின்னர் கொடுபடத்தக்கதாகவுள்ள மீதி அல்லது கடன் தவணைத் தொகையைக் கழித்த பின்னர் எஞ்சியுள்ள மீதி இதில் எது குறைவானதோ அதற்கிணங்க செலுத்தப்படும்.

ஆ. மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்கள் தொடர்பான வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள் உயர்ந்தபட்சம் 36 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பயிர் அறுவடைக்காலம் 270 நாட்களாகக் கருதப்படுகிறது.

13.12 மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் தொடர்பிலான விண்ணப்பங்கள் சரியாக நிரப்பப்பட்டு குறிப்பிட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினூடாக பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு 1 என்ற முகவரியில் சமர்ப்பித்தல் வேண்டும். பங்கேற்கும் நிறுவனங்கள் இவ்விண்ணப்பங்களின் காபன் பிரதிகளை தம்முடன் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

13.13 இலங்கை மத்திய வங்கி மீள் அட்டவணையிடப்படுகின்ற கடன்களுக்கான விண்ணப்பங்களை பின்வரும் காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளும்.

| | |
|---|---|
| முன்னைய பெரும்போகம் | - மே 1ஆம் திகதியிலிருந்து யூன் 30ஆம் திகதி வரை |
| முன்னைய சிறுபோகம் | - நவெம்பர் 1ஆம் திகதியிலிருந்து திசெம்பர் 31ஆம் திகதி வரை |

**14. பின்னைய கோரல் தீர்ப்பனவுகள்**

14.1 மத்திய வங்கியினால் கோரல் தீர்ப்பனவுகள் செய்யப்பட்ட பின்னர் கடன்பாட்டாளர்களிடமிருந்து பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் அறவிடப்பட்ட அனைத்துத் தொகைகளும் மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையே 60:40 என்ற விகிதத்தில் பகிரப்படல் வேண்டும். கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் பெறப்பட்ட எந்தவொரு அறவிடலிலும் 60 சதவீதத்தினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மத்திய வங்கிக்கு வழங்குதல் வேண்டும். இந்நோக்கத்திற்காக படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/பிசி/1 (இணைப்பு Xஇல் தரப்பட்டுள்ளது) பயன்படுத்தப்படல் வேண்டும்.

14.2 மேற்குறிப்பிடப்பட்ட படிவத்தினை அரையாண்டிற்கொரு தடவை சனவரியிலிருந்து யூன் வரையான காலப்பகுதியிலும் யூலையிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியிலும் சமர்ப்பித்தல் வேண்டும். அறவிடல் செயற்பாடுகளில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாக முறையே யூன் 30ஆம் திகதியிலிருந்து 30 நாட்களுக்கிடையிலும் திசெம்பர் 31ஆம் நாளிலிருந்து 30 நாட்களுக்கிடையிலும் மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

14.3 கடன்பாட்டாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியினை மத்திய வங்கிக்கு அனுப்பி வைப்பதில் காணப்படும் தாமதம், அறவிடல் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியான யூன் 30 இலிருந்து அல்லது திசெம்பர் 31இலிருந்து 30 நாட்களைக் கடந்திருக்குமிடத்து, தாமதிக்கப்பட்ட காலப்பகுதிக்காக மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட தண்ட வீதமொன்று பிரயோகிக்கப்படும். தாமதம் ஏற்படுமிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பணவனுப்பல்களை மேற்கொள்ளும் பொழுது தண்ட வட்டி வீதத்தினையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

14.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இலங்கை மத்திய வங்கியிலிருந்து பெறப்பட்ட மொத்த உத்தரவாதங்கள், விதிக்கப்பட்ட வட்டி, மேற்கொள்ளப்பட்ட அளவீடுகள் என்பனவற்றைக் காட்டும் பதிவேடொன்றினை பேண வேண்டும் எனவும் பரீட்சிப்புக்களின் போது அப்பதிவேட்டினை மத்திய வங்கி அலுவலர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

14.5 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் ஒவ்வொரு கிளையினாலும் கொடுபட வேண்டிய தொகையினைக் கூட்டி பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய விதத்தில் காசோலையொன்றினை அறவிடல் படிவங்களுடன் சேர்த்து ஒவ்வோராண்டும் யூன் 30ஆம் நாளிலிருந்தும் திசெம்பர் 31ஆம் நாளிலிருந்தும் 30 நாட்களுக்கிடையில் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் தாமதம் காணப்படுமிடத்து தலைமை அலுவலகம், காசோலையும் படிவங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியிலிருந்து ஆரம்பமாகும் தாமத காலத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் தண்ட வீதத்தினையும் சேர்த்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

**15. பரீட்சிப்பு**

இத்திட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்ட எந்தவொரு கடன் தொடர்பாகவும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கணக்கேடுகளையும் மற்றைய பதிவுகளையும் பரீட்சிக்கின்ற உரிமைகளையும் கள விஜயங்களை மேற்கொள்ளும் உரிமைகளையும் மத்திய வங்கி கொண்டுள்ளது.

**16. திருத்தியமைத்தல்கள் மற்றும் துணை நிரப்பல் ஏற்பாடுகள்**

இலங்கை அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் திட்டத்தினைத் திருத்தியமைத்தல்களை அல்லது புறக்கீடுகளை, அத்தகைய திகதிக்கு முன்னர் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதங்களிலிருந்து எழக்கூடிய உரிமைகள் அல்லது கடப்பாடுகளைப் பாதிக்காமல் மேற்கொள்வதற்கான உரிமைகளைத் தம்மகத்தே கொண்டுள்ளன. இத்திட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படாத விடயங்கள் ஏதேனும் தொடர்பில், இத்திட்டத்தின் நோக்கத்திற்கு அவசியமானதாக இருக்கும் அத்தகைய துணை நிரப்பல்களையும் மேலதிக ஏற்பாடுகளையும் மத்திய வங்கி மேற்கொள்ளுதல் வேண்டும்.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2011/12 பெரும்போகத்தில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

ஈ.ஏ. எட்டியாராச்சி
பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

இணைப்பு I

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

## கடன் வழங்குவதற்கான தகைமைப் பிரமாணம்

1. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வசதிகளைப் பெறுவதற்கு பின்வரும் பயிர்களின் பயிர்ச்செய்கைகள் தகைமையுடையனவாகும்.

| பயிர் வகை | பயிர் |
|---|---|
| நெல் | நெல் |
| மிளகாய் | மிளகாய் |
| வெங்காயம் | வெங்காயம் |
| பருப்பு வகை | தட்டைப் பயறு, பயறு, உழுந்து, சோயா அவரை, சோளம், குரக்கன் |
| எண்ணெய் விதை | நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி |
| கிழங்கு வகை | உருளைக்கிழங்கு, வத்தாளைக் கிழங்கு , மரவள்ளிக் கிழங்கு, பால் கிழங்கு |
| காய்கறிகள் | கத்தரிக்காய், வெண்டிக்காய், பீட்றூட், அவரை, கோவா, கரட், மிளகாய், தக்காளி, லீக்ஸ், முள்ளங்கி, நோகோல், லூவா, பாவற்காய், புடலங்காய், பூசணிக்காய் |
| ஏனையவை | எள்ளு |

2. மேற்குறிப்பிட்ட பயிர்களின் நாற்றுமேடைகள் (பொருத்தமானவிடத்து)

இணைப்பு II

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

### தகுதி பெற்ற பயிர்களுக்கான நிதியின் அளவு

| | பயிர் | நிலம் பண் படுத்தல் | நாற்று மேடை மற்றும் பயிரிடல் | வளமாக்கி | இரசாயனம் பூச்சி/ களை பங்கசுக் கொல்லி | மற்றையவை | மொத்த செலவு | ஏக்கர் ஒன்றிற்கான உயர்ந்தபட்சக் கடன் எல்லை | நில அலகுகளின் பரப்பு (ஏக்கர்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | குறைந்தது | கூடியது |
| 1. | நெல் | | | | | | | | | |
| | நீர்ப்பாசனம் | 9,455 | 4,123 | 1,957 | 3,587 | 15,208 | 34,330 | 25,000 | 0.25 | 10.0 |
| | மழை நீர் | 8,553 | 4,966 | 1,374 | 3,180 | 13,257 | 31,330 | 15,000 | 0.25 | 10.0 |
| 2. | மிளகாய் | 13,861 | 11,792 | 23,564 | 18,229 | 18,911 | 86,357 | 65,000 | 0.125 | 2.0 |
| 3. | வெங்காயம் | 6,350 | 65,124 | 14,330 | 6,761 | 37,926 | 130,491 | 95,000 | 0.125 | 2.0 |
| 4. | பருப்பு வகை | | | | | | | | | |
| | தட்டைப்பயறு | 6,790 | 10,512 | - | 2,451 | 8,760 | 28,513 | 21,000 | 0.125 | 5.0 |
| | பயறு | 8,451 | 4,480 | - | 6,491 | 11,158 | 30,580 | 23,000 | 0.125 | 5.0 |
| | உழுந்து | 9,097 | 2,176 | | 662 | 10,594 | 22,529 | 16,500 | 0.125 | 5.0 |
| | சோயா அவரை | 4,600 | 3,200 | 4,068 | 5,500 | 6,650 | 24,018 | 18,000 | 0.125 | 5.0 |
| | சோளம் | 7,041 | 6,656 | 3,853 | 9,881 | 3,401 | 30,832 | 25,000 | 0.125 | 10.0 |
| | குரக்கன் | 5,694 | 5,086 | - | - | 10,060 | 20,840 | 15,500 | 0.125 | 5.0 |
| 5. | எண்ணெய் விதைகள் | | | | | | | | | |
| | நிலக்கடலை | 7,638 | 11,890 | - | 6,159 | 10,447 | 36,134 | 25,000 | 0.125 | 5.0 |
| | எள்ளு | 7,293 | 2,666 | - | - | 7,747 | 17,706 | 12,000 | 0.125 | 5.0 |
| | சூரியகாந்தி | 4,000 | 3,000 | 2,500 | 1,000 | 4,000 | 14,500 | 8,000 | 0.125 | 5.0 |
| 6. | கிழங்கு வகை | | | | | | | | | |
| | உருளைக்கிழங்கு | 17,933 | 110,900 | 72,251 | 24,035 | 23,048 | 248,167 | 175,000 | 0.125 | 2.0 |
| | வத்தாளை | 8,100 | 4,275 | 5,437 | 4,800 | 12,600 | 35,212 | 25,000 | 0.125 | 5.0 |
| | பால் கிழங்கு | 20,000 | 12,000 | 5,000 | - | 8,000 | 45,000 | 25,000 | 0.125 | 5.0 |
| 7. | காய்கறிகள் | | | | | | | | | |
| | கத்தரிக்காய் | 6,000 | 4,800 | 10,980 | 20,700 | 18,400 | 60,880 | 40,000 | 0.125 | 2.0 |
| | வெண்டிக்காய் | 5,200 | 6,600 | 8,617 | 6,800 | 10,200 | 37,417 | 25,000 | 0.125 | 2.0 |
| | பீட்றூட் | 27,600 | 17,940 | 9,987 | 8,850 | 13,500 | 77,877 | 50,000 | 0.125 | 2.0 |
| | அவரை | 10,500 | 29,000 | 15,000 | 13,600 | 11,000 | 79,100 | 50,000 | 0.125 | 2.0 |
| | கோவா | 23,433 | 16,764 | 42,998 | 24,979 | 25,871 | 134,045 | 90,000 | 0.125 | 2.0 |
| | கரட் | 24,662 | 11,977 | 57,454 | 27,602 | 34,934 | 156,629 | 80,000 | 0.125 | 2.0 |
| | குடை மிளகாய் | 24,321 | 16,355 | 50,477 | 33,140 | 35,308 | 159,601 | 80,000 | 0.125 | 2.0 |
| | தக்காளி | 19,013 | 10,366 | 29,926 | 27,419 | 28,693 | 115,417 | 50,000 | 0.125 | 2.0 |
| | லீக்ஸ் | 29,200 | 16,050 | 12,729 | 11,200 | 24,300 | 93,479 | 70,000 | 0.125 | 2.0 |
| | முள்ளங்கி | 15,200 | 7,800 | 4,718 | 4,700 | 9,100 | 41,518 | 20,000 | 0.125 | 2.0 |
| | நோகோல் | 15,200 | 12,540 | 4,718 | 5,200 | 8,400 | 46,058 | 25,000 | 0.125 | 2.0 |
| | லூவா | 5,500 | 10,200 | 8,043 | 11,000 | 30,200 | 64,943 | 45,000 | 0.125 | 2.0 |
| | பாவாற்காய் | 5,800 | 13,100 | 7,702 | 9,500 | 32,700 | 68,802 | 45,000 | 0.125 | 2.0 |
| | புடலங்காய் | 5,500 | 11,600 | 8,864 | 10,700 | 31,100 | 67,764 | 45,000 | 0.125 | 2.0 |
| | பூசணிக்காய் | 8,172 | 7,003 | 16,469 | 8,850 | 5,784 | 46,278 | 32,000 | 0.125 | 2.0 |
| 8. | ஏனையவை | | | | | | | | | |
| | இஞ்சி | 4,000 | 65,000 | 6,000 | - | 5,000 | 80,000 | 70,000 | 0.250 | 2.0 |

9. நாற்றுமேடைகளுக்கான உயர்ந்தபட்சத் தொகை ரூ.500,000.00

**குறிப்பு:** மொத்தக் கடன் தொகையில் உயர்ந்தபட்சம் 60 சதவீதம் வரையிலான தொகையினை நிலத்தினைப் பண்படுத்தல், விதை, பயிர், வளமாக்கி, பூஞ்சணவன், பூச்சிகளின் தாக்கம் போன்றவற்றிற்காக முதல் தவணையிலும் மீதியினை கள அலுவலரின் விதந்துரைப்பின்படி வளமாக்கியின் கொள்வனவு அல்லது அறுவடைக்கான ஒன்று அல்லது இரண்டு தவணைகளிலும் வழங்க வேண்டுமென்ற நிப்நதனைக்குட்பட்டு கடன்பாட்டாளர்களின் தேவைப்பாடுகளுக்கிணங்க பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்குவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இக்கடன் தொகையானது இரசாயனம் மற்றும் வளமாக்கி அத்துடன் தொழிலாளர் செலவில் 75 சதவீதத்தினைக் கொண்ட அளவு மற்றும் பொறித்தொகுதிச் செலவில் 100 சதவீதம் என்ற அளவுகளின் விதந்துரைப்பு அடிப்படையில் இத்தொகைகள் கணிக்கப்பட்டுள்ளமையினால் கிளை முகாமையாளர்கள் ஒவ்வொரு வேளாண்மையாளரினாலும் தேவைப்படுத்தப்பட்ட தொகையினை அத்தகைய மேற்குறிப்பிட்ட செலவினை ஈடுசெய்வதற்கான அவரின் இயலாற்றலை பரிசீலனையில் கொண்டு அவரின் சொந்தக் கருத்தின்படி கடனை விடுவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பயிர்ச்செய்கை மாதிரி, நீர்ப்பாய்ச்சப்படுகின்ற நிலமா அல்லது மழை நீரை நம்பிய நிலமா, பயிர்ச்செய்கைப் பருவகாலம் - சிறுபோகம் அல்லது பெரும்போகம், கலப்புப் பயிர்ச்செய்கை மற்றும் மீள்கொடுப்பனவிற்கான வேளாண்மையாளர்களின் இயலாற்றல் போன்றவற்றிற்கிணங்க ஏக்கரொன்றிற்கான மேற்குறிப்பிட்ட உயர்ந்தபட்சக் கடன் தொகைக்குட்பட்டு, ஒவ்வொரு வேளாண்மையாளர்களுக்கும் கடன்களை வழங்குவதற்கான தீர்மானத்தினை மேற்கொள்ள கிளை முகாமையாளர்கள் தகுதியுடையவர்களாவர்.

இணைப்பு III

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

### பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கான கால அட்டவணை

| கொடுப்பனவு அட்டவணை | பெரும்போகம் ஒத்தோபர் 1ஆம் திகதி - மாச்சு 31ஆம் திகதி (அடுத்த ஆண்டு) | | சிறுபோகம் ஏப்பிறல் 1ஆம் திகதி - செத். 30ஆம் திகதி | |
|---|---|---|---|---|
| **1. வட்டி உதவுதொகை 1ஆம் தவணை** | | | | |
| 1.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான ***தொழிற்பாட்டு அறிவுறுத்தலை*** விடுத்தல் | செத்தெம்பர் 15 | ஆண்டு 1 | மாச்சு 15 | ஆண்டு 1 |
| 1.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கிக்கு வட்டி உதவுதொகை விண்ணப்பத்தினை அனுப்புவதற்கான முடிவுத் திகதி | **பெப்புருவரி 15** | ஆண்டு 2 | **ஓகத்து 15** | ஆண்டு 1 |
| 1.3 திறைசேரிக்கு விதந்துரைக்கப்பட்ட 1ஆவது தவணைக் கொடுப்பனவு | மாச்சு 15 | ஆண்டு 2 | செத்தெம்பர் 15 | ஆண்டு 1 |
| **2. வட்டி உதவுதொகை 2ஆம் தவணை** | | | | |
| 2.1 பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ***அறவிடல் அறிக்கையின்*** அச்சுப்பிரதியை அனுப்பி வைத்தல் | செத்தெம்பர் 01 | ஆண்டு 2 | மாச்சு 31 | ஆண்டு 2 |
| 2.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கிக்கு அறவிடல் அறிக்கையின் அச்சுப் பிரதியை அனுப்பி வைப்பதற்கான இறுதித் திகதி | **ஒத்தோபர் 31** | ஆண்டு 2 | **மே 31** | ஆண்டு 2 |
| 2.3 திறைசேரிக்கு விதந்துரைக்கப்பட்ட 2ஆவது தவணைக் கொடுப்பனவு | திசெம்பர் 31 | ஆண்டு 2 | யூலை 31 | ஆண்டு 2 |
| **3. கொடுகடன் உத்தரவாதம் 1** | | | | |
| 3.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கொடுகடன் ***உத்தரவாதம் 1*** படிவத்தினை அனுப்பி வைத்தல் | மாச்சு 01 | ஆண்டு 3 | செத்தெம்பர் 30 | ஆண்டு 2 |
| 3.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கிக்கு கொடுகடன் உத்தரவாதப் படிவம் 1 அனுப்பி வைப்பதற்கான இறுதித் திகதி | **ஏப்பிறல் 15** | ஆண்டு 3 | **நவெம்பர் 15** | ஆண்டு 2 |
| 3.3 கொடுகடன் உத்தரவாத இழப்பீட்டின் **1ஆவது** தவணைக் கொடுப்பனவு | மே 31 | ஆண்டு 3 | திசெம்பர் 31 | ஆண்டு 2 |
| **4. கொடுகடன் உத்தரவாதம் 2** | | | | |
| 4.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கொடுகடன் ***உத்தரவாதம் 2*** படிவத்தினை அனுப்பி வைத்தல் | செத்தெம்பர் 15 | ஆண்டு 3 | பெப்புருவரி 15 | ஆண்டு 3 |
| 4.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கிக்கு கொடுகடன் உத்தரவாதப் படிவம் 2 இனை அனுப்பி வைப்பதற்கான இறுதித் திகதி | **ஒத்தோபர் 31** | ஆண்டு 3 | **மே 31** | ஆண்டு 3 |
| 4.3 கொடுகடன் உத்தரவாத இழப்பீட்டின் **2 ஆவது** தவணைக் கொடுப்பனவு | நவெம்பர் 30 | ஆண்டு 3 | யூன் 30 | ஆண்டு 3 |

இணைப்பு IV

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஜஎஸ்/1

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

## 1ஆம் தவணை வட்டி உதவுதொகைக்கான விண்ணப்பம்

**வங்கி: ............................** **பருவகாலம்: ............................**

**கிளை: ............................** **மாவட்டம்: ................................**

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | கடன்பாட்டாளரின் முகவரி (3) | கடன்பாட்டாளரின் தே.அ.அட்டை இலக்கம் (4) | நிதியிடப்பட்ட பயிர் வகை (5) | பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கர்) (6) | ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை (7) | தொகை விடுவிக்கப்பட்ட திகதி (மா/நாள்/ஆண்டு) (8) | 0.5 சதவீதத்தில் கொடுகடன் உத்தரவாதக் கட்டணம் (ரூ.) (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | ....../..... /...... | |
| 2 | | | | | | | ....../..... /...... | |
| 3 | | | | | | | ....../..... /...... | |
| 4 | | | | | | | ....../..... /...... | |
| 5 | | | | | | | ....../..... /...... | |
| 6 | | | | | | | ....../..... /...... | |
| 7 | | | | | | | ....../..... /...... | |
| 8 | | | | | | | ....../..... /...... | |
| 9 | | | | | | | ....../..... /...... | |
| 10 | | | | | | | ....../..... /...... | |
| | | | | | - | - | | - |

மேலே காட்டப்பட்டுள்ள கடன்கள் ஆண்டிற்கு .... சதவீத வட்டியில் வங்கியின் சொந்த மூலவளங்களிலிருந்து வழங்கப்பட்டுள்ளன என்பதனையும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011இன் நியதிகளுக்கிணங்க வட்டி உதவுதொகையினைப் பெற வங்கி தகுதியுடையதெனவும் நான் உறுதிப்படுத்துகின்றறேன்.

கிளை முகாமையாளரின் பெயர்: .............................................................

கிளை முகாமையாளரின் கையொப்பம்: .............................................................

திகதி: ..................................................

கிளை முத்திரை: .............................................................

........

இணைப்பு V

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/2

**புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்**

**2ஆம் தவணை வட்டி உதவுதொகைக்கான விண்ணப்பம்**

**பருவகாலம்**

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்**

**கிளை:** ............................ **மாவட்டம்:** ............................

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | ஒப்புதலளிக்கப்பட்ட தொகை (ரூ.) (3) | தொகை விடுவிக்கப்பட்ட (மா/திகதி/ஆண்டு) (4) | விடுவிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை (ரூ.) (5) | அறவிடப்பட்ட தொகை (ரூ.) (6) | அறவிடப்பட்ட நாள் (மா/திகதி/ஆண்டு) (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 2 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 3 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 4 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 5 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 6 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 7 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 8 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 9 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 10 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| | மொத்தம் | - | | - | - | |

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பாக விடுவிக்கப்பட்ட தொகை மற்றும் அறவிடப்பட்ட தொகைகளைக் காட்டுகின்ற நிரல் (5) மற்றும் நிரல் (6) இல் உள்ள தொகைகள் சரியானவை என்பதனை நான் உறுதிப்படுத்துகின்றேன். விடுவிக்கப்பட்ட மற்றும் அறவிடப்பட்ட திகதிகளைக் காட்டுகின்ற நிரல் (4) மற்றும் நிரல் (7) உம் சரியானவையே.

கிளை முகாமையாளரின் பெயர்: ............................................ கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................... கிளை முத்திரை: .......................................................

இணைப்பு VI

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஆர்ஈஎஸ்/1

**புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்**

**மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களுக்கான கூற்று - வட்டி உதவுதொகைக்கான விண்ணப்பம்**

பருவகாலம்

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனம்**

**கிளை: .............................** **மாவட்டம்: .............................**

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.) (3) | மீள் அட்டவணையிடப்பட்ட கடன் தொகை (ரூ.) (4) | மீள் அட்டவணையிடப்பட்ட திகதி (மா/திகதி/ஆண்டு) (5) | முதலாவது (1ஆவது) பருவகாலம் (ரூ.)* (6) | இரண்டாவது (2ஆவது) பருவகாலம் (ரூ.)* (7) | மூன்றாவது (3ஆவது) பருவகாலம் (ரூ.)* (8) | நான்காவது (4ஆவது) பருவகாலம் (ரூ.)* (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| மொத்தம் | | | | | | | | |

*தொடர்பான பயிர்ச்செய்கைப் பருவகாலத்தினையும் ஒவ்வொரு பருவ காலத்திற்குமான மீள் அட்டவணையிடப்பட்ட கடன் நிலுவைகளையும் தயவு செய்து குறிப்பிடவும்.

உ-ம்: 1ஆவது பருவகாலம் - ரூ.10,000 2ஆவது பருவகாலம் - ரூ.7,500
3ஆவது பருவகாலம் - ரூ.5,000 4ஆவது பருவகாலம் - ரூ.2,500

கிளை முகாமையாளரின் பெயர்: .............................................................. கையொப்பம்: ..............................................................

திகதி: .............................................................. கிளை முத்திரை: ..............................................................

இணைப்பு VII

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஆர்ஈஎஸ்/2

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

## மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களுக்கான அறிவிடல் தொடர்பான கூற்று

பருவகாலம்

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம்

**கிளை:** ............................. **மாவட்டம்:** ............................

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.) (3) | மீள் அட்டவணையிடப் பட்ட கடன் தொகை (ரூ.) (4) | மீள் அட்டவணையிடப் பட்ட திகதி (மா/திகதி/ஆண்டு) (5) | கிரமமாக மீளச் செலுத்தப்படுகின்ற தெனின், வெளிநிற்கும் மூலதன நிலுவை (ரூ.) (6) | 1ஆம்/ 2ஆம்/ 3ஆம் பருவகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட அறவிடல்கள்* (7) | பருவகால முடிவில் உள்ளவாறு வெளிநின்ற நிலுவை (ரூ) (8) | அறவிடப்பட்ட திகதி (மா/திகதி/ஆண்டு) (9) | வட்டி உதவுதொகைக்கு தகுதியுடைய தொகை (ரூ.) (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ......./..... /...... | | | | | |
| | | | | ......./..... /...... | | | | | |
| | | | | ......./..... /...... | | | | | |
| | | | | ......./..... /...... | | | | | |
| | | | | ......./..... /...... | | | | | |
| | | | | ......./..... /...... | | | | | |
| | மொத்தம் | | | | | | | | |

*பொருத்தமற்றவற்றை வெட்டி விடவும்

நிரல் 06: கடன் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட பின்னர் கடன் தவணைப் பணம் கிரமமாக செலுத்தப்பட்டிருப்பின் தொடர்பான பயிர்செய்கை பருவகாலத்தின் இறுதியிலுள்ளவாறான வெளிநின்ற நிலுவை நிரல் 06இல் காட்டப்படல் வேண்டும்.

நிரல் 07: கடன் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட பின்னர், பயிர்ச்செய்கை பருவகாலத்தினை உடனடுத்த காலப்பகுதியில் அதாவது, முதலாவது, இரண்டாவது அல்லது மூன்றாவது பருவகாலங்களில் செலுத்தப்பட்ட தவணைக் கடன்கள் நிரல் 06இல் காட்டப்படல் வேண்டும்.

நிரல் 08: மீள் அட்டவணையிடப்பட்ட கடன் தொகையிலிருந்து நிரல் 07இல் குறிப்பிடப்பட்ட தொடர்பான தவணைப் பணத்தினைக் கழித்த பின்னர் கடன் பேரேட்டில் எஞ்சியுள்ள வெளிநிற்கும் நிலுவை நிரல் 08இல் காட்டப்படல் வேண்டும்.

நிரல் 09: வட்டி உதவுதொகைக் கொடுப்பனவிற்கு தகுதியுடைய தொகை: கடன் தவணைப் பணத்தினை கிரமமாக மீளச் செலுத்திய பின்னர் எஞ்சியுள்ள வெளிநிற்கும் நிலுவைகள் (நிரல் 05) அல்லது கடன் பேரேட்டின்படி வெளிநிற்கும் உண்மையான நிலுவை இதில் எது குறைவானதோ அது வட்டி உதவுதொகைக்கு தகைமை பெறும். இத்தொகை நிரல் 08இல் காட்டப்படல் வேண்டும்.

கிளை முகாமையாளரின் பெயர்: .................................................... கையொப்பம்: ............................................................

.........

திகதி: .......................................................... கிளை முத்திரை: .............................................................

இணைப்பு VIII

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/1

**புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்**

**கொடுகடன் உத்தரவாதம் 1ஆம் தவணைக்கான கோரல் விண்ணப்பம்**

**பருவகாலம்**

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்**

**கிளை: ............................** **மாவட்டம்: ............................**

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | வழங்கப்பட்ட தொகை (ரூ.) (3) | அறவிடப்பட்ட தொகை (ரூ.) (4) | அறிக்கையிடும் திகதியன்று வெளிநிற்கும் தொகை (வெளிநிற்கும் மூலதனத்திலிருந்து) (ரூ.) (5) | மத்தியஸ்த சபையின் பெயர் (6) | எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை (மத்தியஸ்த சபை வழக்கு இல.) (7) | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட திகதி (மா/திகதி/ஆண்டு) (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | மொத்தம் | - | - | - | | | |

1ஆவது தவணைக் கொடுகடன் உத்தரவாதக் கோரலில் வட்டி மற்றும் ஏனைய கட்டணங்கள் உள்ளடக்கப்படக்கூடாது.

முகாமையாளரின் பெயர்: ............................................ கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................... கிளை முத்திரை: .......................................................

இணைப்பு IX

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/2

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

## கொடுகடன் உத்தரவாத 2ஆம் தவணைக்கான கோரல் விண்ணப்பம்

பருவகாலம்

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம்

**கிளை: .............................** **மாவட்டம்: .............................**

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | வழங்கப்பட்ட தொகை (ரூ.) (3) | இழப்பிலுள்ள தொகை (ரூ.) (4) | முதலாவது கோரல் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரான அறவிடல்கள் (ரூ.) (5) | வேண்டுமென்றே செலுத்தத் தவறியவர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை | | | தேறிய இழப்பு (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வழக்கு தொடுக்கப்பட்ட திகதி (மா/திகதி/ஆண்டு) (6) | நீதிமன்றத்தின் பெயர் (7) | நடுவர் வழக்கு இல. (8) | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| மொத்தம் | | | | | ......./..... /...... | | | |

குறிப்பு:

நிரல் (5): 1ஆவது கோரல் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரான மீளப்பெறல்கள்

நிரல் (9): நிரல் (3) அல்லது நிரல் (4), நிரல் (5) இனைக் கழித்த பின் எது குறைவானதோ அது.

முகாமையாளரின் பெயர்: .............................................................

கையொப்பம்: .............................................................

திகதி: ..........................................................

கிளை முத்திரை: .............................................................

இணைப்பு X

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/பிசி/1

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

## கடன் அறவிடல்கள் பற்றிய விபரங்கள்

## பருவகாலம்

## பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

**கிளை: ............................** **மாவட்டம்: ............................**

| பருவகாலம் (1) | தொடர் இல.: (2) | கடன்பாட்டாளரின் பெயர் (3) | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.) (4) | கொடுகடன் உத்தரவாதமாக தீர்ப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ) (5) | கடன்பாட்டாளரிடமிருந்து அறவிடப்பட்ட தொகை (ரூ,) (6) | மத்தய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய தொகை (ரூ.) (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| மொத்தம் | | | - | - | - | - |

முகாமையாளரின் பெயர்: ............................................ கையொப்பம்: .............................................

திகதி: .......................................................... கிளை முத்திரை: ...........................................

பிரதேச அபிவிருத்தித் திணக்களம்
2011 திசெம்பர் 05

அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

### தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதியக் கொடுகடன் திட்டம்

தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதி கொடுகடன் திட்டத்தின் கீழ் 2011 யூன் 1ஆம் நாள் விடுக்கப்பட்ட இல: 2011(ஆர்டிடி/ரிடிபிஆர்எவ்/2006/02 கொண்ட அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக.

பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சில் 2011.12.02 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் செயலாளர் பச்சைத் தேயிலையைக் கொண்டு செல்வதற்கான சரக்கு வண்டிகளின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கடன் தொகையினை பின்வருமாறு திருத்துவதற்கு விதந்துரைத்துள்ளார். இதன்படி, திருத்தமானது, 2011 திசெம்பர் 5ஆம் நாளிலிருந்து இலக்கம் (2011) ஆர்டிடி/ரிடிபிஆர்எவ்/2006/02 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் உள்ளடக்கப்படுகிறது.

1. 3.4.01 (i) பச்சைத் தேயிலையைக் கொண்டு செல்வதற்கான ஊர்தியின் கொள்வனவிற்கு
   - அலகொன்றிற்கான உயர்ந்தபட்ச கடன் எல்லை - ரூ.3.0 மில்லியன்
   - மீள்கொடுப்பனவுக் காலம் - 5 ஆண்டுகள்
   - தகுதியுடைய ஊர்திகள் - சரக்கு வண்டிகள்

உங்கள் உண்மையுள்ள
ஈ.ஏ. எட்டியாராச்சி
பணிப்பாளர் /பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர்/
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2011 ஓகத்து 2

### 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) பணிப்புரை

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வியாபாரத்தின் எந்த ஒரு அம்சம் தொடர்பாகவும் அத்தகைய கம்பனிகளுக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு, 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் நாணயச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

மூலதனம் என்பது நிதிக் கம்பனிகளின் வியாபாரம் மற்றும் கடன் தீராற்றல் என்பவற்றிற்கான நிதியிடல் மூலமாக விளங்குவதனால், மூலதனமானது அத்தகைய கம்பனிகளின் வியாபாரத்தின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் விதத்தில், நாணயச்சபையானது 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க (நிதிக் கம்பனிகள் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) பணிப்புரையினை விடுப்பதுடன் இப்பணிப்புரைகள் அதன் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**ஆகக் குறைந்த மைய மூலதனம்**

1. இது தொடர்பான பந்தி 2 இன் மாற்றத்திற்குள்ளாகும் ஏற்பாடுகளுக்குட்பட்டு ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியும் எல்லா நேரங்களிலும் ரூ.400 மில்லியனுக்குக் குறையாத (ரூபா நானூறு மில்லியன்) பழுதுறா மைய மூலதனமொன்றினைப் பேணுதல் வேண்டும்.

**மாற்றத்திற்குள்ளாகும் ஏற்பாடுகள்**

2. தொழிற்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளிற்கு, இப்பணிப்புரை நடைமுறைக்கு வரும் திகதி பின்வருமாறு காணப்படும்;

   i) ஒவ்வொரு நிதிக்கம்பனியும் திசெம்பர் 2012 வரை ரூ.200 மில்லியனுக்குக் (ரூபா இருநூறு மில்லியன்) குறையாத பழுதுறா மைய மூலதனமொன்றினைத் தொடர்ந்து பேணுதல் வேண்டும்.

   ii) அதன் பின்னர், 01.01.2013 இலிருந்து எல்லா நேரங்களிலும் ரூ.300 மில்லியனுக்குக் (ரூபா முந்நூறு மில்லியன்) குறையாத மைய மூலதனமொன்றினையும், 01.01.2015 இலிருந்து எல்லா நேரங்களிலும் ரூ.400 மில்லியனுக்குக் (ரூபா நானூறு மில்லியன்) குறையாத மைய மூலதனமொன்றினையும் பேணுதல் வேண்டும்.

**இணங்கியொழுகத் தவறும் விடத்து விதிக்கப்படுகின்ற தீர்மானங்கள்**

3. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியானது இப்பணிப்புரைக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில்;

அ) வைப்புப்பொறுப்புக்கள் மற்றும் படுகடன்களின் மொத்தத்தொகையானது, இணங்கியொழுகாமை எந்த மாதத்தில் உறுதிப்படுத்தப்பட்டதோ அந்த மாத இறுதியில் உள்ள உச்ச மட்டத்தில் கணிக்கப்படுதல் வேண்டும்.

ஆ) குறைந்தபட்ச மூலதனத்தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டு பணிப்பாளர் திருப்திகொண்டுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்படும்வரை கம்பனி பங்கிலாபங்கள் செலுத்தக்கூடாது.

**வரைவிலக்கணம்**

4. இப்பணிப்புரையில்

அ) "***மைய மூலதனம்***" என்பது 2006 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரையில் தரப்பட்டுள்ள அதே வரைவிலக்கணத்தினைக் கொண்டிருக்கும்.

ஆ) "***பணிப்பாளர்***" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

**2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணிப்புரையின் நீக்கம்**

5. 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர்/**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2011 செத்தெம்பர் 5

## 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வியாபாரத்தின் எந்த ஒரு அம்சம் தொடர்பாகவும் பணிப்புரைகளை விடுப்பதற்கு, 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் நியதிகளில் நாணயச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் நிதியியல் செயலாற்றத்தின் மீதான தகவல்களை வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுவது, மேற்பார்வையுடன் கூடிய விதத்தில் அவர்களது அலுவல்களை கொண்டு நடத்துவதற்கு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு நன்மையளிப்பதாக இருக்கும். அதனால், நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் விதத்தில், நாணயச்சபையானது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரையை, இப்பணிப்புரையின் திகதியில் நடைமுறைக்கு வருமாறு விடுக்கிறது.

**தகவல்களை சமர்ப்பித்தலுக்கான தேவைப்பாடு**

1. ஒவ்வொரு நிதிக் கம்பனியும், ***மத்திய வங்கியின் நிதியியல் தகவல் முறைமை***யின் கீழ் வழங்கப்பட்டுள்ள படிவங்களுக்கிணங்க பணிப்பாளருக்கு அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டவாறு உரிய திகதியில் தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

**தற்போதுள்ள பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2. 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையின் பந்திகள் 3 மற்றும் 7, 2006ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரையின் பந்திகள் 4(i) மற்றும் 4(ii), 2006ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்கள்) பணிப்புரையின் பந்திகள் 5(i), 5(ii) மற்றும் 5(iii) மற்றும் 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரையின் பந்தி 4 என்பன இத்தால் நீக்கப்படுகின்றன. சட்டம் மற்றும் பணிப்புரைகளின் கீழ் விடுக்கப்பட்ட மற்றைய அறிக்கையிடல் தேவைப்பாடுகள் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்துமிருக்கும்.

**இணங்கியொழுகாத விடத்து விதிக்கப்படுகின்ற தீர்மானங்கள்**

3. எந்தவொரு காலாந்தரக் கூற்றுக்களையும் உரிய திகதியில் சமர்ப்பிக்கத் தவறும் சந்தர்ப்பத்தில்;

அ) அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதிக்கு முன்னதாக கம்பனியினால் இணங்கியொழுக முடியாமைக்கு நியாயமான காரணங்கள் ஏதேனும் சமர்ப்பிக்கப்பட்டிருக்குமிடத்து அதனை பரிசீலித்த பின்னர் பணிப்பாளர் 01.01.2012ஆம் நாளிலிருந்து தண்டமொன்றினை பின்வரும் விதத்தில் விதிக்கலாம்.

| அறிக்கை வகை | தண்டம் |
|---|---|
| அடுத்து வரும் வாரத்தின் முதலாவது வேலை நாளன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏதேனும் வாராந்த அறிக்கை | ஒவ்வொரு மீறலுக்கும் ரூபா நூறாயிரம் (ரூ.100,000) கொண்டதொரு தண்டம |
| அடுத்து வரும் மாதத்தின் 7ஆம் அல்லது 15ஆம் வேலை நாளன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏதேனும் மாதாந்த அறிக்கை | ஒவ்வொரு மீறலுக்கும் ரூபா இருநூறாயிரம் (ரூ.200,000) கொண்டதொரு தண்டம் |
| ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த நிதிக் கூற்று (கணக்காய்வு செய்யப்பட்டது) | ஒவ்வொரு மீறலுக்கும் ரூபா ஐந்நூறாயிரம் (ரூ.500,000) கொண்டதொரு தண்டம் |

ஆ) பணிப்பாளரினால் தண்டப்பணம் தொடர்பாக அறிவிக்கப்பட்டதன் பின்னர், தொடர்பான பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனி ஏழு வேலைநாட்களுக்குள் "முதன்மைக் கணக்காளர், இலங்கை மத்திய வங்கி" என்ற பெயருக்கு வரையப்பட்ட காசோலையினை அனுப்பி வைத்தல் வேண்டும்.

இ) தொடர்ச்சியாக இணங்கியொழுகாத சந்தர்ப்பத்தில், தொடர்ச்சியாக மூன்று அறிக்கையிடும் காலப்பகுதியில் தண்டப்பணங்கள் செலுத்தப்படாது உயர்வடைந்திருக்குமிடத்து, முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவி வகிப்பதற்குப் பொருத்தமும் தகுதியுமற்றவராக கருதப்படுவார்.

ஈ) இணங்கியொழுகாத சந்தர்ப்பத்தில் தண்டம் விதிக்கப்பட்டிருக்குமிடத்து, பதிவு செய்யப்பட்ட தொடர்பான நிதிக் கம்பனி கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றில் "***மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட தண்டம்***" என்ற தலைப்பில் தனியான குறிப்பொன்றினை வெளிப்படுத்துதல் வேண்டும்.

**வரைவிலக்கணங்கள்**

4\. அ) "*சட்டம்*" என்பது 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தினைக் குறிக்கும்.

ஆ) "*பணிப்பாளர்*" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

இ) "*மத்திய வங்கி நிதியியல் தகவல் முறைமை*" என்பது நிதியியல் தகவல்களை வழங்குகின்ற நோக்கத்திற்காக, இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் நிதியியல் நிறுவனங்களுக்காக அதனால் வழங்கப்பட்ட வெப்தள தரவுகள் பரிமாற்று முறைமை எனப் பொருள்படும்.

ஈ) "*வாரம்*" என்பது திங்கட்கிழமையிலிருந்து ஆரம்பமாகும் ஒரு வார காலப்பகுதியாகும்.

**2009ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணிப்புரையின் நீக்கம்**

5\. 2009ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது.

**அட்டவணை I: அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கான நேர அட்டவணை**

| | அறிக்கை | காலப் பகுதி | சமர்ப்பிக்க வேண்டிய திகதி |
|---|---|---|---|
| i | என்.பீ.டீ - டபிள்யூ.எப் - 15 - எல்ஏ (திரவச் சொத்துக்கள்) | வாராந்தம் | தொடர்பான வாரத்தின் இறுதியிலிருந்து அடுத்துவரும் முதலாவது வேலை நாளன்று |
| ii | என்.பீ.டீ - டபிள்யூ.எப் -16 - டீஎல் (வைப்புப் பொறுப்புக்கள்) | வாராந்தம் | தொடர்பான வாரத்தின் இறுதியிலிருந்து அடுத்துவரும் முதலாவது வேலை நாளன்று |
| iii | என்.பீ.டீ - டபிள்யூ.எப் -17 - ஏடீ (முற்பணங்கள்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7ஆம் நாள் |
| iv | என்.பீ.டீ- எம்.எப் - 04- எல்ஏ (திரவச் சொத்துக்கள்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7ஆம் நாள் |
| v | வட்டி வீதம் | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7ஆம் நாள் |
| vi | என்.பீ.டீ - எம்.எப் - 01 - பீஎஸ் (ஐந்தொகை) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| vii | என்.பீ.டீ - எம்.எப் - 02 - பீஎல் (இலாபம் மற்றும் நட்டம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |

| | | | |
|---|---|---|---|
| viii | என்.பீ.டீ - எம்.எப் - 03 - சீஏ<br>(முற்பணங்களின் வகைப்படுத்தல்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| ix | என்.பீ.டீ - எம் எப் - 07 - எஸ்எல்<br>(பிணையிடப்பட்ட பெருமளவு வெளிப்படுத்துகை(அ)) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| x | என்.பீ.டீ - எம் எப் - 07 - யூஎல்<br>(பிணையிடப்படாத பெருமளவு வெளிப்படுத்துகை(ஆ)) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xi | என்.பீ.டீ - எம் எப் - 08 - ஏஆர்<br>(தொடர்பான தரப்பினருக்கான முற்பணங்கள்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xii | என்.பீ.டீ - எம் எப் - 09 - ஐஈ<br>(பங்குகளில் முதலீடு) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xiii | என்.பீ.டீ - எம் எப் - 10 - ஜீஏ<br>(முதிர்ச்சி இடை வெளிப் பகுப்பாய்வு) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xiv | என்.பீ.டீ - எம் எப் - 11 - ஐஎஸ்<br>(வட்டி வீத உணர்வுத் தூண்டல்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xv | என்.பீ.டீ - எம் எப் - 12 - சீ1 (சீ1)<br>(மூலதனப் போதுமை விகிதம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xvi | என்.பீ.டீ - எம் எப் - 12 - சீ2 (சீ2)<br>(மூலதனப் போதுமை விகிதம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xvii | என்.பீ.டீ - எம் எப் - 12 - சீ3 (சீ3)<br>(மூலதனப் போதுமை விகிதம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xviii | என்.பீ.டீ - எம் எப் - 12 - சீ4 (சீ4)<br>(மூலதனப் போதுமை விகிதம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xix | என்.பீ.டீ - எம் எப் - 13 - எஸ்சீ<br>(துறைவாரியான கொடுகடன் வெளிப்படுத்துகை) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xx | என்.பீ.டீ - எம் எப் - 14 - ஐஎஸ்<br>(வட்டி வீத வேறுபாடு) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| xxi | ஐந்தொகை - கணக்காய்வு செய்யப்பட்டது | வருடாந்தம் | சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு (தற்பொழுது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள்) |
| xxii | இலாப நட்டக் கணக்கு - கணக்காய்வு செய்யப்பட்டது | வருடாந்தம் | சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு (தற்பொழுது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள்) |
| xxiii | மூலதனப் போதுமை விகிதம் - கணக்காய்வு செய்யப்பட்டது | வருடாந்தம் | கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையினைச் சமர்ப்பிப்பதற்கு சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறான இறுதித் திகதி (தற்பொழுது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள்) |

குறிப்பு:

(அ) “பிணையிடப்பட்ட பாரிய வெளிப்படுத்துகை” என்பது மைய மூலதன நிதியத்தின் 5 (ஐந்து) சதவீதப் பெறுமதிக்கும் கூடுதலாக வழங்கப்பட்ட கடன் வசதிகளென பொருள்படும்.

(ஆ) “பிணையிடப்படாத பாரிய வெளிப்படுத்துகை” என்பது மைய மூலதன நிதியத்தின் 1 (ஒரு) சதவீதப் பெறுமதிக்கும் கூடுதலாக வழங்கப்பட்ட கடன் வசதிகளெனப் பொருள்படும்.

## 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின், பிரிவு 9 இன் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச்சபையின் தலைவர்/**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2011 செத்தெம்பர் 05

## 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பீடு செய்யும்) பணிப்புரைகள்

1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9இன் நியதிகளில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு, அத்தகைய கம்பனிகளின் வியாபாரம் எத்தகைய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பாக அத்தகைய கம்பனிகளுக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தமும் தகுதியும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வியாபாரத்தினை மேற்கொள்வது தொடர்பான சிறந்த ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு முக்கிய தேவைப்பாடாகவுள்ளது. இவை, அத்தகைய கம்பனிகளின் உறுதிப்பாட்டினை மேம்படுத்தும். ஆகவே, நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9இன் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தும் விதத்தில் பணிப்பாளர்களினதும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களினதும் பொருத்தம் மற்றும் தகுதி தொடர்பாக 2011இல் 3ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பணிப்பாளராக அல்லது நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற அலுவலராக நியமிக்கப் படுவதற்கான தகுதியீனங்கள்**

1. நிதிக் கம்பனியின் பணிப்பாளர் ஒருவர் அல்லது நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஒருவர் (இதனகத்துப் பின்னர் ‘அலுவலர்’ எனக் குறிப்பிடப்படுபவர்) இப்பணிப்புரையின் ஏற்பாட்டு நியதிகளின்படி பணிப்பாளராக அல்லது அலுவலராக பதவி வகிப்பதற்கு பொருத்தமான, தகுதியான ஆளாக இருந்தாலொழிய அவர் அத்தகைய கம்பனியில் பணிப்பாளராக அல்லது அலுவலராக நியமிக்கப்படக் கூடாது.

**பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கான பிரமாணம்**

2.1 மேலேயுள்ள பணிப்புரை 1இன் நோக்கங்களுக்காக ஆளொருவரின் பொருத்தம் மற்றும் தகுதி பற்றி மதிப்பிடுவதற்கு பணிப்பாளர் பின்வரும் விடயங்களை பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(அ) அத்தகைய ஆள் கல்விசார் தகைமைகளை அல்லது தொழில்சார் தகைமைகளை அல்லது வங்கித்தொழில், நிதி, வியாபாரம் அல்லது நிருவாகம் அல்லது வேறு ஏதேனும் துறைகளில் காத்திரமான அனுபவங்களை கொண்டுள்ளார்;

(ஆ) அத்தகைய ஆள் மோசடியை, வஞ்சனையை நேர்மையீனத்தை அல்லது இது போன்ற வேறு ஏதேனும் குற்ற நடத்தையை உள்ளடக்குகின்ற நடத்தைக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் நிறுவப்பட்ட பொலிஸ், ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வை அதிகாரசபை, தொழில்சார் அமைப்பு, விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஏதேனும் சபையின் புலனாய்வு அல்லது விசாணைக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்;

(இ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் சட்டத்தினால் நிறுவப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தினால் ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வை அதிகாரசபையினால், தொழில்சார் அமைப்பினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாய சபையினால் அல்லது வேறு ஏதேனும் சபையினால் மோசடியை, வஞ்சனையை, நேர்மையீனத்தை, முறையற்ற நடத்தையை புரிந்துள்ளமை அல்லது இங்கே விடுக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள், அல்லது விதிகள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் அல்லது தீர்மானங்கள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகாமை தொடர்பாக குற்றவாளியொருவராக காணப்படாதவராக இருத்தல் வேண்டும்;

(ஈ) மோசடி, வஞ்சனை, நேர்மையீனம் அல்லது இதையொத்த குற்ற நடவடிக்கைகளுடன் தொடர்பான குற்ற நடவடிக்கைக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் அத்தகை ஆள் குற்றத் தீர்ப்பளிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்;

(உ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அத்தகைய ஆள் கடன் தீராற்றல் அற்றவராகவோ அல்லது வங்குரோத்துக்காரராகவோ பிரகடனப்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்;

(ஊ) அத்தகைய ஆள், இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பினை அல்லது கட்டளையினை திருப்தி செய்வதற்கு அல்லது ஒரு படுகடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு தவறாதவராக இருத்தல் வேண்டும்;

(எ) அத்தகைய ஆள், இலங்கையில் அல்லது வெளிநாட்டில் தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவரென வெளிப்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்;

(ஏ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஏதேனும் வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட சபையில் பணிப்பாளர், முதன்மை நிறைவேற்று அலுவலர், அல்லது வேறு ஏதேனும் அலுவலர் அல்லது ஊழியரொருவராக பணிபுரிவதிலிருந்தும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையின் கட்டளை மூலம் அகற்றப்படாதவராக அல்லது இடைநிறுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்;

(ஐ) அத்தகைய ஆள்,

(i) ஒழுங்குமுறைப்படுத்தல் காரணங்களுக்காக, எந்த வங்கியின் அல்லது நிதி நிறுவனத்தின் உரிமம் அல்லது வியாபாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதோ அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளதோ அந்த வங்கியின் அல்லது நிதிக் கம்பனியின் அல்லது நிதியியல் நிறுவனத்தில்; அல்லது

(ii) எந்த வங்கி அல்லது நிதிக் கம்பனி அல்லது நிதியியல் நிறுவனங்கள் ஒடுக்கப்பட்டுள்ளதோ அல்லது கட்டாயமாக ஒடுக்கப்பட்டு வருகின்றதோ அந்த வங்கியில் அல்லது நிதிக் கம்பனியில் அல்லது நிதி நிறுவனத்தில்

இலங்கையிலும் சரி வெளிநாட்டிலும் சரி பணிப்பாளராக, முதன்மை நிறைவேற்று அலுவலராக அல்லது அதிகாரத்திலுள்ள வேறு ஏதேனும் பதவியை வகித்தவராக இருத்தல்கூடாது.

2.2 மேலும், நிதிக் கம்பனிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பணிப்புரையின் 5ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்களும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

**பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பிடுவதில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை**

3.1 ஒவ்வொரு நிதிக் கம்பனியும் நியமிக்கப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்ட தொடர்பான பணிப்பாளர்கள் அல்லது அலுவலர்களிடமிருந்து முறையே இணைப்பு I மற்றும் இணைப்பு IIஇல் உள்ளவாறான சத்தியக்கடதாசி ஒன்றையும் பிரகடனமொன்றினையும் பெற்று அதனை பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.2 3.1 இற்கு புறம்பாக, அத்தகைய பணிப்பாளர் அல்லது அலுவலர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு உடனடியாக முற்போந்த அலுவலகத்தில் வகித்த பதவி தொடர்பாக குறிப்பிட்ட அந்நிறுவனத்தில் அவருக்கு/ அவளுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளின் செயலாற்ற மட்டம் தொடர்பான நிறுவனத்திடமிருந்து/ கம்பனியிடமிருந்து பெற்ற கடிதமொன்றினை பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.3 ஏற்கனவேயுள்ள பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்களைப் பொறுத்தவரை நிதிக் கம்பனிகள் இப்பணிப்புரை வழங்கப்பட்டு முப்பது நாட்களுக்கிடையில் சத்தியக்கடதாசியினையும் பிரகடனத்தினையும் பெற்று அவற்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.4 தொடர்ந்து பதவி வகிக்கும் பணிப்பாளரொருவரைப் பொறுத்தவரை அத்தகைய பணிப்பாளர் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு, தொடர்பான நிதிக் கம்பனியின் ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக சத்தியக் கடதாசியினையும் பிரகடனங்களையும் அவர்களிடமிருந்து பெற்று பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பணிப்பாளரின் ஒப்புதல்**

4.1 மேலேயுள்ள பணிப்புரை 2இல் குறித்துரைக்கப்பட்ட விடயம் தொடர்பாக ஆராய்ந்து பணிப்பாளர், நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளராக அல்லது அலுவலராக செயற்படும் விதத்தில் விடயத்தினைப் பொறுத்து நியமனத்தினை அல்லது தொடர்ந்து கடமையாற்றுவதற்கு ஒப்புதலளிக்கலாம் அல்லது ஒப்புதலளிக்க மறுக்கலாம்.

4.2 பணிப்பாளர், அத்தகைய ஒப்புதலுக்கான அல்லது மறுப்பிற்கான காரணங்களை நிதிக் கம்பனிக்கு தெரியப்படுத்தலாம் என்பதுடன் அத்தகைய தெரிவித்தலை நிதிக் கம்பனியானது உரிய பணிப்பாளருக்கு அல்லது அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டியதுடன் அதனை நடைமுறைப்படுத்தலும் வேண்டும்.

**எந்தவொரு நேரத்திலும் பணிப்பாளரின் தீர்மானம்**

5. மேலேயுள்ள பணிப்புரை 2இல் குறித்துரைக்கப்பட்ட விடயம் தொடர்பாக பணிப்பாளர் ஆராய்ந்து நியமிக்கப்பட்ட அல்லது தொடர்ந்து பதவி வகிக்க ஒப்புதலளிக்கப்பட்ட ஆள் பணிப்பாளராக அல்லது அலுவலராக தொடர்ந்தும் இருப்பதற்கு பொருத்தமும் தகுதியுமற்றவர் என எந்தவொரு நேரத்திலும் திருப்தியற்று அத்தகைய ஆள் நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளராக அல்லது அலுவலராக இருப்பதற்கு பொருத்தமும் தகுதியற்றவர் என தீர்மானிக்கலாம் என்பதுடன் மேலேயுள்ள 4.2 பணிப்புரை அதன் பின்னர் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

**பின்னரான தகைமையீனங்கள் அறிவிக்கப்படுதல் வேண்டும்**

6.1 ஒவ்வொரு நிதிக் கம்பனியும் எவரேனும் பணிப்பாளர் அல்லது அலுவலர் தொடர்பில் தொடர்பான நிதிக் கம்பனியில் பதவி வகிப்பதற்கு பொருத்தமும் தகுதியுமற்றவர் என எவரேனும் பணிப்பாளரை நியாயமான முறையில் சந்தேகிக்குமிடத்து அல்லது கண்டறியுமிடத்து அத்தகைய சந்தேகத்தினை அல்லது கண்டறியப்பட்டவற்றை பதினான்கு நாட்களுக்கிடையில் பணிப்பாளருக்கு அறியத்தருதல் வேண்டும்.

6.2 சூழ்நிலைகள் வேறுபாடடைந்து, மாற்றமுற்று, செயலாற்றம் செல்லுபடியற்றதாகி, பணிப்பாளரொருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசி அல்லது பிரகடனம் ஏற்புடைத்தற்ற அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்குமிடத்து அத்தகைய ஆள் பற்றி பதினான்கு நாட்களுக்கிடையில் பணிப்பாளருக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

**நாணயச் சபைக்கு மனுச் செய்தல்**

7.1 மேலேயுள்ள பணிப்புரை 4.1 அல்லது 5இன் கீழ் பணிப்பாளரின் மறுப்பு அல்லது தீர்மானத்தின் மூலம் பாதிக்கப்பட்ட ஒருவர் நிதிக் கம்பனியினால் அனுப்பப்பட்ட தகவலைப் பெற்ற பதினான்கு நாட்களுக்கிடையில், நியாயமொன்றைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் நியாயங்களை விளக்கி நாணயச் சபைக்கு மனுச் செய்யலாம்.

7.2 பணிப்பாளரினால் வழங்கப்பட்ட காரணங்களையும் பாதிக்கப்பட்ட தரப்பின் ஆட்சேபங்களையும் பரிசீலித்த பின்னர் நாணயச் சபை ஒன்றில் பணிப்பாளரினால் செய்யப்பட்ட மறுப்பினை உறுதிப்படுத்தும் அல்லது நிராகரிக்கும்.

**விளக்கம்**

8. சந்தர்ப்பம் வேறுவிதமாக தேவைப்படுத்தினாலன்றி இப்பணிப்புரையில்:

(அ) “சட்டம்” என்பது 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டமென பொருள் கொள்ளப்படும்.

(ஆ) “பணிப்பாளர்” என்பது 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 46ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

(இ) இப்பணிப்புரையின் கீழ் எந்தவொரு ஆவணத்தினதும் “பெறப்பட்ட திகதி” என்பது தொலைநகல், இலத்திரனியல் அஞ்சல் அல்லது நேரடியாக விநியோகிக்குமிடத்து, அது அதே நாளன்று அனுப்பப்படுவது எனப்படும். பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டதாயின் அனுப்பப்பட்ட நாளிலிருந்து 3 வேலை நாட்கள் முடிவடைவதனைக் குறிக்கும். தெளிவுபடுத்தும் நோக்கத்திற்காக, ஒன்றிற்கு மேற்பட்ட விநியோக முறையில் ஆவணம் அனுப்பி வைக்கப்பட்டிருக்குமிடத்து மிக விரைவான முறையின் விநியோக நேரமே கருத்திற் கொள்ளப்படும்.

(ஈ) நிதிக் கம்பனியொன்றில் நிறைவேற்றுத் தொழிற்பாட்டினை பின்வரும் அலுவலர்கள் மேற்கொள்கின்றனர்.

(i) முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்

(ii) மேலதிக பொது முகாமையாளர்

(iii) மூத்த துணை பொது முகாமையாளர்

(iv) துணை பொது முகாமையாளர்

(v) உதவி பொது முகாமையாளர்

(vi) முதன்மை தொழிற்பாட்டு அலுவலர்

(vii) முதன்மை இடர்நேர்வு அலுவலர்

(viii) முதன்மைக் கணக்காளர்

(ix) முதன்மை நிதியியல் அலுவலர்

(x) முதன்மை உள்ளக கணக்காய்வாளர்

(xi) இணங்குவிப்பு அலுவலர்

(xii) திறைசேரி தலைவர்

(xiii) சட்டத் துறைத் தலைவர்

(xiv) தகவல் தொழில்நுட்பத் தலைவர்

(xv) கம்பனிச் செயலாளர்

(xvi) நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு ஆலோசனையாளர் அல்லது மதியுரையாளராக பணியாற்றும் அலுவலர்கள்

(xvii) கொடுகடன், சொத்துக்கள் தொடர்பான தீர்மானங்கள் மற்றும் தொடர்பான நிதிக் கம்பனியின் உற்பத்திகள் என்பனவற்றின் சந்தைப்படுத்தலுடன் தொடர்பான அலுவலர்கள்

(xviii) 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரையில் "முதன்மை முகாமைத்துவ ஆளணியினர்" என குறிப்பிடப்பட்ட கருத்தெல்லைக்குள் வரும் மற்றைய எவரேனும் அலுவலர்

**இணைப்பு I**

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியின் பெயர்

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் பணிப்பாளர்களினாலும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களினாலும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியப் பிரமாணம்

......................................... எனும் முகவரியில் வசிப்பவரும் ................................ என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு என்பவற்றைக் கொண்டவரும் ..................................................................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு (பௌத்த/ இந்து சமயத்தவர் என்ற வகையில் உண்மையாகவும் பயபக்தியுடனும் விசுவாசமாகவும் பிரகடனம் செய்கிறேன்/ உறுதிப்படுத்துகிறேன்/ கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லிம் என்ற வகையில் சத்தியம் செய்து) பின்வருவனவற்றை தெரிவித்துக் கொள்கின்றேன்.

1. மேற்கூறப்பட்ட (உறுதிப்படுத்துபவர்/ வாக்குமூலம்) அளிப்பவரும் நான்தான் என்பதுடன் ................................. இல் (பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியின் பெயர்) ......................... .............................................. பதவியினை வகிப்பவருமாவேன்.

2. நான் பின்வரும் கல்விசார் தகைமையையும்/ தகைமைகளையும் தொழில்சார் நிபுணத்துவ தகைமையையும்/ தகைமைகளையும் கொண்டுள்ளேன் என்பதனை (உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

3. வங்கி, நிதி, வர்த்தகம், நிர்வாகம் அல்லது இவை தொடர்பான துறைகளில் நான் காத்திரமான தகைமைகளை கொண்டிருக்கிறேன் என்பதனையும் பயன்படுத்தக்கூடிய அனுபவங்கள் பின்வருமாறு இருக்கும் எனவும் நான் (உறுதிப்படுத்துகிறேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

4. 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடும்) பணிப்புரையின் பந்தி 2.1இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்திற்கும் நான் உள்ளாகவில்லை என உறுதிப்படுத்துகின்றேன்/ வாக்கு மூலம் அளிக்கின்றேன்.

இதில் அடக்கப்பட்ட பிரதிக்ஞைகளை இப் பிரதிக்ஞை செய்பவருக்கு (உறுதிப்படுத்துபவர்/ தெரிவிப்பவர்) வாசித்து விளங்கப்படுத்திய பிற்பாடு அதனை விளங்கிக் கொண்டு அதனை உண்மை எனவும் ஏற்றுக் கொண்டும் உறுதிப்படுத்துகின்றார் சத்தியம் செய்து தனது கையெழுத்தினை ............ ஆண்டு .............. திகதியில் ............... இல் இடுகின்றார்.

முத்திரை பதிக்கவும்

என் முன்னிலையில்

சமாதான நீதிவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்

இணைப்பு II

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியின் பெயர்:

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் பணிப்பாளரினாலும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களினாலும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்

**(..................... இற்குப் பொருத்தமான இணைப்புக்களுடன்)**

1. **தனிப்பட்ட விபரங்கள்**
   - 1.1 முழுப் பெயர்:
   - 1.2 அடையாள அட்டை:
   - 1.3 கடவுச் சீட்டு இலக்கம்:
   - 1.4 பிறந்த திகதி:
   - 1.5 நிரந்தர முகவரி:
   - 1.6 தற்போதைய முகவரி:
2. **நிதிக் கம்பனியில் நியமனம்:**
   - 2.1 சபைக்கு/ தற்போதைய பதவிக்கு நியமனம் பெற்ற திகதி: (நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களைப் பொறுத்தவரை தயவுசெய்து நியமனக் கடிதமொன்றின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதப் பிரதியொன்றை இணைக்கவும்)
   - 2.2 பதவி:
   - 2.3 உள்நாட்டவர்∴ வெளிநாட்டவர்:
   - 2.4 ஆண்டு ஊதியம் (விபரங்களுடன்):
   - 2.5 பணிப்பாளர் அல்லது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களினாலும் அத்துடன் அல்லது அவரின்/ அவளின் குடும்பத்தவரும் கம்பனிச் சொத்துக்களிலிருந்து (உதாரணமாக கம்பனியின் நிலம், கட்டடம், ஊர்தி போன்றவை) பெற்றுக் கொள்ளும் நன்மைகளின் ஆண்டுப் பெறுமதி
     - 2.5.1 சொத்துக்களைப் பேணுவது தொடர்பாக 2.5இல் குறிப்பீடு செய்யப்பட்ட அல்லது வேறு ஏதேனும் செலவுகளை (கொடுகடன் அட்டைப்பட்டியல், பொதுப் பயன்பாட்டு வசதிப்பட்டியல் போன்றன) மீளளிப்பது தொடர்பாக ஏற்படுகின்ற செலவுகள்
3. **உறவினர்களின் தனிப்பட்ட விபரங்கள்**
   - 3.1 வாழ்க்கைத் துணைவரின் முழுப் பெயர்:
   - 3.2 அடையாள அட்டை:
   - 3.3 கடவுச் சீட்டு இலக்கம்:
   - 3.4 தங்கி வாழும் பிள்ளைகளின் பெயர்கள்:

| | முழுப் பெயர் | அடையாள அட்டை | கடவுச்சீட்டு இல. |
|---|---|---|---|
| 3.3.1 | | | |
| 3.3.2 | | | |
| 3.3.3 | | | |

4. **பின்னணியும் அனுபவமும்**

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்/ அல்லது உரிமம் பெற்ற வங்கி/கள், ஏதாவது இருப்பின் அவற்றில் அவன்/ அவள் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றியிருந்தால் அவை பற்றிய விபரம்

| நிறுவனத்தின் பெயர் | பதவியிலிருந்த காலம் | பதவி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

5. **நிதிக் கம்பனிகள் மற்றும் அவற்றினுடைய தொடர்புபட்ட கம்பனிகளில் பங்குடமை**

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள், அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் தற்போது அவற்றில் வைத்திருக்கும் பங்கு உரிமையாண்மை:

| நிறுவனத்தின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | பங்குடமை சதவீதம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

6. வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்[1]

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின், அவற்றுடன் பணிப்பாளர்கள் அல்லது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர் வைத்திருக்கும் ஏதாவதொரு வியாபாரக் கொடுக்கல்வாங்கல்

| நிறுவனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் திகதி | ................இல் தொகை (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படும்/ செயற்படாத) | பிணை வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | நிலுவை | | | |
| நிதிக் கம்பனியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் மற்றும் அத்தகைய கடன் வசதிகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| நிதிக் கம்பனியில் செய்து கொண்டுள்ள (வாக்குறுதிச் சான்றிதழ்/ வர்த்தகப்பத்திரம் போன்ற) முதலீடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| வைப்புக்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

7. உறவினர்களின் நியமனம், பங்குடமை மற்றும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்

7.1 பணிப்பாளர் அல்லது தற்பொழுது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலரின் நெருங்கிய உறவினர்கள் எவராவது ஏதேனும் நிதிக் கம்பனிகளில் இருப்பின்,

| நிதிக் கம்பனியின் பெயர் | உறவினரின் முழுப் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

1 - "வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது ஏதாவது கடன் வசதிகள், முதலீடுகள் மற்றும் வைப்புக்களைக் குறிக்கும்.

7.2 ஏதாவதொரு உறவினர் நேரடியாக/ மறைமுகமாக நிதிக் கம்பனியில் பங்குடமைகள் ஏதும் வைத்திருப்பின்,

| நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | | வைத்திருக்கும் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | நேரடியாக | மறைமுகமாக | நேரடியாக | மறைமுகமாக |
| | | | | |
| | | | | |
| | | | | |

7.3 உறவினர் நிதிக் கம்பனியுடன் வைத்துள்ள ஏதாவதொரு வியாபார கொடுக்கல்வாங்கல்

| உறவினரின் முழுப் பெயர் | கொடுக்கல்வாங்கலின் தன்மை | கொடுக்கல்வாங்கலின் திகதி | ........... இல் வரையறை (ரூ. மில்.) | ........... இல் வெளிநின்றவை (ரூ. மில்.) | பிணையின் வகையும் பெறுமதியும் (ரூ.மில்) | நிதிக் கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

8. **மேற்கூறப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய ஏதாவது விபரிப்பு/ தகவல்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியின் பணிப்பாளர் அல்லது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்வதற்கு தொடர்புடையது எனக் கருதப்படும் ஏனைய தகவல்கள்.**

பிரகடனம்

எனது அறிவுக்கு எட்டிய வரையில் மேலேயுள்ள தகவல்கள் சரியானவையும் பூரணமானவையுமென நம்புகிறேன். மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பாக இனிமேல் இடம்பெறக்கூடிய அனைத்து நிகழ்வுகளையும் சாத்தியமானளவிற்கு விரைவாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிக்கும் பணிப்பாளர், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கிக்கும் அறியத் தருவேன் என்பதற்கும் உடன்படுகின்றேன்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு நான் நியமிக்கப்படுவதனை எந்தவொரு சட்டமும் தடை செய்யவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி : நிதிக் கம்பனியின் பணிப்பாளர் அல்லது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலரின் கையொப்பம்

---

**நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்கள் தொடர்பாக முதன்மை நிறைவேற்று அலுவலரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது**

மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பான வேறு ஏதேனும் விளக்கங்கள்/ தகவல்களும் நிதிக் கம்பனியில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஆளின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கு தொடர்பானது எனக் கருதப்படுகின்ற வேறு தகவல்களும்.0

திகதி: முதன்மை நிறைவேற்று அலுவலரின் கையொப்பமும் அலுவலக முத்திரையும்

**முதன்மை நிறைவேற்று அலுவலர் தொடர்பாக பணிப்பாளர் சபையின் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது**

மேலே தரப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்பான வேறு ஏதேனும் விளக்கங்கள்/ தகவல்களும் முதன்மை நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஆளின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கு தொடர்பானது எனக் கருதப்படுகின்ற வேறு தகவல்களும்.

திகதி : பணிப்பாளர் சபைத் தலைவரின் கையொப்பம்

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரை.

கே.எம்.ஏ.என். டவுலகல
**பணிப்பாளர்**
**வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

2011 மாச்சு 30

## 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப் பணிப்புரை 2011ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இல் குறிப்பிடப்படுகின்ற பகிரங்கக் கம்பனியாக விளங்கும் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்கும் (இதனகத்துப் பின்னர் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி என குறிப்பிடப்படும்) ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

**குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதம்**

2. (i) ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் எல்லா நேரங்களிலும் அவற்றின் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக, கணிக்கப்பட்ட 5 சதவீதத்திற்குக் குறையாத மைய மூலதன விகிதத்துடன் சேர்த்து குறைந்தபட்சம் 10 சதவீதம் கொண்ட மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்படட மூலதனப் போதுமை விகிதத்தினை பேணுதல் வேண்டும்.

   (ii) மேலே பிரிவு 2(i)இல் குறிப்பிடப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் இங்கேயுள்ள அட்டவணை 1இல் தரப்பட்டுள்ள வழிகாட்டல்களின்படி கணிக்கப்படுதல் வேண்டும்.

**அறிக்கையிடும் படிவம்**

3. அட்டவணை 1இல் குறித்துரைக்கப்பட்டவாறு, காலாந்தர அடிப்படையில் மூலதனப் போதுமை விகிதத்தினை அறிக்கையிடுவதற்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் இங்கே இணைக்கப்பட்டுள்ள அட்டவணை IIஇல் உள்ள படிவத்தினைப் பயன்படுத்துதல் வேண்டும்.

**பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்**

4. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்று இப்பணிப்புரைக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து அத்தகைய சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி அத்தகைய இணங்குவிப்புக்களை மேற்கொண்டு பணிப்பாளர் அதனை உறுதிப்படுத்தும் வரை பங்கிலாபங்களைச் செலுத்த முடியாது.

**பணிப்புரையினை நடைமுறைப்படுத்தல்**

5. இப் பணிப்புரையானது 2011.07.01 இலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

அட்டவணை I

## மூலதனப் போதுமை விகிதத்தினை கணிப்பதன் மீதான வழிகாட்டல்கள்

1. **குறைந்தபட்ச மூலதன விகிதம்**

அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் எல்லா நேரத்திலும் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுதல் வேண்டும்.

2. **அறிக்கையிடும் படிவம்**

2.1 இணைக்கப்பட்டுள்ள அறிக்கையிடும் படிவம் (அட்டவணை II) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மூலதனப்போதுமை நிலை மீதான தகவல்களை திரட்டுகின்றது. கூற்றுக்கள் 3 முக்கிய பகுதிகளை உள்ளடக்கியிருப்பதுடன் இவை வெப்தளத்தினூடாக சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

2.1.1 பகுதி I - என்பீஎல்-எம்எவ்-20-ஆர்டபிள்யுசிஏ 1 (மூலதனப் போதுமை விகிதத்தினை கணித்தல்)

2.1.2 பகுதி II - என்பீஎல்-எம்எவ்-20-ஆர்டபிள்யுசிஏ 2 (மொத்த மூலதனத்தினைக் கணித்தல்)

2.1.3 பகுதி III - என்பீஎல்-எம்எவ்-20-ஆர்டபிள்யுசிஏ 3 (மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களை கணித்தல்)

3. **சமர்ப்பிக்க வேண்டிய திகதிகள்**

3.1 ஒவ்வொரு மாதத்தினதும் இறுதியிலுள்ளவாறான கூற்றுக்களை ஒவ்வொரு மாதமும் முடிவடைந்த பின்னர் பதினைந்து நாட்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.2 ஒவ்வொரு நிதியாண்டினதும் இறுதியிலுள்ளவாறான கூற்றுக்களை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னரான ஆறு மாத காலப்பகுதியினுள் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. **மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணித்தல்**

4.1 **தகுதி வாய்ந்த மைய மூலதனம் (தகுதி வாய்ந்த அடுக்கு-1)**

**(டபிள்யுபீஆர்சி 20.1.1.0.0.0)**

தொகையானது கீழேயுள்ள மொத்த மூலதன தளத்தினைக் கணிப்பது தொடர்பான பகுதி IIஇன் விடயம் 6 உடன் இணங்கிச் செல்வதாக இருத்தல் வேண்டும்.

4.2 **மூலதனத் தளம்**

**(டபிள்யுபீஆர்சி 20.1.2.0.0.0)**

தொகையானது கீழேயுள்ள மொத்த மூலதன தளத்தினைக் கணிப்பது தொடர்பான பகுதி IIஇன் விடயம் 13 உடன் இணங்கிச் செல்வதாக இருத்தல் வேண்டும்.

4.3 **மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகை**

**(டபிள்யுபீஆர்சி 20.1.3.0.0.0)**

இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள், பல்வேறு வகைச் சொத்துக்களுக்குமான இடர்நேர்வுகளைக் கூட்டுவதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன. இத்தொகையானது கீழேயுள்ள மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணிப்பது தொடர்பான பகுதி III இன் விடயம் 23 உடன் இணங்கிச் செல்வதாக இருத்தல் வேண்டும்.

4.4 **மைய மூலதன (அடுக்கு 1) விகிதம், %**

**(டபிள்யுபீஆர்சி 20.1.4.0.0.0)**

மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினால் (பகுதி Iஇன் விடயம் 1) பிரிக்கப்பட்ட தகுதி வாய்ந்த மைய மூலதனம் (பகுதி Iஇன் விடயம் 3).

4.5 **மொத்த மூலதன விகிதம், %**

**(டபிள்யுபீஆர்சி 20.1.5.0.0.0)**

மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினால் (பகுதி Iஇன் விடயம் 3) பிரிக்கப்பட்ட மொத்த மூலதனத் தளம் (பகுதி I இன் விடயம் 2).

5. **மொத்த மூலதன தளத்தினைக் கணித்தல் (பகுதி II)**

6. **தகைமை வாய்ந்த மைய மூலதனம் (தகுதி வாய்ந்த அடுக்கு 1)**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.0.0)**

தகுதி வாய்ந்த மைய மூலதனம் என்பது மைய மூலதனத்திற்கு செய்யப்பட்ட கழிவுகள்/ சீராக்கங்களின் மொத்த தொகையினைக் கழித்த மொத்த மைய மூலதனமாக இருத்தல் வேண்டும். தொகையானது கீழேயுள்ள பகுதி IIஇல் விடயம் 8இலிருந்து 7இனைக் கழித்த தொகையுடன் இணங்குவதாக இருத்தல் வேண்டும்.

7. **மைய மூலதனம் (அடுக்கு 1)**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.1.0)**

மைய மூலதனம் என்பதன் கருத்து 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (குறைந்தபட்ச மைய மூலதனம்) பணிப்புரையினால் வழங்கப்பட்ட அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். தொகையானது, கீழேயுள்ள மொத்த மூலதனத் தளத்தின் பகுதி II இன் விடயங்கள் 7.1 இலிருந்து 7.8 வரையான தொகையுடன் இணங்கியிருத்தல் வேண்டும்.

7.1 **வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள் அல்லது பொது இருப்புக்கள்**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.1.1)**

வழங்கப்பட்டு முழுமையாகச் செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள் அல்லது பொது இருப்புக்கள். கணிப்பிற்காக, பகுதியளவு செலுத்தப்பட்ட பங்குகள் அல்லது இருப்புக்களின் செலுத்தப்பட்ட பங்குகள் மாத்திரம் மூலதனமாக கருதப்படுதல் வேண்டும். ஒதுக்குகள், மிகைகள், நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்கள் என்பனவற்றிற்கு எதிராக வழங்கப்பட்ட ஏதேனும் பங்குகள் உள்ளடக்கப்படுவதற்கு தகுதியுடையனவல்ல.

7.2 **ஒன்று சேராத, மீட்கப்படாத முன்னுரிமைப் பங்குகள்**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.1.2)**

வழங்கப்பட்டு முழுமையாகச் செலுத்தப்பட்ட ஒன்று சேர்க்கப்படாத, மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளைப் பொறுத்தவரை அத்தகைய கொடுப்பனவுகளை பகுதியளவில் அல்லது முழுமையாக மேற்கொள்வதற்கு இலாபத்தன்மை போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் பங்கிலாபங்களின் கொடுப்பனவுகளைக் குறைக்க முடியும் அல்லது நிரந்தரமாக தளர்த்தல் செய்ய முடியும்.

7.3 **சாதாரண பங்குகளின் சமப் பெறுமதியிலும் பார்க்க வழங்கல் விலை மிகையாக இருத்தல்**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.1.3)**

ஏற்புடைத்தானவிடத்து சாதாரணப் பங்குகளின் சமப் பெறுமதியிலும் பார்க்க வழங்கல் விலை மிகையாக இருத்தல், பொது இருப்பு அல்லது ஒன்று சேர்ந்த, மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள்.

7.4 **நியதி ஒதுக்கு நிதியம்**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.1.4)**

2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (ஒதுக்கு நிதியம்) பணிப்புரையின் நியதிகளுக்கிணங்க குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் ஏற்படுத்தப்பட்ட ஒதுக்கு நிதியத்திலுள்ள இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றின் படியான நிலுவை.

7.5 **பொதுவான அல்லது ஏனைய கட்டற்ற ஒதுக்குகள்**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.1.5)**

இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்களின்படி பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள், பங்குக் கட்டுப் பணங்கள் அல்லது மற்றைய தேறல் செய்யப்பட்ட மிகைகள் என்பனவற்றின் ஒதுக்கீடுகளினால் உருவாக்கப்பட்ட அல்லது அதிகரிக்கப்பட்ட பொதுவான அல்லது மற்றைய கட்டற்ற ஒதுக்குகள் வடிவிலமைந்த வெளிப்படுத்தப்பட்ட ஒதுக்குகள்.

7.6 **பிரசுரிக்கப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்கள்/ ஒன்று சேர்ந்த இழப்புக்கள்**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.1.6)**

முன்னைய நிதியியல் ஆண்டுகளிலிருந்து முன் கொண்டு செல்லப்பட்டதும் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றில் அறிக்கையிடப்பட்டவாறுமான இலாப மற்றும் நட்டக் கணக்கிலுள்ள மீதி. ஒன்று சேர்ந்த இழப்புக்கள் அடைப்புக்குறிக்குள் காட்டப்பட வேண்டியதுடன் ஏனைய மூலதனக் கூறுகளிலிருந்தும் கழிக்கப்படவும் வேண்டும். முதலீட்டுச் சொத்துக்களின் மீள் மதிப்பீட்டிலிருந்து பெறப்படுகின்ற நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் உள்ளடக்கப்படக்கூடாது.

7.7 **நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து தோன்றுகின்ற வரிக்குப் பின்னரான மிகை/ இழப்பு**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.1.7)**

இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட முடிவுத் திகதிக்குப் பின்னர் நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து தோன்றுகின்ற வரிக்குப் பின்னரான ஏதேனும் மிகை/ இழப்பு, நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து தோன்றுகின்ற தேறிய இழப்புக்கள் அடைப்புக்குறிக்குள் காட்டப்பட வேண்டியதுடன் ஏனைய மூலதனக் கூறுகளிலிருந்து கழிக்கப்படவும் வேண்டும்.

7.8 **பிரசுரிக்கப்படாத நடப்பு ஆண்டின் இலாபம்/ நட்டம்**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.1.8)**

இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட முடிவுத் திகதிக்குப் பின்னரானதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் வெளிக் கணக்காய்வாளரின் உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டதுமான உழைக்கப்பட்ட/ உறப்பட்ட (நிலையான மற்றும் நீண்ட கால முதலீடுகளின் விற்பனையிலிருந்து தோன்றிய வரிக்குப் பின்னரான மிகை/ இலாபம் நீங்கலான) நடப்பாண்டின் இலாபங்கள்/ இழப்புக்கள்.

8. **கழிவுகள்/ சீராக்கங்கள் - அடுக்கு 1**

**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.2.0)**

கீழேயுள்ள மொத்த மூலதனத் தள கணிப்பிற்கான பகுதி IIஇன் விடயம் 8.1 இலிருந்து 8.6 வரையான விடயங்களின் தொகையுடன் இத்தொகை இணங்கியிருத்தல் வேண்டும்.

8.1 **நல்லெண்ணம்**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.2.1)**
நல்லெண்ணத் தொகையினை ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு அறிக்கையிடவும்.

8.2 **தேறிய பிற்போடப்பட்ட வரி**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.2.2)**
பிற்போடப்பட்ட வரியின் தேறிய பற்று நிலுவை.

**8.3 ஏனைய அருவச் சொத்துக்கள்**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.2.3)**

நடப்பு காலப்பகுதியிலுள்ளதும் முன்னைய காலப்பகுதியிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்டதுமான அருவச் சொத்துக்களும் இழப்புக்களும் மைய மூலதனத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

**8.4 பங்கு சொத்துடமைத் திட்டத்தின் கீழ் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக சிறப்பியல்பு வாய்ந்த கம்பனியின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள்**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.2.4)**

**8.5 வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக் கம்பனிகளிலுள்ள முதலீடுகளில் 50 சதவீதம்**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.2.5)**

வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக் கம்பனிகளிலுள்ள பங்குகள், கலப்பு மூலதன கருவிகள் அல்லது குறைந்த மதிப்பீட்டினைக் கொண்ட தவணைப் படுகடன் ஆகிய வழிகளிலமைந்த மூலதனத்திலுள்ள முதலீட்டில் 50 சதவீதம்.

**8.6 ஏனைய வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மூலதனத்திலுள்ள முதலீடுகளில் 50 சதவீதம்**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.1.2.6)**

ஏனைய வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள பங்குகள், கலப்பு மூலதனக் கருவிகள், அல்லது குறைந்த மதிப்பீட்டினைக் கொண்ட தவணைப் படுகடன் ஆகிய வழிகளிலமைந்த மூலதனத்திலுள்ள முதலீட்டில் 50 சதவீதம்.

**9. துணை நிரப்பு மூலதனம் - (அடுக்கு II)**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.2.1.0)**

கீழேயுள்ள மொத்த மூலதனத் தளத்தின் அமைப்பு தொடர்பான பகுதி IIஇன் 9.1 இலிருந்து 9.4 வரையான பின்வரும் விடயங்களின் தொகையுடன் இத்தொகை இணங்கியிருத்தல் வேண்டும். (டபிள்யுபீஆர்சி 11.2.1.2.1.1 இலிருந்து டபிள்யுபீஆர்சி 11.2.1.2.1.5)

**9.1 மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் (பணிப்பாளரினால் ஒப்புதலளிக்கப்பட்டது)**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.2.1.1)**

மீள் மதிப்பீட்டு மிகைகள்/ ஒதுக்குகள், மீள் மதிப்பீட்டு மிகைகள்/ ஒதுக்குகள் என்பனவற்றிற்கு எதிராக வழங்கப்பட்ட ஏதேனும் பங்குகள், முதலீட்டுச் சொத்துக்களின் மீள் மதிப்பீட்டிலிருந்து தோன்றிய நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்கள்/ மீள் மதிப்பீட்டு மிகைகள் மற்றும் அத்தகைய இலாபங்கள்/ மிகைகளுக்கு எதிராக வழங்கப்பட்ட பங்குகள் என்பன, அத்தகைய மீள் மதிப்பீடுகள் பணிப்பாளரின் முன் ஒப்புதலுடன் விலைத் தளம்பல்கள் மற்றும் நிர்ப்பந்த ரீதியான விற்பனை என்பனவற்றின் சாத்தியங்களை முழுமையாகப் பிரதிபலிக்கின்ற விதத்தில் முன்மதியுடன் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து அடுக்கு II மூலதனத்தில் (துணை நிரப்பு) உள்ளடக்கப்படலாம். நல்லெண்ணத்திற்கு எதிராக வழங்கப்பட்ட பங்குகள், ஊக்குவிப்பாளர் தொழிற்பாடு மற்றும் அதையொத்த காசல்லா விடயங்கள் பற்றியவை அடுக்கு II (துணை நிரப்பு) மூலதனத்தில் உள்ளடக்கப்படக்கூடாது.

**9.2 பொது ஒதுக்குகள்**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.2.1.2)**

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புக்களுக்கெதிராக உருவாக்கப்பட்ட பொது ஒதுக்கங்கள் அல்லது பொதுவான கடன் இழப்பு ஒதுக்கங்கள். அவை குறிப்பிட்ட சொத்தின் மீது சுமத்தப்படாதவிடத்தும் குறிப்பிட்ட சொத்தின் மதிப்பீட்டில் குறைப்புக்களை ஏற்படுத்தாதவிடத்தும் அவை அடுக்கு II (துணைநிரப்பு) மூலதனத்தில் உள்ளடக்கப்படுவதற்கு தகைமை வாய்ந்தனவாகும். **பொது ஒதுக்கங்கள் அனைத்து நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் தொகையில் 1.25 சதவீதத்தினை விஞ்சுதல் கூடாது.**

**9.3 கலப்பு மூலதனக் கருவிகள் (படுகடன்/ பங்கு மூலதனம்)**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.2.1.3)**

மூலதனக் கருவிகள் பங்கு மூலதனம் மற்றும் படுகடன், உ-ம் பூர்வாங்கக் கடன் இருப்பு, மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள் ஆகிய இரண்டினதும் குறிப்பிட்ட பங்குகளைக் கொண்டுள்ளன. இவை பின்வரும் பண்புகளைத் திருப்தி செய்கின்றன.

(i) மூலதனத்தில் அத்தகைய விடயத்தினை உள்ளடக்குவதற்கு பணிப்பாளரின் எழுத்து மூலமான முன் அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) பிணையிடப்படாத, துணை மற்றும் முழுமையாக செலுத்தப்பட்டவை.

(iii) ஐந்தாண்டுகளுக்கும் குறைவான காலப்பகுதியில் உடமையாளரின் முயற்சியில் மீட்கப்படாதவை அல்லது பணிப்பாளரின் முன் சம்மதம் இல்லாதவை.

(iv) வர்த்தகத்தினை நிறுத்துவதற்கான கம்பனியின் கடப்பாடு இல்லாமல் இழப்புக்களில் பங்கேற்பதற்கான கிடைப்புத் தகைமை.

(v) கம்பனியின் இலாபத்தன்மை அத்தகைய கொடுப்பனவுக்களுக்கு இடமளிக்காதவிடத்து வட்டிக் கொடுப்பனவிற்கான கடப்பாட்டினை பிற்போட முடியும். அத்தகைய விடயங்களை மூலதனத்தில் உள்ளீடு செய்வதற்கு பணிப்பாளரின் முன் ஒப்புதல் தேவையாகும்.

**9.4 ஒப்புதலளிக்கப்பட்ட துணைத் தவணைப் படுகடன்**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.2.1.4)**

துணைத் தவணைப் படுகடன் பின்வரும் நிபந்தனைகளை திருப்தி செய்தல் வேண்டும்.

(i) அடுக்கு II மூலதனமாக உள்ளடக்கப்படுவதற்கு பணிப்பாளரின் எழுத்து மூலமான முன் ஒப்புதலைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) பிணையிடப்படாத துணைத் தவணைப் படுகடன் கருவிகள் மற்றும் கலப்பு (படுகடன்/ பங்கு மூலதனம்) மூலதனக் கருவிகளினைக் கொண்டிருப்போர் தவிர்ந்த அனைத்து கடன் வழங்கியவர்களினதும் நலவுரித்துக்களுக்கான பிணையிடப்படாத முழுமையாக செலுத்தப்பட்ட மற்றும் துணைப் படுகடன்கள்.

(iii) கருவியொன்றின் குறைந்தபட்ச ஆரம்ப முதிர்ச்சி 5 ஆண்டுகளாக இருக்கும்.

(iv) பணிப்பாளரின் முன் சம்மதமின்றி உரிய காலத்திற்கு முன்னரான மீள் கொடுப்பனவுகளையோ மீட்புக்களையோ மேற்கொள்ள முடியாது.

(v) முதிர்ச்சிக்கு முன்னைய நான்காண்டு காலப்பகுதியில் ஒவ்வோராண்டும் 1/5 என்ற ரீதியில் மூலதனமாகக் கருதப்பட்ட தொகையினைக் கழிவிடல்.

(vi) ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தத் துணைத் தவணைப் படுகடன் **மொத்த அடுக்கு 1 மூலதனத்தின் 50 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.**

ஒப்புதலளிக்கப்பட்ட துணை தவணைப் படுகடன்களின் மொத்த உண்மைத் தொகையை அறிக்கையிடவும்.

**10. கழிவுகள்/ சீராக்கங்கள் - (அடுக்கு II)**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.2.2.0)**

**10.1 வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக் கம்பனிகளின் முதலீடுகளில் 50 சதவீதம்.**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.2.2.1)**

வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக் கம்பனிகளிலுள்ள பங்குகள் கலப்பு மூலதனக் கருவிகள் அல்லது துணை தவணைப் படுகடன்கள் மூலமான மூலதனத்திலுள்ள முதலீட்டில் 50 சதவீதம்.

**10.2 ஏனைய வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மூலதன முதலீடுகளில் 50 சதவீதம்.**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.2.2.2)**

வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக் கம்பனிகளிலுள்ள பங்குகள், கலப்பு மூலதனக் கருவிகள் அல்லது துணைத் தவணைப் படுகடன்கள் மூலமான மூலதனத்திலுள்ள முதலீட்டில் 50 சதவீதம்

**11. மொத்த துணை நிரப்பு மூலதனம் - (அடுக்கு II)**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.2.0.0)**

தொகையானது அடுக்கு II கழிவுகளைக் (10) கழித்த துணை நிரப்பு மூலதனத்துடன் இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

**12. தகுதியுடைய துணை நிரப்பு மூலதனம் - (அடுக்கு II)**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.3.0.0)**

தகுதியுடைய அடுக்கு 2 மூலதனம் உயர்ந்தபட்சம் அடுக்கு 1 மூலதனத்தின் 100 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அடுக்கு 1 மூலதனம் அடுக்கு 2 மூலதனத்தின் மொத்தத்திலும் பார்க்கக் குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் தகைமையுடைய அடுக்கு 2 மூலதனம் அடுக்கு 1 மூலதனத்திற்கு சமமானதாக இருக்கும். அடுக்கு 1 மூலதனம் எதிர்க்கணியமாக இருக்குமிடத்து தகுதியுடைய அடுக்கு 2 மூலதனமாக ‘ எதுவுமில்லை’ என்ற தொகை குறிப்பிடப்படல் வேண்டும்.

**13. மூலதனத் தளம்**
**(டபிள்யுபீஆர்சி 20.2.1.4.0.0)**

தொகையானது தகுதியுடைய மைய மூலதனத்தின் (6) விடயங்களினது கூட்டுத் தொகையுடனும் தகைமையுடைய துணை நிரப்பு மூலதனத்துடனும் (12) இணங்கிச் செல்வதாக இருத்தல் வேண்டும்.

விடயங்கள் 8.5, 8.6, 10.1 மற்றும் 10.2 என்பனவற்றின் நோக்கத்திற்காக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணை நிறுவனங்கள்/ நிறுவனங்கள் எனக் கருதப்படக் கூடியவாறான நிறுவனங்களின் குறிகாட்டிப் பட்டியலொன்று.

(i) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்
(ii) பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்
(iii) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்
(iv) காப்புறுதிக் கம்பனிகள்
(v) வணிக வங்கிகள்
(vi) முதனிலை வணிகர்கள்

## பகுதி III

## மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணித்தல்

**14. கையிலுள்ள பணமும் வங்கி மீதிகளும்**
**(டபிள்யுபீஆர்சி 20.3.1.1.0.0)**

தாள்களாகவும் நாணயக் குத்திகளாகவும் உள்ள கையிலுள்ள பணம் இலங்கையில் சட்ட ரீதியான பணமாக உள்ளதுடன் வரவு மீதிகள் வங்கி நடைமுறைக் கணக்குகளிலும் (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளிலும் காணப்படுகின்றன.

**15. ஏனைய நிறுவனங்களுடனான அழைப்பு/ சேமிப்பு/ நிலையான வைப்புக்கள்**
**(டபிள்யுபீஆர்சி 20.3.1.2.0.0)**

**15.01 வங்கிகளுடனான வைப்புக்கள் (டபிள்யுபீஆர்சி 20.3.1.2.1.0)**

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுடன் பேணப்படுகின்ற வைப்புக்கள்

**15.02 நிதிக்கம்பனிகளுடனான வைப்புக்கள் (டபிள்யுபீஆர்சி 20.3.1.2.2.0)**
நிதிக்கம்பனிகளுடனான வைப்புக்கள்

*குறிப்பு:* இலங்கை மத்திய வங்கியினால் வியாபார நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள ஏதேனும் நிதியியல் நிறுவனங்களுடனான வைப்புக்களுக்கு 100 சதவீதமான இடர்நேர்வுநிறை வழங்கப்படுதல் வேண்டும்.

**16. மத்திய வங்கியும் அரச பிணையங்களும்**

**(டபிள்யுபீஆர்சி 20.3.1.3.0.0)**

மத்திய வங்கியினதும் இலங்கை அரசாங்கத்தினதும் ஏதேனும் பிணையங்களின் உடமைகள் உ-ம்: திறைசேரி உண்டியல்கள் திறைசேரி முறிகள் ரூபாக் கடன்கள் போன்றனவும் மத்திய வங்கிப் பிணையங்களும்

17. மற்றைய ஏதேனும் நிறுவனங்களுடனான வாக்குறுதிச் சான்றிதழ்கள்/ வர்த்தகப் பத்திரங்களில் செய்யப்பட்ட முதலீடுகள்

(டபிள்யுபீஆர்சி 20.3.1.4.0.0)

மற்றைய நிறுவனங்களுடன் வர்த்தகப் பத்திரங்களிலும் வாக்குறுதிச் சான்றிதழ்களிலும் முதலிடப்படுகின்ற ஏதேனும் தொகை

18. பங்குகளில் முதலீடுகள்

(டபிள்யுபீஆர்சி 20.3.2.0.0.0)

விலைக் குறிப்பீடு செய்யப்பட்ட அல்லது விலைக்குறிப்பீடு செய்யப்படாத கம்பனிகளில் பங்கு மூலதனம் அல்லது வேறு மூலதனச் சாதனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள், ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு.

19. கடன் வசதிகள்

(டபிள்யுபீஆர்சி 20.3.3.0.0.0)

19.01 நிதிக் குத்தகை (டபிள்யுபீஆர்சி 20.3.3.1.0.0)

ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன் வசதிகள் மற்றும் தொங்கலிலுள்ள வட்டி என்பன நீங்கலாக மொத்த வெளிநின்ற நிதிக் குத்தகைகள்

19.02 தவணைக் கொள்வனவு (டபிள்யுபீஆர்சி 20.3.3.2.0.0)

ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன் வசதிகள் மற்றும் தொங்கலிலுள்ள வட்டி என்பன நீங்கலான மொத்த வெளிநின்ற தவணைக் கொள்வனவுகள்

19.03 தவணைக் கடன்கள் (டபிள்யுபீஆர்சி 15.3.3.3.0.0)

ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு அறவிடமுடியா மற்றும் கடன் வசதிகள் நீங்கலான மொத்தக் கடன்கள்

19.04 காரணிப்படுத்தல் (டபிள்யுபீஆர்சி 20.3.3.4.0.0)

ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன் வசதிகள் நீங்கலான மொத்த வெளிநின்ற காரணிப்படுத்தல்கள்

19.05 உள்ளகக் கம்பனி கொடுகடன் (டபிள்யுபீஆர்சி 20.3.3.2.5.0)

ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு வெளிநின்ற உள்ளகக் கம்பனியின் பெறத்தக்க நிலுவைகள்

19.06 ஏனைய கடன் வசதிகள் (டபிள்யுபீஆர்சி 20.3.3.6.0.0)

ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன் வசதிகள் நீங்கலாக 22.01 இலிருந்து 22.05 வரையுள்ள மேலேயுள்ள விடயங்களில் அறிவிக்கப்பட்டவை தவிர்ந்த மற்றைய அனைத்து வெளிநின்ற கடன் வசதிகளும்

20. நிலையான சொத்துக்கள் (டபிள்யுபீஆர்சி 20.3.4.0.0.0)

ஒன்று சேர்ந்த தேய்மானம் நீங்கலாக செலவில் அல்லது மீள் மதிப்பீட்டு தொகையில் அறிவிக்கப்பட்ட அசையாச் சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள், உந்து ஊர்திகள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் ஏனைய நிலையான சொத்துக்கள்

21. ஏனைய சொத்துக்கள் (டபிள்யுபீஆர்சி 20.3.5.0.0.0)

கணக்குக் கூற்றில் வேறு எங்கேனும் உள்ளடக்கப்படாத மற்றைய அனைத்துச் சொத்துக்கள் அல்லது முதலீடுகள்

22. ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்கள் (டபிள்யுபீஆர்சி 20.3.6.0.0.0)

ஐந்தொகைக்கு வெளியேயுள்ள மற்றைய அனைத்துச் சொத்துக்களும்

23. மொத்த இடர்நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்

(டபிள்யுபீஆர்சி 20.3.7.0.0.0)

பகுதி IIIஇன் நிரல் 3இல் காட்டப்பட்ட மொத்தமான, ஐந்தொகையிலுள்ள விடயங்கள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்களின் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்.

அட்டவணை II

பகுதி I

## என்பீஎல்-எம்எவ்-20-ஆர்டபிள்யுசிஏ1 (மூலதனப் போதுமை விகிதக் கணிப்பு)

.................................. இல் உள்ளவாறு

(ரூ. '000)

| குறியீடு | வெப்தளத்தினை அடிப்படியாகக் கொண்ட கூற்றின் குறியீடு | விடயம் | தொகை |
|---|---|---|---|
| 1. | 20.1.1.0.0.0 | தகுதியுடைய மூலதனம் (தகுதி அடுக்கு I) = பகுதி II | |
| 2. | 20.1.2.0.0.0 | மூலதனத் தளம் பகுதி II | |
| 3. | 20.1.3.0.0.0 | மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகை பகுதி III | |
| 4. | 20.1.4.0.0.0 | மைய மூலதனம் (அடுக்கு I) விகிதம் % = (1/3*100) = 5% | |
| 5. | 20.1.5.0.0.0 | மொத்த மூலதன விகிதம் % = (2/3*100) = 10% | |

பகுதி II

**என்பீஎல்-எம்எவ்-20-ஆர்டபிள்யுசிஏ2 (மொத்த மூலதனப் போதுமை விகிதக் கணிப்பு)**

**.................................. இல் உள்ளவாறு**

(ரூ. '000)

| குறியீடு | வெப்தளத்தினை அடிப்படியாகக் கொண்ட கூற்றின் குறியீடு | மூலதனக்கூறுகள் | தொகை |
|---|---|---|---|
| 6. | 20.2.1.1.0.0 | **தகுதியுடைய மைய மூலதனம் (தகுதியுடைய அடுக்கு I) (விடயம் 7 - விடயம் 8)** | |
| 7. | 20.2.1.1.1.0 | **மைய மூலதனம் (அடுக்கு I) விடயம் 7.1 இலிருந்து விடயம் 7.8 வரையுள்ளவற்றின் தொகை** | |
| 7.1 | 20.2.1.1.1.1 | வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள்/ பொது இருப்புக்கள் | |
| 7.2 | 20.2.1.1.1.2 | ஒன்று சேர்க்கப்படாத, மீட்கப்படாத முன்னுரிமைப் பங்குகள் | |
| 7.3 | 20.2.1.1.1.3 | சாதாரண பங்குகள்/ முன்னுரிமைப் பங்குகளின் முகப்புப் பெறுமதியிலும் மேலான வழங்கல் விலைகளின் மிகை | |
| 7.4 | 20.2.1.1.1.4 | நியதி ஒதுக்கு நிதியம் | |
| 7.5 | 20.2.1.1.1.5 | பொதுவான மற்றும் ஏனைய கட்டற்ற ஒதுக்குகள் | |
| 7.6 | 20.2.1.1.1.6 | பிரசுரிக்கப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் (ஒன்று சேர்ந்த இழப்புக்கள்) | |
| 7.7 | 20.2.1.1.1.7 | நிலையான மற்றும் நீண்ட கால முதலீடுகளின் விற்பனையிலிருந்து கிடைக்கின்ற வரிக்குப் பின்னரான மிகை/ இழப்பு | |
| 7.8 | 20.2.1.1.1.8 | பிரசுரிக்கப்படாத நடப்பு ஆண்டு இலாபம்/ (நட்டம்) | |
| 8. | 20.2.1.1.2.0 | **கழிவுகள்/ சீராக்கங்கள் - அடுக்கு I (விடயம் 8.1 இலிருந்து விடயம் 8.6 வரையுள்ளவற்றின் தொகை)** | |
| 8.1 | 20.2.1.1.2.1 | நன்மதிப்பு | |
| 8.2 | 20.2.1.1.2.2 | தேறிய பிற்போடப்பட்ட வரி | |
| 8.3 | 20.2.1.1.2.3 | ஏனைய அருவச் சொத்துக்கள் | |
| 8.4 | 20.2.1.1.2.4 | பங்கு சொத்துடமைத் திட்டத்தின் கீழ் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் | |
| 8.5 | 20.2.1.1.2.5 | வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக் கம்பனிகளிலுள்ள முதலீட்டில் 50% | |
| 8.6 | 20.2.1.1.2.6 | மற்றைய வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மூலதனத்திலுள்ள முதலீட்டில் 50% | |
| 9. | 20.2.1.2.1.0 | **துணை நிரப்பு மூலதனம் (அடுக்கு II) (விடயம் 9.1 இலிருந்து விடயம் 9.4 வரையுள்ளவற்றின் தொகை)** | |
| 9.1 | 20.2.1.2.1.1 | மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் (பணிப்பாளரினால் ஒப்புதலளிக்கப்பட்டவை) | |
| 9.2 | 20.2.1.2.1.2 | பொது ஒதுக்கங்கள் | |
| 9.3 | 20.2.1.2.1.3 | ஒப்புதலளிக்கப்பட்ட கலப்பு மூலதனக் கருவிகள் (படுகடன்/ பங்கு மூலதனம்) | |
| 9.4 | 20.2.1.2.1.4 | ஒப்புதலளிக்கப்பட்ட துணைத் தவணைப் படுகடன் (உண்மையான தொகை ரூ....) | |
| 10. | 20.2.1.2.2.0 | **கழிவுகள்/ சீராக்கங்கள் - அடுக்கு II (விடயம் 10.1 மற்றும் 10.2இன் தொகை)** | |
| 10.1 | 20.2.1.2.2.1 | வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக் கம்பனிகளிலுள்ள முதலீடுகளில் 50% | |
| 10.2 | 20.2.1.2.2.2 | ஏனைய வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மூலதனத்திலுள்ள முதலீடுகளில் 50% | |
| 11. | 20.2.1.2.0.0 | **மொத்த துணை நிரப்பு மூலதனம் (அடுக்கு II) (விடயம் 9 - விடயம் 10)** | |
| 12. | 20.2.1.3.0.0 | **தகுதியுடைய துணை நிரப்பு மூலதனம் (அடுக்கு II)** | |
| 13. | 20.2.1.4.0.0 | **மூலதனத் தளம் (விடயம் 6 மற்றும் 12இன் தொகை)** | |

பகுதி III

**என்பீஎல்-எம்எவ்-20-ஆர்டபிள்யுசிஏ3 (மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களை கணித்தல்)**
**.................................. உள்ளவாறு**

(ரூ. '000)

| குறியீடு | வெப்தளத்தினை அடிப்படியாகக் கொண்ட கூற்றின் குறியீடு | ஐந்தொகையிலும் ஐந்தொகைக்கு வெளியேயுள்ளதுமான சொத்து விடயம் | (1) ஐந்தொகை விடயத்தின் முதன்மைத் தொகை | (2) நிறை யேற்றம் (%) | (3) மொத்த இடர் நேர்வு நிறை யேற்றப்பட்ட சொத்துத் தொகை (1) X (2) |
|---|---|---|---|---|---|
| 14. | 20.3.1.1.0.0 | கையிலும் வங்கி நடைமுறைக் கணக்கிலும் உள்ள காசு | | 0 | |
| 15. | 20.3.1.2.0.0 | ஏனைய நிறுவனங்களிலுள்ள அழைப்பு/ சேமிப்பு நிலையான வைப்புக்கள் | | | |
| 15.01 | 20.3.1.2.1.0 | வங்கிகளுடனான வைப்புக்கள் | | 20 | |
| 15.02 | 20.3.1.2.2.0 | நிதிக் கம்பனிகளுடனான வைப்புக்கள் | | 50 | |
| 16. | 20.3.1.3.0.0 | மத்திய வங்கி மற்றும் அரச பிணையங்கள் | | 0 | |
| 17. | 20.3.1.4.0.0 | மற்றைய நிறுவனங்களில் வாக்குறுதிச் சான்றிதழ்கள்/ வர்த்தகப் பத்திரங்களிலுள்ள முதலீடுகள் | | 100 | |
| 18. | 20.3.2.0.0.0 | பங்குகளிலுள்ள முதலீடுகள் | | 100 | |
| 19. | 20.3.3.0.0.0 | கடன் வசதிகள்:* | | | |
| 19.01 | 20.3.3.1.0.0 | நிதிக் குத்தகை | | 50 | |
| 19.02 | 20.3.3.2.0.0 | தவணைக் கொள்வனவு | | 100 | |
| 19.03 | 20.3.3.3.0.0 | தவணைக் கடன்கள் | | 100 | |
| 19.04 | 20.3.3.4.0.0 | காரணிப்படுத்தல் | | 100 | |
| 19.05 | 20.3.3.5.0.0 | கம்பனிக்கிடையிலான கொடுகடன் | | 150 | |
| 19.06 | 20.3.3.6.0.0 | ஏனைய கடன் வசதிகள் (மேலே குறிப்பிடப்பட்டவை தவிர்ந்தவை) | | 150 | |
| 20. | 20.3.4.0.0.0 | நிலையான சொத்துக்கள் | | 100 | |
| 21. | 20.3.5.0.0.0 | ஏனைய சொத்துக்கள் | | 100 | |
| 22. | 20.3.6.0.0.0 | ஐந்தொகைக்கு வெளியேயான சொத்துக்கள் | | 100 | |
| 23. | 20.3.7.0.0.0 | மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் | | | |

* குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் தொங்கலிலுள்ள வட்டி என்பனவற்றை கழித்ததாக இருத்தல் வேண்டும்

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரை.

கே.எம்.ஏ.என். டவுலகல
**பணிப்பாளர்**
**வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

2011 மாச்சு 30

## 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப் பணிப்புரை 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இல் குறிப்பிடப்படுகின்ற பகிரங்கக் கம்பனியாக விளங்கும் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்கும் (இதனகத்துப் பின்னர் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி என குறிப்பிடப்படும்) ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

**அமைப்பியல் மாற்றங்களுக்கான ஒப்புதல்**

2. பணிப்பாளரின் எழுத்து மூலமான முன் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் -

அ) ஏதேனும் துணை அல்லது இணைக் கம்பனியினை நிறுவுதல்;

ஆ) அதன் வழங்கப்பட்ட மூலதனத்தினை அதிகரித்தல் அல்லது குறைத்தல்;

இ) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின்/ துணைக் கமபனிகளின் வியாபாரத்தினை அல்லது வியாபாரத்தின் ஒரு பகுதியினை விற்றல்;

ஈ) கம்பனியின் பெயரை மாற்றுதல்;

உ) வேறு ஏதேனும் குத்தகைக்குவிடும் கம்பனி, நிதிக் கம்பனி அல்லது வேறு ஏதேனும் கம்பனியின் வியாபாரத்தினை முழுமையாக அல்லது பகுதியளவில் கையேற்றல்;

ஊ) நிறுவனத்தின் அக புறவிதிகளை மாற்றுதல்;

எ) வேறு ஏதேனும் குத்தகைக்குவிடும் கம்பனி அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்களினை ஒன்று சேர்த்தல், திரட்சிப்படுத்தல் அல்லது இணைத்தல்;

ஏ) பணிப்பாளர் சபை மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ முகாமைத்துவப் பணிப்பாளர்/ பொது முகாமையாளர்களில் மாற்றம்;

ஐ) கிளையொன்றினை அல்லது வியாபாரத்தினை திறத்தல்/ மூடிவிடுதல்/ வேறு இடத்திற்கு மாற்றுதல்; மற்றும்

ஒ) கம்பனியின் சொத்துக்களையும் அத்துடன் அல்லது பொறுப்புக்களையும் மாற்றல் செய்தல்.

என்பனவற்றை மேற்கொள்ளக்கூடாது.

**செலுத்தப்பட வேண்டிய கட்டணம்**

3. பிரிவு 2இன் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறும் ஏதேனும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் ஒவ்வொரு மீறலுக்கும் ரூ.250,000 இற்குச் சமனான கட்டணத்தினை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

**2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பணிப்புரை இரத்துச் செய்யப்படுகிறது**

4. 2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க நிதிக்குத்தகைக்குவிடுதல் (கம்பனி மற்றும் தொழிற்பாட்டுத் தகவல்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரை.

கே.எம்.ஏ.என். டவுலகல
**பணிப்பாளர்**
**வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

2011 யூன் 22

## 2011ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப் பணிப்புரை 2011ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இல் குறிப்பிடப்படுகின்ற பகிரங்கக் கம்பனியாக விளங்கும் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்கும் (இதனகத்துப் பின்னர் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி என குறிப்பிடப்படும்) ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

**வைத்திருக்க வேண்டிய குறைந்தபட்ச திரவச் சொத்து**

2. ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் எந்தவொரு வேலை நாளின் முடிவின் போதும் பங்குடமையாளர்களுக்கான பொறுப்புக்கள் நீங்கலாக, குறைந்தபட்சம் மொத்தப் பொறுப்புக்களிலும் ஐந்தொகைக்குப் புறம்பான விடயங்களிலும் 01.01.2012 இலிருந்து 5 சதவீதத்திற்குக் குறையாத ஒரு தொகையினையும் 01.01.2013 இலிருந்து 10 சதவீதத்திற்குக் குறையாத தொகையினையும் திரவச் சொத்துக்களாகப் பேணி வருதல் வேண்டும்.

**திரவச்சொத்துக்களின் வரைவிலக்கணம்**

3. திரவச் சொத்துக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ) கையிலுள்ள பணம்;

ஆ) ஏதேனும் வங்கியாளர்களுக்கான உரிமைகள் அல்லது கட்டணங்கள் நீங்கலாக வர்த்தக வங்கியொன்றிலுள்ள நடைமுறை அல்லது வைப்புக் கணக்கின் மீதிகள்;

இ) ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற ஏதேனும் கட்டணங்கள் அல்லது உரிமைகள் நீங்கலாக இலங்கை அரசாங்க திறைசேரி உண்டியல்கள்/ முறிகள்;

ஈ) ஏதேனும் கட்டணங்கள் அல்லது உரிமைகள் நீங்கலாக ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற இலங்கை அரசாங்கப் பிணையங்கள்;

உ) ஏதேனும் கட்டணங்கள் அல்லது உரிமைகள் நீங்கலாக ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள்;

ஊ) பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் சொத்துக்கள்

**இப்பணிப்புரை நடைமுறைக்கு வருதல்**

4. இப்பணிப்புரை 2011.01.01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்**

5. பிரிவு (2)இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் ஏதேனும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் பற்றாக்குறையாக இருக்கும் தொகையின் மீது நாளொன்றிற்கு ஒரு சதவீதத்தில் பத்திலொரு பங்கினை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

**அறிக்கையிடும் படிவம்**

6. ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் ஒவ்வொரு மாதத்தினதும் இறுதி வேலை நாளன்று வியாபாரம் முடிவடைகையில் உள்ளவாறான நியதி திரவச் சொத்துக்களை அறிக்கையிடுவதற்கு இங்கே இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 1இலுள்ள படிவத்தினை பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வெப்தள அறிக்கையிடல் முறைமையூடாக பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

**2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பணிப்புரையின் நீக்கம்**

7. 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது.

அட்டவணை I

**என்பீஎல்-எம்எவ்-21-எல்ஏ (நியதி திரவச் சொத்துக்களைக் கணித்தல்)**

.................................. இல் உள்ளவாறு

| குறியீடு | வெப்தளத்தினை அடிப்படியாகக் கொண்ட கூற்றின் குறியீடு | விடயம் | (ரூ. '000) |
|---|---|---|---|
| 1. | 21.1.1.0.0.0 | மொத்தப் பொறுப்புக்கள் (என்பீஎல்-எம்எவ்-03-பீஎஸ் இன் விடயம் 3.2.0.0.0.0.) | |
| 2. | 21.1.2.0.0.0 | ஐந்தொகைக்கு வெளியேயான மொத்தச் சொத்துக்கள் (என்பீஎல்-எம்எவ்-03-பீஎஸ் இன் விடயம் 3.3.0.0.0.0.) | |
| 3. | 21.1.3.0.0.0 | மொத்தப் பங்குடமை நிதியம் (என்பீஎல்-எம்எவ்-03-பீஎஸ் இன் விடயம் 3.2.1.0.0.0.) | |
| 4. | 21.1.4.0.0.0 | கணிப்பிடுதலுக்கான மொத்தத் தொகை (விடயம் 3இனைக் கழித்த விடயம் 1+2 இன் தொகை | |
| 5. | 21.1.5.0.0.0 | கிடைக்கத்தக்க மொத்த திரவச் சொத்துக்கள் (விடயம் 5.1 இலிருந்து விடயம் 5.5 வரையானவற்றின் தொகை) | |

| | | | |
|---|---|---|---|
| 5.1 | 21.1.5.1.0.0 | கையிலுள்ள காசு | |
| 5.2 | 21.1.5.2.0.0 | ஏதேனும் வங்கியாளர் உரிமை அல்லது கட்டணங்கள் நீங்கலாக வர்த்தக வங்கியொன்றிலுள்ள நடைமுறை அல்லது வைப்புக் கணக்கிலுள்ள மீதிகள் | |
| 5.3 | 21.1.5.3.0.0 | ஏதேனும் கட்டணங்கள் அல்லது உரிமைகள் நீங்கலாக இலங்கை அரசாங்க திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் | |
| 5.4 | 21.1.5.4.0.0 | ஏதேனும் கட்டணங்கள் அல்லது உரிமைகள் நீங்கலாக ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற இலங்கை அரச பிணையங்கள் | |
| 5.5 | 21.1.5.5.0.0 | ஏதேனும் கட்டணங்கள் அல்லது உரிமைகள் நீங்கலாக ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் | |
| **6.** | **21.1.6.0.0.0** | **திரவச் சொத்துக்கள் விகிதம் (4இன் %மாக 5)** | |
| **7.** | **21.1.7.0.0.0** | **பற்றாக்குறையாகவுள்ள திரவச் சொத்துக்கள் (விடயம் 6 நீங்கலாக விடயம் 5)** | |
| **8.** | **21.1.8.0.0.0** | **மத்திய வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் (விடயம் 7*1/10*1%)** | |

2011 மே 12

*பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு*
*வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் அனைத்து*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்கள்**

2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட முதலீட்டு நிதியக் கணக்குகளை நிறுவுதல் மற்றும் தொழிற்படுத்தல் மீதான வழிகாட்டல்களுக்கு தாங்கள் இணங்கியொழுகுவதற்காக இத்துடன் இணைத்துள்ளோம்.

உங்கள் உண்மையுள்ள

**பணிப்பாளர்**

**உள்ளடக்கப்பட்டது**

**2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட முதலீட்டு நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் பற்றி பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான வழிகாட்டல்கள்**

1. **முதலீட்டு நிதியக் கணக்கொன்றினை நிறுவுதல்**

   2011 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு, வங்கித்தொழில் வியாபாரத்தில் அல்லது நிதியியல் பணிகளிலுள்ள ஒவ்வொரு ஆளும் அல்லது பங்குடமையும் முதலீட்டு நிதியக் கணக்கொன்றினைத் திறந்து தொழிற்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

2. **முதலீட்டு நிதியக் கணக்குகளுக்கான ஆரம்ப வரவுகள்**

   2011 சனவரி 1ஆம் நாளுக்குப் பின்னர் வரிகள் செலுத்தப்படும் பொழுது பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் பின்வரும் நிதியங்களை முதலீட்டு நிதியக் கணக்கிற்கு மாற்றல் செய்து பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளில் நிரந்தரமான நிதியமொன்றினைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

   (i) பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவிற்காக பெறுமதிசேர் வரிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான திகதியன்று நிதியியல் பணிகள் மீதான பெறுமதிசேர் வரியின் கொடுப்பனவிற்காக கணிக்கப்பட்ட இலாபத்தில் 8 சதவீதம்.

   (ii) வரியின் சுய மதிப்பீட்டுக் கொடுப்பனவிற்காக உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 113 ஆவது பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நாளன்று வருமான வரிக் கொடுப்பனவு நோக்கங்களுக்காக கணிக்கப்பட்ட வரிக்கு முன்னரான இலாபத்தில் 5 சதவீதம்.

3. **நிதியத்தின் பயன்பாடு**

   பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் முதலீட்டு நிதியக் கணக்குகளுக்கு நிதிகளை மாற்றல் செய்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பின்வரும் முறைகளில் முதலீட்டு நிதியக் கணக்கிலுள்ள நிதிகளைப் பயன்படுத்தத் தொடங்கலாம்.

   (i) ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத நீண்டகால முதிர்ச்சியினைக் கொண்ட அரச பிணையங்களில் அத்துடன்/ அல்லது முறிகளில் முதலீடு செய்தல்.

(ii) 5 ஆண்டு திறைசேரி முறி வீதங்களுடன் 2 சதவீதத்தினைக் கூட்டிய வீதமொன்றினை விஞ்சாத வட்டி வீதத்தில் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத முதிர்ச்சியின் மீது கடன் வழங்கல்.

(iii) பின்வரும் நோக்கங்களுக்காக மாத்திரம் வழங்கப்பட்ட வசதிகள்:

(அ) பெருந்தோட்டப் பயிர்கள்/ பழவர்க்கங்கள், காய்கறிகள், கொக்கோ மற்றும் வாசனைத் திரவியங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய வேளாண்மைப் பயிர்கள், விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி என்பனவற்றிற்கான நீண்டகாலக் கடன்கள்.

(ஆ) தொழிற்சாலை/ ஆலைகளை நவீனமயப்படுத்தல்/ நிறுவுதல்/ விரிவாக்கம் செய்தல்.

(இ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்:

அ. ரூ. 30 மில்லியன் வரையிலான கடன்கள் அல்லது

ஆ. ரூ. 300 மில்லியனுக்குக் குறைவான ஆண்டு மொத்தப் புரள்வினையும் 400 இற்கும் குறைவான ஊழியர்களையும் கொண்ட தொழில் முயற்சிகளுக்கு ரூ.10 மில்லியனுக்கும் கூடுதலான கடன்கள்

(ஈ) தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் வெளிமூலங்களிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல்

(உ) உட்கட்டமைப்பு அபிவிருத்தி

(ஊ) கல்வி - தொழில்பயிற்சி மற்றும் மூன்றாந்தரக் கல்வி

(எ) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களினை மீளமைத்தல்.

3.2 வசதிகள் இலங்கை ரூபாவில் மாத்திரமே வழங்கப்படல் வேண்டும்.

3.3 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் மேலே 3.1இல் குறிப்பிடப்பட்டவாறு நிதிகளைப் பயன்படுத்தத் தொடங்கும் வரை குறுங்கால அரச பிணையங்களில் முதலீடு செய்யலாம்.

3.4 அத்தகை பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் துணைக் கம்பனிகளுக்கோ இணைக் கம்பனிகளுக்கோ உடமைக் கம்பனிகளுக்கோ அல்லது பணிப்பாளர் எவருக்குமோ அல்லது அத்தகைய கம்பனிகளுடன் தொடர்பான தரப்பினருக்கோ வசதிகளை வழங்கக்கூடாது.

**4. நிபந்தனைகள்**

**4.1 பிரயோகிக்கத்தக்க முன்மதியுடைய தேவைப்பாடுகள்**

(i) முதலீட்டு நிதிய கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்கள் பிரயோகிக்கத்தக்கதென இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட அனைத்து ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், தீர்மானங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பனவற்றிற்கு உட்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

**4.2 கொடுக்கல்வாங்கல்களுக்கான கணக்கீடு**

(i) முதலீட்டு நிதிய கணக்குகளுக்கான மாற்றல்கள், வரிக்குப் பின்னரான இலாப ஒதுக்கீடுகளாகக் கருதப்படல் வேண்டும்.

(ii) முதலீட்டு நிதியக் கணக்குகள், பொது மற்றும் ஏனைய ஒதுக்குகளின் கீழும் பங்குடமையாளர் நிதியத்தில் பகுதியொன்றின் கூறாகவும் தனியொரு விடயமாகப் பேணப்படுதல் வேண்டும்.

(iii) முதலீட்டு நிதியத்தின் தொழிற்பாட்டுச் செலவுகள், முதலீடு மற்றும் கடன் வழங்கல் தொழிற்பாடுகளிலிருந்தான வருமானம் என்பன பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் நிதியியல் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும்.

(iv) முதலீட்டு நிதியக் கணக்குகளின் அனைத்துத் தொழிற்பாடுகளும் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் தேவையான விபரங்களுடன் தனியான கணக்குகளைப் பேணுதல் வேண்டும்.

(v) இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதல் இல்லாமல் முதலீட்டு நிதியக் கணக்குகள் பழுதுபடுத்தப்படவோ குறைக்கப்படவோ கூடாது.

**4.4 வரி விதிப்பு முறைகள்**

முதலீட்டு நிதியக் கணக்குகள் தொடர்பான வரிப் பொறுப்புக்கள் ஏற்புடைத்தான வரிச் சட்டங்களுக்கிணங்க கணிக்கப்பட வேண்டும். எனினும், பின்வருவன கவனிக்கப்படுதல் வேண்டும்.

(i) பந்தி 3.1 மற்றும் 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள முதலீடுகள் மீதான வட்டி வருமானம் வருமான வரி செலுத்துவதற்குப் பொறுப்புடையதாகும்.

(ii) முதலீட்டு நிதியக் கணக்கினைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

(iii) கடன் இழப்புக்கள் மீதான குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் அறவிடமுடியாக் கடன்களுக்கு ஏற்புடைத்தான வழமையான சீராக்கங்களுக்கு உட்பட்டதாக இருக்கும்.

(iv) ஏதேனும் மேலதிக நிதியிடல் அல்லது குறைந்த நிதியிடல், தொடர்பான வரிச் சட்டங்கள்/ ஒழுங்குவிதிகள்/ வழிகாட்டல்களுக்கு இணங்கத்தக்கனவாக இருத்தல் வேண்டும்.

**தொடர்பு எண்: 24/03/005/0028/001**

2011 ஓகத்து 12

*முதன்மை நிறைவேற்று அலுவலர்*
*பதிவு செய்யப்பட்ட அனைத்து நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு*
*வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**2011 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள முதலீட்டு நிதியக் கணக்குகள் மீதான பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கான வழிகாட்டல்கள்**

2011.05.11ஆம் நாள் விடுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்கள் தொடர்பாக பின்வரும் தெளிவுபடுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.

| பிரிவு | தொடர்பான விடயம் |
|---|---|
| 3.1(ii), (iii) | 3.1(ii) மற்றும் 3.1 (iii) ஆகியன ஒன்றாகச் சேர்த்துப் பரிசிலிக்கப்பட வேண்டுமேயொழிய தனித்தனியாக அல்ல. |
| 3.1(iii) இ | ரூ.30 மில்லியன் வரையிலான கடன்கள் வசதியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும். |

உங்கள் உண்மையுள்ள
**பணிப்பாளர்**

2011 திசெம்பர் 12

*முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்*
*அனைத்துப் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு*
*வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்களுக்கான திருத்தங்கள்**

மேலேயுள்ள வழிகாட்டல்களின் பந்தி 3.1 (iii) இற்கான திருத்தமும் முதலீட்டு நிதியக் கணக்குகளின் பயன்பாடு மீது மாதாந்த அடிப்படையில் அறிவிக்கப்படுகின்ற தகவல்களுக்கான திருத்தப்பட்ட படிவமும் நீங்கள் இணங்கியொழுகுவதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் உண்மையுள்ள
**பணிப்பாளர்**

**இணைப்பு I**

**2011 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் மீதான பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்குமான வழிகாட்டல்களுக்கு திருத்தங்கள்**

பின்வரும் வழிகாட்டல்கள் மேலேயுள்ள 3.1(iii) இற்குப் பதிலாக அமையும்.

3.1 (iii) 2011 திசெம்பர் 13ஆம் நாள் தொடக்கம் பின்வரும் நோக்கங்களுக்கு மட்டுமே கடன் வழங்கப்படும்.

அ) பெருந்தோட்டப் பயிர்கள்/ பழவர்க்கங்கள், காய்கறிகள், கொக்கோ, வாசனைத் திரவியங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய வேளாண்மைப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு, மீன்பிடிக்கான நீண்டகாலக் கடன்கள்.

ஆ) தொழிற்சாலை/ ஆலை நவீனமயப்படுத்தல்/ நிறுவுதல்/ விரிவாக்கம் செய்தல்.

இ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்: வருடாந்தம் மொத்தப் புரள்வு ரூ.600 மில்லியன்களுக்கும் குறைவான தொழில் முயற்சிகளுக்கு ரூ.200 மில்லியன் வரையிலான கடன்கள்

ஈ) தகவல் தொழில்நுட்பவியல் தொடர்பான நடவடிக்கை மற்றும் வெளிமூலங்களிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல்.

உ) உட்கட்டமைப்பு அபிவிருத்தி

ஊ) கல்வி: தொழிற்பயிற்சி மற்றும் மூன்றாந்தரக் கல்வி

எ) வீடமைப்பு: வதிவிட நோக்கங்களுக்காக வீட்டு நிருமாணிப்பிற்கு வாடிக்கையாளரொருவருக்கு ரூ. 2 மில்லியன் வரை

ஏ) தொடர்பான நோக்கங்களுக்காக சுற்றுலா விடுதிகளின் நிருமாணம்

ஐ) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களின் மீளமைத்தல்.

## முதலீட்டு நிதியக் கணக்கின் பயன்பாடு

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் பெயர்:

மாத இறுதியிலுள்ளவாறு:

(ரூ.000')

| விடயம் | | | தொகை |
|---|---|---|---|
| **அ. முதலீட்டு நிதியக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட மொத்தம்** | | | XXXX |
| **ஆ. வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள்** | | | |
| | | | |
| **துறை** | **விபரணம்** | **தொகை** | |
| (அ) வேளாண்மை | | XX | |
| (ஆ) தொழிற்சாலை/ ஆலை நவீனமயப்படுத்தல் | | XX | |
| (இ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் | | XX | |
| (ஈ) தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளிமூலங்களிலிருந்து வியாபாரப் பணிகளை பெற்றுக் கொள்ளல் | | XX | |
| (உ) உட்கட்டமைப்பு அபிவிருத்தி | | XX | |
| (ஊ) கல்வி | | XX | |
| (எ) வீடமைப்பு | | XX | |
| (ஏ) சுற்றுலா விடுதிகளின் கட்டுமானம் மற்றும் அதனுடன் தொடர்பான நோக்கங்களுக்கானவை | | XX | |
| (ஐ) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களின் மீளமைப்பு | | XX | XXXX |
| **இ. அரச பிணையங்களிலான மொத்த முதலீடு - நீண்ட காலம்** | | XX | XXXX |
| **- குறுங்காலம்** | | | XXXX |
| **ஈ. பயன்படுத்துவதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மீதி** | | | XXXX |